Koviloor Digital Library

திருமந்திரமும் பிற தமிழ் இலக்கியங்களும்

அபூர்வ ஒப்பீடுகள்



இரண்டாம் பாகம்

பேராசிரியர்
பு.சி.இரத்தினம்

VTN0160

Koviloor Digital Library

Koviloor Digital Library

திருமந்திரமும் பிற தமிழ் இலக்கியங்களும்

ஆய்வு ஒப்பீடுகள்

திருமதி லக்ஷ்மி வளர் தமிழ் நூலகம்
அழகப்பா பல்கலைக்கழகம்
சேர்க்கை பதிவேடு எண்..... 33565
அழகப்பா பல்கலைக்கழகம் திருமதி லக்ஷ்மி வளர் தமிழ் நூலகம் காரைக்குடி

பேரா. பு. சி. இரத்தினம்

மணிமேகலைப் பிரசுரம்
தபால் பெட்டி எண்: 1447
7, (ப.எண்.4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை-600 017.
தொலைபேசி :24342926,24346082
மின் அஞ்சல் :manimekalai1@dataone.in
இணைய தளம்:www.tamilvanan.com

Koviloor Digital Library

நூல் விவரம்

நூல் தலைப்பு	:	**திருமந்திரமும் பிற தமிழ் இலக்கியங்களும்** அபூர்வ ஒப்பீடுகள்
ஆசிரியர்	:	**பேரா. பு.சி. இரத்தினம்**
மொழி	:	தமிழ்
பதிப்பு ஆண்டு	:	2011
பதிப்பு விவரம்	:	முதற்பதிப்பு
உரிமை	:	ஆசிரியருக்கு
தாளின் தன்மை	:	11.6 கி.கி.
நூலின் அளவு	:	கிரௌன் சைஸ் (12X 18 செ.மீ.)
அச்சு எழுத்து அளவு	:	10. புள்ளி
மொத்த பக்கங்கள்	:	xxxvi + 220 = 256
நூலின் விலை	:	ரூ. 95.00/–
அட்டைப்பட ஓவியம் லேசர் வடிவமைப்பு		பான்ராஜா கிராபிக்ஸ் சென்னை–24 Ph: 97107 10661
அச்சிட்டோர்	:	பி.வி.ஆர்.ஆப்செட் சென்னை.
நூல் கட்டுமானம்	:	தையல்

Koviloor Digital Library

அணிந்துரை

பேராசிரியர் வித்துவான் பெ.சுப்பிரமணியன்
எம்.ஏ.(ஆங்கிலம்), பீ.ஓ.எல், எம்.எட்.
அரசுக்கல்லூரி முதல்வர் (ஓய்வு),
திருவண்ணாமலை - 606 601

திருமந்திரம் தொன்மை வாய்ந்த செந்தமிழ்ச் சிவாகமமாகும். அது ஒரு யோக நூல், யாக நூலு மாகும். ஆகமங்கள் இருபத்து எட்டு என்பர். ஆயின் ஒன்பது ஆகமங்களே நந்தி என்னும் சீகண்டருக்குச் சிக்கின. இதனை,

'நவஆ கமம்எங்கள் நந்திபெற் றானே'

எனும் திருமந்திர வரியால் அறியலாம். சீகண்டர் நூற்றுப் பதினெட்டு உருத்திரர்களுள் ஒருவர். அவரை 'சிவமாம் பரத்தினில்' என்னும் பாசுரத்தில் திருமூலநாயனார் 'நந்தி' எனக் குறிப்பிடுகிறார்.

திருமூலர் சுந்தரன், நாதன், சுந்தர நாதன் எனும் வேறு பெயர்களாலும் அறியப்படுகிறார். அவர் ஒரு 'விழுமிய தமிழ் முனிவன் மூலன்' ஆவார்.

மொத்தமே ஆகமங்கள் ஒன்பதுதான். அவையே 28 ஆகமங்களாகப் பிரிக்கப்பட்டு சைவ உலகில்

Koviloor Digital Library

வழக்கத்தில் வந்துவிட்டன என்பாரும் உளர். இதனை,

'ஆகமம் ஒன்பான் அதிலான நாலேழும்
மோகமில் நாலேழும் முப்பேத முற்றுடன்
வேகமில் வேதாந்த சித்தாந்த மெய்மையொன்று
ஆக முடிந்த அருஞ்சுத்த சைவமே'

– திருமந்திரம் (74)

என்பதால் அறியக் கூடும்.

திருமூலர் தமிழ்செய்ய வந்த தவமுனிவர் ஆவார். அவர் கூற்றாகவே,

'என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே'

எனும் வரிகள் அவர் தமிழ்கூற வந்த தமிழ்ச் சித்தர் என்பதைப் புலப்படுத்தும்.

அவரது காலம் தமிழ் வட்டெழுத்து 51 வழக்கில் இருந்த இராமாயண காலம் என்பதை கீழ்க்காணும் பாடல் சாட்சி கூறும்.

'ஐம்ப தெழுத்தே அனைத்துவே தங்களும்
ஐம்ப தெழுத்தே அனைத்துஆ கமங்களும்
ஐம்ப தெழுத்தேயும் ஆவது அறிந்தபின்
ஐம்ப தெழுத்தும்போய் அஞ்செழுத் தாமே'

– திருமந்திரம் (944)

ஆக வட்டெழுத்துக் காலத்தில் தமிழ் 16 உயிர்களையும் 35 மெய்களையும் கொண்டிருந்தது.

Koviloor Digital Library

சதுர எழுத்துக் காலத்தில் தமிழில் 12 உயிர்கள் 18 மெய்கள் தாம் இருந்தன. வட்டெழுத்துக் காலம் முந்தையது. அக்காலத் தமிழையே சாற்ற வந்தவர் சாத்தனூார் மூலர் என்று கூறலும் உண்டு. இராமாயண காலம் சுமார் 8000 ஆண்டுகட்கு முன்பு என்பர். ஆக திருமூலர் காலம் கி.மு.6000 முதல் கி.மு.100 வரை எனக் கூறுபவர் பலர். அவர் காற்றைப் பிடித்து கூற்றை உதைத்தவர் என்பதை,

'காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை உதைக்கும் குறியது வாமே'

எனும் வரிகள் தெளிவாக்கும். அவர் கூற்றை உதைத்து பல ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்தாரா என்பதில் ஐயமில்லை! வாழ்ந்ததாக அவரே,

'உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே'

– திருமந்திரம் (704)

எனக் கூறியிருப்பதிலிருந்து அறிய முடிகிறது.

எப்படியும் திருவள்ளுவருக்கு முந்தியவர் திருமூலர். திருவள்ளுவர் கி.மு.75 முதல் கி.பி.36வரை வாழ்ந்தார் என்பது நிலைநாட்டப்பட்ட ஒன்று.

மந்திரம் என்பதன் பொருள் நிறைமொழி. மந்திரம் மாந்திரம் என்பதிலிருந்து திரிந்தது. 'மாந்திரம்' என்றால் உள்வாங்கிக் கொள்ளல் எனப் பொருளாகும். நிறைமொழியை உள்வாங்குபவர்

Koviloor Digital Library

நிறைமொழி மாந்தர் ஆவர். 'மந்திரம்', 'திரு' அடைமொழியுற்று 'திருமந்திரம்' ஆனது.

திருமந்திரம் ஆன்மிக நூல் மட்டுமல்ல வாழ்வியல் நூலுமாகும். திருக்குறள் அறம்பொருள் இன்பம் கூறும் அரும்பெரும் நூலாயின், திருமந்திரம் வீடு பற்றி தெள்ளத் தெளிவாகக் கூறுவதோடு அறம், பொருள் பற்றியும் கூறுகிறது.

இவைகளுக்கு இடைப்பட்டதாகிய தொன்மை இலக்கண நூலாம் தொல்காப்பியத்துள்ளும் ஆன்றவிந்து அடங்கும் நிலையின் சான்றோர் 'சிறந்தது பயிற்றல்' எனும் இல்லத் துறவு நிலைபற்றி இறுதி சூத்திரத்தில் இயம்பப்பட்டுள்ளது. இது,

'காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே'

– தொல்காப்பியம் (பொருளதிகாரம் (190)

எனும் சூத்திரத்தால் பெறப்படும்.

திருமந்திரத்துள் அறன் வலியுறுத்தப்படுவதோடு, கடவுள் ஒன்றே, மனித இனம் ஒன்றே என்ற விரிவுபட்ட மக்கள் நேய ஒருமைப்பாடும், எல்லாச் சமயங்களும் கூறும் கடவுள்கள் எல்லாம் ஒன்றே என்ற சமதர்ம, சம ஆன்மிக தத்துவ நெறியை தொன்மை இலக்கணத் தொல்காப்பியம் தெளிவுபடக் கூறக் காணலாம். தமிழுக்குத் தூணாக நிற்பவை ஐந்து நூல்கள் எனலாம். தொல்காப்பியம், திருமந்திரம்,

Koviloor Digital Library

திருக்குறள், திருவாசகம், திருவருட்பா ஆகிய ஐந்தும், சிலப் பதிகாரம், கம்ப இராமாயணம் இரண்டு துணைத் தூண்களோடு இயைந்து ஏழும் எடுத்தியம்ப ஏதுவாகின்றன.

திருமந்திரத்தில் சிவநெறி சிறப்புற செய்யப் படுகின்றது. செந்தமிழ் திருவைந்தெழுத்தாம் 'சிவயநம' இம்மையே அறிவிக்கும் செம்மை மறை யாகும் என விளம்பப்படுகிறது. அந்த ஐந்தெழுத்து ஒவ்வொன்றும் தனித்தனியாக ஒவ்வொரு சீர்பொருளை உணர்த்தும். சி = சிறப்பு, வ = வனப்பு, ய = யாப்பு, ந = நடப்பு, ம = மறைப்பு என்பதனைத் திருமந்திரப் பாடல்,

'சிறப்பு வனப்பி யாப்பு நடப்பு மறைப்போ
டுறப்பால ஐந்தெழுத்தின் உண்மை - மறப்பில்
சிவயநம என்னும் செந்தமிழ்ஐந் தாலாம்
சிவமறையின் மெய்விரியாம் செப்பு'

எனச் சிறப்பித்து சொல்லிச் செல்கிறது.

சிவன், சக்தி, சீவன், மாயை, பாசம் ஐந்துள் சிவனருளால் மாயை எனும் மலம் அடங்கும். மலம் அடங்க சத்தி அருளால் ஆருயிரைச் சிவத்துடன் கூட்டும். அவ்வாறு கூட்ட பாசம் அற்று அழியும். இதுவே திருமந்திரத்தின், சைவ சித்தாந்தத்தின் கருப் பொருளாக அமைகிறது எனலாம்.

சிவனுக்கு பொன்னும் பொருளும், தேங்காயும் பழமும், நைவேத்தியமும், இளநீரும், சர்க்கரையும், தேனும், பாலும், தயிரும், பன்னீரும் தேவையன்று.

Koviloor Digital Library

சிவபூசைக்கு ஒரு பச்சிலையே சாலும்! இது எல்லோரும் எளிதில் செலுத்தக் கூடிய ஒன்று. அதுபோல எல்லோர்க்கும் பசுவிற்கு ஒரு பிடி புல் தருதல் எளிது, எல்லோர்க்கும் உண்ணும்போது ஒரு கைப்பிடி சோறு பிறர்க்களித்தல் எளியது, பிறர்க்கு இனிய உரைகூறல் யாவர்க்கும் எளிதில் கூடியதே எனும் ஆன்மீக, சமூக, வாழ்வியல் தார்மீகக் கடமை உணர்வை கீழ்க் காணும் திருமந்திரம் தெளிவுபடத் தெரிவிக்கிறது.

'யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே'

– திருமந்திரம் (109)

நான்கு வரிகளில் நான்கு நீதிகள். அவைகளுள் ஆன்மிகம், ஆன்ம நேய ஒருமைப்பாடு, சமதர்ம சமூகநீதி, அன்றாட வாழ்நிலைக்கான இன்னுரை பகர்தல் எல்லாம் கலந்துள்ளமை காண அருமையாக அமைகிறது.

'நான் பெற்ற இன்பம் பெறுகயிவ் வையகம்'

எனும் திருமந்திரவரி பொதுவுடைமைத் தத்துவத்தை பளிச்செ‌ன வெளியிடுகிறது.

திருமந்திரத்தின் இவ்வரிய பெரிய கருத்துக் கருவூலத்தை ஏனைய இலக்கிய நூல்கள் எவ்வாறெல்லாம் ஒத்தும், வேறுபட்டும், மாறுபட்டும், ஒத்து ஆனால் சிறிது விலகியும், பின்பற்றியோ, தன்னிச்சையாகவோ கூறியுள்ளன என்பதை விளக்க

Koviloor Digital Library

வந்ததே பேராசிரியர், ஆன்மிகச் செல்வர், இயற்கை ஆய்வாளர், நுண்மான் நுழைபுலம் பெற்ற பண்பாளர் திரு பு.சி.இரத்தினம் அவர்களின் 'திருமந்திரமும் பிற தமிழ் இலக்கியங்களும் – அபூர்வ ஒப்பிடுகள்' எனும் அரும்பெரும் படைப்பு நூல்.

அவர் இவ்வரும்பெரும் செம்மொழி ஒப்புமை நூலை 63 தலைப்புகளில் தன் இரண்டாம் பகுதியாக வெளியிட்டுள்ளார். தன் ஆழ்ந்த தமிழ்ப் புலமையை இந்த ஆன்மீக நூல் ஆய்வில் தனித்துவம் மிளிர வெளிப்படுத்தியுள்ளார்.

திருமந்திரத்தைப் பற்றி இந்நூலாசிரியர் இரத்தினம் அவர்கள் இரத்தினச் சுருக்கமாக 'திருமந்திரம் இறையியல் நெறியையும், உலகியல் நெறியையும் இணைத்து நடத்தும் எளிய வாழ்க்கை நெறியை உணர்த்தும் நூலாகும்' என்று எடுத்த எடுப்பிலேயே கூறுவது மிகமிக நன்று.

மறை ஏடு கையேந்திய நங்கை எனத் திருமந்திரமும், தெய்வச் சுருதியை ஏந்திய தமிழ்க் கன்னி என அமுதாம்பிகை பிள்ளைத் தமிழும் ஒரே குரலில் கூறியிருப்பதுபற்றி 'திருமந்திரமும் அமுதாம்பிகைப் பிள்ளைத்தமிழும்' எனும் தலைப்பின் கீழ் ஆசிரியர் சுட்டிச் செல்கிறார். தமிழ்மறை தனியாக தன்னேரிலா வகையில் தழைத்திருந்தமை உணர்ந்து இறும்பூது எய்துவோமாக. இங்கே ஆசிரியர் தமிழ் வேதங்களை எழுதிய ஏட்டைச் சுமந்த தமிழ்க்கன்னி என்பதால், வாய்மூலமே வந்த வடமொழி வேதங்களினின்றும் தமிழ்மறை தனிப்பட்டு நிற்கிறது–தொன்று தொட்டு நிற்கிறது எனத் தெளிவுபடுத்திச் செல்கிறார்.

Koviloor Digital Library

'திருமந்திரமும் ஆத்தும சுத்தியும்' என்னும் தலைப்பில் திருமந்திரப்பாடல் 'ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியும்' எனத் தொடங்கும் வரிகள் நான்கானும் திருமூலர் இறையருள் பெற்றவர். ஆனால் மாணிக்கவாசகர் பாடலான,

'ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கு அன்பிலை
என்புருகிப் பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை'

என்பதால் அவர் இறையருள் பெற முயற்சிக் கின்றவர் எனக் கூறியிருப்பது சாலவும் நன்று.

'மையிருள்' பற்றி திருமந்திரமும், பெரிய புராணமும் கூறப் புகுவதைப் பற்றி, விரித்துரைக்க முனையும் இந்நூலாசிரியர் திருமூலர் கையாண்ட விதமும் சேக்கிழார் கையாண்ட விதமும் வேறுபடு கின்றன என்கிறார்.

திருமந்திரம் புறமையிருளை சூரியன், தீ, மதி நீக்கும். சிவபெருமான் கன்ம இருளை நீக்குவான் எனக்கூறுவதாக விரித்துரைக்கின்றார். அதேபோல பெரிய புராணம் 'மையிருளை' மழை பொழிந்து, இடிமின்னலால் கலைக்க முயல்கிறது எனக்கூறுவதாக விரித்துரைக்கிறார். உலகம் உய்ய இருள் களையப்படல் வேண்டும் என இரண்டுமே கூறுகின்றன.

'சிவனைக் காணல்' எனும் பொருள்பற்றி திருமந்திரமும் திருவாசகமும் சேர்ந்து ஒரே கருத்தைக் கூறியுள்ளன என்பதைத் 'திருமந்திரமும் உயிருண்ணிப் பத்தும்' என்னும் தலைப்பில் கூறவருகிறார். திருமந்திரம்,

Koviloor Digital Library

'ஒழிந்தேன் பிறவி உறவென்னும் பாசம்
கழிந்தேன் கடவுளும் நானுமொன் றானேன்
அழிந்தாங் கினிவரு மாக்கமும் வேண்டேன்
செஞ்சார் புடைய சிவனைக் கண்டேனே'

என்கிறது. திருவாசகமோ,

'வேண்டேன் புகழ் வேண்டேன் செல்வம்
வேண்டேன் மண்ணும் விண்ணும்
வேண்டேன் பிறப்பு இறப்புச் சிவம்
வேண்டா தவை நாளும்
தீண்டேன் சென்று சேர்ந்தேன் மன்னு
திருப்பெருந்துறை இறை தாள்'

எனக் கூறுகிறது. இரண்டும் உலகப் பற்று அற்று சிவன் பற்று உற்று சிறந்தமையை ஆசிரியர் சிறப்புற எடுத்தியம்புகிறார். வேண்டும் வேண்டும் இறையடி மட்டும், இருவரும் விழைந்தது சுயநல ஆசைதானே என ஆசிரியர் வியப்பது பாராட்டத் தக்கது. சிவபோகம் பெற்றார் மனைவியுடன் உடற்கலப்பு கொண்டாலும் மனம் சிவனிடமும், உடல் மனையாளிடமும் இருக்கும் என்று பின்வரும் திருமந்திரப்பாடல் கூறுகிறது.

'யோகமவ் விந்து ஓழியா வகைபுணர்ந்து
ஆகம் இரண்டுங் கலந்தாலு மாங்குறாப்
போகஞ் சிவபோகம் போகிநற் போகமா
மோகங் கெடமுயங் கார்மூடர் மாதர்க்கே'

– திருமந்திரம் (1923)

Koviloor Digital Library

ஆனால் கலிக்காம நாயனார் தன் மனையுடன்

'கண்டுகேட் டுண்டுபார்த்துற்று அமர்ந்திருந்தார் காதலினால்'

என பெரிய புராணம் கூறுகிறது. சிவனடியார் கலிக்காமர் சிந்தை மகிழ மனையாளொடு இன் புணர்வு பெறுவதையும், அது போன்ற சிவனடியார்கள் சிந்தை சிவன்பால் வைத்து, உடம்பை மனைவியர் பால் வைப்பர் என திருமந்திரம் கூறுவதையும் ஆயும் இந்நூலாசிரியர், உளக் கூட்டம் சிறப்புள்ளதல்லவா உடற்கூட்டம் மட்டும் எப்படி சிறந்ததாகும் எனச் சிந்தனையில் ஆழ்வது சிந்திக்கற்பாலது.

சிவப்பித்து கொண்டோர் பிற தெய்வங்களை ஏலார் எனத் திருமந்திரமும், திருச்சதகமும் கூறுகின் றன எனச் சொல்ல வந்த இந்நூலாசிரியர் இது 'இறை நிந்தை இல்லையா?' என வினாவி இருப்பது சிந்திக்க வைக்கிறது. சிவப்பித்தர்களுக்கு வேறு எந்த பித்தும் வேண்டாம் என்பதே விடையாகலாம்.

'அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே' என்று இராமலிங்கர் ஈசன் அன்புப்பிடியுள் அகப்படுவார் என்பதைத் திருமந்திரமும் கண்ணப்ப நாயனார் புராணமும் ஈசன் வந்து அகப்பட்டுக் கொண்டதைக் கூறிக் களிப்புற வைக்கின்றன.

'சிவன்வந்து தேவர் குழாமுடன் கூடப்
பவம்வந் திடநின்ற பாசம் அறுத்திட்டு
அவனெந்தை யாண்டருள் ஆதிப் பெருமான்
அவன் வந்தென் னுள்ளே யகப்பட்ட வாறே'

Koviloor Digital Library

என்னும் திருமந்திரப்பாடலிலும்

'நெடிதுபோ துயிர்த்து நின்று நிறைந்தெழு மயிர்க்கால் தோறும்

வடிவெலாம் புளகம் பொங்க மலர்க்கண்ணீர் அருவி பாய

அடியனேற் கிவர்தாம் இங்கே அகப்பட்டார் அச்சோ என்று

படியிலாப் பரிவு தானோர் படிவமாம் பரிசு தோன்ற'

என்னும் கண்ணப்ப நாயனார் புராணப் பாடலிலும் சிவன் வந்து அகப்பட்ட தன்மை விளக்கப்பட்டுள்ளது. ஆன்ற சித்தி பெற்ற சிவஞான முற்றோர்க்கு சிவன் தானே வந்து அகப்பட்டுக் கொள்ளும் அனுபவத்தை உணர்ந்து அனுபவிக்கிறார் இந்நூலாசிரியர்.

அடுத்து பொய்வேடம் பூண்டோரும் மெய்யான சிவனடியார் போல் சிறப்பெலாம் பெற்று சீர்திருந்த வேண்டும் என்ற அரும்பெரும் அறநெறி அகில உலகிலும், அதிலும் தமிழ் கூறும் நல்லுலகில் அறைபறைந்தென்ன அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யூசப் தன் மகனையே கொன்றவனுக்கும் உணவு அளித்து, தங்க இடமளித்து, இரவு தக்க போர்வையை குளிர் தாங்க அளித்து, பிறரால் தீங்கு நேரிடாவண்ணம் பாதுகாப்பும் பகைவனுக்கு அளித்தார் என முகம்மதிய புராண வரலாறு கூறும். அதே போலத் திருமந்திரப்பாடலும், பெரிய புராணப் பாடலும் தன்னேரிலா மன்னித்துப் புரந்தரும் பெருநோக்கு பற்றிக் கூறியிருப்பது அறிந்து, மகிழ்ந்து பாராட்டப்பட வேண்டியதாகும். இவ்வொப்புமைப் பாடல்களை இந்நூலாசிரியர் எடுத்தியம்பியிருத்தல் இயல்புதானே.

Koviloor Digital Library

'பொய் வேடம் பூண்பர்...' எனத் தொடங்கும் திருமந்திரப் பாடலும், 'சீலம் இலரேனும்...' என ஆரம்பிக்கும் பெரிய புராணப் பாடலும் இவ்விழுமிய 'பகைவனுக்கருளல்' எனுந் தத்துவம் அறிந்து நூலாசிரியர் வியப்பது ஆச்சரியம் இல்லைதானே.

புலன் நுகர்வு, அதற்குதவும் தாலி, பொருளாசை எல்லாவற்றினும் சிவ அன்பே சிறந்ததென திருமந்திரம் கூறப்புக, சுற்றத்தார் இருபகலுணவு இன்றி வாடத் தன் தாலிப்பொன்னை விற்று உணவு வாங்கிப் படைக்க எண்ணும் குங்குலியக் கலய நாயனார் மனைவி திறம்பற்றி பெரிய புராணம் பறைசாற்றுகிறது. இக்கருத்துகளை, 'கொட்டுக்குந் தாலி இரண்டே' எனத் தொடங்கும் திருமந்திரப்பாடலும், 'யாதொன்றும் இல்லையாகி இருபகல் உணவு மாறி' எனத்தொடங்கும் பெரிய புராணப்பாடலும் விளக்கி நிற்கின்றன.

இருபகல் உணவு இல்லாது போனதற்கே இப்படியென்றால் பல நாட்கள் பட்டினி கிடந்து, இறந்தே போகிறார்களே அதற்கு என்ன செய்வது? யாரைநொந்து கொள்வது என இந்நூலாசிரியர் புலம்புவது உண்மையிலேயே கையறுநிலைதானே!

ஒளியாகிய சிவனும் இருளாகிய மாயையும் ஒன்றுமிடம் உயிரே எனவும், சிவன் உயிரை மாயையில் சிக்காமல் காக்க வல்லவன் எனவும் திரு:மந்திரமும் கொடிக்கவியும் ஒன்றாக நின்று இயம்புகின்றன என 'திருமந்திரமும் கொடிக்கவியும்' எனும் தலைப்பில் இந்நூலாசிரியர் செப்பிச் செல்லுகிறார்.

Koviloor Digital Library

'திருமந்திரமும் கோயில் நான்மணி மாலையும்' எனும் தலைப்பிட்டு ஆருயிர், சிவனோடு அறவே கலந்துவிடும் எனும் அரிய கருத்து எடுத்தியம்பப் படுகிறது. 'அவ்வெண்ணெயே தன்னிச்சையாக எரியுமானால் எச்சம் காணப்படாமை போன்று கற்பூரத் தீபமாகும். அதுபோல உடம்பும் திருவருளால் நுண் தன்மை எய்தி நுண்மைக் கண் அடங்கும் போது ஆருயிர் திருவருளில் அடங்கிவிடும்' என விளக்கம் தருவது மிகவும் அருமை.

சிவன் திருவடிப் பேறு 'வளங்கனி' என திருமந்திரமும், 'கற்பகக் கனி' எனச் சேர்ந்தனார் திருவிசைப்பாவும் வர்ணிக்கப்பட்டிருத்தலை கைமேல் கனியாக இந்நூலாசிரியர் பிட்டுத் தருகிறார். அதோடு, 'ஆனால்,' நாம் அக்கனிகளைத்தான் தேடி அலைகின்றோமா? கனியிருக்கக் காய்களுக்குத்தானே அலைகின்றோம்' என நம்மை இலோசாக சாடுவது சாலும். திருவள்ளுவரும் 'கனியிருப்பக் காய் கவர்ந்தற்று' என இன்சொல் இருக்க வன் சொல்லை நாடுவது பற்றிக் கூறிச் செல்லவில்லையா?

மனிதனின் அடிப்படைக் குணங்களும் நெறி களும் மாறாதவையே. திருமந்திரமும் திருக்கோவில் வெண்பாவும் ஏனைய எத்தனையோ தமிழ் இலக்கிய, ஆங்கில இலக்கியங்களும் அடிப்படை மனித இயல்புகளை எடுத்தியம்பத் தவறியதில்லை. நிலையாமை அடிப்படைத் தத்துவம். உயிர்ப்புள்ள அரிய மனித உடல் ஒருநாள் பிணமாக ஆகி மற்றோரால் இடுகாட்டிடை இடப்படுதல் இயற்கை. மதிப்பெலாம் துறக்கப்பட்டுப் பிணமானபின்

Koviloor Digital Library

இடுகாட்டிடை இடப்பட்டு அல்லது சுடுகாட்டிடை சுடப்பட்டு மறக்கப்பட்டு விடுகிறது என்பதைத் திருமந்திரம்,

'ஊரெல்லாங் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணம் என்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே!'

என விவரிக்கிறது. திருக்கோவில் திருவெண்பா,

'தொட்டுத் தடவித் துடிப்பொன்றும் காணாது
பெட்டப் பிணம் என்று பேரிட்டுக்-கூட்டி'

என்கிறது. பெட்டப்பிணம் – வெற்றுப்பிணம். இதனைக் கூறப் புகுந்த ஆசிரியர் பிணத்தைப் புதைத்திட்டு அல்லது சுட்டிட்டு உரிய கிரியைகள் செய்வதில் 'மாற்றம் காண வாய்ப்பில்லைதானே' என விளம்புகிறார். கிரியைகள் வேறுபடலாம். பிணத்தைப் புதைத்தலோ, சுடுதலோ அல்லது வட இந்திய விளிம்பின் வழக்கப்படி அப்படியே தூக்கிக் கழுகுக்கு இரையாக்கப்படுதலோ என்றும் மாற வாய்ப்பில்லை. இராமலிங்க சுவாமிகள் வேண்டுவது போல் பிணத்தைச் சுடாமல் வேண்டுமானால் புதைக்கலாம்.

சிவன் திருக்கூத்து பற்றிப் பேசுகையில், திருமந்திரம் வாழ்க்கையின் தொடக்கத்தைக் காட்ட சிவபெருமான் ஆடுகின்றனன் என்றும், வாழ்க்கையின் கடைசித் தீர்ப்பைக் காட்ட சிவபெருமான் ஆடுகின்றனன் என்று காரைக்காலம்மையார் தமது

Koviloor Digital Library

பாடலில் குறிப்பிடுகின்றார் எனவும் தீர்க்கமாக தெரிவித்திருப்பது நன்று.

மேலும், சிவபிரான் திருமுடி திருமூலருக்குப் பசும்பொன் போலத் தோன்ற, காரைக்காலம்மை யார்க்கு சிவப்பு நிறமாகத் தோன்றுவது ஏனோ என இந்நூலாசிரியர் வியந்து வினவுகிறார், 'திருமந்திரமும் அற்புதத்திருவந்தாதியும்' என்னும் கட்டுரையில்.

உழத்தியர் கண் குவளைபோல என திருமந்திரமும், குறத்தி நோக்குபோல் மான்நோக்கு என திருஈங்கோய்மலை எழுபதும் கூறியிருப்பதோடு மான் கண் தன் குறத்தி மனைவி கண் போன்றிருந்த தால் வேடன் வேட்டையாடவே இல்லை எனக் கூறிப் போந்தமை சுவைத்து நுகரத்தக்க இலக்கிய நயம்.

நம் நிழல், நம் செல்வம் நம்முடையவை அல்ல எனத் 'திருமந்திரமும் திரு ஏகம்ப மாலையும்' திறம்படக் கூறுகின்றன. சிவன் அருள் நோக்கு ஒன்றே நமக்குச் செல்வம். ஆகவே, உள்ள உலகியல் செல் வத்தை உற்றார்க்கு வாரி வழங்குவீர் என வேண்டப் படுகிறது. இங்கே இந்நூலாசிரியர் 'எத்தனை படித்தென்ன எத்தனை சொத்து இருந் தென்ன... அடுத்தவனுக்கு உதவி செய்ய மனம் வரமாட்டேன் என்கிறதே' என இரங்குவது அறிந்து மகிழ்வோமாக.

திருமூலரும் தண்டியடிகளும் மனக்கண்ணால் ஞானம் பெற்றவரே என்பதை 'திருமந்திரமும் தண்டியடிகள் நாயனார் புராணமும்' எனும் தலைப்பில் கோடிட்டுக் காட்டப்படுகிறது.

Koviloor Digital Library

ஒன்றுபடும் உணர்வால் கன்று நினைந்தெழும் பசுவை திருமந்திரமும் பெரிய புராணமும் சிறப்பித்து செப்புகின்றன எனத் 'திருமந்திரமும் சேரமான் பெருமாள் நாயனார் புராணமும்' எனும் தலைப்பில் இந்நூலாசிரியர் எடுத்து இயம்புகிறார்.

திருமந்திரப்பாடல் தொடக்கமான 'மன்று நிறைந்தது மாபர மாயது' என்னும் வரியும், பெரிய புராணத் தொடக்க வரியான 'மன்றில் நிறைந்து நடமாட வல்லார்' என்னும் வரியும் 'மன்று' பற்றியே தொடங்குகின்றன. ஒன்றும் உணர்வு, ஒன்றும் வரிகள்! என்னே பெரியோர் திறன்! இதை 'ஆழ்ந்து நோக்குக' என்கிறார் ஆசிரியர் எனலாமோ?

'திருமந்திரமும் திருக்களிற்றுப் படியாரும்' எனும் தலைப்பின் கீழ் ஆசிரியர் ஐந்தெழுத்துத் தத்துவத்தை விளங்கக் கூறுகிறார். அஞ்செழுத்து என்பது 'சிவயநம' என்பதாகும். இதில் 'சி' சிவனையும், 'வ' அருளையும், 'ய' உயிரையும், 'ந' மறைப்பாற்றலையும், 'ம' ஆணவ மலத்தையும் குறிக்கும் என விளக்கும் போது, 'சிவ' என்னும் இரு எழுத்துகளும் முதன்மையானவை. அதற்குக் காரணம் அவை அம்மையப்பர் இருவரையும் குறிப்பதாலேயே' என சுட்டிச் செல்வது அறிந்து மகிழ்வுறுவோமாக.

'திருமந்திரமும் திருவள்ளுவ மாலையும்' எனுந் தலைப்பில் மூலப்பொருளாகிய சிவபெருமானைப் பற்றி நூலில் எழுதி என்ன பயன்? பயிற்சிகளை இடையறாது இயற்றல் வேண்டும் எனுந் தத்துவம் எடுத்தியம்பப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

திருவம்பலச் சக்கரத்துள் அறைகள் 25 என்றும், அதில் ஓர் அறையுள் அகரம் அமையும் என்றும், அகரமே சிவனைக் குறிக்குமெனவும் 'திருமந்திரமும் விநாயக புராணமும்' எனுந் தலைப்பின் கீழ் கூறப்பட்டுள்ளது. அகரத்தைப்போல ஞானமயமாகி உலக முழுவதும் அமர்ந்து அகர உகர மகரங்களால் (பிரணவ சொரூபியாய்) சொல்லப்பட்ட ஒப்பற்ற முதல்வராயும் வேறாயும் பல்வகைப்பட்ட வெவ்வேறு திருமேனிகளைத் தாங்கி எல்லாவற்றையும் அடிமை கொண்டு அலங்கரிக்கிறார் நம் பெருமான் என விளக்கப்பட்டுள்ளமை அருமை.

ஆக, பேராசிரியர் பு.சி.இரத்தினத்தின் ஒப்புமை ஆய்வு ஒரு அறிவுச் சுரங்கம். தோண்டத் தோண்ட செம்மொழி சிவநெறி, சர்வமத சமநோக்கு, சமதர்ம வழிமுறை எல்லாம் வெளிப்பட்டு நம் சிந்தையை சிவன்பால் வைத்து, அவனருளாலே அவன் தாள் அடையும் முத்திநெறி அறியும் மார்க்கத்தை இந்நூலாசிரியர் காட்டுகிறார். தெய்வமணங்கமழ் சித்தம் கொண்ட சீவர் அவர்களின் சிவத்தொண்டு சிறக்கட்டும். தென்னாட்டு சிவன் எந்நாட்டவர்க்கும் எல்லாப் பயனும் அருளுவானாக! அருள்வழி கூட்ட அரும்பெரும் நூல் நெய்து செய்து அர்ப்பணித்திருக்கும் இவ்வாசிரியர் நோக்கு பெருநோக்கு. வளர்க அவர் தமிழ்த் தொண்டு, சிவத்தொண்டு, செம்மைத் தொண்டு!

பேராசிரியர் வித்துவான்
பெ.சுப்பிரமணியன்
அரசு கல்லூரி முதல்வர் (ஓய்வு)

வில்வாரணி,
23.5.2011

Koviloor Digital Library

ஆய்வுரை

அன்புமிகு நண்பர், ஆற்றல்மிகு சிந்தனையாளர், மனிதநேய எழுத்தாளர், புதுமையாளர் பு.சி.இரத்தினம், திருமந்திரத்தினை பிற தமிழ் இலக்கியங்களோடு ஒப்பாய்வு செய்து, உயர்ந்த உயிர் – உடல் சிந்தனைகளை இருபெரும் நூல்களாகப் படைத்த வல்லமை மிக்கவர். ஆதி, சோதி, நீதி, பாதி என்னும் திருமந்திர வார்த்தைகள் மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் நயம்பட போதிக்கும் தத்துவங்களை எடுத்துகாட்டி அருளாளனுக்கு அருகாமையில் நம்மை நிற்க வைக்கின்றார்.

- சித்தி முத்தி சுத்தி வாயிலாக பிறவிப்பயன் எய்தும் வழிகளையும்

- இறையடி சேர இறைதுணைதான் வேண்டும் எனவும்

- இறையை ஆடியும், பாடியும் ஆனந்த நிலை எய்தலாம் எனவும்,

- பெருகு அருகு கருகு உருகு என்னும் சேக்கிழாரின் செந்நெறி வார்த்தைகளின் நயத்தை, இருள்

Koviloor Digital Library

நீக்கும் மந்திரப்பாடலின் வாயிலாய் அகம் – புறம் மையிருள் விளக்கத்தினையும்,

- உயிர் உடலைவிட்டு நீங்கியபோது ஊரெல்லாங் கூடி ஒலிக்க அழுதிட்டு நீரில் மூழ்கி நினைப்பை ஒழிந்தனரே எனும் திருமந்திர வாசகத்தை, ஐயடிகள் காடவர்கோன் அருளிய 'திருக்கோயில் வெண்பா'வின் 'தொட்டுத் தடவி துடிப்பொன் றும் காணாது' எனும் வரிகளோடு ஒப்பிட்டு உயிருள்ள போதே இறையடியை நினை மடமனமே எனவும்,

- 'நமசிவய' எழுத்தொலிகளின் விளக்கத்தையும்,

- கேசரியோகத்தின் பயன் நமசிவயத்தை இடையறாது ஓதுதல் எனவும்,

- தற்பரன் நின்று தனி நடஞ்செய்யும் பாங்கி னையும்,

- கரும்பும் கைத்தது தேனும் புளித்ததே என்னும் திருமூலர் கருத்திற்கு உண்ணுதல், உறங்குதல் என்னும் அரிய விளக்கம் பகர்ந்தும்,

- மன்றாடும் மலர்பாதம் ஒருகாலும் மறவாமை வேண்டுமென்ற நற்பண்பை, சேக்கிழார் வாயிலாக வலியுறுத்தியும்,

- தமிழை தெய்வத் தமிழ் என்றும் அது ஐந்து மண்டலங்களிலும் பரவிய ஞானத்தமிழ் என்றும்

Koviloor Digital Library

திருமூலர் சேக்கிழார் வாய்மையான் விளக்கியுள்ள மையும்,

- கன்று நினைந்தெழுதாயென வந்தருள்பவுன் குணவிளக்கானவன் எனவும்,

- ஐந்து நாதம் ஐவகை ஓசைகள் அம்பலம் ஆடும் கூத்தின் உயர்வையும்,

- 'ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்' எனும் மனிதநேய சமூக தத்துவத்தை உய்விக்கும் வகையையும்,

- ஆறுமுகத்திற்கு அதிபதியானவன் யார் என்பதையும்,

- 'வைச்சன வச்சு வகையிரு பத்தஞ்சு' என்னும் திருமந்திர வரிகள் மூலம் ஆருயிர்கள் உய்தல் வேண்டி திருக்கோலம் கொண்ட திருஉருவங்கள் இருபத்தைந்து ஆகும் என்றும்,

- தெள்ளிய ஆலின் சிறுவித்து மிகப்பெரிய ஆலமரத்தின் தன்மையை உட்கொண்டிருத்தலின் ஆன்மிகக் கருத்தையும்,

தனது நூலில் (இரண்டாம் தொகுதி) 63 பாக்களைத் தெரிவு செய்து மனதுக்குள் மங்கிக் கிடக்கும் உள்ளொளியை அருட்பெருஞ்சோதியாய் ஏற்றிவைத்துள்ளார் ஆசிரியர்.

Koviloor Digital Library

கடந்த காலங்களில் பத்துக்கும் மேற்பட்ட சமூக, ஆன்மிக, மனித நேய நூல்களைப் படைத்து வெளியிட்டு உலகில் சாகாத்தன்மையை எய்தியுள்ள எம் நண்பர் பு.சி. இரத்தினம் அவர்களுக்கு நல்வாழ்த்துக்கள்.

'வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை யில'

என்னும் வள்ளுவன் வாய்மொழிக்கு இணங்க வேண்டுதல் வேண்டாமை இல்லாமல் இந்நூலைப் பயின்றால் பயன் பலவே நிச்சயம் பெறலாம்.

'அன்பே. சிவம்'

பேரா.மு.தாமோதரன்

முதல்வர் (ஓய்வு)

வேலூர்–9

23.5.2011

Koviloor Digital Library

பாராட்டுரை

'திருமந்திரமும் பிறதமிழ் இலக்கியங்களும் -அபூர்வ ஒப்பீடுகள்' என்ற தலைப்பில் இரண்டாம் தொகுதியாக இந்நூலை பேரா.பு.சி.இரத்தினம் அவர்கள் எழுதி வெளியிடுகின்றார்.

திருமந்திரத்தின்கண் உள்ள பல்வேறு பாடல்களைப் பிற பக்தி இலக்கியங்களுடன் ஒப்பிட்டு இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பெரியபுராணத்தில் உள்ள நாயன்மார்கள் வாழ்க்கை வரலாறு தொடர்பான பாடல்களுடன் திருமந்திரத்தில் உள்ள பாடல்கள் எவ்வாறு கருத்துகளாலும், சொற்களாலும் ஒத்துப் போகின்றன என விவரித்துள்ளார்.

இதே போன்று திருவாசகத்துடனும் எவ்வாறு ஒத்துச் செல்கிறது என்பதையும் தெளிவுபடுத்தி யுள்ளார். மேலும், இதர புராண நூல்களான காஞ்சிப்புராணம், விநாயகப் புராணம், தணிகைப் புராணம் ஆகியவற்றுடன் கருத்தாலும், சொல்லாலும் அடியொற்றிச் செல்வதை நன்கு எடுத்துக் காட்டியுள்ளார். தவிரவும், திருவள்ளுவமாலை, நீதிநெறிவிளக்கம், வெற்றி வேற்கை ஆகிய நூல்களில் உள்ள பாடல்களுடன் திருமந்திரப் பாடல்கள் ஒத்து

Koviloor Digital Library

இருப்பதை திறம்பட விவரித்து உள்ளார். மேலும், திருமந்திரப்பாடல்கள் வில்லிபுத்தூராரின் பாடல்களுடன் ஒத்துச் செல்லும் ஆற்றினை அழகுபட எடுத்து விவரித்து உள்ளார்.

இந்நூலை எழுத மேற்கொண்டுள்ள முயற்சி பாராட்டுதலுக்குரியது. மிகவும் கவனத்துடன் செயல்பட்டு இந்நூலை எழுதி வெளியிடும் இந்நூலாசிரியருக்கு மனம் கனிந்த எனது வாழ்த்துக்கள்.

பொன். அரங்கநாதன்
துணைச்செயலர் (ஓய்வு)
தலைமைச் செயலகம்.

வேலூர்–9
23.5.2011

Koviloor Digital Library

வாழ்த்துக் கவிதை

'சின்னதோர் ஊரில் வேளாண்
செய்தொழில் குடியில் தோன்றி
என்னதான் உழைத்த போதும்
ஏற்றமே வாழ்வில் காணா
பின்னமாம் உழவைச் செய்யப்
பிடிக்காமல், படிப்பை யேற்று
வண்ணமாய் முடித்தார்! மேலாம்
வரலாற்றில் பட்டம் பெற்றார்!

பயில்கையில் பகட்டு நீக்கி
பலநூல் தொகையாய்க் கற்று
வெயில் மழை யென்ற போதும்
வெற்றியில் நோக்கம் கொண்டு
செயல்பட்டார், மனதில் நல்ல
சிந்தனை வளரச் செய்தார்!
இயற்கைமேல் மையல் கொண்டார்!
எதிலுமோர் அழகைக் கண்டார்!

உள்ளமோ பூப்போல் மென்மை!
உதிர்க்கிற வார்த்தை உண்மை!

Koviloor Digital Library

கள்ளமே யில்லாத் தன்மை!
    கற்பனை நெஞ்சில் பன்மை!
செல்லமாய்க் கோப முண்டு!
    சிரிப்பிலே ஆர்வ முண்டு!
நல்லவர் என்னும் பேரில்
    நாட்டமும் அதிக முண்டு!

தோழமை போற்றும் நெஞ்சம்!
    தூய்மையில் இமயம் மிஞ்சும்!
சோழனைப் போன்றே மாற்றார்
    சொல்லிடும் பழிக்கு அஞ்சும்!
ஆழமாய் அறிவு ஞானம்
    அமைந்திட்ட போதும், வாழும்
வாழ்க்கையில் கர்வம் பஞ்சம்!
    வாசலில் வசந்தம் துஞ்சும்!

பொதுநலம் வாய்த்த போர்கள்
    பொய்கையில் பூத்த பூக்கள்!
எதுநலம் என்றே யெண்ணி
    இயற்றுவோர் மலர்த்தே னீக்கள்!
மதுநலம் விரும்பு வோர்கள்
    மனிதரா ? இல்லை, மாக்கள்!
புதுநலம் படைப்போர் மண்ணில்
    பொய்த்திடா இன்பப் பாக்கள்!

கருதுதல் உயர்ந்த தென்றால்
    காலத்தை வென்று வாழும்!

Koviloor Digital Library

கருத்துகள் தூயவை என்றால்
கட்டாயம் நிலைத்து நிற்கும்!
ஒருவரின் எண்ணம் பல்லோர்
உயர்ந்திடச் செய்யு மென்றால்
பெருமைகள் சேரும்! அந்தப்
பெம்மானை வையம் வாழ்த்தும்!

திருமந்தி ரம்போல் மற்றத்
தெய்வப்புகழ் பாடும் நல்ல
பெருமைமிகும் நூல்கள் ஆய்ந்து
பெய்திடும் முத்தைக் கோத்து
தருவதில் இன்பம் கண்டார்!
தமிழ்மகள் மகிழ்வாய்க் கொண்டாள்!
மருகொழுந் துமுல்லை மல்லி
மணம்போல் மனதை ஈர்த்தார்!

ஆன்மிகம் பேசு வோர்கள்
அவசியம் இந்த நூலை
சான்றாகச் சொல்லி எந்தச்
சபையிலும் பெருமை செய்வார்!
வான்தரும் மழையாய் மக்கள்
மனங்களில் பரவும் இன்பம்!
நானிதை அடித்துச் சொல்வேன்!
நல்லோரும் ஒத்துக் கொள்வார்!

வேலூர்-9
23.5.2011

கவிஞர் கோமகன் இருசன்
சார்பதிவாளர் (ஓய்வு)

Koviloor Digital Library

என்னுரை

வணக்கம்! இந்த இரண்டாவது தொகுதியின் மூலம் வாசகர் என்ற முறையில் மீண்டும் தங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால், அதே நேரத்தில் விமர்சகர் என்ற முறையில் தங்களைக் கண்டு அஞ்சுகிறேன். ஏற்கெனவே செய்த ஒரு தவற்றை தொடர்ந்திருக்கின்றேன். அதாவது, உறித்த வாழைப்பழத்தை எடுத்து ஊட்ட முனைந் திருக்கிறேன். இருசிக்கிறதா என்று பாருங்களேன்!

இந்த நூலும் 63 உள்தலைப்புகளைக் கொண் டுள்ளது. இந்த ஒரே நூலில் பிற இலக்கியங்களைப் பற்றிய சிறு குறிப்பினையும் தர முனைந்திருக்கிறேன். இது வாசகருக்கு பிற நூல்களைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும் என நம்புகிறேன்.

முதல் தொகுதியில் இடம் பெற்றது போலவே, இந்நூலிலும் என்னுடைய புலம்பல்கள் அங்கங்கே இடம்பெற்றிருக்கின்றன; கடைசியிலும் இடம் பெற்றிருக் கின்றது.

இந்நூல் உருவாவதற்கு ஐம்பதுக்கும் மேற்பட்ட தமிழ் இலக்கிய நூல்களைத் தந்து உதவிய மருத்துவர்

Koviloor Digital Library

சக்தி சுப்பிரமணியம் அவர்களுக்கும், வேலூார் முத்துரங்கம் அரசு கலைக் கல்லூரி நூலகப் பொறுப் பாளர்களுக்கும், வேலூர் மாவட்ட நூலகத்தின் தலைமை நூலகருக்கும், சத்துவாச்சாரி கிளை நூலகத் தின் நூலகருக்கும், எல்லாவற்றுக்கும் மேலாக, காங் கேயநல்லூர் வள்ளல்வாரியாரின் தனி நூலகத்தின் அரிதான நூல்களை தந்துதவிய பொறுப்பாளர் களுக்கும் எனது மனங்கனிந்த நன்றி.

இந்நூலுக்கு மிகச் சிறப்பான அணிந்துரையை வழங்கியிருக்கும் என்னுடைய ஆசான் மற்றும் பேராசிரியர் திரு.பெ.சுப்பிரமணியம் அவர்களுக்கு எனது பணிவான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆய்வுரையை அளித்திருக்கும் பேரா.மு.தாமோதரன் அவர்களுக்கும், பாராட் டுரையை வழங்கியிருக்கும் நண்பர் திரு.பொன். அரங்கநாதன் அவர்களுக்கும், வாழ்த்துக் கவிதையை வரைந்திருக்கும் கவிஞர் கோமகன் இருசன் அவர்களுக்கும் என்னுடைய கனிவான நன்றி உரித்தாகுக.

மேலும், தொடர்ந்து எனது படைப்புகளை வெளியிட்டு வரும் மணிமேகலைப் பிரசுரத்தாருக்கும், அதன் துணை நிறுவனங்களுக்கும் மற்றும் ஊழியர் களுக்கும் என் நன்றி உரித்தாகுக!

உள்ளே நுழைந்து வாருங்கள்; மீண்டும் கடைசியில் சந்திப்போம்!

– பேராசிரியர் பு.சி.இரத்தினம்

வேலூர்–9

Koviloor Digital Library

படையல்

செம்மொழி மகுடம் கொண்ட
செந்தமிழ்த்தாயின் பூப்பாதங்களில்
இந்நூலை காணிக்கையாகப்
படைக்கிறேன்

Koviloor Digital Library

உள்ளுறை

1.	திருமந்திரமும் அருட்பத்தும்	01
2.	திருமந்திரமும் அடைக்கலப்பத்தும்	04
3.	திருமந்திரமும் அறிவுறுத்தலும்	06
4.	திருமந்திரமும் அற்புதத் திருவந்தாதியும்	09
5.	திருமந்திரமும் அமுதாம்பிகைப் பிள்ளைத் தமிழும்	12
6.	திருமந்திரமும் ஆனந்தா தீதமும்	16
7.	திருமந்திரமும் ஆத்துமசுத்தியும்	19
8.	திருமந்திரமும் இளையான்குடி மாறநாயனார் புராணமும்	23
9.	திருமந்திரமும் இருபாவிருபதும்	26
10.	திருமந்திரமும் உயிருண்ணிப்பத்தும்	29
11.	திருமந்திரமும் உண்மைநெறி விளக்கமும்	32
12.	திருமந்திரமும் எறிபத்த நாயனார் புராணமும்	35
13.	திருமந்திரமும் ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணமும்	38
14.	திருமந்திரமும் கண்ணப்ப நாயனார் புராணமும்	42
15.	திருமந்திரமும் கண்டப்பத்தும்	46
16.	திருமந்திரமும் கணநாத நாயனார் புராணமும்	49
17.	திருமந்திரமும் கலிக்கம்ப நாயனார் புராணமும்	51
18.	திருமந்திரமும் கருவூர்த்தேவரின் திருவிசைப்பாவும்	55
19.	திருமந்திரமும் காருணியத்திரங்கலும்	58
20.	திருமந்திரமும் காஞ்சிபுராணமும்	61

Koviloor Digital Library

21.	திருமந்திரமும் குங்குலியக் கலய நாயனார் புராணமும்	64
22.	திருமந்திரமும் கூற்றுவ நாயனார் புராணமும்	68
23.	திருமந்திரமும் கொடிக்கவியும்	71
24.	திருமந்திரமும் கோயில் நான்மணிமாலையும்	75
25.	திருமந்திரமும் கோபப் பிரசாதமும்	78
26.	திருமந்திரமும் சண்டேசுர நாயனார் புராணமும்	82
27.	திருமந்திரமும் சாக்கிய நாயனார் புராணமும்	85
28.	திருமந்திரமும் சிறப்புலி நாயனார் புராணமும்	88
29.	திருமந்திரமும் சிறுத்தொண்ட நாயனார் புராணமும்	90
30.	திருமந்திரமும் சுட்டறுத்தலும்	93
31.	திருமந்திரமும் சேரமான்பெருமாள் நாயனார் புராணமும்	97
32.	திருமந்திரமும் சேந்தனாரின் திருவிசைப்பாவும்	100
33.	திருமந்திரமும் சேந்தனாரின் திருப்பல்லாண்டும்	103
34.	திருமந்திரமும் தண்டியடிகள் நாயனார் புராணமும்	107
35.	திருமந்திரமும் தணிகைப் புராணமும்	110
36.	திருமந்திரமும் திருக்கோயில் திருவெண்பாவும்	114
37.	திருமந்திரமும் திருநீலகண்டக் குயவனார் புராணமும்	118
38.	திருமந்திரமும் தில்லை வாழந்தணர் புராணமும்	121
39.	திருமந்திரமும் திருமாளிகைத் தேவரின் திருவிசைப்பாவும்	124
40.	திருமந்திரமும் திருவிடைமருதூர் மும்மணிக்கோவையும்	128

Koviloor Digital Library

41.	திருமந்திரமும் திருவேலங்காட்டு மூத்தத் திருப்பதிகமும்	132
42.	திருமந்திரமும் திருஈங்கோய் மலை எழுபதும்	135
43.	திருமந்திரமும் திருஏகம்பமாலையும்	139
44.	திருமந்திரமும் திருக்களிற்றுப்படியாரும்	142
45.	திருமந்திரமும் திருவருட்பயனும்	146
46.	திருமந்திரமும் திருவள்ளுவமாலையும்	150
47.	திருமந்திரமும் நீதிநெறி விளக்கமும்	154
48.	திருமந்திரமும் பத்தராய்ப்பணிவார் புராணமும்	157
49.	திருமந்திரமும் பண்டாய நான்மறையும்	160
50.	திருமந்திரமும் பராபரக்கண்ணியும்	163
51.	திருமந்திரமும் பெருமிழலைக் குறும்ப நாயனார் புராணமும்	166
52.	திருமந்திரமும் போற்றிப் பஃறொடையும்	169
53.	திருமந்திரமும் போற்றித்திருவகலும்	173
54.	திருமந்திரமும் மங்கையர்க்கரசியார் புராணமும்	176
55.	திருமந்திரமும் மூர்த்தி நாயனார் புராணமும்	180
56.	திருமந்திரமும் மெய்யுணர்தலும்	183
57.	திருமந்திரமும் மெய்ப்பொருள் நாயனார் புராணமும்	187
58.	திருமந்திரமும் யாத்திரைப் பத்தும்	191
59.	திருமந்திரமும் வாயிலார் நாயனார் புராணமும்	194
60.	திருமந்திரமும் வினா வெண்பாவும்	197
61.	திருமந்திரமும் விநாயக புராணமும்	200
62.	திருமந்திரமும் வில்லிபுத்தூரார் பாரதமும்	204
63.	திருமந்திரமும் வெற்றிவேற்கையும்	207

Koviloor Digital Library

திருமந்திரமும் பிற தமிழ் இலக்கியங்களும்! - அபூர்வ ஒப்பீடுகள்

திருமந்திரம் சைவத் திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாக வைத்துச் சிறப்பிக்கப்படுகிறது. இதை ஆக்கியவர் திருமூலர் ஆவார். அவர் ஒரு சித்தர். திருமந்திரம் ஒரு சித்தர் நூல். சித்தர் இலக்கியங் களிலே ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ்வது திருமந்திர நூல் ஆகும்.

இந்நூல், 'மூவாயிரம் தமிழ்' என்றும் அழைக்கப்படுகிறது. இது, முதல் யோக நூல் ஆகும். மொத்தம் ஒன்பது தந்திரங்களையும், இருநூற்று முப்பத்திரண்டு அதிகாரங்களையும் உடையது.

திருமந்திரம் இறையியல் நெறியையும், உலகியல் நெறியையும் இணைந்து நடத்தும் எளிய வாழ்க்கை நெறியை உணர்த்தும் நூலாகும். திருமந்திரத்தின் கருத்துகளை, சொற்றொடர்களை, தத்துவங்களை, பிந்தைய தமிழ்க் கவிஞர்கள், அறிஞர்கள்,

Koviloor Digital Library

எழுத்தாளர்கள் அப்படியே அல்லது சற்று மாற்றி எடுத்தாண்டிருக்கிறார்கள்.

சான்றாக, இதிகாசங்கள், ஐம்பெரும் காப்பியங்கள், சங்க இலக்கியங்களான எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, பதினென் கீழ்க் கணக்கு நூல்கள், பின்னர்த் தோன்றிய தேவாரம், திருவாசகம் மற்றும் புராணங்கள் போன்றவற்றில் கருத்துகள் அல்லது சொற்றொடர்கள் கையாளப்பட்டிருக் கின்றன.

கையாளப்பட்ட சொற்றொடர்கள் அல்லது கருத்துகள் எந்த அளவுக்குத் திருமந்திர வரிகளுடனும், கருத்துகளுடனும் பொருந்திப் பயணிக்கின்றன அல்லது இயைந்து அல்லது தழுவிச் செல்லுகின்றன எனச் சான்றுடன் மேலோட்டமாக ஆய்வதே இந்நூலின் நோக்கமாகும். இனி உள்ளே நுழைவோமா?

Koviloor Digital Library

1

திருமந்திரமும் அருட்பத்தும்

ஆதி பரந்தெய்வம் அண்டத்து நற்றெய்வஞ்
சோதி யடியார் தொடரும் பெருந்தெய்வம்
நீதியுள் மாதெய்வ நின்மலன் எம்மிறை
பாதியுள் மன்னும் பராசத்தி யாமே

– திருமந்திரம்(1737)

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பனைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத்(து) அயனும் மால் அறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித்(து) அழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே

– அருட்பத்து (1)

மேலே உள்ள திருமந்திரப்பாடல், ஏழாம் தந்திரத்தின் கீழ், ஆறாவது அதிகாரமான 'ஞானலிங்கம்'

Koviloor Digital Library

என்பதில் ஐந்தாவது பாடலாகும். மேலும், திருமந்திரப்பா வரிசையில் 1737–வது பாவாகும்.

திருமூலர் தமது பாடலில், தமது முழுமுதற் கடவுள் சிவபெருமானே என்றும், அவனே தம் தலைவன் என்றும், பெரும் தெய்வம் என்றும், நேசநிறை தெய்வம் என்றும் பாடி பரவுகின்றார்.

அடுத்து வந்துள்ள பாடல் மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தின் ஒரு பகுதியாகிய அருள்பத்து என்பதின் முதல் பாடலாகும். மேலும், திருவாசகப்பா வரிசையில் 485வது பாவாகும். இது திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப் பட்டது.

இப்பாடல், எழுசீர் ஆசிரிய விருத்தத்தால் ஆனது. அருள்பத்து என்பது திருக்கயிலைக்குச் செல்லும் திருநெறியினை அருளிச் செய்யுமாறு வேண்டுதலாகும்.

மாணிக்கவாசகர் தமது பாடலில், சோதியே என்றும், சுடரே என்றும், எல்லாவற்றையும் விளக்கும் திருவிளக்கே என்றும், மேலான பரம்பொருளே என்றும், அயனும் அரியும் அறியாவண்ணம் திருவண்ணாமலையில் பேரொளிப் பிழம்பாக விளங்கியருளிய முறைப்பொருளே என்றும், திருப்பெருந்துறைக்கண் குருவாய் எழுந்தருளிய தூயோனே என்றும் தாம் வணங்கும் சிவபெரு மானைப் பாடி பரவுகின்றார்.

Koviloor Digital Library

திருமூலர், 'நீதியுள் மாதெய்வம்' என்று விளிக்க, மாணிக்கவாசகர், 'அயனும்மால் அறியா நீதியே' என விளிக்கின்றார்.

சிவபெருமான் உமாதேவியாரை இடப்பக்கத்தில் தாங்கி நிற்பதை,

'பாதியுள் மன்னும் பராசத்தி யாமே'

என்று திருமூலர் கூறுகின்றார்.

இதனையே மாணிக்கவாசகர் விளக்கும்போது

'சுரி குழற் பனை முலை மடந்தை
பாதியே பரனே...'

என்று கூறுகின்றார்.

இருபெரும் தத்துவ விற்பன்னர்களும் தங்களது பாடல்களில் ஆதி, சோதி, நீதி, பாதி என்று ஒரே மாதிரியாக எதுகைச் சொற்களாக நான்கு வரிகளிலும் பயன்படுத்தியிருப்பதைக் காண்க.

பல ஆயிரமாண்டுகளுக்கு முன்னர் இயற்றப் பட்ட திருமந்திர வரிகளுடனும், சொற்றொடர் களுடனும், சில ஆயிரமாண்டுகளுக்குப் பின்னர் இயற்றப்பட்ட திருவாசக வரிகளும், கருத்துகளும் பெரிதும் இயைபுபட்டு நிற்கின்றன. இருபெரும் விற்பன்னர்களுக்கும் ஏன் எல்லோருக்கும் தெரிந்த சிவபெருமானை வேறு விதமாக வருணிக்கத் தோன்றுமா என்ன?

Koviloor Digital Library

2

திருமந்திரமும் அடைக்கலப்பத்தும்

சித்தியும் முத்தியுந் திண்சிவ மாகிய
சுத்தியும் முத்தீ தொலைக்குஞ் சுகானந்த
சத்தியும் மேலைச் சமாதியு மாயிடும்
பெத்தம் அறுத்த பெரும்பெரு மானன்றே

– திருமந்திரம்(2438)

பெரும்பெரு மான்என் பிறவியை
வேரறுத்துப் பெரும் பிச்சுத்
தரும்பெரு மான்சது ரப்பெரு
மான்என் மனத்தினுள்ளே
வரும்பெரு மான்மல ரோன்நெடு
மால்அறி யாமல் நின்ற
வரும்பெரு மானுடை யாய்அடி
யேன் உன் அடைக்கலமே

– அடைக்கலப்பத்து (3)

மேலே உள்ள திருமந்திரப்பாடல், எட்டாம் தந்திரத்தின்கீழ், பதிமூன்றாம் அதிகாரமான 'மும்முத்தீ' என்பதில் நான்காவது பாடலாக அமைந்துள்ளது. மேலும் திருமந்திரப்பா வரிசையில் 2438–வது பாடலாக வரையப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

திருமூலர் தமது பாடலில், சித்தி, முத்தி, சிவமாம் சத்தி என்பன மூவகைத் துன்பங்களை (முத்தீ)யும் ஒழிக்கும் முறைகளாகும் என்றும், பின்னர்ப் பேரின்ப பேரருள் வெளிப்படும் என்றும், அதனால் செயலறலாகிய சமாதியும் கைகூடும் என்றும், பாசப்பிணிப்புகளை அறுத்தருளும் பெரும் பெருமான் வெளிப்பட்டுத் திருவடி இன்பத்தினை நல்குவன் எனவும் கூறுகின்றார்.

அடுத்துத் தரப்பட்டிருக்கும் பாடல், 'அடைக் கலப்பத்'தின் மூன்றாவது பாடலாகும். இது திருவாசகப் பாவரிசையில் 410வது பாவாகும். அடைக்கலப்பத்து திருப்பெருந்துறையில் அருளப் பட்டது.

மாணிக்கவாசகர் தமது பாடலில், சிவபெருமான் எத்தகையவன் என விவரிக்கின்றார். சிவபெருமான் பிறவியைப் போக்குபவன், பிறவிப்பித்தை அதிகரிப்பவன், எதையும் சாதிக்கும் சக்தி பெற்றவன், அடியார் மனதிலே குடிகொள்பவன், அயனுக்கும் அரிக்கும் புலப்படாதவன் என்றும் சிவபெருமானே மகாதேவன் என்றும் கூறி, அவனிடம் தாம் அடைக்கலம் அடைவதாகக் கூறுகின்றார்.

திருமூலர் பிறவிப் பிணிப்பைப் பற்றிக் கூறும்போது,

'பெத்தம் அறுத்த பெரும்பெரு மான்'

என்று குறிப்பிடுகின்றார்.

Koviloor Digital Library

அதனையே மாணிக்கவாசகர் கூறும்போது,

'பெரும்பெரு மான்என் பிறவியை வேரறுத்து'

என்று சொல்லுகின்றார். திருமூலரும், மாணிக்க வாசகரும் சிவபெருமானையே முழுமுதல் கடவுளாக ஏற்றுக் கொண்டனர். எனவே, சிவபெருமானின் தன்மையையும், சக்தியையும் பட்டியலிட்டுக் காட்டு கின்றனர்.

மேலும், 'பெத்தம் அறுத்த பெரும்பெரு மான்' என்னும் திருமந்திரவரியுடன், 'பெரும்பெரு மான் என் பிறவியை வேரறுத்து' என்னும் மாணிக்கவாசகரின் பாடல்வரி எந்த அளவுக்கு முகந்து நிற்கிறது என்பதை நுணுகிப்பார்த்து மகிழ்வோமாக.

3

திருமந்திரமும் அறிவுறுத்தலும்

உறுதுணை நந்தியை உம்பர் பிரானைப்
பெறு துணை செய்து பிறப்பறுத் துய்ம்மின்
செறிதுணை செய்து சிவனடி சிந்தித்து
உறுதுணை யாயங்கி யாகிநின் றானே.

– திருமந்திரம்(2584)

வாழ்த்துவதும் வானவர்கள்
தாம்வாழ்வான் மனநின்பால்

Koviloor Digital Library

தாழ்த்துவதும் தாம் உயர்ந்து
    தம்மையெலாம் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலும்
    தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப்பு அறுத்திடுவான்
    யானுமுன்னைப் பரவுவனே

– அறிவுறுத்தல் (6)

மேலே காணும் திருமந்திரப்பாடல், எட்டாம் தந்திரத்தின் கீழ், முப்பத்தோராவது அதிகாரமான 'பத்தியுடைமை' என்பதில் எட்டாவது பாடலாக அமைந்துள்ளது. மேலும், திருமந்திரப்பா வரிசையில் 2584வது பாவாகும்.

திருமூலர் தமது பாடலில், தேவர்கள் முதலிய அனைவருக்கும் முழு முதல்வனானவன் நந்திபகவான். அவன் திருவடிப் பேற்றினை அடைய அவன் திருவருளே துணையாகக் கொள்ளுதல் வேண்டும் என்றும், அத்திருவருளைத் துணையாகக் கொண்டும், செம்மையான நூல்கள் பயின்று அதன் வழி ஒழுகியும் பிறப்பறுத்து உய்ய வேண்டும் என்றும், ஆருயிர்களுக்கு எப்போதும் நெருங்கிய துணை திருவருளே என்றும், எனவே அதன் துணையோடு சிவனடியைச் சிந்திக்க வேண்டும் என்றும், அவனே சிறந்த பெருந்துணை என்றும் கூறுகின்றார்.

அடுத்து வரும் பாடல், திருவாசகத்தின் ஒரு பகுதியாகிய 'அறிவுறுத்தல்' என்பதன் கீழ ஆறாவது பாடலாகவும், திருவாசகப்பாடல் வரிசையில்

Koviloor Digital Library

இருபதாவது பாடலாகவும் அமைந்துள்ளது. இது திருப்பெருந்துறையில் பாடப்பட்டது. பாடல்கள் தரவு கொச்சகக் கலிப்பாவால் ஆனவை. மேலும் பாடல்கள் விவேகத்தைப் பெறுதல் பற்றி பேசுகின்றன.

மாணிக்கவாசகர் தமது பாடலில், தேவர்கள் நீண்டகாலம் வாழ்ந்திருக்க வேண்டும் என எண்ணியும் பிறர் தம்மைத் தொழ வேண்டியும் அவர்கள் சிவனை வழிபட்டனர் என்றும், ஆனால் தாம் பிறவித் தளையினின்று விடுபடுதல் பொருட்டே இறைவனை வணங்குவதாகவும் கூறுகின்றார்.

திருமூலர் பிறப்பறுக்க வேண்டி.

'........ உம்பர் பிரானைப்
பெறுதுணை செய்து பிறப்பறுத் துய்ம்மின்'

என்கிறார்.

மாணிக்கவாசகர் தாம் பிறப்பறுப்பதற்காக,

'பாழ்த்த பிறப்பு அறுத்திடுவான்
யானுமுன்னைப் பரவுவனே'

என்கிறார்.

எனவே, மீண்டும் பிறக்காமலிருப்பதற்காக திருமூலரும், மாணிக்க வாசகரும் சிவனை வழி பட்டனர் என்றும், வேறு எந்த சுயநலமுமில்லை எனவும் பாடிப்பரவுகின்றனர்.

Koviloor Digital Library

இதிலிருந்து தேவர்களே சுயநலத்துடன்தான் வழிபட்டிருக்கின்றனர் எனத் தெரிகின்றது. நாம் எம்மாத்திரம்? மனிதன் சுயநலமிக்கவன். தான் வாழ வேண்டும், தன் குடும்பம் வாழ வேண்டும் என்று சுயநலமாகத்தான் வேண்டிக்கொள்கிறானே தவிர, இந்த உலகம் வாழ வேண்டும் என்று பரந்த மனப்பான்மையோடு வேண்டிக்கொள்கின்றவர் எத்தனைப் பேர்?

4

திருமந்திரமும் அற்புதத் திருவந்தாதியும்

விசும்பொன்று தாங்கிய மெய்ஞ்ஞானத் துள்ளே
அசும்பினின் றூறிய தாரமு தாகும்
பசும்பொன் திகழும் படர்சடை மீதே
குசும்ப மலர்க்கந்தங் கூடிநின் றானே

– திருமந்திரம்(2775)

காலையே போன்றிலங்கும் மேனி கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு – மாலையின்
தாங்குருவே போலுஞ் சடைக்கற்றை மற்றவற்கு
வீங்கிருளே போலும் மிடறு.

– அற்புதத்திருவந்தாதி (65)

Koviloor Digital Library

மேலே தரப்பட்டிருக்கும் திருமந்திரப்பாடல், ஒன்பதாம் தந்திரத்தின் கீழ், பத்தாவது அதிகாரமான ‘ஞானோதயம்’ என்பதில் எட்டாவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 2775வது பாவாகவும் வரையப்பட்டுள்ளது.

இப்பாடலில் திருமூலர், விசும்பொத்து (ஆகாயம்போல்) எல்லையின்றி விரிந்த திருவடி உணர்வாகிய மெய்ஞ்ஞானத்தினுள்ளே, திருவடி இன்பம் நிறைவாய் ஊறிப் பெருகும் என்றும், அதன் நிலைகளம் சிவபெருமான் என்றும், பசும்பொன் போன்று திகழ்ந்து விரிந்து விளங்கும் திருச்சடையின் மீது செங்கழுநீர் மலரும் மணமும் கலந்து பிரிப்பின்றி இருபொருளும் கெடாது இருப்பது போல சிவனும் அடிமையும் கூடி நிற்பர் எனக் கூறுகின்றார்.

அடுத்து தரப்பட்டிருக்கும் பாடல், காரைக்கால் அம்மையார் செய்து அருளிய ‘அற்புதத் திருவந்தாதி’யைச் சார்ந்ததாகும். இது 101 பாடல்களைக் கொண்டது. இதில் ‘காலை முதல் இரவு வரை’ என்னும் தலைப்பில் 65–வது பாடலாகவும், பதினோராம் திருமுறைப்பா வரிசையில் 108–வது பாவாகவும் வரையப்பட்டுள்ளது.

இப்பாடலில் காரைக்காலம்மையார் சிவபெருமானுக்கு, உதய வேளையாகிய காலை நேரத்தைப் போலச் சிவப்பாகத் திருமேனி விளங்கும் என்றும், கடும்பகலாகிய நண்பகல் வேளையைப் போல அவன் திருமேனியில் அணிந்த வெண்மையான திருநீறு விளங்கும் என்றும், மாலை நேரத்தில்

Koviloor Digital Library

வானம் தாங்கும் சிவப்பு உருவம் போல அவன் சடையின் தொகுதி தோன்றும் என்றும், மிக்க இருளைப் போல அவனுடைய நீலகண்டம் தோன்றும் என்றும் கூறுகின்றார்.

திருமூலர், செங்கழுநீர் மலரும் மணமும் கலந்து பிரிப்பின்றி இருபொருளும் கெடாது இருப்பது போல், சிவனும், அடிமைகளும் கூடி நிற்பர் என்று கூறுகின்றார். எங்கே அந்த மலர் இருக்கின்றது? சிவபெருமானின் திருச்சடையின்மீது. திருச்சடை எப்படி இருக்கின்றது? பசும்பொன் போன்று திகழ்ந்து விரிந்து விளங்குவதாகக் கூறுகின்றார் திருமூலர். இதனை,

'பசும்பொன் திகழும் படர்சடை மீதே'

என்ற வரியின் மூலம் உணரலாம்.

அதேபோல் காரைக்கால் அம்மையார், சிவபெருமானின் மேனியழகு, வெண்ணீற்றின் தோற்றம், சடைக்கற்றை, சிவனின் கழுத்து (அ) தொண்டை ஆகியவைகள் எப்படி காட்சி தருகின்றன என்று தமது பாடலில் வருணிக்கின்றார். அது பொழுது, சிவபெருமானின் சடையின் தொகுதி எப்படித் தோன்றுகின்றது? மாலை நேரத்தில் வானம் தாங்கும் சிவப்பு வண்ணம் போல் தோன்றுகின்றது எனக் கூறுகின்றார். இதனை,

'...............................மாலையின்

தாங்குருவே போலுஞ் சடைக்கற்றை'

Koviloor Digital Library

என்னும் வரிகள் மூலம் நாமறியலாம்.

திருமூலருக்கு, சிவபெருமானின் திருச்சடையானது பசும்பொன் போலத் தோன்ற, காரைக்காலம்மையாருக்கு, மாலைநேர மேற்குவான சிவப்பு நிறம் போலத் தோன்றுவது ஏனோ? திருமூலர், காலத்தையும் வண்ணத்தையும் இணைக்காத போது, காரைக்காலம்மையார் காலத்தையும், வண்ணத்தையும் இணைத்து இயைபு படுத்துகின்றார்.

சிவபெருமானின் முடியை, திருமூலர் 'படர்சடை' என்னும் சொல்லால் வருணிக்க, அதனையே காரைக்காலம்மையார், 'சடைக்கற்றை' என்று குறிப்பிடுவதை ஆழ்ந்து ஓர்க.

திருமதி லெக்ஷ்மி வளாகம் நூலகம்
அழகப்பா பல்கலைக்கழகம்
சேர்க்கை பதிவேடு எண்....32565....

5

திருமந்திரமும் அமுதாம்பிகைப் பிள்ளைத் தமிழும்

ஏடங்கை நங்கை இறைஎங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும் வெண் தாமரை
பாடுந் திருமுறை பார்ப்பனி பாதங்கள்
சூடுமின் *சென்னிவாய்த் தோத்திரஞ் சொல்லுமே*

– திருமந்திரம்(1043)

தெய்வச் சுருதி தமிழ்க்கன்றித்

Koviloor Digital Library

தீட்டா நிலைமைத் தெனவுலகில்
தெரிக்குங் காழித் திருஞானச்
செம்மற் குழவிக் கருள் ஞானம்
பெய்து குழைக்க வோமுலையாம்
பெரிய மலைவாய் உறுத்துமென்றோ.
பெருமான் றனையுங் குழைத்தவலிப்
பெற்றி அறிந்து தடுத்தோபூங்
கையில் இலகு நகக்குறிபற்
கதுவ நோமென் றோதீம்பால்
கறந்து கொடுத்தா யெனச்சகிமார்
கனிந்து பாட நகை முகிழ்க்கும்
வைவைத் தமைந்த மதர்வேற்கண்
வாழ்வே வருக வருகவே
வளங்கூர் குளந்தைப் பதியமுத
வல்லி வருக வருகவே

– அமுதாம்பிகைப் பிள்ளைத்தமிழ் (60)

மேலே தரப்பெற்றிருக்கும் திருமந்திரப்பாடல் நான்காம் தந்திரத்தில், ஐந்தாவது அதிகாரமான 'சத்தி பேதம்–திரிபுரை சக்கரம்' என்பதன் கீழ், இருபத்து மூன்றாவது பாடலாக வரையப்பட்டுள்ளது.

திருமூலர் தமது பாடலில், செந்தமிழ் மறைமுறை ஏட்டைத் திருக்கையிலுடைய நங்கை தம் இறைவி என்றும், அவள் மூன்று திருக்கண்களையுடையவள் என்றும், படிகம் போலும் தூய்மையான வெண்ணிறத் தவள் என்றும், வெண்தாமரையான சகசிரதளத்தில்

Koviloor Digital Library

விரும்பி இருப்பவள் என்றும், திருமுறை பாடும் திருவாயினள் என்றும், அப்பெருமாட்டியின் திருவடிகளை நம் தலையில் சூடி வாயினால் துதித்து வணங்க வேண்டும் என்றும் கூறுகின்றார்.

ஈண்டு தரப்பெற்றிருக்கும் மற்றொருபாடல் குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் என்னும் நூலைச் சார்ந்தது. இதனை அருளியவர் சிவஞான சுவாமிகள் ஆவார். இந்நூலில் ஆறாவதாக அமைந் துள்ள 'வாரானைப் பருவம்' என்பதன் கீழ் ஆறாவது பாடலாக அமைந்துள்ளது. இது தோழியர்கள் பிள்ளை நடந்து வருதலை விரும்பி யழைக்கும் பருவமாம்.

மாதவச் சிவஞான சுவாமிகள் தமது பாடலில், இறைவன் அருளிய நெறிகள் நிறைந்த மறைகள் தமிழுக்குண்டு என்றும், இவ்வுலகில் உள்ள மலங்கள் பற்றி எடுத்துரைக்கவிருக்கும் சீர்காழி திருஞான சம்பந்தருக்கு பார்வதியம்மையாரின் பேணும் திருக்கொங்கைகளில் உள்ளதான இனிய பாடலுடன் அரிய சிவஞானத்தைக் குழைத்து அமுது செய்தருளிய தாகவும், அவ்வாறு செய்யுங்கால் பெரிய நாயகி அம்மையார் சிவபெருமான் இயம்பியபடி, முலை காம்புகள் குழந்தையின் மென்மையான வாயை உறுத்தும் என்றோ, குழந்தையின் வாய் வலிக்கும் என்று நன்கு அறிந்து தடுத்தோ, பூப்போன்ற கையில் இளம் நகக்குறியோ பற்குறியோ பட்டு நோகு மென்றோ குழந்தையின் (திருஞானசம்பந்தர்) அருகில் போய் கச்சுடைய தம் முலைப்பாலைப் பொற்

Koviloor Digital Library

கிண்ணத்தில் கறந்தருளினார் என்றும், தோழியர் மகிழ்ச்சிபொங்க, 'எங்கள் வாழ்வே' என்றும் 'எங்கள் கனி அமுதே' என்றும் கூறி 'வருக வருகவே' என இசைந்துபாடி வரவேற்பார்கள். என்றும் கூறுகின்றார்.

திருமூலர், தமது இறைவி யார் என்ற கேள்விக்கு, 'செந்தமிழ் மறைமுறை ஏட்டைத் திருக்கையிலுடைய நங்கை' என்று குறிப்பிடுகின்றார். அதாவது, வேதம் ஆகமங்களைச் சுவடி உருவமாகக் கையில் வைத்துள்ள மனோன்மணி எனப்படும். இதனை,

'ஏடங்கை நங்கை இறை...'

என்னும் சொற்றொடர்கள் மூலம் அறியலாம்.

அதேபோல மாதவச் சிவஞானசுவாமிகள், இறைவன் அருளிய நெறிகள் நிறைந்த மறைகள் தமிழுக்குண்டு என்று கூறுகின்றார். இதனை,

'தெய்வச் சுருதி தமிழுக்கன்றி'

என்னும் சொற்றொடர்களால் தெளிந்து கொள்ள இயலும்.

'ஏடங்கை நங்கை' என்னும் திருமந்திரச் சொற்றொடர் மூலம் மேலும் நாம் அறியவரும் செய்தி என்னவென்றால், ஆரம்பத்திலேயே வேதாகமங்கள் எழுதப்பட்டுச் சுவடி வடிவில் திருவருளம்மை கையில் இருந்தன என்பதேயாகும். மேலும், அதுபோது, வடமொழி எழுத்தில்லாத மொழியாகவும், தமிழ் எழுதும் மொழியாகவும் இருந்தபடியால் வேதாக

Koviloor Digital Library

மங்கள் தமிழ் மொழியிலேயே எழுதப்பெற்றன என்பதும் பெறப்படும் செய்தியாகும்.

தவிர, நெறிகள் நிறைந்த மறைகள் தமிழில் உண்டு என்பதை 'தெய்வச் சுருதி தமிழுக்கன்றி' என்னும் சொற்றொடர் விளக்குவது மட்டுமல்லாமல்; இரு தவ ஞானிகளும் தமிழ் மற்றும் வேதங்களின் தொன்மையை விளக்கா நிற்கின்றனர்.

6

திருமந்திரமும் ஆனந்தா தீதமும்

உள்ள சரியாதி ஒட்டியே மீட்டென்பால்
வள்ளல் அருத்தியே வைத்த வளம்பாடிச்
செய்வன எல்லாஞ் சிவமாகக் காண்டலாற்
கைவள மின்றிக் கருக்கடந் தேனன்றே

– திருமந்திரம்(2936)

பாட வேண்டும்நான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந்து உருகி நெக்குநெக்கு
ஆட வேண்டும்நான் போற்றி அம்பலத்து
ஆடும் நின்கழல் போது நாயினேன்
கூட வேண்டும்நான் போற்றி இப்புழுக்
கூடு நீக்குஎனைப் போற்றி *பொய்யெலாம்*

Koviloor Digital Library

வீட வேண்டும்நான் போற்றி வீடுதந்து
அருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே.

– ஆனந்தாதீதம் (10)

மேலே சுட்டிய திருமந்திரப்பாடல் ஒன்பதாம் தந்திரத்தின்கீழ், இருபதாம் அதிகாரமான ‘அணைந் தோர் தன்மை’ என்பதில் இருபதாவது பாடலாக அமைந்துள்ளது. மேலும், திருமந்திரப்பா வரிசையில் 2936ஆவது பாடலாகவும் வரையப் பட்டுள்ளது.

திருமூலர் தமது பாடலில், நன்னெறி நான்கின் (1. சீலம், 2. நோன்பு, 3. செறிவு, 4. அறிவு) வாயிலாகத் தம்மைப் பயிற்றுவித்து அவற்றினின்று மீட்டுவித்தருளியதாகவும், திருவடியின்பத்தினை அளித்ததாகவும், அவனருளால் அச்சிறப்பினைப் பாடிக் கொண்டிருப்பதாகவும், செயலெல்லாம் சிவச் செயலெனவும், எஞ்சுவினையாகிய கைவளம் (கைப்பொருள்–செழுமை) எரிசேர் வித்தென மாய்ந் தமையாலும், ஏறுவினை உணக்கிலா வித்தென ஓய்ந்தமையாலும், ஏன்றவினை உடலூழாய்த் தேய்ந்தமையாலும் இன்னமோர் அன்னை வயிற்றில் பிறக்கும் கருநிலை கடந்து அருநிலையாம் சிவனிலை எய்தியதாகக் கூறுகின்றார்.

அடுத்து வரும் பாடல், ‘திருச்சதகத்’தின் கீழ் ‘ஆனந்தாதீதம்’ என்பதில் பத்தாவது பாடலாகும். இது திருவாசகப்பா வரிசையில் 104ஆவது பாவாக வரையப்பட்டுள்ளது. இது திருப்பெருந்துறையில் அருளப்பட்டது. ஆனந்தா தீதம் என்றால் சொற்பதங்கடந்த தொன்மை என்பது பொருள்.

Koviloor Digital Library

சொல்லில் அடங்காததைக் கூடியவரையில் சொல்லால் விளக்க இப்பதிகம் பயன்படுகிறது. பாடல் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் ஆனது.

மாணிக்கவாசகர் தமது பாடலில், சிவனைப் பற்றியே மனம் நெகிழ்ந்து கரையும்படி பாடிப் பரவசமடைந்து தாம் கூத்தாட வேண்டும் என்றும், ஊர்த்தவ தாண்டவமாடும் சிவசொரூபத்தில் தாம் ஒன்றுபட வேண்டும் எனவும், தாம் அதீதத்தில் போக வேண்டும் எனவும், வீடுபேறு தமக்குக் கிடைக்க வேண்டும் எனவும் வேண்டுகிறார்.

சிதம்பரத்திற்குப் போனவர்கள் திரும்பி வருவதில்லை என்பது கோட்பாடு. சிவனுடைய ஊர்த்தவ தாண்டவம் பிரகிருதிக்கு அப்பாற்பட்டது. ஆதலால் அதுவே ஆனந்தா தீதம்.

திருமூலர் சிவனருளால் அவனைப் பாடிக் கொண்டிருப்பதாகக் கூறும்போது,

'வள்ளல் அருத்தியே வைத்த வளம்பாடி'

என்கிறார். மேலும் எஞ்சுவினை, ஏறுவினை, ஏன்றவினைகளின் பயனால் மற்றொரு அன்னை வயிற்றில் மீண்டும் பிறக்க வழியில்லாமல், எல்லாவற்றையும் கடந்து சிவனிலை அடைந்ததாகக் கூறும்போது,

'கைவள மின்றிக் கருக்கடந் தேனன்றே'

என்கிறார்.

Koviloor Digital Library

அதே போல மாணிக்கவாசகர் சிவனைப் பற்றியே தாம் பாடிக்கொண்டிருக்க வேண்டும் என்று கூறும்போது,

'பாட வேண்டும்நான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந்து உருகி நெக்குநெக்கு
ஆட வேண்டும்நான் போற்றி...'

என்கிறார்.

மேலும், வீடு பேறு வேண்டும் என்னும் போது,

'... ... பொய்யெலாம்
வீட வேண்டும்நான் போற்றி வீடுதந்து
அருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே'

என்று வேண்டுகிறார். திருமூலரும், மாணிக்க வாசகரும் எப்போதும் சிவனையே பாட வேண்டும் எனவும், அதன் விளைவாக வீடுபேறு அடைய வேண்டும் எனவும் ஒரே மாதிரியாக வேண்டு கின்றனர் என்பதை இதன் மூலம் நாம் அறியலாம்.

7

திருமந்திரமும் ஆத்துமசுத்தியும்

ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியுந்
தேடியுங் கண்டேன் சிவன்பெருந் தன்மையைக்

Koviloor Digital Library

கூடிய வாறே குறியாக் குறிதந்தென்
ஊடுநின் றானவன் தன்னரு ளுற்றே
- திருமந்திரம்(1785)

ஆடு கின்றிலை கூத்துடை
யான்கழற்கு அன்பிலை என்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதும்
செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின்
றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ
றலறிலை செய்வதொன் றறியேனே
- ஆத்துமசுத்தி (1)

மேலே தரப்பட்டிருக்கும் திருமந்திரப் பாடல் ஏழாம் தந்திரத்தின் கண், பத்தாவது அதிகாரமான 'அருளொளி' என்பதன்கீழ் மூன்றாவது பாடலாக அமைந்துள்ளது. மேலும், திருமந்திரப்பா வரிசையில் 1785-ஆவது பாவாக வரையப் பட்டுள்ளது.

திருமூலர் தமது பாடலில், திருவருள் கைவரப் பெறுதலால் ஆடுதல், பாடுதல், இன்பக் கண்ணீர் உகுத்தல், ஓலமிடுதல், இடம் தோறும் சென்று நாடுதல் ஆகிய நற்பணி புரிந்து சிவன் பெருந் தன்மையை அவன் உணர்த்த, தாம் உணர்ந்ததாகவும், அறிவாலன்றி அருளால் உணரும் திருவடியைத் தந்தருளியதாகவும் கூறுகின்றார்.

Koviloor Digital Library

அடுத்து தரப்பட்டிருக்கும் திருவாசகப்பாடல், 'திருச்சத'கத்தின் கீழ் 'ஆத்தும சுத்தி' என்ற தலைப்பில் முதல் பாடலாக அமைந்துள்ளது. மேலும், திருவாசகப்பா வரிசையில் 35–ஆவது பாவாக எழுதப்பட்டுள்ளது.

இது திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகரால் பாடப்பட்டது. மேலும், இது அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் எழுதப் பட்டுள்ளது. ஆத்மா என்னும் சொல்லானது உடல், உள்ளம், சீவன், பரம்பொருள் ஆகிய இவையாவையும் குறிப்பதாகும். இங்கு அது உள்ளம் சுத்தியடைதல் பற்றி பேசுகிறது.

மாணிக்கவாசகர் தமது பாடலில், தம் மனம் பிணம் போன்று செயலற்றுக் கிடப்பதாகவும், தம் மனம் அன்பின் மிகுதியால் ஆடுவதில்லை, பாடுவ தில்லை, பாடி வீதி வீதியாகப் போவதில்லை, ஆனந்தக் கூத்தனது திருவடிப் பாதங்களில் மலர்த்தூவி அலங்கரிப்பதில்லை, உணர்ச்சி வேகத்தால் பதை பதைப்பு அடைவதில்லை, ஆண்டவனிடம் அன்பு இல்லை என்றெல்லாம் தம் மனதை கேள்விகள் பல கேட்டு, ஒரு மனப் போராட்டத்தையே நடத்துகிறார். இறைவனது துணையைத் தேடாத தம் மனதை வைத்துக் கொண்டு என்ன செய்வதென்று தமக்கு விளங்கவில்லை எனவும் மனம் வெதும்புகிறார்.

திருமூலர், சிவன் அருள் கிடைக்கப்பெற்று அவன் அருமை பெருமைகளையும், பெருந்தன்மை யையும் உணர்ந்ததாகக் கூறுகின்றார். இதனை,

Koviloor Digital Library

'ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியுந்
தேடியுங் கண்டேன் சிவன்பெருந் தன்மையை'

என்ற வரிகளால் நாம் அறியலாம்.

ஆனால் மாணிக்கவாசகர், இறைவனது அருள் பெற, தாம் ஆடவில்லை, பாடவில்லை, பதைபதைப்பு அடையவில்லை, வணங்கவில்லை, மலர்தூவி இறைவனது பாதங்களை அலங்கரிக்கவில்லை. இப்படியிருந்தால் எப்படி இறையருள் பெற முடியும் என தம் மனதை தாமே கடிந்து கொள்கின்றார். இதனை,

'ஆடு கின்றிலை', 'அன்பிலை', 'பாடுகின்றிலை', 'பதைப்பதும் செய்கிலை', 'பணிகிலை', 'பாதமலர் சூடுகின்றிலை' முதலிய பாடலின் சொற்றொடர்கள் மூலம் அறியலாம்.

இங்கே, திருமூலர் இறையருள் பெற்றவர். அதனை ஆடியும், பாடியும், அழுதும், அரற்றியும், தேடியும் பெற்றார். ஆனால் மாணிக்கவாசகர் ஆடவில்லை, பாடவில்லை, அழவில்லை, அரற்றவில்லை, தேடவுமில்லை என்கிறார்.

ஆக, மாணிக்கவாசகர் இறையருள்பெற முயற்சிக்கின்றார் என்றாகிறது. எனவே தம் மனதை கடிந்து கொள்ளவும் செய்கிறார். முயற்சியில் வெற்றி பெற்றாரா?

Koviloor Digital Library

8

திருமந்திரமும் இளையான்குடி மாறநாயனார் புராணமும்

பொய்யிலன் மெய்யன் புவனா பதியெந்தை
மையிருள் நீக்கு மதியங்கி ஞாயிறு
செய்யிருள் நீக்குந் திருவுடை நந்தியென்
கையிருள் நீங்கக் கலந்தெழுந் தானே

– திருமந்திரம்(1959)

பெருகு வானம் பிறங்க மழைபொழிந்து
அருகு நாப்பண் அறிவருங் கங்குல்தான்
கருகு மையிரு ளின்கணம் கட்டுவிட்டு
உருகு கின்றது போன்ற துலகெலாம்

– இளையான்குடி மாறநாயனார் புராணம் (15)

மேலே தரப்பட்டுள்ள திருமந்திரப்பாடல், ஏழாம் தந்திரத்தின் கீழ் இருபத்திரண்டாவது அதிகாரமான 'ஆதித்தநிலை' என்பதில் இருபத்திரண்டாவது பாடலாக அமைந்துள்ளது. மேலும் இப்பாடல், திருமந்திரப்பா வரிசையில் 1959–ஆவது பாவாக வரையப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

திருமூலர் தமது பாடலில், அனைத்து உலகங்களுக்கும் தலைவன் சிவபெருமான் என்றும், உலக இருளை நீக்குவது திங்கள், தீ, ஞாயிறு என்றும், செய்வினை இருளைப் போக்கியருள்பவன் . நந்தியெங் கடவுள் என்றும், அவனே ஒட்டுமலமாகிய அறிவைத் தடை படுத்தும் ஒட்டிருளை யொடுக்க தம்முள் உயிர்க்கு உயிராய் எழுந்தருளியிருந்தனன் என்றும், அவன் பொய்யிலன் மெய்யன் என்றும் கூறுகின்றார்.

அடுத்து தரப்பட்டிருக்கும் பாடல் சேக்கிழார் படைத்த பெரிய புராணத்தைச் சார்ந்ததாகும். இப்பாடல் 'தில்லைவாழந்தணர் சருக்'கத்தின் கீழ் 'இளையான்குடி மாறநாயனார் புராணத்தில்' 15–வது பாடலாகவும் பெரிய புராணப்பா வரிசையில் 454–ஆவது பாடலாகவும் அமைந்துள் ளது.

சேக்கிழார் தமது பாடலில், இளையான்குடி மாறநாயனார் தமது உள்ளத்தில் உண்டான ஆசை யினால் நீர் சூழ்ந்த வயலுக்கு நெல் முளையை வாரிக் கொண்டு வரஎண்ணி புறப்பட முனைந்த போது, நிறைந்த மேகங்கள் மிகவும் அதிகமாக மழை பெய் தது எனவும், அதனால் வழியின் ஓரம் இது, நடு இடம் இது என்று அறிவதற்கு இயலாத அந்த இரவானது, கரிய மை போன்ற இருளின் கூட்டம் திடத்தன்மை நீங்கி உலகம் முழுவதும் உருகி ஓடிப் பரவியது போல் இருள் சூழ்ந்து விளங்கியது எனவும் கூறுகின்றார்.

Koviloor Digital Library

திருமூலர், புறத்தே மூடியுள்ள மாயிருளாகிய மையிருளை, உலக இருளை நீக்குவது திங்கள், தீ, சூரியன் என்னும் மூன்றுமேயாகும் என்று கூறுகின்றார். இதனை,

'மையிருள் நீக்கு மதியங்கி ஞாயிறு'

என்னும் வரியின் மூலம் நாம் உணரலாம்.

அதே போல் சேக்கிழார், மேகம் சூழ்ந்த இரவினை வருணிக்கின்ற போது, 'கருகுமையிருள்' என்று கூறுகின்றார். மேலும், அதே கருகுமையிருள் எப்போது விலகுகிறது என்னும் கேள்விக்கு விடையாய், மேகத்தின் திடத்தன்மை நீங்கி மழையாய் உருகி ஓடிப் பரவுகின்றபோது என்று கூறுகின்றார்.

மேலும் திருமூலர், புறத்தே மூடியுள்ள மாயிருளை 'மையிருள்' என்கிறார். சேக்கிழார் மேகம் சூழ்ந்த இரவினையே 'மையிருள்' என்கிறார். ஆனால் அடுத்த கட்டமாக திருமூலர், 'செய்யிருள்' (கன்மம்), மற்றும் 'கையிருள்' (தம்மிடமுள்ள இருள்) எனக் கூறி, அவை விலக நந்திக்கடவுளின் அருள் தேவை என்கிறார். சேக்கிழாரோ இவை பற்றிக் கூறாமல், துறவி வேடத்தில் தம்மை அண்டிவந்த சிவபெருமானின் பசி தீர்க்க, இளையான்குடி மாற நாயனாரின் ஒரு நடவடிக்கையைப் பற்றி மட்டுமே கூற முனைகின்றார் எனலாம். 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண முடியும்' என்கிறபோது 'துறவிக்குச் செய்யும் பணி விடை இறைவனுக்குச் செய்யும் பணிவிடையே யன்றோ?

Koviloor Digital Library

9

திருமந்திரமும் இருபாவிருபதும்

இவனில்ல மல்ல தவனுக்கங் கில்லை
அவனுக்கும் வேறில்லம் உண்டா அறியின்
அவனுக் கிவனில்ல மென்றென் றறிந்தும்
அவனைப் புறம்பென் றரற்றுகின் றாரே

– திருமந்திரம்(2602)

கண்ணுதலும் கண்டக் கறையும் கரந்தருளி
மண்ணிடையின் மாக்கள் மலமகற்றும் –
வெண்ணெய் நல்லூர்
மெய்கண்டான் என்றொருகால் மேவுவரால்
வேறின்மை
கைகண்டார் உள்ளத்தின் கண்

– இருபா விருபது (1)

மேலே தரப்பெற்றிருக்கும் திருமந்திரப்பாடல், ஒன்பதாம் தந்திரத்தின் கீழ், முதல் அதிகாரமான 'குருமட தரிசனம்' என்பதில் இரண்டாவது பாடலாக அமைந்துள்ளது.

இப்பாடலில் திருமூலர், அவன் என்னும் சொல் முழுமுதற் சிவனைக் குறிக்கும் என்றும், முழுமுதற் சிவனாகிய அவனுக்கு சிவகுருவாகிய இவனுடைய

Koviloor Digital Library

(சீவன்) நற்றவ உள்ளமே உற்று உறையும் அருள்சேர் திருக்கோயில் என்றும், உண்மையை ஆராய்ந்து அறியப்புகின் சிவகுருவின் (சீவனின்) உள்ளத்தைத் தவிர சிவன் உறைவதற்கு வேறு திருக்கோயில் இல்லை என்றும் இதனை நன்றாக அறிந்திருந்தும், அவனாகிய சிவபெருமானைச் சிவகுருவுக்கு வேறாய் உள்ளான் என்று சிலர் அறியாமையால் வீண் முழக்கம் செய்கின்றனர் என்றும், அவர்களுடைய அறியாமை என்னே என்றும் மனம் வெறுத்துக் கூறுகின்றார்.

மேலே தரப்பெற்றிருக்கும் மற்றொரு பாடல், 'இருபா இருபது' என்னும் நூலின் முதல் பாடலாகும். இந்நூலினை அருளியவர் அருணந்தி தேவ நாயனார் ஆவார். இது கி.பி.1254–ஆம் ஆண்டு அருளப்பட்டது. இந்நூல் மொத்தம் 20 பாடல்களைக் கொண்டது. இது வெண் பாவும் ஆசிரியமுமாகிய இருவகைப் பாக்களாலும் இயன்றது ஆகும்.

ஆசிரியர் தம் குருமூர்த்தியாகிய மெய்கண்டாரைப் பலவகைகளிலும் போற்றி, பல்வேறு வினாக்களைத் தொடுக்கும் முறையில் நூலினை அருளிச் செய்திருக்கின்றார். வினாக்கள் பலவும், இறை, உயிர், தளை ஆகிய முப்பொருள் உண்மை பற்றியவையேயாகும்.

அருணந்தி தேவ நாயனார் தமது பாடலில், நெற்றிக் கண்ணையும், கழுத்திலுள்ள கருநிறத்தினையும் மறைத்துக் கொண்டு இவ்வுலகிலுள்ள உயிர்களின் மலத்தை நீக்குதல் பொருட்டுத் திருவெண்ணெய் நல்லூரில் மெய்கண்டான்

Koviloor Digital Library

என்றொரு திருப்பெயரையும் கொண்டு எழுந்தருளி யுள்ளான் என ஒருமுறை மனத்தகத்து நினைந்து போற்றுவாராயின் அவர் தமது உள்ளத்தின்கண் சிவபெருமானையேயன்றி யாரைக் கண்டவராவர் என வினவுகிறார்.

முழு முதற் சிவனாகிய 'அவனுக்கு' சிவ குருவாகிய 'இவனுடைய' (சீவன்) நற்றவ உள்ளமே உற்றுறையும் திருக்கோயில் என்று திருமூலர் தமது பாவில் விளம்புகிறார். இதனை,

'இவனில்ல மல்ல தவனுக்கங் கில்லை
அவனுக்கும் வேறில்லம்........................'

என்னும் வரிகள் மூலம் அறியலாம்.

அதே போல் உயிர்களின் மலத்தை நீக்குதல் பொருட்டு, திருவெண்ணெய் நல்லூரில் மெய்கண்டான் எழுந்தருளி உள்ளான் என மனதில் நினைந்து போற்றுவாராயின் அவர் தமது உள்ளத்தின் கண் சிவபெருமானைத் தவிர வேறு யாரையும் காண வாய்ப்பில்லை எனக் கூறுகின்றார் அருணந்திதேவர். இதனை,

'..வெண்ணெய் நல்லூர்
மெய்கண்டான் என்றொருகால் மேவுவரால் வேறின்மை
கைகண்டார் உள்ளத்தின் கண்'

என்னும் வரிகள் மூலம் தெளியலாம்.

ஆக, சீவர்களின் – ஆருயிர்களின் உள்ளமே சிவன் உறையும் இல்லம் என இரு பெரும் தத்துவ

Koviloor Digital Library

விற்பன்னர்களும் ஒரே மாதிரியாக செப்புகின்றனர் என்பது நுணுகிப்பார்க்கும்பொழுது புலப்படுகிறது. அதாவது அருணந்தி தேவரின் கருத்து, திருமூலரின் கருத்துடன் பெரிதும் இயைபு படுகின்றது என்று சொல்லலாம்.

10

திருமந்திரமும் உயிருண்ணிப்பத்தும்

ஒழிந்தேன் பிறவி யுறவென்னும் பாசங்
கழிந்தேன் கடவுளும் நானுமொன் றானேன்
அழிந்தாங் கினிவரு மாக்கமும் வேண்டேன்
செழுஞ்சார் புடைய சிவனைக்கண் டேனே

– திருமந்திரம்(2918)

வேண்டேன்புகழ் வேண்டேன் செல்வம்
    வேண்டேன் மண்ணும் விண்ணும்
வேண்டேன் பிறப்(பு) இறப்புச் சிவம்
    வேண்டார்தமை நாளும்
தீண்டேன் சென்று சேர்ந்தேன் மன்னு
    திருப்பெருந்துறை இறைதாள்
பூண்டேன்புறம் போகேன்இனிப்
    புறம்போகல்ஓட் டேனே

– உயிருண்ணிப்பத்து (7)

Koviloor Digital Library

மேலே தரப்பட்டிருக்கும் திருமந்திரப்பாடல், ஒன்பதாம் தந்திரத்தின் கீழ், இருபதாவது அதிகாரமான 'அணைந்தோர்தன்மை' என்பதில் இரண்டாவது பாடலாகும். மேலும், இது திருமந்திரப்பா வரிசையில் **2918**–ஆவது பாடலாகும்.

திருமூலர் இப்பாடலில், சிவனை அவன் திருவடியுணர்வால் தாம் இன்புற்றதாகவும், அதனால் பிறவித் தொல்லையை ஒழித்ததாகவும், உறவென்று சொல்லப்படும் பாசம் அறவே கழிந்ததாகவும், கடவுளும் தாமும் ஒன்றானதாகவும், பிறந்து இறந்து உழலும் இழிவு வரும்வழி தமக்கு வேண்டாம் எனவும் கூறுகின்றார்.

அடுத்து தரப்பட்டிருக்கும் பாடல், மாணிக்கவாசகர் செய்தருளிய திருவாசகத்தின் ஒரு பகுதியாகிய 'உயிருண்ணிப்பத்து' என்பதில் ஏழாவது பாடலாகும். திருவாசகப்பா வரிசையில் **512**ஆவது பாடலாகவும் அமைந்துள்ளது. இது திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப்பட்டது. பாடல் கலிவிருத்தத்தால் ஆனது. உயிருண்ணிப்பத்து சிவானந்தம் மேலிடுதல் பற்றி பேசுகிறது.

மாணிக்கவாசகர் தமது பாடலில், உலக சம்பத்தும் தெய்வ சம்பத்தும் ஒன்றோடொன்று முரண்படுபவை ஆதலால், தாம் திருப்பெருந்துறை இறைவன் தாள்களைப் பற்றிக் கொண்டதாகவும், உலகப் பற்று உடையவர்களோடு ஒரு பொழுதும் சேர மாட்டேன் என்றும் கூறுகின்றார்.

Koviloor Digital Library

திருமூலர், பிறவித் தொல்லையை ஒழித்த தாகவும், பிறந்திறந்துழலும் இகழ்ச்சியான வரும்வழி வேண்டாம் என்று ஒழித்ததாகவும் கூறுகின்றார். இதனை,

'ஒழிந்தேன் பிறவி யுறவென்னும் பாசங்,
கழிந்தேன்................................'

என்னும் வரிகளாலும்,

'அழிந்தாங் கினிவரு மாக்கமும் வேண்டேன்'

என்னும் வரியாலும் அறியலாம்.

அதே போல மாணிக்கவாசகர், புகழ்வேண்டாம், பொன்னும் பொருளும் வேண்டாம் என்று கூறி, பிறப்பு இறப்பு போன்றவைகளையும் தாம் விரும்பவில்லை என்று கூறுகின்றார். இதனை,

'வேண்டேன் பிறப்(பு) இறப்பு'

என்னும் வரியால் உணரலாம்.

எல்லாவற்றையும் ஒழித்தேன் – விட்டொழித் தேன் என்று திருமூலர் கூறுகின்றார். அதற்குக் காரணம்,

'செழுஞ்சார் புடைய சிவனை' கண்டதாலே என் கிறார். அதே போல மாணிக்கவாசகர், எல்லாவற் றையும் வேண்டாம் என்று மறுக்கின்றார். காரணம்,

'சென்று சேர்ந்தேன் மன்னு திருப்பெருந்துறை இறைதாள்'

என்கிறார்.

Koviloor Digital Library

ஆக, இரண்டு நூல்களிலும் இறைதாள் கண்டமையும், சேர்ந்தமையும் நேரடியாகக் கூறப் பட்டுள்ளன.

தத்துவ ஞானிகள் எல்லாவற்றையும் வேண்டாம் என்று மறுத்துவிட்டு, இறையடி மட்டும் வேண்டும் என்று விழைந்ததும் சுயநல ஆசைதானே?

11

திருமந்திரமும் உண்மைநெறி விளக்கமும்

காலுந் தலையும் அறியார் கலதிகள்
காலந்தச் சத்தி யருளென்பர் காரணம்
பாலொன்று ஞானமே பண்பார் தலையுயிர்
காலந்த ஞானத்தைக் காட்டவீ டாகுமே

– திருமந்திரம்(2386)

பரையுயிரில் யானெனதென் றறநின்ற தடியாம்
பார்ப்பிடமெங் குஞ்சிவமாய்த் தோன்றலது முகமாம்
உரையிறந்த சுகமதுவே முடியாகு மென்றிவ்
வுண்மையினை மிகத்தெளிந்து பொருள்வே
றொன்றின்றித்
தரைமுதலிற் போகாது தன்னிலைநில் லாது
தற்பரையி னின்றழுந்தா தற்புதமே யாகித்

Koviloor Digital Library

தெரிவரிய பரமாநந் தத்திற் சேர்தல்
சிவனுண்மைத் தரிசனமாச் செப்பு நூலே.
- உண்மை நெறி விளக்கம் (4)

மேலே தரப்பட்டிருக்கும் திருமந்திரப்பாடல் எட்டாம் தந்திரத்தின் ஏழாவது அதிகாரமான 'அடிதலை யறியும் திறங்கூறல்' என்பதன் கீழ் முதல் பாடலாகும். மேலும், திருமந்திரப்பா வரிசையில் 2386 ஆவது பாவாக வரையப்பட்டுள்ளது.

இப்பாடலில் திருமூலர், காலும் (வழி) தலையும் (சிரம்) எவை என்பதை உண்மை நூற் கல்வி இல்லாதவர் உணரார் என்றும், கால் என்பது குண்டலினி சக்தி (திருவருள்) ஆகும் என்றும், அனைத்திற்கும் வினை முதற் காரணமாக என்றும் இயற்கையாகவே திகழ்பவன் சிவபெருமான் என்றும், அவனே திருவடியுணர்வாகிய சிவஞானமும், திருவருட் பண்பு நிரம்பிய தலைவனுமாவான் என்றும், மூலாதாரத்தில் விளங்கும் குண்டலினி சக்தி அச்சிவ ஞானத்தைக் காட்டியருளும் என்றும், அதனால் ஆருயிர் திருவடிப் பேறாகிய வீடெய்தும் என்றும் கூறுகின்றார்.

அடுத்துத் தரப்பெற்றிருக்கும் பாடல் மிகச்சிறிய நூலான 'உண்மைநெறி விளக்கத்'தின் ஆறுபாடல் களில் நான்காவது பாடலாகும். இந்நூலினை இயற்றியவர் உமாபதி தேவ நாயனார் ஆவார். இந்நூலின் கண் பத்துப் பொருட்கள் விளக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் இங்கு தரப்பெற்றிருக்கும் பாடல் 'சிவதரிசனம்' பற்றிப் பேசுகிறது. பாக்கள்

Koviloor Digital Library

விருத்தப்பாவால் இயன்றது. நூல் செய்யப் பெற்றகாலம் கி.பி.1350 ஆகும்.

இப்பாடலில் உமாபதியார் யான், எனது என்னும் செருக்கறத் திருவருள் உயிரின்கண் பொருந்துதலே திருவடியாகும் என்றும், பார்க்குமிட மெல்லாம் சிவமாகத் தோன்றலே முகமாகும் என்றும், சொல்லிறந்து (சொல் அற்று சும்மா இருத்தல்) நின்ற பேரின்பமே திருமுடியாகும் என்றும் தெளிந்து இவ் வாறு தோன்றும் பொருளை இடையறாது நுகர்ந்து கொண்டிருப்பதன் வாயிலாக உலகியல் உணர்வுகள் தூரச் சிவஞானத்தைப் பெறுவதாகும் என்கிறார்.

இருபெரும் தத்துவஞானிகளும், சிவஞானத்தை-பரமானந்தத்தை-வீட்டுப் பேற்றினை பெறும் விதத்தைப் பற்றியே கூறுகின்றனர்.

திருமூலர், மூலாதாரத்தில் விளங்கும் குண்டலினி சத்தி சிவ ஞானத்தைக் காட்டியருளும் என்றும், அதனால் ஆருயிர், திருவடிப் பேற்றினை எய்தும் என்றும் கூறுகின்றார். இதனை,

'காலந்த ஞானத்தைக் காட்டவீ டாகுமே'

என்னும் வரியால் அறியலாம்.

அதே போல உமாபதியார், செருக்கற்ற நிலையில் பேச்சற்று சும்மா இருந்தால், உலகியல் உணர்வுகள் விலகி, சிவஞானம் பெறலாம் என்கிறார். இதனை,

'பரையுயிரில் யானெனதென் றறநின்ற தடியாம்'

Koviloor Digital Library

என்னும் வரியின் மூலமும்,

'உரையிறந்த சுகமதுவே'

என்ற சொற்றொடர் மூலமும்

'தெரிவரிய பரமாநந் தத்திற் சேர்தல்
சிவனுண்மைத் தரிசனமாம்'

என்னும் வரிகள் மூலமும் உணரலாம்.

உமாபதியாரின் 'உரையிறந்த சுகமதுவே' என்னும் சொற்களுக்கு இணையாக, அருணகிரி நாதரின் 'சும்மா இரு சொல் அற' என்ற கந்தரனுபூதியின் (பாடல்எண் 12) சொற்றொடர்களும், திருமூலரின் 'சும்மா திருந்திடஞ்' என்னும் திருமந்திரப் பாடல் (எண் 2589) சொற்றொடர்களும் எந்த அளவுக்கு தழுவிச் செல்கின்றன என்பதையும், அவர்கள் செயலொழிவு பெற்றிருந்ததையும் நம்மால் அறிந்து கொள்ள இயலும்.

12

திருமந்திரமும் ஏறிபத்த நாயனார் புராணமும்

அறுகாற் பறவை அலர்தோர்ந் துழலும்
மறுகா நரையன்னந் தாமரை நீலங்

Koviloor Digital Library

குறுகா நறுமலர் கொய்வன கண்டுஞ்
சிறுகால் அறநெறி சேரகி லாரே

– திருமந்திரம்(1470)

வைகறை உணர்ந்து போந்து புனல் மூழ்கி வாயும் கட்டி
மொய்ம்மலர் நெருங்கு வாச நந்தன வனத்து முன்னிக்
கையினில் தெரிந்து நல்ல கமழ்முகை அலரும் வேலைத்
தெய்வநா யகர்க்குச் சாத்தும் திருப்பள்ளித் தாமம் கொய்து

– எறிபத்த நாயனார் புராணம் (9)

மேலே தரப்பெற்றிருக்கும் திருமூலரின் திருமந்திரப்பாடல், ஐந்தாம் தந்திரத்தின் கீழ், பதினோராவது அதிகாரமான 'சற்புத்திர மார்க்கம்' என்பதில் மூன்றாவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 1470-ஆவது பாவாகவும் அமைந் துள்ளது.

திருமூலர் தமது பாடலில், வண்டுகள் தேனை யுண்டு இன்புறும் பொருட்டுத் தேனிறை பூக்களை நாடித்திரியும் எனவும், அதுபோல் வெள்ளை நிற அன்னங்களும் தாமரை மலரை நாடித்திரியும் எனவும், அத்தகைய சிறப்புப் பொருந்திய தாமரை, நீலம் முதலிய பூக்களைத் தக்க செவ்வியால் மெய்யடி யார்கள் புனல் மூழ்கி, வாய் பொத்தி, உள்ளம் திருவைந்தெழுத்தோதிக் கொய்வர் என்றும், ஆனாலும் சிலர் அறநெறியாகிய செந்நெறி சேராது பின்னிற்பர் என்றும் கூறுகின்றார்.

Koviloor Digital Library

அடுத்து தரப்பெற்றிருக்கும் பாடல், சேக்கிழாரின் பெரியபுராணத்தின் ஒரு பகுதியாகிய 'எறிபத்த நாயனார் புராணத்'தில் ஒன்பதாவது பாடலாகும். பெரிய புராணப் பாவரிசையில் 550–ஆவது பாவாகும். இப்பாடல் எறிபத்த நாயனாரின் அன்றாட நடவடிக்கைகளைப் பற்றிக் கூறுகிறது.

சேக்கிழார் தமது பாடலில், எறிபத்த நாயனார் விடியற்காலத்தில் உறக்கத்தினின்றும் உணர்ந்து எழுந்து வெளியே சென்று, நீராடி, வாயையும் கட்டிக் கொண்டு, கொத்துகளாக மலர்கள் நிறைந்த மணம் கமழும் பூஞ்சோலைக்குள் சென்று, பழகிய கையினால் தெரிந்து கொண்டு, நல்ல மணம் கொண்ட, அன்று மலர்கின்ற தன்மையுடைய அரும்புகளைச் சமயம் அறிந்து, சிவபெருமானுக்கு மாலையாக்கி சாற்றுவதற்காகக் கொய்து வருவார் என்று கூறுகின்றார்.

திருமூலர், சிவனடியார்கள் பூக்களைக் கொய்யும் போது என்னவெல்லாம், எப்படியெல்லாம் செய்வார்கள் என்று பட்டியலிட்டுக் காட்டுகின்றார். அதே நேரத்தில், அவற்றையெல்லாம் கண்டும்கூட சிலர் அறனெறியாகிய செந்நெறி சேராமல் – உணராமல் விலகி நிற்கின்றனரே என்று வருந்தவும் செய்கின்றார். இதனை,

'குறுகா நறுமலர் கொய்வன கண்டுஞ்
சிறுகால் அறநெறி சேரகி லாரே'

என்னும் வரிகள் மூலம் நாம் உணரலாம்.

Koviloor Digital Library

ஆனால் அதே நேரத்தில் சேக்கிழார், எறிபத்த நாயனார் வரலாற்றைப் பற்றிக் கூறுகையில், ஒவ்வொரு நாளும் நீரில் ஆடி, வாயைக்கட்டி, மணம் கொண்ட மலர்களின் அரும்புகளை சமயம் அறிந்து கொய்து வருவார் என மன நிறைவாகப் பாடிச் செல்லுகிறார். இதனை,

> 'புனல் மூழ்கி வாயும் கட்டி.... நல்ல கமழ்முகை அலரும்
> வேலை...... கொய்து'

என்னும் சொற்றொடர்கள் மூலம் நாம் அறியலாம்.

இதிலிருந்து அறநெறி சேராதவர்கள் திருமூலர் காலத்தில் இருந்தார்கள் என்றும், சேக்கிழார் காலத்தில் இல்லை என்பதும் பொருளல்ல. எறிபத்த நாயனார் செந்நெறி சேர்ந்தவர் என்பதைப் பற்றி மட்டுமே சேக்கிழார் பேசுகிறார். செந்நெறி சேராது விலகி நிற்பவர்கள் எப்போதும் உளர்; இனியும் இருப்பர்.

13

திருமந்திரமும் ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணமும்

யோகமவ் விந்து ஒழியா வகைபுணர்ந்து
ஆகம் இரண்டுங் கலந்தாலு மாங்குறாப்

Koviloor Digital Library

போகஞ் சிவபோகம் போகிநற் போகமா
மோகங் கெடமுயங் கார்மூடர் மாதர்க்கே

– திருமந்திரம்(1923)

பண்டுநிகழ் பான்மையினாற் பசுபதிதன் அருளாலே
வண்டமர்பூங் குழலாரை மணம்புணர்ந்த வன்றொண்டர்
புண்டரிகத் தவள்வனப்பைப் புறங்கண்ட தூநலத்தைக்
கண்டுகேட் டுண்டுயிர்த்துற்று அமர்ந்திருந்தார்
காதலினால்

– ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் (267)

மேலே தரப்பட்டிருக்கும் திருமந்திரப்பாடல், ஏழாம் தந்திரத்தின் கீழ் இருபத்தோராவது அதிகார மான 'விந்துசயம் – போகசரவோட்டம்' என்பதில் இருபத்து நான்காவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 1923ஆவது பாவாகவும் அமைந்துள்ளது.

இப்பாடலில் திருமூலர், சிவபோக நுகர்வினராய யோகியர் உலகியல் வாழ்வின்படி மணந்து கொண்ட அத்தகைய சிவபோக நுகர்வினராகிய பெண்ணுடன் கூடினாலும் அது உடல் கூட்டமேயன்றி உளக் கூட்டமன்று என்றும், மனவடக்கம் அருளால் பெற்றவராகையால் உள்ளம் சிவனிடத்திருக்கும் எனவும், எனவே விந்து வெளிப்படாது என்றும், அது அன்பியற் போகமோ அருளியற் போகமோ அல்ல என்றும், அது ஆண்டாள் அடியிணை சார் இன்பியல் போகமாகும் என்றும், இச்செந்நெறியொழுக்கம் மேற்கொள்ளாத அறியாமையால் மூடப்பட்ட மூடர்கள் அனைவரும் ஆணவச் சார்பாம் அருளால்

Koviloor Digital Library

பெருமயக்குற்று மோகங்கெட ஆகம் முயங்காது, ஆகங்கெட மோகம் முயங்கி விந்து விட்டழிவர் என்றும் கூறுகின்றார்.

அடுத்து தரப்பட்டிருக்கும் சேக்கிழாரின் பாடல், 'ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராண'த்தைப் பற்றிப் பேசும் பாடலாகும். ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்தின் 267-ஆவது பாடலாகவும் பெரியபுராணப் பாவரிசையில் 3421-ஆவது பாவாகவும் வரையப்பட்டுள்ளது.

குறிப்பிடப்பட்ட பாடலில், நம்பியாரூராரின் திருமண வாழ்க்கை பற்றிக் கூறப்பட்டுள்ளது. இப்பாடலில் சேக்கிழார், முன் காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சியால் சிவபெருமானின் திருவருளால், வண்டுகள் மொய்க்கும் மலர் சூடிய கூந்தலையுடைய சங்கிலி அம்மையாரைத் திருமணம் செய்து கொண்ட நம்பியாரூரர் திருமகளின் அழகமைப்பை வென்ற அவரது தூய பெண் நலத்தைக் கண்டு பெரு விருப்புடன் கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றும் அனுபவித்திருந்தார் என்று கூறுகின்றார்.

சிவயோக நுகர்வினராய யோகியர், மனவடக்கம் கைவரப்பெற்றவராகையால் உள்ளம் சிவனிடத்தி லிருக்கும் எனவும், கணவன் மனைவியராயிருந்து அனுபவிக்கும் இன்பமும் ஆண்டான் அடியிணைசார் இன்பியல் போகமாகும் என்றும் திருமூலர் கூறுகின்றார். ஆனால், செந்நெறி ஒழுகாதவர்கள், அறியாமையால் மனம்கெட மோகம் முயங்கி விந்து விட்டழிவர் என்றும் கூறுகின்றார். இதனை,

Koviloor Digital Library

'மோகங் கெடமுயங் கார்மூடர் மாதர்க்கே'

என்னும் வரியால் அறியலாம்.

சேக்கிழார், ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்தில் நம்பியாரூரர் திருமணத்தைப் பற்றிக் கூறுகின்றார். சங்கிலி அம்மையாரின் அழகு, திருமகளின் அழகமைப்பை வென்றது என்றும், அவருடைய தூய பெண் நலத்தைக் கண்டு பெரு விருப்புடன் கண்டும், கேட்டும், உண்டும், உயிர்த்தும், உற்றும் அனுபவித்திருந்தார் என்றும் சேக்கிழார் கூறுகின்றார். இதனை,

'கண்டுகேட் டுண்டுயிர்த்துற்று அமர்ந்திருந்தார்
காதலின்ால்'

என்னும் வரியின் மூலம் உணரமுடியும்.

அதாவது, ஆகம் கெட முயங்குபவர்கள் மூடர்கள் என்கிறார் திருமூலர். ஆனால், அத்தகைய மூடர்போல் நடந்து கொள்ளாதவர் நம்பியாரூரர் என்கிறார் சேக்கிழார்.

ஆனால் சில கேள்விகள் எழுகின்றன! நடைமுறை வாழ்க்கையில் ஒரு ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொண்ட பின்னர், உடல்கள் சேருவதைவிட, உளக்கூட்டம்தான் முக்கியம் என செப்புவர். ஆனால் திருமூலர் என்ன சொல்லுகிறார்? சிவபோக நுகர்வினராய யோகியர், உலகியல் வாழ்வின்படி மணந்து கொண்ட அத்தகைய சிவபோக நுகர்வினராகிய பெண்ணுடன் கூடினாலும் அது உடல் கூட்டமேயன்றி, உள்ளக்

Koviloor Digital Library

கூட்டமன்று என்று கூறுகின்றார். உள்ளக் கூட்டமில்லாமல் உடல் கூட்டம் இடம் பெறுவது வரவேற்கப்படாத ஒன்று.

அப்படிருக்கும் பொழுது, உள்ளம் சிவனிடத்தி லிருக்க உடல் கூட்டம் இடம் பெறுவானேன்? அதற்கு அவ்விருவரும் திருமணம் செய்து கொள்ளாமலே இருக்கலாமே! அவர்கள் மன அடக்கம் கைவரப் பெற்றவர்கள்தானே! உடல் இச்சையையும் நாடாம லிருக்கலாமே.

அதேபோல, நம்பியாரூரர் சங்கிலி அம்மை யாரின் பெண் நலத்தைக் கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றும் அனுபவித்திருந்தார் என சேக் கிழார் கூறுகின்றார். இதற்காக நம்பியாரூரர் திருமணம் செய்திருக்க வேண்டிய அவசிய மில்லையே.

14

திருமந்திரமும் கண்ணப்ப நாயனார் புராணமும்

சிவன்வந்து தேவர் குழாமுடன் கூடப்
பவம்வந் திடநின்ற பாசம் அறுத்திட்டு

Koviloor Digital Library

அவனெந்தை யாண்டருள் ஆதிப் பெருமான்
அவன்வந்தென் னுள்ளே யகப்பட்ட வாறே
– திருமந்திரம் (2934)

நெடிதுபோ துயிர்த்து நின்று நிறைந்தெழு
மயிர்க்கால் தோறும்
வடிவெலாம் புளகம் பொங்க மலர்க்கண்ணீர் அருவி பாய
அடியனேற் கிவர்தாம் இங்கே அகப்பட்டார்
அச்சோ என்று
படியிலாப் பரிவு தானோர் படிவமாம் பரிசு தோன்ற
– கண்ணப்ப நாயனார் புராணம் (106)

மேலே தரப்பட்டிருக்கும் திருமந்திரப்பாடல் ஒன்பதாம் தந்திரத்தைச் சார்ந்ததாகும். இப்பாடல் 'அணைந்தோர் தன்மை' என்னும் இருபதாவது அதிகாரத்தின் கீழ் பதினெட்டாவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 2934–ஆவது பாவாகவும் வரையப்பட்டுள்ளது.

திருமூலர் தமது பாடலில், சிவபெருமான், நந்தி முதலிய தேவர் குழாத்துடன் எழுந்தருளியதாகவும், தமக்கு பிறப்பு இறப்புகளைத் தந்ததாகவும், உயிர்மை, உடைமை என்னும் பசுபாசத் தன்மைகளை அறுத் தருளியதாகவும், சிவபெருமானே எழுமையும் புரக்கும் தம் தந்தையாகவும், தம்மை ஆண்டு கொண்ட ஆதிப் பெருமானும் ஆவார் என்றும், அவன் தம்முள்ளத்துள் வந்து அகப்பட்டுக் கொண்டதாகவும் கூறுகின்றார்.

Koviloor Digital Library

ஈண்டு தரப்பட்டிருக்கும் பெரிய புராணப் பாடலில் சேக்கிழார் கண்ணப்ப நாயனார் வரலாற்றைப் பற்றிக் கூறுகின்றார், இப்பாடல் கண்ணப்ப நாயனார் புராணத்தில் 106–ஆவது பாடலாகவும், பெரிய புராணப் பா வரிசையில் 755–ஆவது பாவாகவும் அமைந்துள்ளது.

சேக்கிழார் தமது பாடலில், திண்ணனார் (கண்ணப்பர்) வரலாற்றை வடிக்கையில், சிவபெருமானைக் கண்ட திண்ணனார் நீண்டநேரம் தழுவிக் கொண்டு உச்சி மோந்து நின்றதாகவும், திண்ணனாரின் உடல் மயிர்க்கால் எங்கும் புளகாங்கிதம் அடைந்ததாகவும், மலர் போன்ற கண்களினின்று நீர் அருவியைப் போல் பாய்ந்து ஓடவும், ‘அடியவனுக்கு இவர்தான் அகப்பட்டார், அச்சோ என்னே வியப்பு!’ என்று தமக்குள் சொல்லிக் கொண்டதாகவும், ஒப்பில்லாத அன்பே ஒருவடிவம் கொண்டது போன்று தோன்றியதாகவும் கூறுகின்றார்.

திருமூலர் தமக்குத் திருவருள் கிடைத்தது பற்றிக் கூறுகையில், சிவனே தேவர்கள் சூழவந்து, மலங்களை அறுத்து தம்மை ஆட்கொண்டதாகக் கூறுகின்றார். இதனை,

‘அவன்வந்தென் னுள்ளே யகப்பட்ட வாறே’

என்னும் வரியின் மூலம் உணரலாம்.

சேக்கிழார், திண்ணனார் சிவபெருமான் உறையும் காளத்தி மலை மீது ஏறிச் செல்லுகின்றார்;

Koviloor Digital Library

மிக்க விரைவாகவும் மோகம் கொண்டும் ஓடிச் செல்லுகிறார்; ஏகநாயகரான சிவபெருமானைக் காண்கிறார்; அப்பெருமானைத் தழுவிக் கொள்ளுகிறார்; 'தமக்கு இவர்தான் கிடைத்தார்' என்று வியக்கின்றார் எனக் கூறுகின்றார். இதனை,

'அடியனேற் கிவர்தாம் இங்கே அகப்பட்டார் அச்சோ என்று'

என்னும் வரியின் மூலம் அறியலாம்.

திருமூலர், சிவபெருமான் தம்முள்ளத்தினுள்ளே வந்ததை, திருவருள் செய்ததை 'அகப்பட்டார்' என்னும் சொல்லின் மூலம் தெரிவிக்க, சேக்கிழார், சிவபெருமான் திண்ணனாருக்குக் காட்சி தந்ததையும் 'அகப்பட்டார்' என்னும் சொற்றொடர் மூலம் விளக்க முனைந்திருக்கின்றார் என்பதை அறிக!

சிறுவர் சிறுமியர் 'கண்ணாமூச்சி' விளையாட்டை விளையாடும்போது, ஒருவரைக் கண்டுபிடித்து விட்டால் எவ்வளவு ஆனந்தமும், ஆச்சர்யமும் அடைவார்களோ அவ்வளவு ஆனந்தம் கண்ணப்பர் அடைந்திருக்க வேண்டும் என்பதை, சேக்கிழாரின் 'இவர்தாம் இங்கே அகப்பட்டார் அச்சோ' என்னும் சொற்றொடர்கள் நமக்குத் தெரிவிக்கின்றன என்பதை அறிந்து மகிழ் வோமாக!

Koviloor Digital Library

15

திருமந்திரமும் கண்டப்பத்தும்

கூடும் பறவை இரைகொத்தி மற்றதன்
ஊடுபுக் குண்டி யறுக்குறில் என்னொக்குஞ்
சூடெறி நெய்யுண்டு மைகான் றிடுகின்ற
பாடறி வார்க்குப் பயனெளி தாகுமே

- திருமந்திரம்(2857)

இந்திரிய வயமயங்கி
இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்து போய்
அருநரகில் வீழ்வேனைச்
சிந்தை தனைத் தெளிவித்துச்
சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம்
அணிகொள்தில்லை கண்டேனே

- கண்டப்பத்து (1)

மேலே தரப்பட்டிருக்கும் திருமூலரின் திருமந்திரப்பாடல் ஒன்பதாம் தந்திரத்தின் கீழ், பதினேழாம் அதிகாரத்தில் 'மறைபொருட் கூற்று' என்பதில் முப்பத்திரண்டாவது பாடலாக அமைந்துள்ளது. மேலும், திருமந்திரப்பா வரிசையில் 2857-ஆவது பாடலாக வரையப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

திருமூலர் தமது பாடலில், ஆருயிரின் உடம்பில் உள்ள அறிதற்கருவிகள் ஐந்தும், தத்தமக்குரிய ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்னும் புலப்பொருள்களுடன் கூடும் என்றும், அதனால் திருவடிப் பேரின்பம் கை கூடும் என்றும், மலமாகிய இருள் ஒழிக்கப்படும் என்றும் கூறுகின்றார்.

எண்	கருவிகள்	புலம்	பண்புகள்
1.	மெய்	ஊறு	உறுதல்
2.	வாய்	சுவை	சுவைத்தல்
3.	கண்	ஒளி	காண்டல்
4.	மூக்கு	நாற்றம்	முகர்தல்
5.	செவி	ஓசை	கேட்டல்

அடுத்து தரப்பட்டிருக்கும் பாடல் திருவாசகத்தில் 'கண்டப்பத்து' என்னும் பிரிவில் முதல் பாடலாக அமைந்துள்ளது. மேலும், திருவாசகப்பா வரிசையில் 475–ஆவது பாடலாக எழுதப்பட்டுள்ளது.

'கண்டப்பத்து' தில்லையில் மாணிக்கவாசகரால் அருளிச்செய்யப்பட்டது. கண்டப்பத்து என்றால் நடனமாடுகின்ற காட்சியைக் காணுதல் என்பது பொருள். பாடல்கள் கொச்சகக் கலிப்பாவால் ஆனது.

மாணிக்கவாசகர் தமது பாடலில், ஐம்பொறிகளில் பொருந்திய வாழ்வு மரணத்திற்கும்

Koviloor Digital Library

நரகத்திற்கும் வழிவகுக்கும் என்றும், அவைகளினின்று மீளுதல் பரத்தை அடைவதற்கு உற்ற உபாயம் என்றும், அத்தகு பெருநிலை தமக்கு தில்லையில் கிடைத்ததாகவும் கூறுகின்றார்.

இரண்டு சான்றோர்களுமே, ஐம்பொறிகளை அடக்குதலே பரமனை அடைவதற்கு இலகுவான வழி என மிகச் சுருக்கமாகக் கூறுகின்றார்கள்.

திருமூலர் இதனை,

'சூடெறி நெய்யுண்டு மைகான் றிடுகின்ற
பாடறி வார்க்குப் பயனெளி தாகுமே'

என்று கூறுகின்றார்.

அதனையே மாணிக்கவாசகர்,

'சிந்தைதனைத் தெளிவித்துச்
சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம்
அணி கொள்தில்லை கண்டேனே'

என்று கூறுகின்றார். திருமூலர் வழிகாட்டு கிறார்; மாணிக்கவாசகர் அத்தகு பரநிலை தமக்குக் கிடைத்ததாகக் கூறுகின்றார்.

Koviloor Digital Library

16

திருமந்திரமும் கணநாத நாயனார் புராணமும்

எளியனல் தீப மிடல்மலர் கொய்தல்
அளிதின் மெழுக லதுதூர்த்தல் வாழ்த்தல்
பளிமணி பற்றல் பன்மஞ் சனமாதி
தளிதொழில் செய்வது தான்தாச மார்க்கமே

– திருமந்திரம்(1475)

நல்ல நந்தன வனப்பணி செய்பவர்
நறுந்துணர் மலர் கொய்வோர்
பல்ப ணித்தொடை புனைபவர் கொணர்திரு
மஞ்சனப் பணிக்குள்ளோர்
அல்லும் நண்பக லுந்திரு அலகிட்டுத்
திருமெழுக் கமைப் போர்கள்
எல்லை யில்விளக் கெரிப்பவர் திருமுறை
எழுதுவோர் வாசிப்போர்

– கணநாத நாயனார் புராணம் (3)

மேலே தரப்பெற்றிருக்கும் திருமூலரின் திருமந்திரப்பாடல், ஐந்தாம் தந்திரத்தைச் சார்ந்த தாகும். பன்னிரெண்டாவது அதிகாரமான 'தாச மார்க்கம்' என்பதில் முதல் பாடலாக அமைந்துள்ளது.

Koviloor Digital Library

மேலும், திருமந்திரப்பா வரிசையில் 1475-ஆவது பாடலாக வரையப்பட்டுள்ளது.

திருமூலர் தமது பாடலில் இறையடியார்களின் அடிமை நெறிபற்றியும், அடியார்கள் என்னென்ன செய்தல் வேண்டும் எனவும் கூறுகின்றார். அவ்வாறு கூறுகையில், எளியனாய் ஒழுகுதல், கோயில்களில் விளக்கிடுதல், மலர்கொய்தல், மெழுகுதல், திருவல கிடுதல், திருப்பதிகம் ஓதுதல், பெரிய மணிகளை அடித்தல், திருத்த நீர் போன்றவற்றைக் கொணர்தல் ஆகிய திருக்கோவில் திருத்தொண்டு பலவும் புரிதல் போன்றவைகளைப் பட்டியலிடுகின்றார். இதனை திருமூலரின் பின்வரும் வரிகளில் சான்றுக்குக் காணலாம்.

'எளியனல் தீப மிடல்மலர் கொய்தல்
அளிதின் மெழுக லதுதூர்த்தல் வாழ்த்தல்'

அடுத்து தரப்பெற்றிருப்பது சேக்கிழாரின் பெரிய புராணப் பாடலாகும். இப்பாடல் கணநாத நாயனார் பற்றிக் கூறுகிறது. கணநாத நாயனார் புராணத்தில் மூன்றாவது பாடலாகவும், பெரிய புராணப்பா வரிசையில் 3925-ஆவது பாவாகவும் அமைந்துள்ளது.

சேக்கிழார் தமது பாடலில், கணநாத நாயனார் எப்படிப்பட்டவராய் வாழ்ந்தார் என்பதை விளக்கும் பொழுது, நல்ல நந்தவனத்தில் பணி செய்பவராய், நல்ல மலர்களைக் கொய்து வருபவராய், மாலைகளைத் தொடுப்பவராய், திருமஞ்சன நீரைக்

Koviloor Digital Library

கொணருகின்றவராய், இரவும் பகலும் திருவலகும் திருமெழுக்கும் அமைப்பவராய், விளக்குகளை எரிப்பவராய், திருமுறைகளை எழுதி வாசிப்பவராய் விளங்கினார் எனக் கூறுகின்றார். இதனை,

'நல்ல நந்தன வனப்பணி செய்பவர்
நறுந்துணர் மலர் கொய்வோர்
பல்ப ணித்தொடை புனைபவர் கொணர்திரு
மஞ்சனப் பணிக்குள்ளோர்'

என்னும் வரிகள் மூலம் உணரலாம்.

திருமூலர் தாசமார்க்கம் அல்லது அடிமை நெறி என்றால் என்ன என்று தமது பாடலில் கூறுவதையும், அதற்கேற்பவே கணநாத நாயனார் வாழ்ந்தார் என்பதையும் நாம் அறிகின்றோம்.

17

திருமந்திரமும் கலிக்கம்ப நாயனார் புராணமும்

பொய்வேடம் பூண்பர் பொசித்தல் பயனாக
மெய்வேடம் பூண்போர் மிகுபிச்சை கைக்கொள்வர்
பொய்வேடம் மெய்வேடம் போலவே பூணினும்
உய்வேட மாகும் உணர்ந்தறிந் தோர்க்கே

– திருமந்திரம்(1632)

Koviloor Digital Library

முன்பு தமக்குப்பணி செய்யுந்
தமராய் ஏவல் முனிந்து போய்
என்பும் அரவும் அணிந்தபிரான்
அடியாராகி அங்கெய்தும்
அன்ப ருடனே திருவேடந்
தாங்கி அணைந்தார் ஒருவர்தாம்
பின்பு வந்து தோன்றஅவர்
பாதம் விளக்கும் பெருந்தகையார்

– கலிகம்ப நாயனார் புராணம் (6)

மேலே தரப்பட்டிருக்கும் திருமூலரின் திருமந்திரப்பாடல், ஆறாம் தந்திரத்தைச் சேர்ந்ததாகும். எட்டாம் அதிகாரமான 'அவவேடம்' என்பதன் கீழ் ஆறாவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 1632–ஆவது பாடலாகவும் வரையப்பட்டுள்ளது.

திருமூலர் தமது பாடலில், மெய்க் கோலம் தரிக்கின்றவர்க்குக் கிடைக்கும் சிறந்த உணவு முதலிய உலகியலின்பங்கள் பொய்க்கோலம் பூண்பார்க்கும் எளிதாகக் கிடைக்கின்றன. பொய்க்கோலம் செய்வார் மெய்க் கோலம் போல் நடிப்பினும் தவப்பெருமையின் உண்மையினை அறிந்தவர்கள் தாங்கள் மெய்த்தவ வழிநின்று மேன்மையுறுவர். மேலும், பொய்த்தவத்தார் மாட்டுப் பரிவும் கொள்வர் என்கிறார்.

அடுத்து தரப்பட்டிருக்கும் பாடல் சேக்கிழாரின் பெரிய புராணப் பாடலாகும். இது எட்டாவது சருக்கமான 'பொய்யடிமை யில்லாத புலவர் சருக்கத்'தின்

Koviloor Digital Library

கீழ் கலிக்கம்ப நாயனார் வரலாற்றைச் சொல்லுகின்ற ஆறாவது பாடலாகும். மேலும், பெரிய புராணப்பா வரிசையில் 4017–ஆவது பாவாக வரையப்பட்டுள்ளது.

சேக்கிழார் தமது பாடலில், சிவபெருமானின் திருவடித் தொண்டு செய்த 'கலிக்கம்பர்' பற்றிக் கூறுகின்றார். அவர் சிவனடிப்பற்று அன்றி வேறொரு பற்றும் இல்லாதவர். முன் நாட்களில் தமக்குத் தொண்டு செய்யும் சுற்றமாக இருந்து, பின் ஏவற்பணியை வெறுத்துச் சென்று, சிவபெருமானின் அடியராகி, அங்கு வந்த அடியார்களுடனே சேர்ந்து வந்தவரான ஒருவர் பின்பு வந்து தோன்ற, அவர் அடிகளை விளக்கும் பெருந்தகையாரான கலிக்கம்பர் என இப்பாடலில் அவரை பெருமைபட கூறுகின்றார் சேக்கிழார்.

திருமூலர், தவப்பெருமையின் உண்மையினை அறிந்தவர்கள், மெய்த்தவ வழிநின்று மேன்மையுறு வார்கள் என்றும், அதே சமயத்தில் பொய்த்தவத் தார்களிடத்துப் பரிவும் காட்டுவார்கள் என்றும் கூறுகின்றார். இதனை,

'உய்வேட மாகும் உணர்ந்தறிந் தோர்க்கே'

என்னும் வரியின் மூலம் உணரலாம்.

சேக்கிழார் தமது பாடலில், கலிக்கம்பரின் பெருமைகளைக் கூறுகின்றார். எத்தகையது அப்பெருமை? ஒரு காலத்தில் கலிக்கம்பருக்கு ஏவல் பணியைச் செய்தவர், பின்னர் சிவபெருமானின் அடியாராகி, கலிக்கம்பர் இல்லத்தில் உணவு

Koviloor Digital Library

கொள்ள அடியாருடன் அடியாராக வந்தபோது, மற்றவர்களின் பாதங்களை சுத்தம் செய்ததுபோல, அவ் ஏவலாளின் பாதங்களையும் உணவு கொள்ளும் முன் சுத்தம் செய்தார் கலிக்கம்பர். அத்தகைய பெருமையுடையவர் கலிக்கம்பர். அதுமட்டுமல்லாமல், அவருடைய பணியில் எத்தகைய பொய் வேடமும், துவேசமுமில்லை என்பதனை கருத்தில் கொள்ள வேண்டும். இதனை சேக்கிழார்,

'அன்ப ருடனே திருவேடந்
　　தாங்கி அணைந்தார் ஒருவர்தாம்
பின்பு வந்து தோன்றஅவர்
　　பாதம் விளக்கும் பெருந்தகையார்'

என்னும் வரிகள் மூலம் உணரலாம்.

ஆனால் இன்றைய சூழல் என்ன? வாய்மை யில்லை, பொய்மைதான் வாய்மைபோல் நடிக்கின்றது! பொய்வேடம் பூணுகின்றவர்களே அதிகம்! படிப்பறிவு மூளைக்கு ஏறாதவர்களும், பணம் இல்லாத ஏழைகளும், பணம் பண்ண நினைக்கின்றவர்களும், ஏய்க்கும் மனநலமும் – அறிவுநலமும் மிக்கவர்களும், கல்வி நிறுவனங்களில் படித்து தேர்ச்சி பெற முடியாதவர்களும் சமயத்துறையைச் சாருகின்றார்கள். பின்னர் வாழ்க்கையின் அனைத்து சுகபோகங்களையும் அனுபவிக்க ஆசைப்பட்டு, கொலைஞர்களாகவும், கொள்ளைக்காரர்களாகவும், கடத்தல்காரர்களாகவும் மாறுகின்றார்கள். சமுதாயத் துன்பத்தின் விளிம்பில் வாழ்ந்து கொண்டிருக்கும் சாதாரணமக்கள்,

Koviloor Digital Library

தங்களுக்கு கடல் நடுவே கிடைத்த துடுப்பு என எண்ணி சமயத்தையும், சமயத்தலைவர்களையும் நம்பிச் சாருகின்றார்கள். எப்படியும் இவ்வுலக வாழ்க்கைக் கடலில் மூழ்கிவிடாமல் தப்பித்து விட மாட்டோமா என எண்ணுகிறார்கள். ஆனால், கால்களுக்குக் கீழான தரையானது நழுவிச் சென்று, அவர்களை விழச்செய்கின்றது. உண்மை புரிகின்றது. ஆனாலும் என்ன செய்ய இயலும்?

18

திருமந்திரமும் கருவூர்த்தேவரின் திருவிசைப்பாவும்

தன்வலி யாலுல கேழுந் தரித்தவன்
தன்வலி யாலே அணுவினுந் தானொய்யன்
தன்வலி யான்மலை எட்டினுந் தான்சாரான்
தன்வலி யாலே தடங்கட லாகுமே

– திருமந்திரம் (2979)

அண்டமோர் அணுவாம் பெருமைகொண்(டு)
அணுவோர்
அண்டமாம் சிறுமைகொண்(டு) அடியேன்
உண்ட வூண் உனக்காம் வகைஎன துள்ளம்
உள்கலந்(து) எழுபரஞ் சோதி

Koviloor Digital Library

கொண்ட நாண் பாம்பாம் பெருவரை வில்லில்
குறுகலர் புரங்கள் மூன்(று) எரித்த
கண்டனே! நீல கண்டனே! கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே!
- கருவூர் தேவரின் திருவிசைப்பா (59)

மேலே தரப்பட்டிருக்கும் திருமந்திரப்பாடல் ஒன்பதாம் தந்திரத்தைச் சார்ந்ததாகும். இப்பாடல் இருபத்தோராவது அதிகாரமான 'தோத்திரம்' என்பதன் கீழ், நாற்பதாவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 2979-ஆவது பாவாகவும் வரையப்பட்டுள்ளது.

திருமூலர் இப்பாடலில், சிவபெருமான் தன்னுடைய அளவு கடந்த ஆற்றலால் எழுவகை உலகங்களையும் தாங்குகின்றனன் என்றும், தன் ஆற்றலாலேயே அணுக்கள் எல்லாம் அண்டங் களாய்த் தோன்றி நிற்க அத்தனைச் சிறியவனாயும், அண்டங்கள் எல்லாம் ஒப்பற்ற அணுவளவாய்த் தோன்றி நிற்க அத்தனைப் பெரியவனாயும் ஆகி நின்றவன் சிவபெருமான் எனவும், தன் ஆற்றலாலேயே எண்பெரும் மலையும் ஒருங்கு கூடினும் ஒப்பாகாப் பெருமையுமுடையன் என்றும், அவன் தன் பேராற்றலுக்கு அளப்பருங் கடலும் ஒப்பாகா என்றும் கூறுகின்றார்.

அடுத்து தரப்பட்டிருக்கும் பாடல், கருவூர்த் தேவரின் 103 திருவிசைப்பாக்களில், 59-ஆவது பாடலாகவும், திருவிசைப்பா வரிசையில் 138-ஆவது பாவாகவும் வரையப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

கருவூர்தேவர் கொங்குநாட்டைச் சேர்ந்தவர். கி.பி.10, 11–ம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர். இவர் பாடிய திருப்பதிகங்கள் பத்து ஆகும்.

இவர் தமது பாடலில், அண்டங்கள் எல்லாம் ஒப்பற்ற அணுவளவாய்த் தோன்றி நிற்க அத்தனைப் பெரியவனாயும், அணுக்கள் எல்லாம் அண்டங்களாய்த் தோன்றி நிற்க அத்தனைச் சிறியவனாயும் ஆகிநின்றவன் சிவபெருமான் என்றும், தாம் உண்ட ஆகாரம் இறைவனுக்கு ஆகும் வகையாக, தமது உள்ளத்தினுள் இரண்டறக் கலந்து எழுகின்ற மேலான ஒளி வடிவினன் என்றும், வாசுகி என்னும் பாம்பை வில்லின் நாணாகவும், மேருமலையை வில்லாகவும் கொண்டு பகைவருடைய திரிபுரங்களை எரித்த வீரன் என்றும், கங்கை கொண்ட சோளேச்சரம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருப்பவனே தமக்கு அருள் புரிவானாக என்றும் கருவூர்த்தேவர் கூறுகின்றார்.

திருமூலர், சிவபெருமான் தன் வலிமையில் அணுக்களைக் காட்டிலும் வலிமை உடையவன் என்றும், எத்தனை மலைகள், கடல்கள் ஒருங்கே சேர்ந்தாலும் ஒப்பாகாப் பெருமை உடையவன் என்றும் கூறுகின்றார். இதனை,

'தன்வலி யாலே அணுவினுந் தானொய்யன்'

என்னும் வரியாலும், 'மலை எட்டினுந் தான் சாரான்', 'தடங்கட லாகுமே' என்னும் சொற்றொடர்களாலும் உணரலாம்.

Koviloor Digital Library

அதேபோல கருவூர்த் தேவர் தமது பாடலில், அண்டங்கள் எல்லாம் ஒப்பற்ற அணுவளவாய்த் தோன்றி நிற்க அத்தனைப் பெரியவனாயும், அணுக்கள் எல்லாம் அண்டங்களாய்த் தோன்றி நிற்க அத்தனைச் சிறியவனாயும் ஆகி நின்றவன் சிவபெருமான் என்று கூறுகின்றார். இதனை,

'அண்டமோர் அணுவாம் பெருமை கொண்(டு) அணுவோர்
அண்டமாம் சிறுமை கொண்(டு)...'

என்னும் வரிகளால் அறியலாம். தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான் இறைவன் (சிவன்) என்பது இதுதானோ?

19

திருமந்திரமும் காருணியத்திரங்கலும்

அகார வுகார சிகார நடுவாய்
வகாரமோ டாறும் வளியுடன் கூடிச்
சிகார முடனே சிவன்சிந்தை செய்ய
ஓகார முதல்வன் உவந்துநின் றானே

– திருமந்திரம் (931)

போற்றிஓம் நமச்சி வாய
புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றிஓம் நமச்சி வாய
புகலிடம் பிறிதுஒன் றில்லை

Koviloor Digital Library

போற்றிஓம் நமச்சி வாய
புறம்எனைப் போக்கல் கண்டாய்
போற்றிஓம் நமச்சி வாய
சயசய போற்றி போற்றி

– காருணியத்திரங்கல் (2)

மேலே தரப்பெற்றிருக்கும் திருமூலரின் திருமந்திரப்பாடல், நான்காம் தந்திரத்தைச் சேர்ந்ததாகும். இரண்டாவது அதிகாரமான 'திருவம்பலச் சக்கரம்' என்பதன்கீழ் முப்பத்தெட்டாவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 931–வது பாவாகவும் அமைந்துள்ளது.

திருமூலர் தமது பாடலில், அகர உகரம் ஓங்காரத்தைக் குறிக்கும் எனவும், சிகரவகரம் திருவைந்தெழுத்தைக் குறிக்கும் எனவும், இவை ஓம் நமசிவய என்றாகும் எனவும், இவற்றை ஆறெழுத்து மந்திரம் என்பர் எனவும், சிவசிவ என்று இடைவிடாமல் உச்சரிக்க ஓங்கார முதற்பொருளாகிய சிவ பெருமான் தோன்றியருள்வன் என்றும் கூறுகின்றார்.

அடுத்து தரப்பெற்றிருக்கும் பாடல், மாணிக்கவாசகர் செய்தருளிய திருவாசகப் பாடலாகும். இப்பாடல் 'காருணியத்திரங்கல்' என்னும் தலைப்பில் திருச்சதகத்தின் ஒரு பிரிவாக யாக்கப்பட்டிருக்கும் பத்து பாடல்களில் இரண்டாவது பாடலாகும். மேலும், திருவாசகப்பா வரிசையில் 66–ஆவது பாடலாக வரையப்பட்டுள்ளது. இப்பாடல். அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் ஆனது.

Koviloor Digital Library

மேலும் இது திருப்பெருந்துறையில் பாடப் பட்டதாகும்.

மாணிக்கவாசகர் தமது பாடலில், உலக வாழ்க்கையில் மயங்கிக் கிடக்கின்ற தமக்கு அதனின்று விடுபடுவதற்கு சிவபெருமானைத் தவிர வேறு கதியில்லை என்றும், தம்மைப் புறக்கணித்து விடவேண்டாம் என்றும், தம்மை உய்விப்பதன் மூலம் இறைவனுக்கு வெற்றியுண்டாகட்டும் என்றும் கூறுகின்றார். அதாவது, உணர்ந்து உண்மையான விருப்புடன் இறை நாமத்தை செபித்தால் அவனுடைய அருள் கிட்டும் என்பதாம்.

சிவசிவ என்று இடைவிடாமல் உச்சரிக்க ஓங்கார முதற்பொருளாகிய சிவபெருமான் தோன்றியருள் வான் என்கிறார் திருமூலர். இதனை,

'........சிவன்சிந்தை செய்ய
ஓகார முதல்வன் உவந்துநின் றானே'

என்னும் வரிகள் மூலம் அறிந்து தெளியலாம்.

அதேபோல மாணிக்கவாசகர், உண்மையை உணர்ந்து விருப்புடன் இறைநாமத்தை செபித்தால் அவனுடைய அருள் கிடைக்கும் என்கிறார்.

'போற்றிஓம் நமசி வாய'

என்னும் மந்திரத்தை தொடர்ந்து உச்சரிக்க வேண்டும் என்று சொல்வதுடன், தம்மை உய்விப்ப தன் மூலம் இறைவனுக்கு வெற்றியுண்டாகட்டும் என்றும் கூறுகின்றார்.

Koviloor Digital Library

இது மாணிக்கவாசகரின் மதர்ப்பான எண்ணத்தையே காட்டுகிறது. அன்னை தெரசா ஒரு சிறிய கிராமத்திற்குச் சென்றால், அதனால் அந்த கிராமத்திற்குத்தான் பெருமையே தவிர, அவருக்கு அல்ல. அதேபோல இறைவன் மாணிக்கவாசகரை உய்விப்பதன் மூலம் வெற்றியில்லை. உய்விப்பிற்கும், இறையருளுக்கும் நிலைகளனாக மாணிக்கவாசகர் விளங்க வேண்டும்.

இறைவனுக்கு மனிதர்களால் வெற்றி தோல்விகள் உண்டாகாது. மனிதர்களுக்கு வேண்டு மானால் இறைவனால் வெற்றி தோல்விகள் உண்டாக்க முடியும்!

20

திருமந்திரமும் காஞ்சிபுராணமும்

சத்தியம் இன்றித் தனிஞானந் தானின்றி
ஒத்த விடையம்விட் டோரும் உணர்வின்றிப்
பத்தியும் இன்றிப் பரன்உண்மை யின்றிப்
பித்தேறும் மூடர் பிராமணர் தாமன்றே

– திருமந்திரம்(81)

படுபொருள் வெஃகு நீராற் பார்ப்பனக் கடையர் காள்நீர்
நடுவிகந் துரைத்த வாற்றான் நடலைகூர் ஒழுக்கம் பூண்டு

Koviloor Digital Library

கெடுநெறி பற்றிச் சைவ நிந்தையிற் கிளர்ச்சி கொண்டு
கொடுமுகக் கலியில் தோன்றிக் கலாய்த்தனீர்
இடும்பை கூர்ந்து

– காஞ்சிபுராணம் (22)

தரப்பெற்றிருக்கும் திருமந்திரப்பாடல், பொதுப்பாயிரத்தின் கண் ஐந்தாவது அதிகாரமான 'அந்தணரொழுக்கம்' என்பதன் கீழ் ஏழாவது பாடலாக வரையப்பட்டுள்ளது.

இப்பாடலில் திருமூலர், உலகியல் ஒழுக்கவுண்மையும், அறிவியல் ஆய்வாம் இறை, உயிர், தளை என்னும் முப்பொருள் உண்மையும் சத்தியம் எனப்படும் என்றும், அத்தகைய சத்தியமின்றி, ஒப்பில்லாத சிவபெருமானே முழுமுதல் என்னும் தனி ஞானமாகிய திருவடி உணர்வின்றி, மனம் போன போக்கில் பொறிகளின் புலன் வேட்கையில் செல்லாமல் திருவடியினை உணரும் உணர்வின்றி, அதன் விளைவான சிவபெருமானிடத்தில் தோன்றும் பக்தியும் இன்றி, மிக எளியவரும் நம்பியொழுகும் கடவுள் உண்மைக் கொள்கையுமின்றி, ஐம்புலன் நுகர்வில் மருள் கொண்டு இருளுக்கு அடிமையாய், மெய்ப்பொருளை நாடாது திரியும் மூடர்கள் ஒரு பொழுதும் பிராமணர்கள் ஆகமாட்டார்கள் என்றும் கூறுகின்றார்.

மேலே தரப்பெற்றிருக்கும் மற்றொரு பாடல், 'காஞ்சிபுராண'த்தில் 'தக்கேசப்படல'த்தின்கீழ் இருபத்திரண்டாவது பாடலாக வரையப்பட்டுள்ளது. இப்பாடல் ததீசி முனிவர், தக்கனை சபிக்கும் முகத்தான் அமைந்துள்ளது.

Koviloor Digital Library

'காஞ்சிபுராணம்' என்னும் நூலை அருளியவர் திருக்கயிலாயப் பரம்பரைத் திருவாவடுதுறை ஆதினம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான சுவாமிகள் ஆவார். இவர் முப் பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவர் பொருநை நதிக்கரையிலுள்ள விக்கிரம சிங்கபுரம் என்னும் ஊரில் பிறந்தவர். இவருடைய பெற்றோர் ஆனந்த கூத்தர் மற்றும் மயிலம்மை ஆவர். சிவஞான சுவாமிகளின் இயற்பெயர் முக்களாலிங்கர் என்ப தாகும். இவர் 18–ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்.

இப்பாடலில் சிவஞான சுவாமிகள், பிராமணர் களை விளித்து கிடைக்கின்ற பொருட்களையெல்லாம் விரும்பிய தன்மையாலும், ஓதுகின்ற முறையிலிருந்து நடுவு நிலை பிறழ்ந்து வஞ்சித்தல் நடையை அதிகமாக மேற்கொண்டிருப்பதாலும், தீய வழியைப் பின்பற்றிச் சிவ சிந்தையில் எழுச்சி கொள்வதாலும், கொடுமைக்கு இடமான கலியுகத்தில் தோன்றிப் பிணங்கித் துன்பம் மிகுந்து நரகின்கண் உய்க்கும் என்று எச்சரிக்கின்றார்.

சிவபெருமானிடத்தில் பக்தியும் இன்றி, உண்மைக் கடவுள் கொள்கையும் இன்றி, ஐம்புலன் நுகர்வில் இச்சை கொண்டு, இருளுக்கு அடிமையாய் மெய்ப்பொருளை நாடாது திரியும் மூடர்கள் ஒரு பொழுதும் பிராமணர்கள் ஆக மாட்டார்கள் என்று திருமூலர் கூறுகின்றார். இதனை,

'பத்தியும் இன்றிப் பரன் உண்மை யின்றிப்
பித்தேறும் மூடர் பிராமணர் தாமன்றே'

என்னும் வரிகள் மூலம் புரிந்து கொள்ளலாம்.

Koviloor Digital Library

கிடைக்கின்ற பொருள்களையெல்லாம் விரும்புகின்றவர்கள், நடுவுநிலை பிறழ்ந்து வஞ்சனையில் ஈடுபடுகின்றவர்கள், தீயவழியைப் பின்பற்றிச் சிவ சிந்தையில் எழுச்சிகொள்ளுபவர்கள் ஒரு பொழுதும் பிராமணர்கள் ஆக மாட்டார்கள் என்று சிவஞான சுவாமிகள் கூறுகின்றார்கள். இதனை,

'நடுவிகந் துரைத்த வாற்றான் நடலைகூர்
ஒழுக்கம் பூண்டு
கெடுநெறி பற்றிச் சைவ சிந்தையிற் கிளர்ச்சி கொண்டு'

என்னும் வரிகளை ஆழ்ந்து நுணுகிப் பார்ப்பதன் மூலம் புரிந்து கொள்ள முடியும்!

இதன் வழியாக, பிராமணர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும், எப்படி நடந்து கொள்ளக் கூடாது என்பதை உணர ஏதுவாகிறது.

21

திருமந்திரமும் குங்குலியக் கலய நாயனார் புராணமும்

கொட்டுக்குந் தாலி இரண்டே இரண்டுக்குங்
கொட்டுக்குந் தாலிக்கும் பாரை வலிதென்பர்
கொட்டுக்குந் தாலிக்கும் பாரைக்கும் மூன்றுக்கும்
இட்டம் வலிதென்பர் ஈசன் அருளன்றே

– திருமந்திரம்(2868)

Koviloor Digital Library

யாதொன்றும் இல்லையாகி இருபகல் உணவு மாறிப்
பேதுறு மைந்த ரோடும் பெருகுசுற் றத்தை நோக்கிக்
காதல்செய் மனைவி யார்தம் கணவனார் கலய னார்கைக்
கோதில்மங் கலநூல் தாலி கொடுத்து நெற்கொள்ளும்
என்றார்

– குங்குலியக் கலய நாயனார் புராணம் (9)

மேலே தரப்பட்டிருக்கும் திருமந்திரப் பாடல், ஒன்பதாம் தந்திரத்தைச் சார்ந்ததாகும்; பதினேழாவது அதிகாரமான 'மறைபொருட் கூற்று' என்பதன் நாற்பத்தி மூன்றாவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 2868–ஆவது பாவாகவும் வரையப் பட்டுள்ளது.

இப்பாடலில் திருமூலர், புலன் நுகர்ச்சியின் பொருட்டு ஒரு ஆணும் பெண்ணும் தெய்வ அடையாளமாகிய தீ, ஆசான், சான்றவர், ஊரவர், உறவினர் முதலிய பலரும் சான்றாகத் திருமணம் செய்து கொள்கின்றனர் என்றும், அவ்வாறு செய்த உரிமையின் அடையாளமாகத் தாலி விளங்குகிறது என்றும், ஒருவர்பால் காணப்படும் தாலி இருவர் உரிமையினையும் எடுத்துக்காட்டுகிறது என்றும், புலன் நுகர்ச்சி என்பது புலன்கள் தீய வழியில் செல்லாது நல்லவழியில் செல்லுமாறு ஒருவருக் கொருவர் துணையாகச் செலுத்தும் உரிமையை மாற்றிக் கொள்ளுதல் இது என்றும், புலன் நுகர்வாகிய கொட்டுக்கும், அதன் உரிமையாகிய தாலிக்கு மேலாகிய வன்மையுடையது பாரையாகிய விழைவு என்பர் என்றும், புலனுகர்வு, அதன் உரிமை

Koviloor Digital Library

(தாலி), வலனாம் விழைவு இம்மூன்றுக்கும் வலிது திருவடிக்கண் வைக்கும் அன்பு. அதுவே திருவருள் இன்பத்தினைத் தரவல்லது என்கிறார்.

அடுத்து தரப்பெற்றிருக்கும் பாடல், சேக்கிழார் ஆக்கிய குங்குலியக் கலய நாயனார் புராணத்தின் ஒன்பதாவது பாடலாகவும், பெரியபுராணப்பா வரிசையில் 839–ஆவது பாவாகவும் அமைந்துள்ளது. இப்பாடல் கலயனாரின் வறுமைகால வாழ்க்கை யினை படம்பிடித்துக் காட்டுகிறது.

செல்வங்கள் அனைத்தும் தீர்ந்து போயின என்றும், உணவுக்குரிய வழி ஒன்றும் இல்லாது போயிற்று என்றும், சுற்றத்தாருடன் மைந்தர்களும் இரண்டு பகல் உணவு இல்லாது போன சமயத்தில் நாயனாரின் மனைவியார் தம் கணவரின் கையில் குற்றமற்ற மங்கலக் கயிற்றில் உள்ள பொன் தாலியைத் தந்து, அதனை விற்று நெல்லை வாங்கி வரும்படி சொன்னார் என்றும் சேக்கிழார் கூறுகின்றார்.

திருமூலர், புலன்நுகர்வு, தாலி, பொருளாசை என்ற இம்மூன்றனுக்குள் மேலாக வலிமை உடையது திருவடிக் கண் வைக்கும் அன்பு என்றும், அதுவே திருவருள் இன்பத்தினைத் தரவல்லது என்றும் கூறுகின்றார். இதனை,

'......... மூன்றுக்கு
இட்டம் வலிதென்பர் ஈசன் அருளன்றே'

என்னும் திருமந்திர வரிகளால் உணரலாம்.

Koviloor Digital Library

சேக்கிழார், கலய நாயனாரின் வறுமையைச் சுட்டிக்காட்டுகிறார். சுற்றத்தாரும், மைந்தர்களும், உணவின்றி வாடுகின்றனர். அதுபொழுது, நாயனாரின் மனைவியார் தம் கணவரின் கையில் பொன் தாலியைத் தந்து, விற்று நெல்லை வாங்கி வரும்படி சொன்னார் என்ற செய்தி, தற்கால சமுதாய சூழலை நம் மனக் கண் முன் கொண்டு வந்து நிறுத்துகிறது. ஆனால், இரண்டு பகல் உணவு இல்லாது போனதுக்கே இப்படியென்றால், பல நாட்கள் பட்டினி கிடந்து இறந்தே போகின்றார்களே! அதற்கு என்ன செய்வது? யாரை நொந்து கொள்வது?

திருமூலர், புலன் நுகர்வு, தாலி, பொருளாசை இவைகள் அனைத்தையும் காட்டிலும் திருவடிக்கண் வைக்கு அன்பு பெரிது என்றும், வலிமையுடையது என்றும் கூறினாரே, அதேபோல், உற்றார் உறவினரிடம் வைக்கும் அன்பும் வலிதோ? ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காணுதல் என்பது இதுதானோ? உறவினர்கள் வாடுகின்ற போது, தாலியை விற்றாகிலும் உணவளிக்க முற்படுவது இறைவனையே திருப்திப்படுத்தும் வழியோ? அப்படியானால்,

'கோதில்மங் கலநூல் தாலிகொடுத்து நெற்கொள்ளும்
என்றார்'

என்பது சரியேயாகும்.

தாலியைக் காட்டிலும் வலிமை உடையது இறைவனடி வைக்கும் அன்பு என்கிறார் திருமூலர்.

Koviloor Digital Library

அத்தகைய இறையடி அன்புதான் கலய நாயனாரை தாலியை விற்கச் சொல்லுகிறது. அதாவது தாலியைக் காட்டிலும் இறைபத்தி வலிமையுடையதாய் ஈர்க்கிறது.

ஆனால், தற்கால சூழலை சற்று கண்முன் கொண்டுவந்து நிறுத்திப் பாருங்கள்! சிரிப்பு வரவில்லை?

22

திருமந்திரமும் கூற்றுவ நாயனார் புராணமும்

பாம்பு மதியைத் தினலுறும் பாம்பினைத்
தீங்கு கதிரையுஞ் சோதித் தனலுறும்
பாம்பு மதியும் பகைதீர்த் துடன்கொளீஇ
நீங்கல் கொடானே நெடுந்தகை யானே

– திருமந்திரம் (851)

தேனுங் குழலும் பிழைத்ததிரு
மொழியாள் புலவி தீர்க்கமதி
தானும் பணியும் பகைதீர்க்குஞ்
சடையார் தூது தருந்திருநாள்
கூனுங் குருடுந் தீர்த்தேவல்
கொள்வார் குலவு மலர்ப்பாதம்

Koviloor Digital Library

யானும் பரவித் தீர்க்கின்றேன்
ஏழு பிறப்பின் முடங்குகூன்

– கூற்றுவ நாயனார் புராணம் (9)

மேலே தரப்பட்டுள்ள திருமூலரின் திருமந்திரப் பாடல், மூன்றாம் தந்திரத்தின் இருபத்தோராவது அதி காரமான 'சந்திரயோகம்' என்பதன் கீழ், இருபத் தோராவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 851–ஆவது பாவாகவும் அமைந்துள்ளது.

திருமூலர் தமது பாடலில், குண்டலினியாகிய பாம்பு சுவாதிட்டானத்தில் பொருந்திச் சந்திரகலை வளர வொட்டாது விந்து நீக்கம் செய்து கொண்டுள் ளது என்றும், அக்குண்டலினியின் ஆற்றல் தீமை தரும் மணிபூரகத்திலுள்ள சூரியனையும் அமைத்து வெப்பத்தினைச் செய்து கொண்டிருக்கும் என்றும், குண்டிலனியையும், சந்திரனையும் பகைமைத் தன்மை நீங்கும்படி சிரசின் மேல் உடனாகக் கொண்டால், நெடுந்தகையனாகிய சிவனும், மதியும், பாம்பும் பகை தீர்ந்து உறவாய் உடன் வாழும்படி செய்தருள்வன் என்கிறார்.

ஆறு ஆதாரங்கள்

1.	மூலம்	குறி	4 இதழ்கள்
2.	சுவாதிட்டானம்	கொப்பூழ்	6 இதழ்கள்
3.	மணிப்பூரகம்	மேல்வயிறு	10 இதழ்கள்
4.	அனாகதம்	நெஞ்சம்	12 இதழ்கள்
5.	விசுத்தி	மடறு	16 இதழ்கள்
6.	ஆஞ்ஞை	புருவநடு	2 இதழ்கள்

Koviloor Digital Library

அடுத்து தரப்பட்டிருக்கும் சேக்கிழாரின் பெரிய புராணப்பாடல், 'வார் கொண்ட வன முலையாள் சருக்க'த்தின் கீழ் பாடப்பெறும், 'கூற்றுவ நாயனார் புராண'ப் பாடலாகும்.

இப்புராணத்தின் ஒன்பதாவது பாடலாகவும், பெரிய புராணப்பா வரிசையில் 3938-ஆவது பாவாகவும் அமைந்துள்ளது.

சேக்கிழார் தமது சுந்தரமூர்த்தி நாயனார் துதியில், தேனும் புல்லாங்குழலும் போன்றவற்றையும் வென்ற இனிமை கொண்ட மொழியையுடைய பரவையாரின் ஊடலைத் தீர்க்கும் பொருட்டு மதியும் பாம்பும் பகை தீர்த்து வைப்பதற்கு இடமான உமையையுடைய பெருமான் தூது தந்த நாளில், கூனது கூனையும், குருடனின் குருட்டுத்தன்மையையும் தீர்த்துப் பணிகொள்பவரான நம்பி ஆரூரரின் விளக்கம் மிக்க பாதங்களை தாமும் துதித்து ஏழுவகைப்பட்ட பிறவிகளிலும் உட்பட்டு முடங்கிக் கிடக்கும் தன்மையான கூன்தன்மையையும் அவற்றுள் செலுத்தும் அறியாமையான குருட்டுத் தன்மையையும் போக்கிக் கொள்வதாக கூற்றுவநாயனார் கூறுவதாகச் சொல்லுகிறார்.

திருமூலர், குண்டலினியையும், சந்திரனையும் பகை தீர்த்து அதாவது திருவருள் துணையால் அவ்வவற்றினிடத்தில் மாறுபாடின்றி அமையும்படி பயின்றால் நெடுந்தகையனாகிய சிவனும், மதியும், பாம்பும் பகைதீர்ந்து உறவாய் உடன் வாழும்படி செய்தருள்வன் என்கிறார். இதனை,

Koviloor Digital Library

'பாம்பு மதியும் பகைதீர்த் துடன்கொளீஇ'

என்ற வரியின் மூலம் அறியலாம்.

அதே போல சேக்கிழார் கூற்றுவ நாயனார் பற்றிக் கூறுகையில், பரவையாரின் ஊடலைத் தீர்க்கும் பொருட்டு, மதியும் பாம்பும் பகை தீர்க்க வைப்பதற்கு இடமான உமையையுடைய பெருமான் தூது தந்த நாளில், நம்பி ஆரூரரின் பாதங்களை, தாமும் துதித்துஎழ விரும்புகிறார் என்கிறார். இதனை,

'..மதி
தானும் பணியும் பகைதீர்க்குஞ்
சடையார் தூது தருந்திருநாள்'

என்ற வரிகள் மூலம் உணர்ந்தறியலாம். இப் பாடல்களில் இருபெரும் தத்துவ ஞானிகளும் 'சந்திர யோகம்' என்னும் ஆழ்ந்த சித்தாந்தக் கருத்தைப் பற்றி சிறப்பாக விளக்கிச் சொல்லுகிறார்கள்.

23

திருமந்திரமும் கொடிக்கவியும்

கன்னியுங் கன்னி அழிந்திலள் காதலி
துன்னியங் கைவரைப் பெற்றனள் தூய்மொழி

Koviloor Digital Library

பன்னிய நன்னூற் பகவரும் அங்குள
என்னேஇம் மாயை இருளது தானே
- திருமந்திரம்(1094)

ஒளிக்கு மிருளுக்கு மொன்றே யிடமொன்று
மேலிடிலொன்
றொளிக்கு மெனினு மிருளட ராதுள் ளுயிர்க்குயிராய்த்
தெளிக்கு மறிவு திகழ்ந்துள தேனுந் திரிமலத்தே
குளிக்கு முயிரருள் கூடும் படிகொடி கட்டினனே...
- கொடிக்கவி (1)

ஈண்டு தரப்பெற்றிருக்கும் திருமந்திரப் பாடல், நான்காம் தந்திரத்தின் கண், ஆறாவது அதிகாரமான 'வயிரவி மந்திரம்' என்பதன் கீழ், நாற்பத்து நான்காவது பாடலாக வரையப்பட்டுள் ளது.

திருமூலர் தமது பாடலில், ஆணை சேர் தெய்வங்களை அருளம்மை தம் திருவுள்ளத்தால் படைக்கின்றமையால் எவ்வித மாறுதலும் அடையவில்லை என்றும், ஆருயிர்களின் துன்பத்தைத் துடைக்கும் முகத்தான், அயன், அரி, அரன், ஈசுவரன், சதாசிவன் ஆகிய ஐவரை பெற்றனள் என்றும், தூய்மையான தமிழ் வேதாகமங்களை மெய்யடி யார்கள் மூலமாக அருளிச் செய்தனள் என்றும், விளக்கடியில் இருள் இருப்பது போல், செருக்கு, சினம், சிறுமை, இவறல் (பேராசை), மாண்பிறந்த மானம், மாணாவுவகை என்னும் அறுவகை மாயை ஆற்றலும், அறியாமையாகிய இருளும் நம்முடனிருக்

Koviloor Digital Library

கின்றன என்றும், இருளுடன் கூடியதனால் ஒளிக்குத் துணையாம் மாயையும் இருளாய் நிற்கின்றது என்றும் கூறுகின்றார்.

அடுத்துத் தரப்பெற்றிருக்கும் பாடல் 'கொடிக்கவி' என்னும் மிகச்சிறிய நூலைச் சார்ந்தது. இது கொடிப்பாட்டு என்றும் அழைக்கப்பெறுகிறது. இது மொத்தம் ஐந்து பாடல்களை உடையது. இதனை அருளியவர் உமாபதி தேவ நாயனார். இது கி.பி.1310–ஆம் ஆண்டு அருளப்பட்டது. ஈண்டு தரப்பட்டிருக்கும் பாடல் கொடிக்கவியின் முதல் பாடலாகும். இது வெண்பா யாப்பால் இயன்றது.

உமாபதியார் தமது பாடலில், ஒளியாகிய சிவமும் இருளாகிய மலமும் இருக்கும் இடம் உயிரேயாகும் என்றும், இவ்விரண்டில் ஒன்று மேலிடில் ஒன்று ஒளிக்கும் என்றும், எனினும் ஒளியாகிய இறைவன், மலமாகிய இருள் உயிரைத் தாக்கா வண்ணம் உயிருக்குயிராய் நின்று அருள்புரிவன் என்றும், ஆயினும் உயிர், முற்பிறப்பில் செய்த தீவினைகளின் பயனாக, ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களிலே மூழ்கிப் பந்தப் பட்டுக் கொண்டுதான் இருக்கும் என்றும், இவ்வாறு அவ்வுயிர் நோக்காது இறைவனையே நோக்கி இன்புறுமாறு தாம் அம்பலவாணனின் கொடியைக் கட்டியதாகவும் கூறுகின்றார். இவ்வாறு இப்பாடல் உயிரின் குறிக்கோள் பற்றி விளம்புகிறது.

Koviloor Digital Library

ஆறுவகையான மாயை ஆற்றலும், அறியாமையாகிய இருளும் விளக்கடியில் இருள் இருப்பது போல, நம்முள் இருக்கின்றன என்று திருமூலர் கூறுகின்றார். இதனை,

'பன்னிய நன்னூற் பகவரும் அங்குள
என்னேஇம் மாயை இருளது தானே'

என்னும் வரிகள் மூலம் அறியலாம்.

அதேபோல், ஒளியாகிய சிவமும், இருளாகிய மலமும் ஒரே உயிரினிடத்தில் இருக்கின்றன என்றும், எனினும் மலமாகிய இருள் உயிரை எவ்விதத்திலும் பாதிக்காவண்ணம் இறைவன் உயிர்க்குயிராய் நின்று அருள்புரிகின்றான் என்றும் உமாபதிதேவ நாயனார் தமது பாடலில் உரைக்கின்றார். இதனை,

'ஒளிக்கு மிருளுக்கு மொன்றே யிடமொன்று மேலிடிலொன்
றொளிக்கு மெனினு மிருளட ராதுள் ளுயிர்க்குயிராய்'

என்னும் கொடிப்பாட்டின் வரிகள் மூலம் தெளியலாம்.

இருபெரும் தத்துவ விற்பன்னர்களும், ஒளியாகிய சிவமும், இருளாகிய மலமும் ஒரே சீவனிடத்தில் பதிந்திருக்கின்றன என்ற கருத்தினை ஒரே மாதிரியாக வெளிப்படுத்துகின்றார்கள் என்பதை மேற்கூறிய வற்றால் அறியலாம்.

Koviloor Digital Library

24

திருமந்திரமும் கோயில் நான்மணிமாலையும்

அழிகின்ற சாயா புருடனைப் போலக்
கழிகின்ற நீரிற் குமிழியைக் காணில்
எழுகின்ற தீயிற்கர்ப் பூரத்தை யொக்கப்
பொழிகின்ற இவ்வுடற் போமப் பரத்தே

– திருமந்திரம் (2542)

ஆளெனப் பதிதின்வந்(து) அடைந்திலம் அத்தநின்
தாளின் ஏவல் தலையின் இயற்றி
வழிவழி வந்த மரபினம் மொழிவதுன்
ஐந்தெழுத்(து) அவை எம் சிந்தையிற் கிடத்தி
நனவே போல நாடொறும் பழகிக்
கனவிலும் நவிற்றும் காதலேம் வினைகெடக்
கேட்பது நின்பெருங் கீர்த்தி மீட்பது
நின்னெறி அல்லாப் புன்னெறி படர்ந்த
மதியில் நெஞ்சத்தை வரைந்து நிதியென
அருத்திசெய் திடுவது உருத்திர சாதனம்
காலையும் மாலையும் கால்பெயத் திடுவதுன்

– கோயில் நான்மணிமாலை (24)

Koviloor Digital Library

மேலே தரப்பெற்றிருக்கும் திருமந்திரப்பாடல், எட்டாம் தந்திரத்தின் கீழ் இருபத்தேழாவது அதிகாரமான 'விசுவக்கிராசம்' என்பதில் முதல் பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 2542-ஆவது பாவாகவும் அமைந்துள்ளது.

இப்பாடலில் திருமூலர், அனைத்து விதமான உருவங்களின் நிழல்களும், உச்சி வேளையில் கதிர்ச் சாய்வு இல்லாததால் புறத்தே புலனாவதில்லை. ஆனால், கதிரும் உருவமும் கலந்து ஒன்றாய் விடுகின்றது. அதுபோல் ஆருயிரும் பிறவாநிலை எய்தும் பொழுது திருவருளில் கலந்து விடும். நீரில் தோன்றி நீரில் மறையும் நீர்க்குமிழி போன்று இவ்வுடலும் அண்டத்தமைந்துள்ள மெய்யாகிய தத்துவங்களின் இனமாய்த் தோன்றுவதால் அவ்வம்மெய்கள் அவ்வம் மெய்களில் சேர்ந்துவிடும். மெய்களில் தங்கியிருந்த உயிர் என்றும் ஒரே புகலிட மாயுள்ள திருவருளில் கலந்துவிடும்.

கருப்பூரம் கொளுத்தப்பட்டு எரியுங்கால் பற்றுக்கோடுள்ள பருப்பொருளாகத் தோன்றுகிறது. எண்ணெய்யும் திரியும் கலந்த திருவிளக்கில் திரி பற்றுக்கோடாக, எண்ணெய் அதன் சார்பாக எரிகின்றது. அதனால் திரியின் எச்சம் தென் படுகின்றது. ஆனால், அவ்வெண்ணெயே தனிச்சார் பாக எரியுமானால் எச்சம் காணப்படாமை போன்று கருப்பூர தீபமுமாகும். அதுபோல் உடம்பும் திருவருளால் நுண்தன்மை எய்தி நுண்மெய்க் கண் அடங்கும்போது, ஆருயிர் திருவருளில் அடங்கிவிடும் என்கிறார்.

Koviloor Digital Library

அடுத்து தரப்பட்டிருக்கும் பாடல், பதினோராம் திருமுறை சார்ந்ததாகும். பட்டினத்துப் பிள்ளையார் அருளிச் செய்த 'கோயில் நான்மணி மாலை' என்னும் நூலின் இருபத்து நாலாவது பாடலாகவும், பதினோராம் திருமுறையின் 849–ஆவது பாவாகவும் வரையப்பட்டுள்ளது. பட்டினத்துப் பிள்ளையார், பட்டினத்தார் எனவும், திருவெண்காட்டு அடிகள் எனவும் அழைக்கப் பெறுவார். பாடல் இணைக்குறள் ஆசிரியப்பாவால் ஆனது.

பட்டினத்து அடிகள் தமது பாடலில், தாம் புதிதாக வந்த அடிமை இல்லையென்றும், இறைவனின் பாதங்களின் ஏவல் வழி நின்று கால்வழியாக வந்தவர்கள் என்றும், எப்போதும் தாம் உச்சரிப்பது ஐந்தெழுத்தே என்றும், தாம் இருவினைகெடக் கேட்பது இறைவனுடைய பெருங்கீர்த்தியே என்றும், ஆனால் மீட்பது யாதெனில், புன்னெறிபடர்ந்த தம் மதியில்லாத நெஞ்சத்தை வரைந்து நிதியென வேட்கை உண்டாக்குவது உருத்திர சாதனமாகிய உருத்திராட்சத் தையாகும் என்றும் கூறுகின்றார்.

இமைப் பொழுதும் என் நெஞ்சின் நீங்காதான் தாள் வாழ்கவென திருவாசகம் இயம்புவதை, திருமூலரும் பட்டினத்தாரும் நயம்பட உரைத்துள் ளனர். அருள்நிறை இறைவனையே நினைப்பவர்க்கு உயிர் திருவருளை கலந்து விடுமென்றும் அம்மெய்ப் பொருளின் கருப்பொருளாகவும் மாறிவிடும் எனவும் அறிகிறோம். சிவ தத்துவத்தின்படி ஐந்தெழுத்து

Koviloor Digital Library

மந்திரத்தை மறவாதார்க்கு இருவினை நீங்கி அவனடியில் ஐக்கியமாகும் பேறு கிட்டும் என்பதாகும். இதனை,

'பொழிகின்ற இவ்வுடற் போமப் பரத்தே'

என்னும் திருமந்திர வரியின் மூலம் அறியலாம்.

அதேபோல பட்டினத்தடிகள், தாம் எப்போதும் உச்சரிப்பது ஐந்தெழுத்தே என்றும், தாம் இருவினை கெடக் கேட்பது இறைவனுடைய பெருங்கீர்த்தியே என்றும் கூறுகின்றார். இதனை,

'வழிவழி வந்த மரபினம் மொழிவதுன்
ஐந்தெழுத்(து)..'

என்னும் வரிகள் மூலமும் நாம் உய்த்துணர முடியும்.

ஐந்தெழுத்தை மறவாதிருப்போம்; ஐம்புலன் களை அடக்கியே வாழ்வோம்; பிறவிப் பயன் எய்துவோமாக.

25

திருமந்திரமும் கோபப் பிரசாதமும்

சத்தியென் பாளொரு சாதகப் பெண்பிள்ளை
முத்திக்கு நாயகி என்ப தறிகிலர்

Koviloor Digital Library

பத்தியைப் பாழில் உகுத்தஅப் பாவிகள்
கத்திய நாய்போற் கதறுகின் றாரே

– திருமந்திரம் (1175)

தவறுபெரி துடைத்தே தவறுபெரி துடைத்தே
வெண்திரைக் கருங்கடல் மேல்துயில் கொள்ளும்
அண்ட வாணனுக்(கு) ஆழியன்(று) அருளியும்
உலகம் மூன்றும் ஒருங்குடன் படைத்த
மலரோன் தன்னை வான்சிரம் அரிந்தும்
கான வேடுவன் கண்பரிந்(து) அப்ப
வான நாடு மற்றவற்(கு) அருளியும்
கடிபடு பூங்கணைக் காம னார்உடல்
பொடிபட விழித்தும் பூதலத்(து) இசைந்த
மானுட னாகிய சண்டியை
வானவன் ஆக்கியும்

– கோபப்பிரசாதம் (11 வரிகள்)

மேலே தரப்பெற்றிருக்கும் திருமந்திரப்பாடல், நான்காம் தந்திரத்தில் எட்டாவது அதிகாரமான 'ஆதார வாதேயம்' என்பதன் கீழ் நாற்பத்தைந்தாவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 1175–ஆவது பாவாகவும் அமைந்துள்ளது.

திருமூலர், ஆருயிர்கள் அனைத்தும் சிவனடி அடைவதற்காக சத்தியானவள் துணைபுரிபவள் என்றும், அவள் திருவடியில் சேர்ப்பிக்கும் பேரன்பாகிய பத்தியினைப் பாழாக உகுத்த அறிவிலாதார்கள் என்றும், அவர்கள் குரைக்கும் நாய்

Koviloor Digital Library

கடிக்காது என்பது போல பயனின்றி மறை மொழிந்து கதறுகிறார்கள் என்றும் கூறுகின்றார்.

அடுத்து தரப்பட்டிருக்கும் பாடல் நக்கீர தேவநாயனார் அருளிச் செய்த 'கோபப் பிரசாதம்' என்ற 100 வரிகளில் முதல் பதினோரு வரிகளாகும். மேலும், பதினோராம் திருமுறையின் 491–ஆவது பாவாகும். சிவபிரான் சிலரிடத்துச் சினஅருள் கொண்டு செய்த திருவருள் திறத்தை விளக்குவது கோபப்பிரசாதம் என்னும் இத் திருப்பாட்டு ஆகும்.

நக்கீர தேவ நாயனார் இப்பாடல் வரிகளில், தவறு பெரிதானது, தவறு பெரிதானது, வெள்ளிய திரையையுடைய கருங்கடல் மேல் துயில் கொள்ளும் திருமாலுக்கு சக்கராயுதத்தை அன்று அருள் செய்தும், மூன்று உலகங்களையும் ஒரே சமயத்தில் படைத்த பிரமனது தலையை அரிந்தும், காட்டு வேடுவனாகிய கண்ணப்ப நாயனார் அன்புகொண்டு கண்ணைப் பெயர்த்து அப்ப, அவருக்கு வானநாடு அருள்செய்தும், மணமுள்ள மலர் அம்புகளையுடைய மன்மதனது உடல் சாம்பலாகுமாறு நெற்றிக் கண்ணைத் திறந்தும், இவ்வுலகத்திற்கு ஏற்ற மனிதனாகிய சண்டிகேசுவரரைத் தேவன் ஆக்கியும், இதுபோன்ற பிறவும் சிவபெருமானின் கோபப் பிரசாதங்களாகும். இன்னும் இதுபற்றிச் சொல்ல வேண்டுமானால் நான்முகனும், திருமாலும், இந்திரனும் பற்றி உரைக்க கடல் நீரை உள்ளங்கையினால் இறைக்கும் அறிவில்லாதவர் இருக்கின்றனர் என்கிறார்.

Koviloor Digital Library

திருமூலர், உலக மாந்தர்கள் இறையடி அடைவதற்கு சரியான முறையில் தங்கள் பேரன்பாகிய பத்தியினை செலுத்தவில்லை என்றும், அவர்கள் குரைக்கும் நாய்போல பயனின்றி மறையை ஓதி கதறுகிறார்கள் என்றும் அவர்களுக்காக பச்சாதாபப்படுகின்றார் – மனமிரங்குகிறார் – கோபப் படுகின்றார் என்றும்கூடச் சொல்லலாம். இதனை,

'கத்திய நாய்போற் கதறுகின் றாரே'

என்னும் ஒரு வரியின் மூலம் உணரலாம்.

அதேபோல நக்கீர தேவ நாயனார் தமது பாடலில், சிவபெருமானின் கோப அருள் பற்றி பட்டியலிட்டுக் காட்டுகின்றார். பிரமனது தலையை அரிந்துகாட்டிய சினஅருள், திருக்கொருக்கை என்னும் தலத்தில் மன்மதனது உடல் சாம்பலாகுமாறு நெற்றிக் கண்ணைத் திறந்து காட்டிய கோப அருள் போன்றவற்றைச் சான்றுகளாகச் சுட்டிக் காட்டலாம். இவைகள் சிவபெருமானின் கோபப் பிரசாதங் களாகும். இதனை,

'மலரோன் தன்னை வான்சிரம் அரிந்தும்'

'கடிபடு பூங்கணைக் காம னார்உடல்
பொடிபட விழித்தும்......................................'

என்னும் வரிகள் மூலம் சிவனின் கோபப் பிரசாதம் பற்றி அறிந்து கொள்ள இயல்கிறது.

இருபெரும் தத்துவ ஞானிகளும் இவ்வுலக மாந்தர்களுக்காக மனமிரங்குவதென்ன? பச்சாதாபப்

Koviloor Digital Library

படுவதென்ன? அழுவதென்ன? கோபப்படுவதென்ன? அனைத்து மனிதாபிமானிகளும் இப்படித் தான் அரற்றுவார்களோ?

திருமூலர், மறைகளை மட்டும் ஓதிப்பயனில்லை என்று கூறிக் கோபப் படுகின்றார். நக்கீர தேவநாயனாரோ, சிவபெரு மானின் சினஅருள் பற்றி பட்டியலிட்டுக் காட்டி ஆருயிர்களை நல்வழிப்படுத்த முனைகின்றார்.

26

திருமந்திரமும் சண்டேசுர நாயனார் புராணமும்

நூலொன்று பற்றி நுனியேற மாட்டாதார்
பாலொன்று பற்றினாற் பண்பின் பயன்கெடுங்
கோலொன்று பற்றினாற் கூடா பறவைகள்
மாலொன்று பற்றி மயங்குகின் றார்களே

– திருமந்திரம் (282)

செம்மை வெண்ணீற் றொருமையினார்
இரண்டு பிறப்பின் சிறப்பினார்
மும்மைத் தழலோம் பியநெறியார்
நான்கு வேதம் முறைபயின்றார்
தம்மை ஐந்து புலனும் பின்
செல்லும் தகையார் அறுதொழிலின்
மெய்ம்மை ஒழுக்கம் ஏழுலகம்

Koviloor Digital Library

போற்றும் மறையோர் விளங்குவது
- சண்டேசுர நாயனார் புராணம் (2)

மேலே தரப்பட்டிருக்கும் திருமந்திரப்பாடல், முதல் தந்திரத்தில் பதின் மூன்றாவது அதிகாரமான 'கல்வி' என்பதன்கீழ் ஆறாவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 282-ஆவது பாவாகவும் அமைந்துள்ளது.

இப்பாடலில் திருமூலர், இறையடியை அடைவிக்கும் நிறைநூல்களைப் பற்றுக் கோடாகக் கொண்டு சிவபெருமான் திருவடியை அடைய வேண்டும் என்றும், அவ்வாறு செய்யாதவர்கள் ஏதாவது ஒரு கொள்கையினைச் சார்ந்து கடும் பற்றுடன் இருப்பர் என்றும், மற்றவர்களுடன் பிணங்கி துன்பம் விளைவிப்பர் என்றும், திருவைந்தெழுத்தாகிய செம்பொருள் செங்கோலைக் கைப் பற்றினால் ஐம்புலப் பறவைகள் அடங்கும் என்றும், இத்தகைய நன்னெறிக்கு உய்க்கும் நிலையுடைய கல்வியினை அறியாதார் உடல் உலக ஊண்களில் மயக்குற்றுப் பிறப்பு இறப்பாகிய தடுமாற்றத்தால் மயங்கித் துன்புறுகிறார்கள் என்றும் கூறுகின்றார்.

அடுத்து தரப்பட்டிருக்கும் பாடல், சேக்கிழாரால் அருளப்பட்ட 'சண்டேசுர நாயனார் புராண'ப் பாடலாகும். இது சண்டேசுர நாயனார் புராணத்தின் இரண்டாவது பாடலாகவும், பெரிய புராணப்பா வரிசையில் 1207-ஆவது பாவாகவும் வரையப்பட்டுள்ளது. இப்பாடல் சண்டேசுர நாயனாரின் பண்புகளைப் பற்றிக் கூறுகிறது.

Koviloor Digital Library

சேக்கிழார் தமது பாடலில், திருவெண்ணீற்றில் ஒன்றுபட்ட மனம் உடையவராய், இருபிறப்பின் சிறப்பை உடையவராய், மூன்று தீக்களை வளர்க்கும் நெறியிலே நிற்பவராய், நான்கு மறைகளையும் முறையாய்க் கற்பவராய், ஐந்து புலன்களும் தம்மைப் பின் செல்லும் இயல்பு கொண்டவராய், தாம் செய்யும் ஆறு தொழிலின் மெய்யான ஒழுக்கத்தை ஏழு உலகங்களும் போற்றத்தக்கவராய் உள்ள மறையவர் வாழும் ஊர் சேய்ஞலூராகும் (சேந்தனூர்) என்கிறார்.

பல்வேறு தமிழ்மறை நூல்களைத் துணையாகக் கொண்டோ அல்லது பல்வேறு கொள்கைகளைத் துணையாகக் கொண்டோ இறைவனடியை அடைய மாட்டாதவர்கள், திருவைந்தெழுத்தாகிய செம்பொருள் செங்கோலைக் கைப்பற்றினால் ஐம்புலப் பறவைகள் அடங்கும் என திருமூலர் கூறுகின்றார். இதனை,

'கோலொன்று பற்றினாற் கூடா பறவைகள்'

என்னும் அழகான வரியின் மூலம் உணரலாம்.

அதேபோல பல்லாற்றானும் சிறப்பு வாய்ந்த நற்பண்புகளுடன் வாழ்ந்தவராய் சண்டேசுவரரைப் பற்றிக் கூறும் சேக்கிழார், ஐந்து புலன்களும் தம்மைப் பின் செல்லும் இயல்பு கொண்டவராய் விளங்கினார் என்று கூறுகின்றார். இதனை,

'தம்மை ஐந்து புலனும் பின்
செல்லும் தகையார்...'

என்னும் பெரிய புராண வரிகளால் அறியலாம்.

Koviloor Digital Library

ஐந்து புலன்களை அடக்கி நன்னெறிக்கு உய்க்கும் நிலையான கல்வியினை அறியாதார் உடல் உலக ஊண்களில் மயக்குற்றுப் பிறப்பு இறப்பாகிய தடுமாற்றத்தால் மயங்கித் துன்புறுகிறார்கள் என்று மனமிரங்கி திருமூலர் வேதனைப்பட, அத்தகைய சிறந்த கல்வியைப் பெற்றவராய்த் திகழ்ந்தார் என சண்டேசுர நாயனாரைச் சுட்டிக் காட்டுகிறார் சேக்கிழார்.

27

திருமந்திரமும் சாக்கிய நாயனார் புராணமும்

ஆறிட்ட நுண்மணல் ஆறே சுமவாதே
கூறிட்டுக் கொண்டு சுமந்தறி வாரில்லை
நீறிட்ட மேனி நிமிர்சடை நந்தியைப்
பேறிட்டென் னுள்ளம் பிரியகி லாவன்றே

– திருமந்திரம் (2805)

செய்வினையுஞ் செய்வானும் அதன்பயனுங் கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள்
எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக் கில்லைஎன
உய்வகையாற் பொருள்சிவன்என்று அருளாலே
உணர்ந்தறிந்தார்

– சாக்கிய நாயனார் புராணம் (5)

Koviloor Digital Library

மேலே தரப்பட்டிருக்கும் திருமந்திரப்பாடல், ஒன்பதாம் தந்திரத்தின் கீழ், பதின்மூன்றாவது அதிகாரமான 'ஊழ்' என்பதன் மூன்றாவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 2805–ஆவது பாடலாகவும் வரையப்பட்டுள்ளது.

திருமூலர் தமது பாடலில், அவரவர் செய்த வினைகளின் விளைவுகளை அவரவரே அனுபவிப்பர்; அதனை யாராலும் பங்கு போட்டுக் கொண்டு அனுபவிக்க முடியாது; அப்படி பங்கு போடச் செய்வதும் முறைமையல்ல என்றும், வெள்ளப் பெருக்கினால் ஆற்றில் மேடுபள்ளங்கள் உண்டாகின்றன; அவற்றைத் தாங்கி நிற்பது அந்த ஆறே அன்றி வேறெதுவுமில்லை என்றும், ஆறொக்கும் உயிர், ஆற்றின் நீரொக்கும் வினை, வினையின் வகையொக்கும் மேடுபள்ளங்கள். அவற்றை அவ்ஆறு சுமத்தல் அவ் உயிர்வினைப் பயன்களை நுகர்வதொக்கும் என்றும், முழுநீறு அணிந்த திருமேனியும், நீண்ட திருச்சடையும் உடைய நந்தியை வழிபட்டு அவன் திருவடியே பெரும் பேறெனக் கொண்டு தமதுள்ளம் இமைப்பொழுதும் வேறெதற்கும் விலகாது என்றும் கூறுகின்றார்.

சேக்கிழார், பெரிய புராணத்தின் ஏழாவது சருக்கமான 'வார் கொண்ட வனமுலையாள் சருக்க'த்தின் கீழ், சாக்கிய நாயனார் புராணம் பற்றிப் பாடுகின்றார். இப்பாடல், சாக்கியநாயனார் புராணத்தில் ஐந்தாவது பாடலாகவும், பெரிய புராணப்பா வரிசையில் 3640–ஆவது பாவாகவும் வரையப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

இப்பாடலில் சேக்கிழார், செய்யும் வினை ஒன்று என்றும், செய்பவனான கருத்தா ஒன்று என்றும், அதன் பயன் ஒன்று என்றும், அதைத்தந்து ஊட்டுபவனான முதல்வன் ஒன்று என்றும், இவ்வாறு உண்மை காணும் விதியினால் கிடைக்கும் பொருள் கள் நான்காகும் என்ற தெளிவு கொண்டார் என்றும், இச்சிறப்பு நிலை சைவநெறி அல்லாத மற்ற நெறிகளுக்கு இல்லை என்றும், சிவபெருமானின் துணையால் மட்டுமே தவத்தால் உயர்வு பெற முடியும் என்பதை சாக்கிய நாயனார் உணர்ந்து அறிந்து கொண்டார் என்றும் கூறுகின்றார்.

திருமூலர், வினை யைப் பற்றிக் கூறும்போது, அவரவர் வினைப்பயனை அவரவரே அனுபவித்தாக வேண்டும் என்கிறார். இதனை,

'கூறிட்டுக் கொண்டு சுமந்தறி வாரில்லை'

என்னும் வரியின் மூலம் அறியலாம்.

இதற்கு நேரொப்ப சேக்கிழார்,

'செய்வினையுஞ் செய்வானும் அதன்பயனுங்
கொடுப்பானும்
மெய் வகையில் நான்காகும்....'

எனச் செப்புகின்றார்.

மேலும் திருமூலர், சிவனை வழிபடலே பெரும் பேறு என்றும், தமது உள்ளம் சிறிதும் வேறெதற்கும் விலகாது என்றும் சொல்லுகின்றார். இதனை,

'நீறிட்ட மேனி நிமிர்சடை நந்தியைப்
பேறிட்டென் னுள்ளம் பிரியகி லாவன்றே'

Koviloor Digital Library

என்னும் வரிகள் மூலம் அறிந்து தெளியலாம்.

அதேபோல சேக்கிழார்,

'உய்வகையாற் பொருள்சிவன்என்று அருளாலே உணர்ந்தறிந்தார்'

என்று சாக்கிய நாயனார் உணர்ந்தறிந்ததாகக் கூறுகின்றார்.

28

திருமந்திரமும் சிறப்புலி நாயனார் புராணமும்

முன்னெழு நாபிக்கு முந்நால் விரற்கீழே
பன்னெழு வேதப் பகலொளி யுண்டென்னும்
நன்னெழு நாதத்து நற்றீபம் வைத்திடத்
தன்னெழு கோயில் தலைவனு மாமே

– திருமந்திரம் (804)

அஞ்செழுத் தோதி அங்கி வேட்டுநல் வேள்வி எல்லாம்
நஞ்சணி கண்டர் பாதம் நண்ணிடச் செய்து ஞாலத்து
எஞ்சலில் அடியார்க் கென்றும் இடையறா அன்பால் வள்ளல்
தஞ்செயல் வாய்ப்ப ஈசர் தாள்நிழல் தங்கி னாரே

– சிறப்புலி நாயனார் புராணம் (5)

Koviloor Digital Library

மேலே தரப்பட்டிருக்கும் திருமந்திரப்பாடல், மூன்றாம் தந்திரத்தைச் சார்ந்ததாகும். பதினெட்டாவது அதிகாரமான 'கேசரி யோகம்' என்பதன் இருபத்தாறாவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 804–ஆவது பாவாகவும் வரையப் பட்டுள்ளது.

திருமூலரின் இப்பாடல் கேசரி யோகத்தின் பயன் பற்றிப் பேசுகிறது. திருமூலர், முன்னே எழுகின்ற கமலத்துக்குப் பன்னிரண்டு விரற்கடை கீழேயுள்ள மூலாதாரத்தில் பன்னி எழுகின்ற மறைகள் முதற்கண் ஓதும் ஒரு மொழியுண்டு என்றும், உடம்பின் நடுவிடமாகிய நெஞ்சிடத்து ஒளிப்பிழம்பு தோன்றும் என்றும், அவ்வொளிப் பிழம்பினிடத்து 'நமச்சிவாய ஐந்தெழுத்தை' இடையறாது ஓதி ஒப்புவித்தல் வேண்டும் என்றும், அப்போது அவ்வுடல் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலாக அமையும் என்றும் கூறுகின்றார்.

அடுத்து தரப்பட்டிருக்கும் பாடல் சேக்கிழாரின் 'சிறப்புலி நாயனார் புராண'த்தில் ஐந்தாவது பாடலாகவும், பெரிய புராணப்பா வரிசையில் 3658–ஆவது பாவாகவும் அமைந்துள்ளது.

சேக்கிழார் இப்பாடலில், சிறப்புலி நாயனார் எப்படிப்பட்டவராய் வாழ்ந்தார் என்று கூறும்பொழுது, அஞ்செழுத்தோதி, மூத்தீ வளர்த்து, நல்ல யாகங்களையெல்லாம் சிவபெருமானுக்காக செய்து, சிவனடியார்களுக்கு இடையறாது அன்பு செய்து, இறைவனின் திருவடி நிழலில் நிலைபெற வாழ்ந்தார் என்று கூறுகின்றார்.

Koviloor Digital Library

திருமூலர், 'கேசரியோக'த்தின் பயனானது, 'நமசிவய' ஐந்தெழுத்து மந்திரத்தை இடையறாது ஓதினால் தன்னகத்தே சிவபெருமான் தோன்றுவான் என்று கூறுகின்றார். இதனை,

'நன்னெழு நாதத்து நற்றீபம் வைத்திடத்
தன்னெழு கோயில் தலைவனு மாமே'

என்ற வரிகள் மூலம் நாமறியலாம்.

அதேபோல் சேக்கிழாரும், 'நமசிவாய' என்னும் மந்திரத்தை இடையறாது ஓதினால், சிவபெருமானின் திருவடி நிழல் கிடைக்கும் என்று கூறுகின்றார். இதனை,

'அஞ்செழுத் தோதி அங்கி வேட்டுநல் வேள்வி எல்லாம்'

என்னும் வரியின் மூலம் உணரலாம். அதே போல் இறையடி நிச்சயம் உண்டு என்பதனை,

'தஞ்செயல் வாய்ப்ப ஈசர் தாள்நிழல் தங்கி னாரே'

என்னும் தொடர் மூலம் உணரலாம்.

29

திருமந்திரமும் சிறுத்தொண்ட நாயனார் புராணமும்

விரித்தபின் னாற்சாரு மேவுதல் செய்து
பொரித்த கறிபோ னகமிள நீருங்

Koviloor Digital Library

குருத்தலம் வைத்தோர் குழைமுகம் பார்வை
தரித்தபின் மேல்வட்டஞ் சாத்திடு வீரே

– திருமந்திரம் (1883)

தூயதிரு அமுதுகனி கன்னல்அறு சுவைக்கறிநெய்
பாயதயிர் பால்இனிய பண்ணியம்உண் நீர்அமுதம்
மேயபடி யால்அமுது செய்விக்க மிசைந்தடியார்
மாயிருஞா லம்போற்ற வரும்இவர்பால் மனம்மகிழ்ந்தார்

– சிறுத்தொண்டநாயனார் புராணம் (14)

மேலே தரப்பெற்றிருக்கும் திருமந்திரப்பாடல், ஏழாம் தந்திரத்தைச் சார்ந்ததாகும். பத்தொன்பதாம் அதிகாரமான 'சமாதிக் கிரியை' என்பதன் கீழ் பதினோராவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசை யில் 1883–ஆவது பாவாகவும் வரையப்பட்டுள்ளது.

திருமூலர், என்றும் அழிவில்லாத திருவடியுணர்வு கைவரப்பெற்ற சிவஞானியின் திருமேனியினைக் கல்லறைப் படுத்தலாகிய சமாதியின் கண் வையாமல் கிரியை செய்வது எப்படி என பல பாடல்களில் சொல்லி வருகின்றார். இப்பாடலில், சாருமணை பொருந்த வைத்து அதன்மேல் பாவாடை விரித்து இலையமைத்துப் பொன்போல் பொரித்த கறிவகைகளும், உணவாகிய திருவமுதும் இளநீரும் சிவகுருவின் திருமுன்னிலையில் படைக்க வேண்டும் எனவும், பின்னர் குழை முகப்பார்வை தரித்தலாகிய நைவேத்தியம் காட்டிய பின் வேண்டுவன செய்தல் வேண்டும் எனவும் கூறுகின்றார்.

Koviloor Digital Library

அடுத்து தரப்பெற்றிருக்கும் பாடல், சேக்கிழார் ஆக்கிய 'சிறுத்தொண்ட நாயனார் புராணம் என்பதில் பதினான்காவது பாடலாகவும், பெரிய புராணப்பா வரிசையில் 3673–ஆவது பாவாகவும் வரையப்பட்டுள்ளது. சிறுத்தொண்டர் என்பவர் பரஞ்சோதியாரே ஆவார். சிவனடியார் முன் தம்மைச் சிறியராய் எண்ணி ஒழுகியதால் இவர் 'சிறுத் தொண்டர்' என அழைக்கப் பெற்றார்.

சேக்கிழார் தமது பாடலில், சிறுத்தொண்டரைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, ஒவ்வொரு நாளும் அவரில்லம் போந்து, சிவனடியார்கள் உணவு கொண்டு செல்வது வழக்கம் என்றும், அவ்வாறு திருவமுது செய்தபொழுது, தூய உணவும், பழ வகைகளும், அறுசுவைக் கறிவகைகளும், நெய்யும், உறைந்த தயிரும், பாலும், இனிய பலகாரங்களும், அமுது போன்ற தண்ணீரும் அளித்தார் என்றும், அதற்கு அடியார்களும் இசைந்து வந்து அமுதுண்டு மகிழ்ந்தனர் என்றும் கூறுகின்றார்.

திருமூலர், திருமுன்னிலையில் இலையமைத்து கறிவகைகளும், உணவாகிய திருவமுதும், இளநீரும் படைக்க வேண்டும் எனக் கூறுகின்றார். இதனை,

'பொரித்த கறிபோ னகமிள நீருங்
குருத்தலம் வைத்தோர் குழைமுகம் பார்வை'

என்னும் வரிகள் மூலம் அறியலாம்.

அதேபோல, சிவனடியார்கள் தூயஉணவும், பழவகைகளும், அறுசுவை கறிவகைகளும், நெய்யும்,

Koviloor Digital Library

உறைந்த தயிரும், பாலும், இனிய பலகாரங்களும், தண்ணீரும் சிறுத்தொண்டரால் அளிக்கப்பெற்று, அடியார்கள் அமுதுண்டு மகிழ்ந்தனர் என சேக்கிழார் கூறுகின்றார். இதனை,

'தூயதிரு அமுதுகனி கன்னல்அறு சுவைக்கறிநெய்
பாயதயிர் பால்இனிய பண்ணியம்உண் நீர்அமுதம்'

என்னும் வரிகள் மூலம் அறியலாம்.

திருமூலர் சிவகுருவின் முன் படைக்கும் பொருட்களின் பெயர்களைப் பட்டியலிடுகின்றார். சேக்கிழார், சிறுத்தொண்டநாயனார் சிவனடியார் களுக்கு உணவளிக்கும்பொழுது என்னென்ன படைத்தார் என்பதனைப் பட்டியலிடுகின்றார். சிவனடியார்களுக்கு அளித்தது, சிவனுக்கே அளித்தது போலல்லவா?

30

திருமந்திரமும் சுட்டறுத்தலும்

வைச்சன வாறாறு மாற்றி யெனைவைத்து
மெச்சப் பரன்றன் வியாத்துவ மேலிட்டு
நிச்சய மாக்கிச் சிவமாக்கி ஞேயத்தால்
அச்சங் கெடுத்தென்னை யாண்டனன் நந்தியே

– திருமந்திரம் (1582)

Koviloor Digital Library

விச்சைதான் இதுவொப்பது உண்டோ கேட்கின்
மிகுகாதல் அடியார்தம் அடியன் ஆக்கி
அச்சந்தீர்த் தாட்கொண்டான் அமுதம் ஊறி
அகம்நெகவே புகுந்தாண்டான் அன்பு கூர
அச்சன்ஆண் பெண்அலிஆ காசம் ஆகி
ஆரழலாய் அந்தமாய் அப்பால் நின்ற
செச்சைமா மலர்புரையும் மேனி எங்கள்
சிவபெருமான் எம்பெருமான் தேவர் கோவே

– சுட்டறுத்தல் (9)

மேலே தரப்பெற்றிருக்கும் திருமந்திரப்பாடல், ஆறாம் தந்திரத்தின் கீழ், மூன்றாம் அதிகாரமான 'ஞாதுரு ஞான ஞேயம்' (காண்பான் காட்சி காட்சிப் பொருள்) என்பதன் கண் நான்காவது பாடலாக வரையப்பட்டுள்ளது. திருமந்திரப்பா வரிசையில் 1582–ஆவது பாவாகவும் இடம் பெற்றுள்ளது.

இப்பாடலில் திருமூலர், ஆவிகள் சிவபெருமானைக் கூடுதற் பொருட்டு துணையாக வைக்கப் பெற்ற முப்பத்தாறு தத்துவங்களின் தொழிலையும் மாற்றி தம்மை நிலைபெறச் செய்ததாகவும், உலகவர் பாராட்டும் வண்ணம் பரமனது வியாபகத்துள் திருவருள் நிலைப்பித்ததாகவும், அப்பொழுது அடக்கமாகிய செறிவினை ஆவியடைந்து, சிவமாம் பெருவாழ்வெய்தியதாகவும், திருவடியுணர்வாகிய ஞேயத்தால் தமக்கிருந்த பிறப்பு இறப்பாகிய அச்சத்தைப் போக்கித் தம்மை சிவபெருமான் ஆட்கொண்டதாகவும் கூறுகின்றார்.

•

Koviloor Digital Library

மேலே தரப்பெற்றிருக்கும் மற்றொரு பாடல் மாணிக்கவாசகர் செய்தருளிய திருவாசகத்தின் ஒரு பகுதியாகிய 'திருச்சதகம்' என்பதில் 'சுட்டறுத்தல்' பிரிவினைச் சார்ந்ததாகும். வைராக்கியத்தைப் பெறுதல் சுட்டறுத்தல் எனப்படும். இது திருப் பெருந்துறையில் பாடப்பட்டது. இப்பாடல் சுட்டறுத் தலில் ஒன்பதாவது பாடலாகவும், திருவாசகப்பா வரிசையில் முப்பத்து மூன்றாவது பாடலாகவும் அமைந்துள்ளது. பாடல் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் ஆனது.

மாணிக்கவாசகர் தமது பாடலில், தந்தை, ஆண், பெண், அலி, பஞ்ச பூதங்கள் ஆகிய இத்தனையுமாய் இருப்பவன் சிவன் என்றும், இவையாவும் ஒடுங்கு மிடமும், அனைத்திற்கும் அப்பால் இருப்பவனும் சிவனே என்றும், அழகிய வெட்சிப் பூப்போன்று சிவந்த மேனியையுடையவன் சிவன் என்றும், பேரன்பே வடிவான தமது அடியார் கூட்டத்தில் தம்மையும் சேர்த்து வைத்ததாகவும், அவ்வாறு அடியார்களோடு சேர்ந்திருக்கும் பொழுது உலகப்பற்று வந்துவிடுமோ என்ற அச்சம் இல்லை எனவும், அமிர்த சொரூபமான அவன் தம் நெஞ்சில் கலந்துள்ளான் என்றும் வியந்து கூறுகின்றார்.

திருமூலர், தாம் சிவமாம் பெருவாழ்வெய்திய தையும், திருவடியுணர்வாகிய ஞேயத்தால் தமக்கிருந்த பிறப்பு இறப்பு பற்றிய அச்சத்தைப் போக்கித் தம்மை சிவபெருமான் ஆட்கொண்டதையும் பற்றிக் கூறுகின்றார். இதனை,

Koviloor Digital Library

'................................ சிவமாக்கி ஞேயத்தால்
அச்சங் கெடுத்தென்னை யாண்டனென் நந்தியே'

என்னும் திருமந்திரப் பாடல்வரிகள் தெளிவு படுத்துகின்றன.

அதேபோல் மாணிக்கவாசகர், சிவபெருமான் பேரன்பே வடிவான தமது அடியார் கூட்டத்தில் தம்மையும் சேர்த்து வைத்ததாகவும், அவ்வாறு அடியார்களோடு சேர்ந்திருக்கும் பொழுது உலக பந்த பாசங்கள் வந்துவிடுமோ என்ற அச்சமே இல்லை என்றும், அமிர்த சொரூபமான அவன் தம் நெஞ்சத்தில் கலந்து உறைவதாகவும் கூறுகின்றார். இதனை,

'.......................அடியார்தம் அடியன் ஆக்கி
அச்சந்தீர்த் தாட்கொண்டான் அமுதம் ஊறி
அகம்நெகவே புகுந்தாண்டான் அன்பு கூர'

என்னும் வரிகள் மூலம் நாம் தெளிவாக அறியலாம்.

இவ்வாறு திருமூலரும், மாணிக்கவாசகரும் பிறப்பு இறப்பின் மீதும், உலக பந்தபாசங்கள் மீதும் அவர்களுக்கிருந்த அச்ச உணர்வும், அவைகளை அறுத்தொதுக்க வேண்டியதன் அவசியமும் நமக்கு நன்கு எடுத்து இயம்புகின்றனர்.

Koviloor Digital Library

31

திருமந்திரமும் சேரமான்பெருமாள் நாயனார் புராணமும்

மன்று நிறைந்தது மாபர மாயது
நின்று நிறைந்தது நேர்தரு நிதி யுங்
கன்று நினைந்தெழு தாயென வந்தபின்
குன்று நிறைந்த குணவிளக் காமே

– திருமந்திரம் (2407)

மன்றில் நிறைந்து நடமாட வல்லார் தொல்லை ஐயாற்றில்
கன்று தடையுண் டெதிரழைக்கக் கதறிக் கனைக்கும்
புனிற்றாப்போல்
ஒன்றும் உணர்வால் சராசரங்கள் எல்லாங்கேட்க
ஓலம் என
நின்று மொழிந்தார் பொன்னிமா நதியும் நீங்கி நெறிகாட்ட

– சேரமான் பெருமாள் நாயனார் புராணம் (135)

மேலே தரப்பட்டிருக்கும் திருமந்திரப்பாடல், எட்டாம் தந்திரத்தில், பத்தாவது அதிகாரமான 'முப்பரம்' என்பதன் கீழ் இரண்டாவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 2407–ஆவது பாவாகவும் அமைந்துள்ளது.

Koviloor Digital Library

இப்பாடலில் திருமூலர், முழுமுதல் சிவபெருமானாகிய விழுப்பொருள் அழிவில்லாத அறிவுப் பெருவெளியாம் மன்றின் கண் நிறைந்துள்ளது என்றும், அது எல்லாவற்றுக்கும் மேலானதும் நீக்கமற நின்று நிறைந்ததும் ஆகும் என்றும், அப்பெருமான் கன்றை நினைந்து கனைத்தெழுந்தோடி வரும் தாயென எழுந்தருளி வந்து ஆட்கொண்டு மலை நிறைந்த விளக்கொத்து அலைவின்றி நிறைந்த எண்குண விளக்காய் இலங்கியருள்வன் என்றும் கூறுகின்றார்.

அடுத்து தரப்பட்டிருக்கும் பாடல், 'சேரமான் பெருமாள் அல்லது கழறிற்றறிவார் நாயனார் புராண'த்தில் வரும் சேக்கிழாரின் பாடலாகும். சேரமான் பெருமாள் நாயனார் புராணத்தில் நூற்று முப்பத்தைந்தாவது பாடலாகவும் பெரிய புராணப்பா வரிசையில் 3882-ஆவது பாவாகவும் வரையப் பட்டுள்ளது.

உயிர்கள் பேசுவனவற்றையெல்லாம் அறியும் ஆற்றல் இருந்ததால் 'கழறிற்று அறிவார்' எனப்பெற்றார். இவர் சேர நாட்டை ஆண்ட மன்னரும் ஆவார் (பெருமாக் கோதையார்).

சேக்கிழார் தமது பாடலில், அம்பலத்துள் நிறைந்து திருக்கூத்து ஆடலில் வல்ல இறைவன், தன் கன்று தடைப்பட்டு எதிர்க்கூப்பிடக் கேட்டுத் தான் கதறிக் கனைக்கும் கன்று ஈன்ற பசுவைப்போல், ஒன்றுபட்ட உணர்வால் சராசரங்கள் எல்லாம் கேட்கும்படி 'ஓலம் என்று நின்று மொழிந்தார்

Koviloor Digital Library

என்றும், அப்போது காவிரியாறும் தொடர்ச்சி நீங்கி வழி காட்டியது என்றும் கூறுகின்றார்.

சிவபெருமான் உலகில் எங்கும் நிறைந்திருக்கின் றான்; அவன் ஆருயிர்களை ஆட்கொண்டருளுவன்; எப்படி அருளுவன்? கன்றை நினைந்து கனைத் தெழுந்தோடி வரும் தாயென எழுந்தருளி வந்து ஆட்கொள்வன் என திருமூலர் கூறுகின்றார். இதனை,

'கன்று நினைந்தெழு தாயென...'

என்னும் வரியால் உணரலாம்.

அதேபோல நம்பியாரூரரும், சேரமான் பெருமாள் நாயனாரும் சந்தித்துக் கொள்கின்றனர். இருவரும் திருவையாற்றைப் போய்ப் பணிய ஆசை கொள்ளுகிறார்கள். ஆனால் காவிரியாறு இருகரைத் தொட்டு பெருக்கெடுத்து ஓடுகிறது. அப்போது, வன்தொண்டப் பெருந்தகையார் நின்று தொழுது பாட, ஆடலில்வல்ல இறைவர் தன் கன்று தடைப்பட்டு எதிர் கூப்பிடக் கேட்டுத் தான் கதறிக் கனைக்கும் கன்று ஈன்ற பசுவைப் போல் ஒன்றுபட்ட உணர்வால் சராசரங்கள் எல்லாம் கேட்கும்படி 'ஓலம்' என, காவிரியாற்றில் நீர் விலகி வழிவிட்டது என சேக்கிழார் பாடுகிறார். இதனை,

'கன்று தடையுண் டெதிரழைக்கக் கதறிக் கனைக்கும்
புனிற்றாப் போல்'

என்னும் வரியால் உணரலாம்.

Koviloor Digital Library

சிவ பெருமான் எங்கும் நிறைந்திருக்கின்றான் என்பதற்கு 'மன்று நிறைந்தது' என்னும் சொற்றொடரை திருமூலர் பயன்படுத்த, ஆடலில் வல்ல இறைவன் அம்பலத்துள் நிறைந்து திருக்கூத்து இயற்ற வல்லவன் என்பதற்கு, 'மன்றில் நிறைந்து' என்னும் சொற்றொடரை சேக்கிழார் பயன்படுத்தி இருப்பதை ஆழ்ந்து நோக்குக!

32

திருமந்திரமும் சேந்தனாரின் திருவிசைப்பாவும்

வளங்கனி தேடிய வன்றாட் பறவை
உளங்கனி தேடி யுழிதரும் போது
களங்கனி யங்கியிற் கைவிளக் கேற்றி
நலங்கொண்ட நால்வரும் நாடுகின் றாரே

– திருமந்திரம்(2588)

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
    கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
    மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
    திருவீழி மிழலைவீற் றிருந்த

Koviloor Digital Library

கொற்றவன் தன்னைக் கண்டுகண்(டு) உள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே
– சேந்தனாரின் திருவிசைப்பா (2)

மேலே உள்ள திருமந்திரப்பாடல், எட்டாம் தந்திரத்தில், முப்பத்திரண்டாவது அதிகாரமான 'முத்தியுடைமை' என்பதன் கீழ் இரண்டாவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 2588–ஆவ்து பாவாகவும் அமைந்துள்ளது.

திருமூலர் தமது பாடலில், ஆருயிர்கள் வலிய இருபெருங் கால்களை (உழைப்பு+ஒடுக்கம்) உடைய அரிய பறவை போன்றது எனவும், திருவடிப்பேறாகிய கனியைத் தேடி ஆருயிர்கள் ஓயாது திரியும் எனவும், துன்பத்தைக் கொடுக்கும் உலகியல் பற்றாம் கைவிளக்கினை ஏற்றி எண்ணம், மனம், இறுப்பு என்னும் அந்தகரணங்கள் அவ்வுயிரைத் தம் வழிக்கு இழுக்க முயல்வதாகவும் கூறுகின்றார்.

அடுத்து தரப்பட்டிருக்கும் பாடல், சேந்தனார் அருளிய திருவிசைப்பாக்கள் முப்பத்திநான்கனுள் இரண்டாவது பாவாகும். திருவிசைப்பா வரிசையில் நாற்பத்தேழாவது பாவாகும். இப்பாடலில் சேந்த னார், நல்லறிவு தரத்தக்க நூல்களைக் கற்றவராகிய மெய்ஞ்ஞானிகள் அனுபவிக்கும் படியான பேரின்ப உணர்வாகிய கற்பக மரத்தின் கனிபோன்று விரும்பியவற்றைத் தருபவனை, கரையில்லாத கருணை என்னும் பெருமை பொருந்திய கடல் போன்றவனை, அஞ்ஞானிகள் அறியாத மாணிக்க மலை போன்றவனை, அன்பால் நினைப்பவருடைய

Koviloor Digital Library

மனத்தின் கண் மாணிக்கச் சுடர் போன்று ஒளி வீசுபவனை, பகைவர்களாகிய திரிபுராதிகளின் முப்புரங்களை அழித்த சிவபெருமானை, திருவீழிமிழலையில் மேன்மையுற அமர்ந்தருளிய தலைவனாகிய இறைவனை தமது மனம் இன்பம் அடையுமாறு பலமுறை தரிசித்து தமது கண்களும் இன்பம் அடைந்ததாகக் கூறுகின்றார்.

உலக ஆருயிர்கள் உளம் கனிந்து, முத்தியைத் தேடி அலையும் போது, அந்த கரணங்கள் தம் வழிக்கு ஆருயிர்களை இழுக்க முயல்கின்றன என திருமூலர் கூறுகின்றார். இதனை,

'வளங்கனி தேடிய வன்றாட் பறவை'
'நலங்கொண்ட நால்வரும் நாடுகின் றாரே'

என்னும் வரிகள் மூலம் அறியலாம். இங்கு திருவடிப் பேற்றினை 'வளங்கனி' என்னும் சொற் றொடரால் திருமூலர் அழைக்கின்றார்.

அதே பேரின்பப் பேற்றினை சேர்ந்தனார் குறிப்பிடும்பொழுது, நாம் விரும்பியவற்றைத் தருபவன் சிவன் என்றும், பேரின்ப உணர்வினை நமக்கு அளிக்கக் கூடியவன் என்றும், அச்செயலை 'கற்பக மரத்தின் கனி'க்கு ஒப்பிட்டும் கூறுகின்றார். இதனை,

'கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை'

என்னும் வரியால் உணரலாம்.

முத்தி அல்லது பேரின்பப் பேற்றினை, 'வளங்கனி' என்றும், 'கற்பகக்கனி' என்றும் முறையே

Koviloor Digital Library

திருமூலரும், சேந்தனாரும் கூறுகின்றனர். ஆனால் நாம் அக்கனிகளைத்தான் தேடி அலைகின்றோமா? கனியிருக்கக் காய்க்குத்தானே அலைகின்றோம்!

33

திருமந்திரமும் சேந்தனாரின் திருப்பல்லாண்டும்

ஆரா தனையும் அமரர் குழாங்களுந்
தீராக் கடலும் நிலத்தும தாய்நிற்கும்
பேரா யிரமும் பிரான்திரு நாமமும்
ஆரா வழியெங்கள் ஆதிப் பிரானே

– திருமந்திரம் (1799)

ஆரார் வந்தார்? அமரர்
குழாத்தில் அணியுடை ஆதிரை நாள்
நாரா யணனொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர்
குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே

– திருப்பல்லாண்டு (12)

Koviloor Digital Library

மேலே தரப்பட்டிருக்கும் திருமந்திரப்பாடல், ஏழாம் தந்திரத்தின் கீழ், பதினோராவது அதிகார மான 'சிவபூசை' என்பதில் எட்டாவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 1799–ஆவது பாவாகவும் வரையப்பட்டுள்ளது.

திருமூலர் இப்பாடலில், அலையும் ஓசையும் ஒழியாத கடலடுத்த திருவூர்களிலும், ஏனைய நிலத்தை அடுத்த திருவூர்களிலும் விளங்கும் திருக்கோவில் தோறும் திகழ்ந்து நிற்கும் சிவபெருமானை, அமரர் குழாங்களும் வந்து ஆராதனை புரியும்போது, வானோர் ஆயிரக் கணக்கானோர் பரவி வழிபடுவர் என்றும், அவ்வாறு வழிபடும்பொழுது, அவன் திருப்பெயராகிய நானெறி ஐந்தெழுத்தை நவின்று வழிபடுவர் என்றும் கூறுகின்றார்.

நானெறி ஐந்தெழுத்து
1. நமசிவய
2. சிவய நம
3. சிவய சிவ
4. சிவ சிவ

தரப்பட்டிருக்கும் மற்றொரு பாடல் சேந்தனாரின் திருப்பல்லாண்டைச் சேர்ந்ததாகும். இப்பாடல், திருப்பல்லாண்டில் பன்னிரெண்டாவது பாடலாகவும், ஒன்பதாம் திருமுறைப்பா வரிசையில் 300–ஆவது பாவாகவும் அமைந்துள்ளது.

Koviloor Digital Library

சேந்தனார் தமது திருப்பல்லாண்டு பாடலில், அழகிய மார்கழித் திருவாதிரை நாளில் சிவபெருமானைப் புகழ்ந்து பாடுவதற்குத் தேவர் கூட்டத்துள் யார் யார் வந்தார்கள் என்றும், திருமாலுடன் பிரமதேவனும், அக்கினி தேவனும், சூரிய தேவனும், இந்திரனும் வந்தனரா என்றும் வினவி, தேரோடும் சிவமே நிலவும் நான்கு திருவீதிகளிலும் தேவர்களின் கூட்டங்கள் எல்லாத் திசைகளிலும் பரவி நிற்க, உலகெலாம் நிறைந்த இறைவனின் பழமையான புகழைப் பாடிக் கொண்டும், மெய்மறந்து கூத்து ஆடிக் கொண்டும் இறைவனைப் 'பல்லாண்டு வாழ்க' எனக் கூறி போற்றுவோமாக எனக் கூறுகின்றார்.

திருமூலர், நிலவுலகில் யாங்ஙனம் காணக் கிடக்கும் கோயில்களில் அமரர்களும், தேவர்களும் ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதி வழிபடுவார்கள் என்று கூறுகின்றார். இதனை,

'ஆரா தனையும் அமரர் குழாங்களும்'

என்னும் வரியின் மூலம் தெளிவாக அறியலாம்.

அதேபோல சேந்தனார் தமது பாடலில், சிவபெருமானைப் புகழ்ந்து பாடுவதற்கு யார் யார் வந்தார்கள் என்று வாஞ்சையோடு வினவுவது போல் கேட்டு, திருமால், பிரமதேவன், அக்னிதேவன், சூரியதேவன், இந்திரன் ஆகியோர் வந்தனரா என்று தமது உற்றார் உறவினர்கள் வந்தார்களா என்று

Koviloor Digital Library

ஆவலோடு கேட்பதில் எத்தனை வேகம்? எத்தனை ஆர்வம்? இதனை,

'நாரா யணனொடு நான் முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர்
குழாங்கள்.........................'

என்னும் வரிகளில் சேந்தனாரின் ஆதங்கத்தை நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

மேலும், வழிபடும்பொழுது நாளெறி ஐந் தெழுத்தை - அதாவது பிரான் திருநாமத்தை ஓதி வழிபடுவர் என்று திருமூலர் கூறுகின்றார்.

அதேபோல சேந்தனார் கூறும்பொழுது, உலக மெலாம் நிறைந்த இறைவனின் புகழைப் பாடிக் கொண்டும், கூத்து ஆடிக் கொண்டும், 'பல்லாண்டு வாழ்க' என்று போற்றிக் கூறியும் வழிபடுவர் என்கிறார்.

இதனை, 'பிரான்திரு நாமமும்' என்னும் திருமந்திர சொற்றொடர் மூலமும், 'தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே' என்னும் திருப்பல்லாண்டு சொற்றொடர்கள் மூலமும் நம்மால் நுணுகி அறிய முடியும்.

Koviloor Digital Library

34

திருமந்திரமும் தண்டியடிகள் நாயனார் புராணமும்

கற்றறி வாளர் கருதிய காலத்துக்
கற்றறி வாளர் கருத்திலோர் கண்ணுண்டு
கற்றறி வாளர் கருதி உரைசெய்யுங்
கற்றறி காட்டக் கயலுள வாக்குமே

– திருமந்திரம் (278)

தண்டி யடிகள் திருவாரூர்ப்
பிறக்கும் பெருமைத் தவமுடையார்
அண்ட வாணர் மறைபாட
ஆடுஞ் செம்பொற் கழல்மனத்துக்
கொண்ட கருத்தின் அகநோக்குங்
குறிப்பே அன்றிப் புறநோக்கும்
கண்ட உணர்வு துறந்தார் போல்
பிறந்த பொழுதே கண்காணார்

– தண்டியடிகள் நாயனார் புராணம் (1)

மேலே தரப்பட்டிருக்கும் திருமந்திரப்பாடல், முதல் தந்திரத்தில் பதின் மூன்றாவது அதிகாரத்தின் கீழ் 'கல்வி' என்னும் தலைப்பில் இரண்டாவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 278–ஆவது பாவாகவும் வரையப்பட்டுள்ளது.

இப்பாடலில் திருமூலர், உண்மைக் கல்வி (திருவருட்கல்வி) கற்றவர் சிந்தித்துப் பார்க்கும்

Koviloor Digital Library

பொழுது அவர்கள் கருத்தில் ஞானக் கண் (அகக் கண்) புலனாகிறது என்றும், அவ்வாறு புலனாகும் உண்மையைச் சிந்தித்துப் பிறர்க்கு உரைப்பர் என்றும், கல்தூண் போன்று சலனமற்றிருந்து பிறர்க்கு உணர்த்தி அவர்களது ஞானக்கண்ணை விளங்கும் படி செய்வர் என்றும் கூறுகின்றார்.

அடுத்து தரப் பட்டிருக்கும் சேக்கிழாரின் பெரிய புராணப்பாடல், 'தண்டியடிகள் நாயனார் புராணம்' பற்றிய பாடல் களில் முதல் பாடலாகும். மேலும், பெரிய புராணப்பா வரிசையில் 3592–ஆவது பாடலாகவும் வரையப் பட்டுள்ளது. தண்டியடிகள் பிறக்கும் போதே பார்வை அற்றவர்.

சேக்கிழார் தமது பாடலில், 'தண்டியடிகள்' என்ற பெயர் உடையவர் திருவாரூரிலே பிறக்கும் பேறுடைய முன்னைத் தவத்தை உடையவர் என்றும், தேவர்கள் வேத முழக்கங்களைச் செய்ய ஆகும் சிறந்த பொன் போன்ற கூத்தரின் திருவடிகளை உள்ளத்தினுள்ளே கொண்ட அகக்கண்ணினால் காண்கின்ற குறிப்பே அல்லாது, வெளிப்பார்வையால் நோக்கும் அளவுபட்ட உணர்வை ஒழித்தவரைப் போல அவதரித்த நாளன்றே புறக்கண் பார்வை இல்லாதவர் எனக் கூறுகின்றார்.

திருமூலரைப் பொறுத்த வரை யில் 'கல்வி' என்பது திருவருள் பற்றி அறிந்து கொள்வதேயாகும். அவ்வுண்மைக் கல்வி கற்றவர் சிந் தித்துப் பார்க்கும் பொழுது அவர்கள் கருத்தில் ஞானக்கண் (அகக்கண்) புலனாகும் என்கிறார். இதனை,

Koviloor Digital Library

'கற்றறி வாளர் கருத்திலோர் கண்ணுண்டு'

என்னும் வரியின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

தண்டியடிகள் பிறக்கும்பொழுதே பார்வையற்றவர் என சேக்கிழார் தமது பாடலில் குறிப்பிடுகின்றார். அகக்கண் கொண்டு உணர்ந்தே அடியாராயிருந்து செய்யும் ஒவ்வொரு பணியையும் செய்தார் அவர். அப்படிச் செய்யுங்கால் கூத்தரின் பொன் போன்ற திருவடிகளை உள்ளத்தினுள்ளே கொண்ட அகக் கண்ணினால் காண்கின்ற குறிப்பேயல்லாது, வெளிப்பார்வையால் பார்க்கும் அளவுபட்ட உணர்வால் அன்று என சேக்கிழார் குறிப்பிடுகின்றார். இதனை,

'.... ஆகும் செம்பொற் கழல் மனத்துக்
கொண்ட கருத்தின் அகநோக்குங்
குறிப்பே.......................'

என்னும் வரிகள் மூலம் அறியலாம்.

ஆக திருமூலரும், சேக்கிழாரும் அகக்கண் அல்லது ஞானக் கண் திறக்கப்பெற்றவரின் திறத்தை அல்லது தன்மையை ஒரே மாதிரியாக சித்தரிக்கின்றனர் எனலாம். தண்டியடிகள் மனக்கண்ணால் ஞானம் பெற்றவராவார். ஆனால், திருவள்ளுர் 'கல்வி' என்னும் அதி காரத்தில், கற்றவைகளுக்கு ஏற்ப ஒழுகுதல் சிறந்த கல்வி என்றும், எண்ணும் எழுத்தும் கண்ணென்றும், கல்லாதவர் முகத்தில் உள்ளது புண் என்றும் கூறுகின்றார். பார்வையற்ற தண்டியடிகள் சாதித்தது என்ன? பார்வையிருந்தும் நாம் சாதித்தது என்ன?

Koviloor Digital Library

35

திருமந்திரமும் தணிகைப் புராணமும்

ஆறு முகத்தில் அதிபதி நானென்றுங்
கூறு சமயக் குருபரன் நானென்றுந்
தேறினர் தெற்குத் திருஅம்ப லத்துளே
வேறின்றி யண்ணல் விளங்கிநின் றானன்றே

– திருமந்திரம் (2712)

முகம் விழி மலர்க்கை மூன்று முப்பது முன்பு நாஞ்செய்
மகவினைக் கருள வந்த வள்ளலுக் கீண்டுச் சாடப்
புகுமிறைக் கவைகண் மூன்று முப்பதே பொலிவு மற்றே
திகழுரு வானுஞ் சேயைச் சிவனெனத் தெளிய லாமே

– தணிகைப் புராணம் (183)

மேலே தரப்பெற்றிருக்கும் திருமந்திரப்பாடல், ஒன்பதாம் தந்திரத்தின் கண், எட்டாவது அதிகார மான 'திருக்கூத்து தரிசனம்' என்பதன்கீழ், 'பொற்றில் லைக் கூத்து' என்னும் பிரிவில் பத்தாவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 2712–ஆவது பாடலாகவும் வரையப்பட்டுள்ளது.

இப்பாடலில் திருமூலர், ஆறு திருமுகங்களை யுடைய அருளாளர் சிவ பெருமானேயாவன் என்றும், சமயம் கூறும் குருவும் அவரே என்றும், ஒரு புடையொப்பாக ஐந்து திருமுகங்களும் ஐந்து

Koviloor Digital Library

தொழிலுக்கும் அமைந்தன என்றும், எனவே ஆறாவது திருமுகம் சிவகுரு என்றும் ஆறு திருமுகக் குறிப்பு ஆறு ஆதாரங்களைக் குறிக்கும் உண்மையாகும் என்றும், இவ்வுண்மையை அறிபவரிடம் சிவ பெருமான் வேறின்றி உடனாய் உணரப்படுபவனாக உள்ளான் என்றும் கூறுகின்றார்.

ஆறுதிருமுகங்கள்		
ஈசானம்	–	உச்சி
தற்புருடம்	–	கிழக்கு
அகோரம்	–	தெற்கு
வாமம்	–	வடக்கு
சத்தியோசாதம்	–	மேற்கு
அதோமுகம் (சிவகுரு)	–	கீழ்நோக்கி

ஐந்து தொழில்கள்		
மேற்கு முகம்	–	படைத்தல்
கிழக்கு முகம்	–	காத்தல்
தெற்கு முகம்	–	துடைத்தல்
வடக்கு முகம்	–	மறைத்தல்
உச்சிமுகம்	–	அருளல்
கீழ்நோக்கியமுகம்	–	சிவகுரு

மேலே தரப்பெற்றிருக்கும் மற்றொரு பாடல் 'தணிகைப் புராணம்' என்னும் 'சீபரிபூரண நாமப்படலம்' என்பதன் கீழ் 183–ஆவது பாடலாகும்.

Koviloor Digital Library

இந்நூலை இயற்றியவர் கவி ராக்ஷஸ ஸ்ரீகச்சியப்ப முனிவராவார். இவர் தொண்டை மண்டலம் திருத்தணியில் பிறந்தவர்; 18–ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்; இவர் காஞ்சிபுரத்தில் கி.பி.1790–இல் மறைந்தார். இவர் பல்வேறு நூல்களை ஆக்கியுள்ளார்.

இப்பாடலில் கச்சியப்பர், முகமும் விழியும் கையுமாகிய மூன்றுறுப்பும் சிவனாகிய வள்ளலுக்கு முப்பது ஆகும் என்றும், சிவனுக்கு ஐந்து முகம், நெற்றிக் கண்ணைச் சேர்த்து விழி ஐம்மூன்று, கை ஐயிரண்டு ஆக முப்பது என்றும், முருகனுக்கு ஆறுமுகம், பன்னிருவிழி, பன்னிரு கை ஆக முப்பது ஆகும் என்றும் கூறுகின்றார்.

ஆறு திருமுகங்களை உடைய அருளாளன் சிவபெருமான் என்றும், சமயம் கூறும் குருவும் அவரே என்றும், ஆறு திருமுகக் குறிப்பு ஆறு ஆதாரங்களைக் குறிக்கும் என்றும் திருமூலர் கூறுகின்றார். இதனை,

'ஆறு முகத்தில் அதிபதி நானென்றுங்
கூறு சமயக் குருபரன் நானென்றுந்'

என்னும் திருமந்திர வரிகளால் நுணுகிப் பார்க்கின்ற போது அறியலாம்.

சிவனுக்கு ஐந்து முகம், நெற்றிக்கண்ணைச் சேர்த்து விழி ஐம்மூன்று, கை ஐயிரண்டு ஆக முப்பது என்றும், முருகனுக்கு ஆறுமுகம், பன்னிரு விழி,

Koviloor Digital Library

பன்னிரு கை ஆக முப்பது ஆகும் என்றும் கச்சியப்பர் கூறுகின்றார். இதனை,

'முகம் விழி மலர்க்கை மூன்று முப்பது...'

என்னும் தணிகைப் புராண வரியால் உணரலாம்.

திருமூலர் ஆறு திருமுகங்களை உடைய அருளாளன் சிவன் என்று கூறினாலும், ஐந்து திருமுகங்கள் ஐந்தொழிலுக்கு அமைந்தன என்றும், ஆறாவது திருமுகம் சிவகுரு என்றும் குறிப்பிட்டுச் சொல்லுகிறார்.

கச்சியப்ப முனிவர், முகம், கண், கை ஆகிய மூன்றும் சேர்ந்து முப்பது உறுப்புகள் சிவனுக்கு உண்டு என்று சொல்லி, அதே மூன்று உறுப்புகளும் எண்ணிக்கையில் வேறுபட்டாலும், முருகனுக்கும் மொத்த உறுப்புகளின் எண்ணிக்கை முப்பது என்றும் கூறி,

'சேயைச் சிவனெனத் தெளிய லாமே'

என்று முடிக்கின்றார். அதாவது எண்ணிக் கையில் ஒப்பாக இருக்கின்ற காரணத்தினால் முருகனை, சிவனென ஏன் கொள்ளக்கூடாது என்று வினா எழுப்புகின்றார். தந்தைக்கே பாடம் சொன்ன தனயன் அல்லவா?

Koviloor Digital Library

36

திருமந்திரமும் திருக்கோயில் திருவெண்பாவும்

ஊரெலாங் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே

– திருமந்திரம் (189)

தொட்டுத் தடவித் துடிப்பொன்றும் காணாது
பெட்டப் பிணம் என்று பேரிட்டுக் – கூட்டி
எடுங்களத்தா என்னாமுன் ஏழைமட நெஞ்சே
நெடுங்களத்தாண் பாதம் நினை

– திருக்கோயில் திருவெண்பா (8)

மேலே உள்ள திருமந்திரப்பாடல், முதல் தந்திரத் தின்கீழ், இரண்டாம் அதிகாரமான 'யாக்கை நிலையாமை' என்பதில் மூன்றாவது பாடலாக அமைந்துள்ளது. மேலும், திருமந்திரப்பா வரிசையில் 189–வது பாடலாக வரையப்பட்டுள்ளது.

இப்பாடலில் திருமூலர், ஊர் முனி பண்டமாகிய ஆவி நீங்கிய உடம்பினைச் சூழ்ந்திருந்து உறவோடு ஊரெல்லாம் ஒன்று கூடி அழுவர் என்றும், முறைப்பெயர், சிறப்புப்பெயர் முதலிய பெயர்களை

Koviloor Digital Library

ஒழித்துப் பிணமென்று பெயரிட்டு, முட்செடிகள் நிரம்பிய சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்வர் என்றும், அவ்வுடம்பினை ஈமத்தீயிட்டு, வாய்க்கரிசியிட்டுக் குடமுடைத்துக் கொள்ளி வைத்து எரிப்பர் என்றும், எரித்தபின் நீரில் மூழ்கி இறந்தவரைப் பற்றியேனும் இனி இறக்கப் போகும் தம்மைப் பற்றியேனும், இதற்கு வாயில்களாக உள்ள நிலையாமை, மாயை, வினை, மலங்களைப் பற்றியேனும் ஒரு சிறிதும் நினைப்பற்றிருப்பர் என்றும் கூறுகின்றார்.

அடுத்து தரப்பட்டிருக்கும் பாடல், ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அருளிச் செய்த 'திருக்கோயில் திருவெண்பா அல்லது க்ஷேத்திரத் திருவெண்பா'வைச் சேர்ந்ததாகும். இவர் சிவபெருமான் எழுந்தருளிய திருக்கோயில்கள் தோறும் சென்று இறைவனைப் போற்றினார். ஒவ்வோர் ஊரிலும் ஒவ்வொரு வெண்பாப் பாடுதலையும் மேற்கொண்டார். அப்படிப் பாடப்பட்ட வெண்பாக்களில் இருபத்துநான்கு மட்டுமே கிடைத்துள்ளன. இவைகள் பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பெற்றிருக்கின்றன.

இங்கே தரப்பட்டிருக்கும் வெண்பா 'திருநெடுங் களம்' என்னும் திருத்தலத்தில் பாடப்பெற்றதாகும். இது பதினோராம் திருமுறைப்பா வரிசையில் 152–ஆவது பாவாகவும், திருக்கோயில் திருவெண்பா வில் எட்டாவது பாடலாகவும் அமைந்திருக்கிறது.

இப்பாடலில் ஐயடிகள், தொட்டுப் பார்த்தும் தடவிப் பார்த்தும் துடிப்பொன்றும் இல்லாமையால்,

Koviloor Digital Library

வறிய பிணம் என்று பேரிட்டுப் பாடையில் வைத்துக் கட்டி, எடுங்கள் அத்தா என்னாமுன், பேதமை உடைய நெஞ்சமே திருநெடுங்களம் என்னும் ஊரில் எழுந்தருளிய இறைவனது பாதங்களை நினைப்பாயாக என்று கூறுகின்றார்.

திருமூலர் தமது பாடலில், உயிர்நீக்கிய வெற்றுடம்பை சுடுகாட்டிற்கு எடுத்துச் சென்று செய்யும் சடங்குகள் பற்றி விவரித்து விட்டு பிறப்பு இறப்புகளுக்குக் காரணிகளான நிலையாமை, மாயை, வினை மற்றும் மலங்கள் பற்றிக் கவலைப்படாத மனிதர்களைப் பற்றி மனமிரங்கி வருந்துகிறார். அதாவது நிலையாமையைப் புரிந்து கொண்டு, பிறப்பில்லா பேரின்பத்தை அடைதல் வேண்டும் என்கிறார். ஆனால், இன்று அப்படியில்லை, உயிரற்ற உடம்பினைத் தூக்கிப் போட்டு விட்டு, அடுத்த வேலையைக் கவனிக்க ஆலாய்ப் பறக்கின்ற உலகமிது! வேகப்பட்ட உலகமிது. இதுதான் வாழ்க்கை என்கிறார்கள் இன்றைக்கு!

அதே பாணியில் ஐயடிகள், தம் பேதமை நிறைந்த நெஞ்சத்திற்கு அறிவுறுத்துவது போல நிலையாமையைப் பற்றிக் கூறுகின்றார். பாடையில் ஏறி சுடுகாட்டிற்குச் செல்லும் முன், அதாவது இறப்பதற்கு முன், நெடுங்களத்திலுள்ள இறைவனது பாதங்களை நினைப்பாயாக – சிவபெருமானை வணங்குவாயாக – பிறப்பில்லா இறைஅருள் இன்பத்தைப் பெற முயற்சிப்பாயாக என தம் மனதுக்குள் அறிவுறுத்துகிறார்.

Koviloor Digital Library

மூத்த திருத்தொண்டரான திருமூலர் பயன்படுத்திய 'பிணமென்று பேரிட்டு' என்னும் சொற்றொடரை, ஐயடிகளும் உயிரற்ற உடம்பினை,

'பெட்டப் பிணம் என்று பேரிட்டு'

என்று அப்படியே பயன்படுத்தியிருக்கிறார்.

மேலும், திருமூலர், நிலையாமையைப் பற்றியும் இறைவனைப் பற்றியும் நினைப்பில்லாமல் ஆருயிர்கள் இருப்பதை,

'நினைப்பொழிந் தார்களே'

என்று கூறுகின்றார்.

அதேபோல் ஐயடிகளும், நினைப்பில்லாமல் இருந்துவிடக் கூடாது – மறக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காக,

'நெடுங்களத்தான் பாதம் நினை'

என அறிவுறுத்துகிறார்.

இருபெரும் தத்துவ விற்பன்னர்களும் குறிப்பிடும் ஈமச்சடங்குகள் – நடைமுறை பழக்க வழக்கங்கள் எல்லாம் அன்றும் இன்றும் பல ஆயிரமாண்டுகள் ஆகியும் மாற்றம் காணவில்லை என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. மற்றாம் காண வாய்ப்பில்லைதானே! அடிப்படைக் குணங்களும் நெறிகளும் மாறுவதில்லைதானே!

Koviloor Digital Library

37

திருமந்திரமும் திருநீலகண்டக் குயவனார் புராணமும்

அவ்வியம் பேசி அறங்கெட நில்லன்மின்
வெவ்விய னாகிப் பிறர்பொருள் வவ்வன்மின்
செவ்விய னாகிச் சிறந்துண்ணும் போதொரு
தவ்வி கொடுமின் தலைப்பட்ட போதே

– திருமந்திரம் (238)

பொய்கடிந் தறத்தின் வாழ்வார் புனற்சடை முடியார்க்கன்பர்
மெய்யடி யார்கட்கான பணிசெயும் விருப்பில் நின்றார்
வையகம் போற்றும் செய்கை மனையறம் புரிந்து வாழ்வார்
சைவமெய்த் திருவின் சார்வே பொருளெனச் சாருநீரார்

– திருநீலகண்டக் குயவனார் புராணம் (2)

மேலே தரப்பட்டிருக்கும் திருமூலரின் திருமந்திரப்பாடல், முதல் தந்திரத்தின் கீழ், ஐந்தாவது அதிகாரமான 'உயிர் நிலையாமை' என்பதில் பத்தாவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 238–ஆவது பாவாகவும் அமைந்திருக்கின்றது.

இப்பாடலில் திருமூலர், வஞ்சனை, பொய் முதலிய பிறர்க்குத் துன்பம் விளைவிக்கும்

Koviloor Digital Library

தீச்சொற்களைச் சொல்லி அறமுறை அழிய நடவாதீர்கள் என்றும், பேராசை கொண்டு பிறர் பொருளைக் கவராதீர்கள் என்றும், எல்லா வகையிலும் மேம்பட்ட நற்பண்புகளை உடையவர் களாகுங்கள் என்றும், உண்ணும் போது இல்லை என்று வருபர்களுக்கு ஓர் அகப்பை உணவு கொடுத்து பின் உண்ணுங்கள் என்றும் கூறுகின்றார்.

அடுத்து தரப்பட்டிருக்கும் பாடல், திருநீலகண்ட நாயனார் புராணத்தின் இரண்டாவது பாடலாகவும், பெரிய புராணப்பா வரிசையில் 361-ஆவது பாவாகவும் வரையப்பட்டுள்ளது. திருநீலகண்டர் தில்லையில் குயவர் குலத்தில் அவதரித்தவர்.

இப்பாடலில் சேக்கிழார், திருநீலகண்டநாயனார் எத்தகைய பண்பினர் எனக் கூறுகின்றார். திருநீலகண்டர் பொய்யை ஒழித்து, அறநெறியில் வாழ்பவர் என்றும், சிவனடியார்களுக்கு வேண்டிய பணிவிடைகளையெல்லாம் செய்கின்ற விருப்பம் மிக்க ஒழுக்கம் உடையவர் என்றும், உலகத்தில் சிறந்ததாகக் கொண்டு ஒழுகப்பெறும் இல்லற வாழ்வை வழுவாது நடத்தி வருபவர் என்றும், சைவ சமயத்தின் உண்மை செல்வத்தின் சார்பே பொரு ளாவது என உணர்ந்து சார்ந்து ஒழுகும் தன்மை கொண்டவர் என்றும் சேக்கிழார் கூறுகின்றார்.

திருமூலர் கூறும் நல்லொழுக்கத்தின்படி வாழ்ந்தவர் திருநீலகண்டர் என்பது திருமந்திர வரிகளாலும், பெரிய புராண வரிகளாலும் அறியலாம்.

Koviloor Digital Library

'அவ்வியம் பேசி அறங்கெட நில்லன்மின்'
என்று திருமூலர் அறிவுறுத்த,

'பொய்கடிந் தறத்தின் வாழ்வார்.....'

என்று சேக்கிழார் விளம்புகிறார்.

'செவ்விய னாகிச் சிறந்துண்ணும் போதொரு
தவ்விய கொடுமின்...............................'

என்று திருமூலர் அறிவுறுத்த,

'மெய்யடி யார்கட்கான பணிசெயும் விருப்பில் நின்றார்'

என சேக்கிழார், திருநீலகண்டரைப் பற்றிக் கூறுவதை எண்ணிப்பார்க்க.

திருமூலர், உயிர் வாழ்க்கை நிலையாமைத் தன்மையது என்றும், எனவே ஒவ்வொருவரும் எப்படிப்பட்ட இலக்கணங்களை, நற்பண்புகளை உடையவராக இலங்க வேண்டும் என்றும், நல்வாழ்க்கையை – தூய வாழ்க்கையை வாழ்ந்து விட்டுச் செல்ல வேண்டும் என்றும் விரும்பி வேண்டு கின்றார்.

திருமூலர் விழைந்தது போலவே, பிந்தைய காலத்தில் திருநீலகண்டர் வாழ்ந்து காட்டியிருகின்றார் என்பதை, சேக்கிழாரின் திருநீலகண்ட நாயனார் புராணத்தின் மூலம் அறியக் கிடக்கின்றது.

Koviloor Digital Library

38

திருமந்திரமும் தில்லை வாழந்தணர் புராணமும்

தெற்கு வடக்குக் கிழக்குமேற் குச்சியில்
அற்புத மானதோர் அஞ்சு முகத்திலும்
ஒப்பில்பே ரின்பத் துபய உபயத்துள்
தற்பரன் நின்று தனிநடஞ் செய்யுமே

– திருமந்திரம் (2693)

கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய் கின்ற பூங்கழல்
போற்றி போற்றி

– தில்லை வாழந்தணர் புராணம் (2)

ஈண்டு தரப்பட்டிருக்கும் திருமூலரின் திருமந்திரப்பாடல் ஒன்பதாம் தந்திரத்தின் கண், எட்டாம் அதிகாரமான 'திருக்கூத்து தரிசனம்' என்பதில் ஒரு பிரிவான 'பொற்பதிக் கூத்தில்' முதல் பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 2693–ஆவது பாவாகவும் வரையப்பட்டுள்ளது. இம்மந்திரம் உலகமெல்லாம் சிவத்தின் திருக்கூத்தேயாகும் என்பதை விளக்குகிறது.

Koviloor Digital Library

இப்பாடலில், தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு, உச்சி ஆகிய திருமுகங்கள் ஐந்தும் அருளோன் குறியில் காணப்படும் என்றும், ஒப்பில் பேரின்பத்தினையே வடிவமாகவுடைய சிவபெருமான் அருவம், உருவம், அருவுருவம் என்னும் முத்திறப் பாகுபாடு இன்றி மேலே சொல்லப்பட்ட திருமுகங்களினிடமாகத் தனிநடம் புரிந்தருள்வன் என்றும் திருமூலர் கூறுகின்றார்.

ஐந்து திருமுகங்கள்		
1.	தெற்கு	நடுக்கம்
2.	வடக்கு	விளக்கம்
3.	கிழக்கு	ஆட்சி
4.	மேற்கு	தோற்றுவித்தல்
5.	உச்சி-	இயக்கம்

அடுத்து சொல்லப்பட்டிருக்கும் பெரிய புராணப்பாடல், இரண்டாவது சருக்கமான 'தில்லை வாழ் அந்தணர்' என்பதன்கீழ், 'தில்லை வாழந்தனர் புராணத்'தில் இரண்டாவது பாடலாகவும், பெரிய புராணப்பா வரிசையில் 351-ஆவது பாவாகவும் அமைந்துள்ளது.

பெரியபுராணப் பாடலில் சேக்கிழார், தில்லையில் நடனக் கோலத்தில் காணப்பெறும் சிவபெருமானைப்பற்றி போற்றிப் பேசுகிறார். மேலும், பாசஞானம், பதிஞானங்களால் கற்பிக்கப்பெற்ற எல்லாம் கடந்து நிற்கும் சோதியானது அருளே

Koviloor Digital Library

வடிவாகக் கொண்டு அறிவதற்கரிய அற்புதக் கோலத்தில் நீடித்து நின்று, அரிய வேதத்தின் உச்சி யான உபநிடதங்களின் உச்சியில் உணர்த்தப்படுகின்ற ஞானாகாயத்தின் உருவமான தில்லைச் சிற்றம்பலத் தில் நிலைத்து நின்று அழகோடு கூத்து ஆடுகின்ற மலர் போன்றதும் கழலை அணிந்ததுமான திருவடிக்கு வணக்கம் என சேக்கிழார் பணிந்து வணங்குகிறார்.

திருமூலர், ஒப்பில் பேரின்பத்தினையே வடிவமாக உடைய சிவபெருமான் அருவம், உருவம், அருவுருவம் என்னும் முத்திறப் பாகுபாட்டினின்று திருமுகங்களினிடமாகத் தனிநடம் புரிந்தருள்வதாகக் கூறுகின்றார். இதனை,

'ஒப்பில்பே ரின்பத் துபய உபயத்துள்
தற்பரன் நின்று தனிநடஞ் செய்யுமே'

என்ற வரிகள் மூலம் தெளியலாம்.

அதேபோல் சேக்கிழார், அரிய வேதத்தின் உச்சியான உபநிடதங்களின் உச்சியில் உணர்த்தப் படுகின்ற ஞானாகாயத்தின் உருவமான தில்லைச் சிற்றம்பலத்தில் நிலைத்து நின்று சிவபெருமான் அழகோடு கூத்து ஆடுவதாகக் கூறுகின்றார். இதனை,

'சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி'

என்னும் வரிகள் மூலம் அறியக் கிடக்கின்றன.

Koviloor Digital Library

இருபெரும் விற்பன்னர்களும் சிவபெருமான் தனிநடம் செய்வதையும், அருள்புரிவதையும் பற்றிக் குறிப்பிடுகின்றனர்.

39

திருமந்திரமும் திருமாளிகைத் தேவரின் திருவிசைப்பாவும்

அம்பலம் ஆடரங் காக அதன்மீதே
எம்பரன் ஆடும் இருதாளி னீரொளி
உம்பர மாம்ஐந்து நாதத்து ரேகையுள்
தம்பத மாய்நின்று தான்வந் தருளுமே

– திருமந்திரம் (2713)

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத்(து) ஆனந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

– திருமாளிகைத் தேவரின் திருவிசைப்பா (1)

Koviloor Digital Library

ஈண்டு தரப்பெற்றிருக்கும் திருமந்திரப்பாடல் ஒன்பதாம் தந்திரத்தின் கண், எட்டாம் அதிகாரமான 'திருக்கூத்து தரிசனம்' என்பதன் கீழ், 'பொற்றில்லைக் கூத்து' என்னும் பிரிவில் பதினோராவது பாடலாக வரையப்பட்டுள்ளது.

திருமூலர் தமது பாடலில், திருச்சிற்றம்பலமே ஆடும் அரங்கமாகக் கொண்டு அதன்கண் சிவபெருமான் தன் இரண்டு திருவடிகளிலும் நூலுணர்வும், நுண்ணுணர்வுமாகிய இருபெரும் அறிவொளி தோன்றுமாறு திருக்கூத்தியற்றுகின்றனன் என்றும், மேலோங்கி ஒளிரும் ஐவகை ஓசையின் கோட்டின் கண்ணும் நின்று திருக்கூத்தியற்று கின்றனன் என்றும், அதுமட்டுமல்லாமல் அவ்வோசை கள் திகழும் தூமாயையினையே தன் நேர் நிலையாகக் கொண்டு எழுந்தருளி அருள்கின்றனன் என்றும் கூறுகின்றார்.

ஐவகை ஓசைகள்
1. நுண்ணோசை
2. நினைவோசை
3. மிடற்றோசை
4. செவியோசை
5. கேட்பிக்கும் ஓசை

மேலே தரப்பெற்றிருக்கும் மற்றொரு பாடல், திருமாளிகைத் தேவரின் ஒன்பதாம் திருமுறையான

Koviloor Digital Library

'திருவிசைப்பா'வில் முதல் பாடலாகும். இவர் இயற்றிய மொத்தப் பாடல்கள் நாற்பத்தைந்தாகும். இவர் பாடிய மொத்தத் திருவிசைப்பா திருப்பதிகங்கள் நான்கு ஆகும். இவருடைய காலம் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டாகும்.

திருமாளிகைத் தேவர் தமது பாடலில், அழிவில்லாத ஒளிமிகும் விளக்கே என்றும், சென்று பற்றும் சுட்டறிவும் ஆய்வும் கடந்து நின்று சிவஞானத் தால் அறியப்படும் மேலான பேரறிவே என்றும், ஒளி பொருந்திய பளிங்கின் தோற்றத்தை உடைய திரட்சியான மாணிக்க மலையே என்றும், மெய்யன் பரது மனத்தின் கண் தித்திக்கும் தேனே என்றும், அன்புபெருகும் மெய்யடியாரது மனத்தின்கண் பேரானந்தத்தை விளைவிக்கும் கனியே என்றும், தில்லை அம்பலத்தையே நடனம் புரியும் சபையாகக் கொண்டு அங்கு சிதாகாசத்தில் ஆடும் ஆதியும் அந்தமும் இல்லாத தெய்வீக நடனத்தை விரும்பிச் செய்யும் தில்லை நடராசப் பெருமானைப் புகழ்ந்து பாடுமாறு தம்மைப் பணிக்க வேண்டுமெனக் கூறுகின்றார்.

திருமூலர், சிவபெருமான் திருக்கூத்தியற்று வதைப் பற்றி கூறும்பொழுது, திருச்சிற்றம்பலத்தையே ஆடும் அரங்கமாகக் கொண்டு அதன்கண் தன் இரண்டு திருவடிகளிலும் அறிவொளி தோன்றுமாறு நடம்புரிவதாகக் கூறுகின்றார். இதனை,

Koviloor Digital Library

'அம்பலம் ஆடரங் காக அதன்மீதே
எம்பரன் ஆடும் இருதாளி னீரொளி'

என்னும் வரிகளை நுணுகி ஆராயும்போது அறியவரலாம்.

அதே போல, திருமாளிகைத் தேவர் தமது திருவிசைப்பாவில் தில்லை நடராசரை பலவாறாக புகழ்ந்து விளித்துப்பாடும் பொழுது, தில்லை அம்பலத்தையே நடனம் புரியும் சபையாகக் கொண்டு அங்கு சிதாகாசத்தில் ஆடும் ஆதியும் அந்தமும் இல்லாத தெய்வீக நடனத்தை விரும்பிச் செய்யும் தில்லை நடராசப் பெருமானே எனப் புகழ்கிறார். இதனை,

'அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயை'

என்னும் திருவிசைப்பா வரிகளால் நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு இருபெரும் தவஞானிகளும், சிவனை, அதாவது நடராசப் பெருமானை ஒரே மாதிரியாக விளித்திருப்பது, ஒன்றோடொன்று இயைந்து போவதைக் கண்கூடாகக் காணலாம்.

Koviloor Digital Library

40

திருமந்திரமும் திருவிடைமருதூர் மும்மணிக்கோவையும்

ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன் மின்
பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணுங் காலம் அறிமினே

– திருமந்திரம் (107)

புண்ணிய புராதன புதுப்பூங் கொன்றைக்
கண்ணி வேய்ந்த ஃகலை நாயக
காள கண்ட கந்தனைப் பயந்த
வாளரி நெடுங்கண் மலையாள் கொழுந
பூத நாத பொருவிடைப் பாக

வேத கீத விண்ணோர் தலைவ
முத்தி நாயக மூவா முதல்வ
பத்தி யாகிப் பணைத்தமெய் யன்பொடு
நொச்சி யாயினும் கரந்தை யாயினும்
பச்சிலை யிட்டுப் பரவுந் தொண்டர்
கருவிடைப் புகாமல் காத்தருள் புரியும்

– திருவிடைமருதூர் மும்மணிக் கோவை (19)

Koviloor Digital Library

மேலே தரப்பட்டிருக்கும் திருமந்திரப்பாடல், 'பொதுப்பாயிரத்'தின் கீழ், ஒன்பதாம் அதிகாரமான 'அறஞ்செய்வான் திறம்' என்பதில் முதல் பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 107–ஆவது பாவாகவும் வரையப்பட்டுள்ளது. இப்பாடல் உணவு உண்ணும் வகையைப் பற்றிப் பேசுகிறது.

இப்பாடலில் திருமூலர், எவ்வகை வேறுபாடும் இன்றி குறிப்பறிந்து உடலினுக்கு உணவும், உயிரினுக்கு உணர்வும் வேண்டினவர்களுக்கு ஈதல் உடையோரின் கடமையாகும் என்றும், அவர் இவர் என்று எவ்வகை வேறுபாடும் பார்க்காமல், செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருந்து உண்ணவேண்டும் எனவும், பழையனவற்றை உண்ணுதல் தவறு என்றும், கிடைக்காமையாலோ, காலம் தாழ்த்தி உண்ண நேர்ந்தாலோ மிக்க வேட்கை உண்டாவது இயல்பு என்றும், அதுபோது விரைவாய் உண்ணுதல் கூடாது என்றும், காக்கையானது வீட்டிலுள்ள பொருள்களைக் கவர்ந்து கள்ளமாய் உண்ணும்போது ஒரு சிறிதும் கரைவதில்லை என்றும், வீட்டிலுள்ளார் காக்கையைக் கூவியழைத்து அதற்கென வைத்த உணவினைக் கரையாது உண்பதும் இல்லை என்றும், இவ்விருவேறு காலத்தன்மையால் ஏற்படும் நன்மை தீமைகளை அறிந்து தீமையை அகற்றி நன்மைக்கண் உறைந்து நின்று ஒழுகுதல் வேண்டும் என்றும் கூறுகிறார்.

அடுத்து தரப்பட்டிருக்கும் பாடல், 'திருவிடை மருதூர் மும்மணிக் கோவை'யைச் சார்ந்ததாகும். இது

Koviloor Digital Library

பட்டினத்தடிகள் அருளிச் செய்த நூலாகும். இது பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பட்டிருக்கின்றது. மேலும், இப்பாடல் 'திருவிடைமருதூர் மும்மணிக் கோவை'யின் 19–ஆவது பாடலாகவும், பதினோராம் திருமுறைப் பாவரிசையில் 896–ஆவது பாவாகவும் வரையப்பட்டுள்ளது.

தரப்பெற்றிருக்கும் பாடல் வரிகளில் பட்டினத் தடிகள், இறைவனை பல்வேறு விதமாக விளித்து அழைக்கின்றார். அவ்விளிப்பு, இறைவன் இன்னான் என தெற்றென விளக்குகிறது. பட்டினத் தடிகள், புண்ணியம் நிறைந்த பழமையானவனே என்றும், கொன்றையைத் தலைமலையாக்க் கொண்டவன் என்றும், கயிலைக்கு நாயகனே என்றும், விடத்தைக் கழுத்தில் வைத்துள்ளவனே என்றும், கந்தனைப் பயந்த வாளரி நெடுங்கண் உமாதேவியின் கொழுநனே என்றும், பூதகணங்களுக்கு நாதனே என்றும், கொல்லேற்று வாகனனே என்றும், வேத கீதனே என்று, தேவர்களுக்குத் தலைவனே என்றும், முத்திக்கு நாயகனே என்றும், மூவா முதல்வ என்றும், பக்தி கொண்டு பணைத்த மெய்யன்பொடு நொச்சி, கரந்தை ஆகிய பச்சிலை கொண்டு அருச்சிக்கும் தொண்டர்கள், மறுபடியும் பிறவி எடுக்காமல் காத்து அருள் புரியும் திருவிடை மருத எனப் பாடியும் பரவுகிறார்.

திருமூலர் தமது பாடலில், உணவு உண்ணும் பொழுது எப்படி உண்ணவேண்டும், என்னென்ன செய்தல் வேண்டும், எப்படி அறம் செய்தல்

Koviloor Digital Library

வேண்டும் என்பதுபற்றி 'அறம் செய்வான் திறம்' என்னும் அதிகாரத்தில் கூறுகின்றார். மேலோட்டமாக பார்க்கும்பொழுது, எப்படிப்பட்ட உணவை உட்கொள்ள வேண்டும், எப்படிப்பட்ட உணவை உட்கொள்ளக் கூடாது என்று கூறுவதுபோல் தோன்றுகிறது. ஆனால், பெறப்படும் கருத்தோ வேறாகும். அதாவது, ஆருயிர் அனைத்தும் சிவபெருமானுக்கு அடிமை; ஏனை உலகியல் பொருள்களும் அவன் உடைமை; அவன் திருவருள் ஒவ்வொருவரையும் பிறர்க்கு உதவி முதற்கண் அவர்களை உயர்த்தி அதன் வாயிலாகத் தாமும் உயருமாறு அறிவுறுத்துகின்றது. இதனை,

'ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்'

என்ற வரிகள் மூலம் உணரலாம்.

பட்டினத்தடிகள் தமது பாடலில், இறைவனை பல்லாற்றானும் விளித்து பின்னர், பத்தி கொண்டு, சிறந்த மெய்யன்பொடு நொச்சி, கரந்தை முதலிய பச்சிலை கொண்டு அருச்சிக்கும் தொண்டர்களுக்கு எவ்வித மாறுபாடுமின்றி, மறுபடியும் பிறவி எடுக்காமல் காத்து அருள்புரிவாயாக என்று பாடிப் பரவுகின்றார்.

ஈகைக் குணம் கொண்டு அறம் செய்கின்ற வர்கள் இன்னவர் என இனம் காணாமல், அவர் இவர் என்று பிரித்து பேதம் பார்க்காமல், இல்லை என நாடி வந்தவர்க்கு உணவளிக்க வேண்டும் என்று திருமூலர் கூறுவது போல், பக்தி கொண்டு

Koviloor Digital Library

மெய்யன்போடு இறைவனை நாடி வந்து பூசிப்பவர்களுக்கு அவர் இவர் என பேதம் பார்க்காமல், அனைவருக்கும் மறுபடியும் பிறவி எடுக்காமல் இருக்க அருள்புரிய வேண்டும் என பட்டினத்தடிகள் வேண்டுகிறார். இதனை,

'பச்சிலை யிட்டுப் பரவுந் தொண்டர்
கருவிடைப் புகாமல் காத்தருள் புரியும்'

என்னும் வரிகள் மூலம் உணரமுடியும்.

41

திருமந்திரமும் திருவேலங்காட்டு மூத்தத் திருப்பதிகமும்

காளியோ டாடிக் கனகா சலத்தாடிக்
கூளியோ டாடிக் குவலயத் தேயாடி
நீடிய நீர்தீக்கால் நீள்வா னிடையாடி
நாளுற அம்பலத் தேயாடும் நாதனே

– திருமந்திரம் (2700)

எட்டி இலவம் ஈகை
    சூரை காரை படர்ந்தெங்கும்
சுட்ட சுடலை சூழ்ந்த
    கள்ளி சோர்ந்த குடர்கௌவப்

Koviloor Digital Library

பட்ட பிணங்கள் பரந்த
காட்டிற் பறைபோல் விழிகட்பேய்
கொட்ட முழவங் கூளி
பாடக் குழகன் ஆடுமே
– திருவேலங்காட்டு மூத்தத் திருப்பதிகங்கள் (2)

மேலே தரப்பட்டிருக்கும் திருமந்திரப்பாடல், ஒன்பதாம் தந்திரத்தின் கீழ், எட்டாவது அதிகாரமான 'திருக்கூத்துத் தரிசனம்' என்பதில் இருபத்தேழாவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 2700–ஆவது பாவாகவும் வரையப்பட்டுள்ளது.

திருமூலர் தமது பாடலில், காளியை அடக்குவதன் பொருட்டு, சிவபெருமான் பொன் மலையாகிய மேரு நன்மலைக் கண்ணும், பேய்க் கூட்டங்களுடனும், நிலவுலகத்தேயும், ஐம்பெரும் பூதங்களினிடமாக நின்றும், சீவர்கள் நீண்ட வாழ்நாள் பெற தில்லைத் திருச்சிற்றம்பலத்தின் கண் சிறப்புற நின்றும் ஆடியருளுகின்றனன் என்று கூறுகின்றார்.

அடுத்துத் தரப்பட்டிருக்கும் பாடல் காரைக்கால் அம்மையார், அருளிச் செய்த 'திருவேலங்காட்டு மூத்தத் திருப்பதிகங்கள் 2'–இல் முதலாவது பாடலாகவும், பதினோராம் திருமுறைப்பா வரிசையில் பதின்மூன்றாவது பாவாகவும் அமைந்துள்ளது.

இப்பாடலில் காரைக்காலம்மையார், எட்டி, இலவம், ஈகை, சூரை, காரை, கள்ளி முதலிய மரங்களும் செடிகளும் சூழ்ந்ததும் கழுகுகளால் குடல்

Koviloor Digital Library

கௌவப்பட்ட பிணங்கள் நிறைந்ததுமான சுடு காட்டில் பரந்து வட்டவடிவம் கொண்ட விழிகளையுடைய பேய் முழவங்கொட்ட, கூளி பாட, அழகன் ஆடுவான் என்று கூறுகின்றார்.

சிவபெருமான் பல்வேறு இடங்களில், பல்வேறு நிலைகளில் கூத்தாடுகின்றான். ஏன் ஆடுகின்றான்? ஆடுகின்ற மனிதர்களை ஆடாமலிருக்க வேண்டி ஆடுகின்றான்.

அதாவது, உலகுயிர்கள் தொழிற்படும் பொருட்டு சிவபெருமான் திருவுள்ளங்கொள்ளு கின்றான். அதாவது, மனிதர்கள் இன்னின்னவாறு ஆகுதல் வேண்டும் எனச் சிவபெருமான் அறிவில் கணிக்கின்றான்.

தில்லைத் திருச்சிற்றம்பலத்தின் கண் சிறப்புற நின்று ஆடியருளுதலை,

'நாளுற அம்பலத் தேயாடும் நாதனே'

என்னும் திருமந்திர வரியின் மூலம் தெளிவாக அறியலாம்.

அதேபோல் காரைக்கால் அம்மையார், அழகன் சிவபெருமான் எத்தகு சூழலில் ஆடுகின்றான், எங்கே ஆடுகின்றான் என்பதை வருணிக்கின்றார். தமது பாடலில், பல்வேறு மரம், செடிகள் நிறைந்த சுடுகாட் டில், கழுகுகள் சூழ, கூளி பாட, பேய் முழவம் கொட்ட சிவபெருமான் ஆடுவதாகக் கூறுகின்றார். இதனை,

Koviloor Digital Library

'.................................பேய்
கொட்ட முழவங் கூளி
பாடக் குழகன் ஆடுமே'

என்னும் வரிகள் மூலம் நம்மால் தெளிய முடிகின்றது.

வாழ்க்கையின் தொடக்கத்தைக் காட்ட சிவபெருமான் ஆடுகின்றனன் என்பதை திருமூலர் தமது பாடலில் குறிப்பிட, வாழ்க்கையின் கடைசித் தீர்ப்பை எழுத சிவபெருமான் ஆடுகின்றனன் என்பதை காரைக்காலம்மையார் தமது பாடலில் குறிப்பிடுகின்றார். இருபெரும் சிவஞானிகளுமே, சிவன் திருக்கூத்து இயற்றுதலைப் பற்றியே கூறுகின்றனர்.

42

திருமந்திரமும் திருஈங்கோய் மலை எழுபதும்

உழவன் உழவுழ வானம் வழங்க
உழவன் உழவினிற் பூத்த குவளை
உழவன் உழத்தியர் கண்ணொக்கும் என்றிட்டு
உழவன் அதனை யுழவொழிந் தானே

– திருமந்திரம் (1593)

Koviloor Digital Library

எய்யத் தொடுத்தோன் குறத்திநோக்(கு) ஏற்றதெனக்
கையிற் கணைகளைந்து கன்னிமான் - பையப்போ
என்கின்ற பாவனைசெய் ஈங்கோயே தூங்கெயில்கள்
சென்றன்று வென்றான் சிலம்பு

- திருஈங்கோய்மலை எழுபது (12)

மேலே தரப்பட்டிருக்கும் திருமந்திரப்பாடல், ஆறாம் தந்திரத்தின் கீழ், நான்காவது அதிகாரமான 'துறவு' என்பதில் ஆறாவது பாடலாகவும், திருமந்திரப் பா வரிசையில் 1593-ஆவது பாவாகவும் அமைந்துள்ளது.

இப்பாடலில் திருமூலர், சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்னும் நன்னெறி நான்மைப் பயிற்சியாம் உழவாகிய தொண்டினைச் செய்ய, வெளியிலுறையும் சிவபெருமான் அருளாகிய மழையைப் பொழிய தொண்டராகிய உழவரின் உழவினில் செவ்வி நோக்கி மலரும் குவளையாகிய திருவடியுணர்வு சிவஞானம் பூத்தது என்றும், உழவனாகிய மெய்த்தொண்டன், தன்னைவிட்டு நீங்காது தன்னுடைய அன்பறிவாற்றல்களுக்கு உடன் துணை செய்யும் சிவபெருமானின் அன்பு அறிவு ஆற்றல்கள் அத்திருவடி உணர்வை அருள் நோக்கம் செய்து காத்தளிக்கும் என்றும், அத்திருவருள் பொறுப்பில் ஒப்புவித்து ஒழுக, அவன் செய்யும் திருத்தொண்டும் அருள் தொண்டாய் நிகழும் என்றும் கூறுகின்றார்.

அடுத்து தரப்பட்டிருக்கும் பாடல், நக்கீரதேவ நாயனார் அருளிச் செய்த 'திருஈங்கோய்மலை

Koviloor Digital Library

எழுபது' என்பதனைச் சார்ந்ததாகும். ஈங்கோய் மலை காவிரி வடகரைத் தலமாகும். திருவிங்க நாதமலை எனவும் வழங்கப்பெறும். அம்பிகை வழிபட்டதால் இதற்குச் சிவசக்திமலை எனவும் பெயருண்டு. ஈங்கோய்மலையைப் பற்றிய எழுபது பாடல்களைக் கொண்டிருத்தலினால் இப்பெயர் பெற்றது. ஈங்கோய் மலையில் வாழும் கொடிய விலங்குகளும் வழிபாடு செய்யும் செம்மையான இவ்வருள் நூல் பெரிதும் விளங்குகிறது. இப்பாடல், 'திரு ஈங்கோய்மலை எழுபது' என்பதன் பன்னிரெண்டாவது பாடலாகவும், பதினோராம் திருமுறைப்பா வரிசையில் 413–ஆவது பாவாகவும் வரையப்பட்டுள்ளது.

இப்பாடலில் நக்கீர தேவ நாயனார், எய்வதற்குக் கணையைத் தொடுத்த வேடன், குறத்தியின் பார்வைக்கு ஏற்றதென்று, கணையை நீக்கிவிட்டு, ஈனாத இளமானை மெதுவாகப் போ என்று பாவனை செய்கின்ற ஈங்கோய் மலையே, தொங்குகின்ற மதில்களைச் சென்று அன்று வென்றவனுடைய மலையாகும் என்கிறார்.

உழவினில் பூத்தக் குவளையானது உழத்தியின் கண்ணைப் போன்று இருப்பதால், உழவன் அதனை உழாமல் (அழிக்காமல்) விடுத்தான் என்று திருமூலர் கூறுவது போல், இறைவனின் படைப்பில் மானின் கண்ணும் வேடனின் காதலி குறத்தியின் கண்ணைப்போல் இருத்தலைக் கண்டு வேட்டையாடாமல் விடுத்தான் என்று நக்கீரதேவர் தமது பாடலில் கூறுகின்றார். இவ்வொப்புமைகள்

Koviloor Digital Library

எவ்வளவு இலக்கிய நயம் வாய்ந்தது என்பதை பின்வரும் வரிகள் மூலம் உணரலாம்.

> '.................................... பூத்த குவளை
> உழவன் உழத்தியர் கண்ணொக்கும் என்றிட்டு
> உழவன் அதனை யுழவொழிந் தானே'

என்னும் திருமந்திர வரிகளும்,

> 'எய்யத் தொடுத்தோன் குறத்திநோக்(கு) ஏற்றதெனக்
> கையிற் கணை களைந்து.....'

என்னும் 'திரு ஈங்கோய் மாலை எழுபது' வரி களும் மிகச் செம்மையாக நமக்கு விளக்குகின்றன.

எனினும், 'உழத்தியர் கண்ணொக்கும்' என்று திருமூலரும் 'குறத்தி நோக்கு ஏற்றதென' நக்கீர தேவரும் தம்பாடல் வரிகளில் குறிப்பிட்டிருப்பது வார்த்தை அளவில் ஒன்றாய் இருப்பதுபோல் தோன்றினாலும் தரும் பொருள் தனித்தன்மை வாய்த்ததாக உள்ளது. இரண்டு பேர்களுமே பெண்களின் உடற்கூறு, இயல்பை விளக்கவே பயன்படுத்தியுள்ளனர்.

இருப்பினும் திருமூலர், அறிவுடையவன் செய்யும் நற்செயலை விளக்கி அதற்கு அருளாளன் எவ்வாறு துணை செய்கின்றார் என்பதையும் கூறி, நற்செயல் செய்பவர்களுக்கு நாளும் அவன் அருள் மழைபோல் கிடைக்கும் என்கின்றார். நக்கீரத் தேவர், வேடன் கூட அழகிய மானை வேட்டையாட நினைத்து இறைவன் படைப்பில் மானின் கண்ணும் தன்

Koviloor Digital Library

குறத்தியின் கண்ணும் ஒத்திருப்பதைக் கண்டு மானை வேட்டையாடாமல் விடுக்கின்றான். இதுவும் அறிவுடையான் செயலேயாகும். கொலைச் செயல் தவிர்த்தான். இது ஆன்மநேயம்! அங்கே இறையருள் மழைபோல் பொழியும் எனக் காண்க!

43

திருமந்திரமும் திருஏகம்பமாலையும்

தன்னது சாயை தனக்குத வாதுகண்டு
என்னது மாடென் றிருப்பர்கள் ஏழைகள்
உன்னுயிர் போம்உடல் ஒக்கப் பிறந்தது
கண்ணது காணொளி கண்டுகொ ளீரே

– திருமந்திரம் (214)

பிறக்கும் பொழுது கொடுவந்தது
　　இல்லை பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொடு போவது
　　இல்லை இடை நடுவில்
குறிக்குமிச் செல்வம் சிவன் தந்தது
　　என்று கொடுக்க அறியாது
இறக்கும் குலாமருக்கு என்சொல்லு
　　வேன் கச்சி ஏகம்பனே

– திருஏகம்பமாலை (7)

Koviloor Digital Library

மேலே தரப்பட்டிருக்கும் திருமந்திரப்பாடல், முதல் தந்திரத்தில், மூன்றாவது அதிகாரமான 'செல்வம் நிலையாமை' என்பதில் மூன்றாவது பாடலாகவும் திருமந்திரப்பா வரிசையில் 214–ஆவது பாவாகவும் அமைந்திருக்கின்றது.

இப்பாடலில் திருமூலர், நம்முடைய நிழல் எந்தக் காலத்திலும் எவ்வகை உதவியையும் செய்தது இல்லை என்றும், அது நம்முடைய நிழல் என்பதைக் காட்டிலும் அழிவில்லாத ஒளிவழித்தடை என்பதே சரியாகும் என்றும், அதுபோல செல்வமும் நம்முடைய கையில் இருப்பதால் நம்முடையது என்று கூறுகின்றோம் என்றும், ஆனால் உண்மையில் அது இறைவனுடையதே என்றும், இது தெரிந்தும் தம்முடையது என்று அறியாமை உடைய பலர் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள் என்றும், கருத்துக்கு மட்டுமே புலனாகும் உயிர் காலம் வந்தால் பிரிந்து போகும் என்றும், அதுவரையிலும் மட்டுமே உடல் நம்மிடமுள்ளது என்றும், பின்பு அகல்கின்றது என்றும், இவ்வுண்மையினை அகக்கண்ணாகிய அருளொளி கொண்டு கண்டு கொள்ள வேண்டும் என்றும் கூறுகின்றார்.

அடுத்து தரப்பட்டிருக்கும் பாடல் பட்டினத் தாரின், 'திரு ஏகம்பமாலை'யைச் சார்ந்ததாகும். இப் பாடல் திரு ஏகம்ப மாலையில் ஏழாவது பாடலாக வும், பட்டினத்தார் பாடல் வரிசையில் 221–ஆவது பாவாகவும் வரையப்பட்டுள்ளது. இது காஞ்சியில் வீற்றிருக்கும் ஏகம்பநாதர் மீது பாடிய மாலையாகும்.

Koviloor Digital Library

இப்பாடலில் பட்டினத்தார், எவரும் இந்நில உலகில் பிறக்கும்போது செல்வத்தைத் தம்முடன் கொண்டு வருவது இல்லை என்றும், அதேபோல் பெரிதும் முயன்று ஈட்டிய செல்வத்தை இறக்கும் காலத்தில் தம்முடன் கொண்டு போவதில்லை என்றும் கூறி, பிறப்புக்கும் இறப்புக்கும் உரிய இடைக்காலத்தில் உண்டானதாக கருதப்படும் இந்த நிலையற்ற செல்வம், சிவபெருமான் தந்தது என்று உணர்ந்து, இரப்பார்க்குக் கொடுக்க அறியாது வீணே உயிரை விடும் கீழ் மக்களை என்னென்று சொல்வது என்று காஞ்சியம்பதியில் வீற்றிருக்கும் சிவபெருமானைப் பார்த்து மனமிரங்கிக் கேட்கின்றார்.

திருமூலரும், பட்டினத்தாரும் 'செல்வம் நிலையாமை'யைப் பற்றி எத்தனை அழகாக எடுத்துச் சொல்லுகிறார்கள். திருமூலர், நம்முடைய நிழலும், நம்முடைய செல்வமும் நிலையானதே என எத்தனை அறியாமையால் எண்ணி பாவிக்கின்றோம் என்று மிகக் கனிவாக எண்ணி வேதனைப்படுகின்றார். இதனை,

'தன்னது சாயை தனக்குத வாதுகண்டு
என்னது மாடென் றிருப்பார்கள் ஏழைகள்'

என்னும் வரிகள் எத்தனை அழகாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன!

அதேபோல் பட்டினத்தாரின்,

'கொடுக்க அறியாது இறக்கும் குலாமர்'

Koviloor Digital Library

என்னும் வரியில் பட்டினத்தார் எந்த அளவுக்கு மனமிரங்கி வேதனைப்படுகின்றார் என்பதையும் நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

எத்தனை படித்தால் என்ன? எத்தனை சொத்து இருந்தால் என்ன? மேலும் மேலும் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணம் வளர்ந்து கொண்டேதானே இருக்கின்றது? அடுத்தவனுக்கு உதவி செய்ய மனம் வரமாட்டேன் என்கிறதே! நம்முடையதை இழக்க நாம் தயாராயில்லையே! அந்த மனப்பக்குவம் இன்னும் நமக்கு வரவில்லையே! என்ன வாசகரே! நான் சொல்வது உண்மைதானே!

44

திருமந்திரமும் திருக்களிற்றுப்படியாரும்

சிவனரு ளாய சிவன்திரு நாமஞ்
சிவனரு ளான்மாத் திரோத மலமாயை
சிவன்முத லாகச் சிறந்து நிரோதம்
பவம தகன்று பரசிவ னாமே

– திருமந்திரம் (2661)

அஞ்செழுத்து மேஅம்மை அப்பர்தமைக்
காட்டுதலால்
அஞ்செழுத்தை ஆறாகப் பெற்றறிந்தே – அஞ்செழுத்தை

Koviloor Digital Library

ஓதப்புக் குள்ள மதியுங் கெடில் உமைகோன்
கேதமற வந்தளிக்குங் கேள்

– திருக்களிற்றுப்படியார் (25)

மேலே தரப்பெற்றிருக்கும் திருமந்திரப்பாடல் ஒன்பதாம் தந்திரத்தைச் சார்ந்ததாகும். ஆறாவது அதிகாரமான 'சூக்கும பஞ்சாக்கரம்' என்பதில் மூன்றாவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 2661–ஆவது பாவாகவும் அமைந்துள்ளது.

இப்பாடலில் திருமூலர், செந்தமிழ்த் திருவைந் தெழுத்துச் சிவபெருமானின் திருமேனியாகும் என்றும், அதனால் அம்மறை திருவருளேயாகும் என்றும், அது 'சிவயநம' எனப்படும் என்றும், இத்திருவெழுத்தைந்தும் முறையே சிவன், அருள், ஆன்மா, திரோதம், மலமாயை என்னும் மெய்ப் பொருள் ஐந்தினையும் தனித் தனியாகக் குறிக்கும் ஐந்து சொற்களின் முதலெழுத்தாகும் என்றும், சிவ என்னும் மறைமொழியை முதற்கண் வைத்து 'சிவயநம' எனக் காதலாகி நற்றவம் புரிதல் வேண்டும் என்றும், அத்தவப்பயனால் மலமாயை கன்மங்கள் அகன்று அடங்கும் என்றும், அதனால் பிறப்பறுத்து திருவடிப் பேறாம் சிறப்புற்று அவ்வுயிர் சிவனாகி மீளா அடிமையாய் வாழ்ந்திருக்கும் என்றும் கூறுகின்றார்.

அடுத்த பாடல் இடம் பெற்றிருக்கும் நூலான 'திருக்களிற்றுப் படியார்'ரை அருளியவர் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் ஆவார். கி.பி.1178–ஆம் ஆண்டு இது எழுதப்பட்டது. மொத்தம் 100

Koviloor Digital Library

பாடல்களைக் கொண்டது. இந்நூலில், குருவருள், குருவடியின் இன்றியமையாமை, அடியவர் வரலாறு முதலியன பற்றியும் குறிப்புகள் மிக ஆழமாக சொல்லப்பட்டுள்ளன.

அஞ்செழுத்து என்பது 'சிவயநம' என்பதாகும். இதில் 'சி' சிவனையும், 'வ' அருளையும், 'ய' உயிரையும், 'ந' மறைப்பாற்றலையும், 'ம' ஆணவ மலத்தையும் குறிக்கும். இவற்றுள் 'சிவ' என்னும் இரு எழுத்துகளும் முதன்மையானவை. அதற்குக் காரணம், அவை அம்மையப்பர் ஆகிய சிவபெருமானையும், அவனது சத்தி ஆகிய அருளாற்றலையும் குறிப்பது என்பதனால் ஆகும். இந்த அஞ்செழுத்தை குரு மூலமாகப் பெற்று, இதன் உண்மைப் பொருளை அறிந்து, அசைவற்று ஓர் இடத்தில் இருந்து தியானிக்கத் தொடங்கினால், நாளடைவில், ஆன்ம போதம் கெடும். அதன் விளைவாக அனைத்துத் துன்பங்களும் நீங்கும். இறைவன், ஓதும் அந்த ஆன்மாவினோடு உடனாய் இருந்து அருள் புரிவான் என்று உய்ய வந்த தேவ நாயனார் தமது பாடலில் கூறுகின்றார்.

திருவைந்தெழுத்து	
சி	சிவன்
வ	அருள் (சத்தி)
ய	ஆன்மா (உயிர்)
ந	திரோதம் (உண்மையை மறைத்தல்)
ம	மலமாயை (ஆணவமலம்)

Koviloor Digital Library

செந்தமிழ்த் திருவைந்தெழுத்து எனப்படுவது 'சிவயநம' என்பது ஆகும் என்றும், இத்திருவைந்தும் முறையே சிவன், அருள், ஆன்மா, திரோதம், மலமாயை என்னும் மெய்ப்பொருள் ஐந்தினையும் குறிக்கும் என்றும், அவற்றில் முதன்மையான 'சிவ' என்னும் மறைமொழியை முதற்கண் வைத்து 'சிவயநம' என ஓதுதல் வேண்டும் என்றும் திருமூலர் கூறுகின்றார். இதனை,

'சிவனரு ளாய சிவன்திரு நாமம்'

என்னும் வரியின் மூலமும், 'சிவன்முத லாகச் சிறந்து' என்னும் சொற்றொடர்கள் மூலமும் அறியலாம்.

அதேபோல 'அஞ்செழுத்து' என்பது 'சிவயநம' என்றும், அது அம்மையப்பரைக் குறிக்கும் என்றும், அவற்றுள் 'சிவ' என்னும் இரு எழுத்துகளும் முதன்மையானவை என்றும், அதன் உண்மைப் பொருளை உணர்ந்து தியானம் செய்தால், இறைவன் அருள் புரிவான் என்றும் உய்யவந்த தேவ நாயனார் செப்புகின்றார். இதனை,

'அஞ்செழுத்து மேஅம்மை அப்பர்தனைக் காட்டுதலால்'

என்னும் வரியின் மூலம் நுணுகி நோக்கித் தெரிந்து கொள்ளலாம்.

பிறப்பறுத்து திருவடிப் பேறு பெறுவதற்கு,
'பவம தகன்று பரசிவ னாமே'

என்னும் திருமந்திர வரிக்கு இணையாக,

Koviloor Digital Library

'உமைகோன் கேதமற வந்தளிக்குங் கேள்'

என்று திருக்களிற்றுப்படியாரில் பயன்படுத்தப் பட்டிருப்பதை அறிந்து மகிழ்க.

45

திருமந்திரமும் திருவருட்பயனும்

உள்ளத்து ளேதான் கரந்தெங்கும் நின்றவன்
வள்ளற் றலைவன் மலருறை மாதவன்
பொள்ளற் குரம்பை புகுந்து புறப்படுங்
கள்ளற் தலைவன் கருத்தறி யார்களே

– திருமந்திரம் (1505)

கள்ளத் தலைவர் துயர்கருதித் தங்கருணை
வெள்ளத் தலைவர் மிக

– திருவருட்பயன் (100)

மேலே தரப்பெற்றிருக்கும் திருமந்திரப்பாடல், ஐந்தாம் தந்திரத்தின் கீழ், பதினெட்டாவது அதிகாரமான 'புறச்சமய தூடணம்' என்பதில் மூன்றாவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 1505–ஆவது பாவாகவும் அமைந்துள்ளது.

திருமூலர் தமது பாடலில், ஒவ்வோர் உயிரிடமும் அவரவர் உள்ளத்தில் மறைந்து எங்கும் நீக்கமற

Koviloor Digital Library

நிறைந்து நின்றவன் வள்ளலாகிய முதல்வன் என்றும், இறைவன் உச்சிக்கு அப்பால் அருள்வெளியில் காணப்படும் ஆயிரவிதழ்த் தாமரையில் வீற்றிருந் தருளும் அம்மையோடு கூடிய அப்பன் என்றும், அவன் ஒன்பது வாயிலைக் கொண்ட நிலையில்லாத உடலில் புகுந்து மேல் நோக்கிப் போகும் கள்ளத் தலைவனாகிய மறையோன் என்றும், அவன் செயல்படும் உண்மைக் கருத்தினை எவரும் எளிதில் அறிய மாட்டார்கள் என்றும் கூறுகின்றார்.

அடுத்து தரப்பெற்றிருக்கும் பாடல், 'திருவருட்பயன்' என்னும் நூலின் நூறாவது பாடலாகும். மேலும், பத்தாவது அதிகாரமான 'அணைந்தோர் தன்மை' என்பதன் கீழ் பத்தாவது பாடலாகவும் அமைந்துள்ளது.

இந்நூலினை அருளியவர் உமாபதி தேவ நாயனார் ஆவார். இந்நூல் ஆக்கப்பட்ட ஆண்டு கி.பி.1307 ஆகும்.

மெய்கண்ட நூல்கள் பதினான்கனுள்ளும் குறள் வெண்பாவால் ஆனது இது ஒன்றேயாகும். சைவ சித்தாந்த நுண்பொருளைத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு இந்நூல் பெரிதும் பயன்படுகின்றது.

நூறு குறள் வெண்பாக்களால் ஆன இந்நூல் பத்து அதிகாரங்களை உடையது. அதிகாரம் ஒவ்வொன்றும் பத்துப்பத்துக் குறள் வெண்பாக்களை உடையது.

Koviloor Digital Library

எண்	மெய்கண்டநூல்கள்	அருளியவர்	ஆண்டு
1.	திருவுந்தியார்	திருவியலூர் உய்யவந்த தேவ நாயனார்	1148
2.	திருக்களிற்றுப் படியார்	திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார்	1178
3.	சிவஞான பேதம்	மெய்கண்ட தேவ நாயனார்	1223
4.	சிவஞான சித்தியார்	அருணந்தி சிவாசாரியார்	1253
5.	இருபா இருபஃது	அருணந்தி சிவாசாரியார்	1254
6.	உண்மை விளக்கம்	மனவாசங்கடந்த தேவ நாயனார்	1255
7.	சிவப்பிரகாசம்	உமாபதி சிவாசாரியர்	1306
8.	திருவருட்பயன்	உமாபதி சிவாசாரியர்	1307
9.	வினாவெண்பா	உமாபதி சிவாசாரியர்	1308
10.	போற்றிப்பஃறொடை	உமாபதி சிவாசாரியர்	1309
11.	கொடிக்கவி	உமாபதி சிவாசாரியர்	1310
12.	நெஞ்சுவிடுதூது	உமாபதி சிவாசாரியர்	1311
13.	சங்கற்ப நிராகரணம்	உமாபதி சிவாசாரியர்	1313
14.	உண்மைநெறி விளக்கம்	சீகாழி தத்துவநாதர்	1350

Koviloor Digital Library

தரப்பெற்றிருக்கும் பாடல், ஆணவமலம் பற்றுக் காரணமாக, யான் - எனது என்னும் பொய்த்தலைமையினை உடைய ஆன்மாக்கள் படும் துன்பத்தை எண்ணி, சீவன் முத்தர்கள் தம்மிடமுள்ள கருணை காரணமாக அங்குமிங்கும் அருள் நோக்குடன் அலைவார்கள் என்றும், சிவபெருமான் உயிர்களிடத்து இரக்கம் காட்டுவது போல், இந்த அருளாளர்களும் நம்மீது எப்போதும் கருணை காட்டுவார்கள் என்றும், ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்கு அருளாளர்கள் இன்றியமையாதவர்கள் என்றும், ஆதலின் அவர்கள் திருவடிகளை நாம் எப்போதும் வணங்கி வாழ்த்துவோமாக என்றும் உமாபதியார் கூறுகின்றார். முதல்வன், அப்பன், மறையோன் என்றெல்லாம் போற்றப்படும் சிவபெருமான் ஒவ்வொரு உயிரிடத்தும் அவரவர் உள்ளத்தில் மறைந்திருந்து ஆருயிர் ஏற்றத்திற்கு வழிகாட்டுபவன் என்றும், ஆயினும் இவ்வுண்மைக் கருத்தினை யாரும் அறிய மாட்டார்கள் என்றும் திருமூலர் கூறுகின்றார். இதனை,

'கள்ளற் தலைவன் கருத்தறி யார்களே'

என்னும் திருமந்திரவரியின் மூலம் அறியலாம்.

அதேபோல் ஆன்மாக்கள் படும் துன்பத்தைக் கருத்தில் கொண்டு, அவற்றின் ஈடேற்றத்திற்கு அருள் நோக்கம் கொண்ட அருளாளர்கள் எனப்படும் சீவன் முக்தர்கள் அங்குமிங்கும் அலைவார்கள் என்றும் அவர்களின் திருவடிகளை எப்பொழுதும் வணங்க வேண்டும் என்றும் உமாபதியார் கூறுகின்றார். இதனை,

Koviloor Digital Library

'கள்ளற் தலைவன் துயற்கருதித் தங்கருணை'

என்னும் வரியின் மூலம் அறியலாம்.

திருமந்திரத்தில் காணப்பெறும் 'கள்ளற் தலைவன்' என்னும் சொற்றொடர் ஒவ்வொரு உயிரினிடத்தும் மறைந்திருக்கின்ற சிவபெருமானைக் குறிக்கும். ஆனால், 'கள்ளத்தலைவர்' எனப்பெறும் திருவருட்பயன்பாடல் சொற்றொடர் பெத்த ஆன்மாக் களைக் குறிக்கும். பெத்தான்மாக்களில் (பந்த பாசத் திற்கு உட்பட்ட ஆன்மாக்களில்) அருளுடையோர் சீவன் முத்தர்கள் எனப்படுவர். சிவபெருமானா கட்டும், சீவன் முத்தர்களாகட்டும் அனைவருமே ஆருயிர்களின் உயர்ச்சிக்கு – ஏற்றத்திற்கு துணை நிற்பவர்களேயாவர். 'கள்ளற் தலைவன்' என்னும் திருமந்திரச் சொற்றொடரை, 'கள்ளத்தலைவர்' என திருவருட்பயனில் உமாபதியார் எடுத்தாண்டிருக் கின்றார் – ஆனால் பொருள் மாறுபாட்டுடன்!

46

திருமந்திரமும் திருவள்ளுவமாலையும்

காட்டுங் குறியுங் கடந்தவர் காரணம்
ஏட்டின் புறத்தில் எழுதிவைத் தென்பயன்
கூட்டுங் குருநந்தி கூட்டிடி னல்லது
ஆட்டின் கழுத்தில் அதர்கிடந் தற்றே

– திருமந்திரம் (2897)

Koviloor Digital Library

ஆற்ற லழியுமென் றந்தணர்க ணான்மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதா - ரேட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினு மாற்றல்சோர் வின்று

- திருவள்ளுவமாலை (15)

மேலே தரப்பட்டிருக்கும் திருமந்திரப்பாடல், ஒன்பதாம் தந்திரத்தில் பதினெட்டாவது அதிகாரமான 'மோனசமாதி' என்பதன் கீழ் இரண்டாவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 2897-ஆவது பாவாகவும் அமைந்துள்ளது.

இப்பாடலில் திருமூலர், காட்டுகின்ற குறிகளையும், அடையாளங்களையும் கடந்த அந்த மூலப் பொருளாகிய சிவபெருமானைப் பற்றி நூலில் எழுதி வைத்துப் பயனில்லை என்றும், சிவபெருமானே அடையும் காரணமாகிய பயிற்சிகளைக் கூறியுணர்த்தியவாறு இடையறாது பயிலுதல் வேண்டும் என்றும், உண்மை ஞானத்தைக் கூட்டி வைக்கின்ற ஞான குருவாகிய சிவன் கூட்டினால் அல்லது உணர்த்தினால் அன்றி, அது ஆட்டின் கழுத்தில் பயனற்றுத் தொங்கும் சதை பிடிப்புப் போல ஏட்டின் படிப்பும் பயனற்றதாகும் என்கிறார்.

அடுத்துத் தரப்பெற்றிருக்கும் பாடல் திருவள்ளுவ மாலையைச் சேர்ந்ததாகும். திருவள்ளுவ மாலை என்பது ஐம்பதுக்கும் மேற்பட்ட சங்க காலம் மற்றும் சங்கம் மருவிய காலப் புலவர்கள் திருக்குறளைச் சிறப்பித்துப் பாடிய பாடல்களின் தொகுப்பாகும். இப்பாடல்களுக்கு சிறப்பான உரை

Koviloor Digital Library

தந்தவர் திருத்தணிகைச் சரவணப்பெருமாளையர் ஆவார். மேலே தரப் பெற்றிருக்கும் பாடல் திருவள்ளுவமாலையின் பதினைந்தாவது பாடலாகும். இதனை ஆக்கியவர் கோதமனார் என்னும் புலவராவார்.

கோதமனார் தமது பாடலில், அந்தணர்கள் நான்கு வேதங்களையும் வாய்ப்பாடமாகவே காப்பாற்றுவார்கள் என்றும், ஏட்டின்கண் எழுதி வைத்தால் வலிமையில்லாதவர்களும் ஓதுவாராகலின் இவற்றின் வலிமை குறையுமென்று ஏட்டில் எழுத மாட்டார்கள் என்றும், ஆனால் திருவள்ளுவரது திருக் குறளை ஏட்டின் கண் எழுதிவைத்து திறமை யுள்ளவர்களும், திறமையற்றவர்களும் ஓதினாலும் திருக்குறளின் வலிமை குறையாது என்றும் கூறுகின்றார்.

மூலப் பொருளாகிய சிவபெருமானைப் பற்றி நூலில் எழுதிவைத்துப் பயனில்லை என்றும், பயிற்சிகளை இடையறாது செய்தல் வேண்டும் என்றும் திருமூலர் கூறுகின்றார். இதனை,

'ஏட்டின் புறத்தில் எழுதிவைத் தென்பயன்'

என்னும் வரியின் மூலம் தெளியலாம்.

ஆனால் கோதமனார், அந்தணர்கள் வேதங்களை வாய்ப்பாடமாகவே உரைப்பார்கள் என்றும், எழுதி வைத்தால் அதன் மகத்துவம் அற்றுப் போய்விடும் என்று எழுதிவைக்க மாட்டார்கள் என்றும் கூறுகின்றார். இதனை,

Koviloor Digital Library

'ஆற்ற லழியுமென் றந்தணர்க ணான்மறையைப்
போற்றி யுரைத் தேட்டின் புறத்தெழுதார்'

என்னும் வரிகள் மூலம் அறியலாம். இவ்வாறு கூறும் கோதமனார் தொடர்ந்து, எழுதிவைப்பதாலோ அல்லது வலிமையற்றவர்கள் படிப்பதனாலோ அதன் மகிமை குன்றிவிடாது என்பதற்கு திருக்குறளை சான்று பகர்கின்றார். அத்தனை சிறப்பு மிக்கது திருக்குறள் எனக் கூறுகின்றார் கோதமனார்.

திருக்குறளை ஏட்டில் எழுதிவைத்து திறமையுள்ளவர்களும், திறமையற்றவர்களும் படிப்பதனால் அதன் வலிமையோ அல்லது முக்கியத்துவமோ குறைந்து விடவில்லை; அதன் சிறப்பு குன்றிவிடாது. அந்நூல் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது. உலகப்பொது மறை எனப் போற்றப் படுகிறது. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருள்களைப்பற்றி புரிந்தவர்களும் படிக்கின்றார்கள், புரியாதவர்களும் படிக்கின்றார்கள். எனினும் அதன் முக்கியத்துவம் அழிந்துவிடவில்லை. மாறாக அதன் சிறப்பு உயர்ந்திருக்கின்றது என்கிறார் கோதாமனார். இதனை,

'.. ஏட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினு மாற்றல்சோர் வின்று'

என்னும் வரிகள் மூலம் நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

Koviloor Digital Library

திருமூலர், வேதங்களை ஏட்டின் கண் எழுதி வைத்து என்னபயன் என்று கேள்வி எழுப்புகையில், அந்தணர்கள் வேதங்களை எழுதி வைக்கவே மாட்டார்கள் என்று கோதமனார் சாடுவது புரிகின்றதா? எவ்வளவு அறியாமை?

இதிலிருந்து நிச்சயம் ஒன்று புரிகின்றது. சில வைத்தியர்கள் மூலிகையின் பெயரையோ, வைத்திய முறையையோ மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தால் பலிக்காது என்று சொல்லிக் கொடுக்க மாட்டார்கள். அதேபோல் மாந்திரீகர்கள் மந்திரங்களை உரக்கவும் சொல்லமாட்டார்கள். மேலும், மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தால் பலிக்காது என்று சொல்லவும் மாட்டார்கள். இத்தகைய அறியாமையும், சுயநலமும் அந்தக் காலத்திலேயே இருந்திருக்கின்றது என்பதை இதன் மூலம் நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

47

திருமந்திரமும் நீதிநெறி விளக்கமும்

உள்ளத்தும் உள்ளன் புறத்துள்ளன் என்பவர்க்
குள்ளத்தும் உள்ளன் புறத்துள்ளன் எம்மிறை
உள்ளத்தும் இல்லை புறத்தில்லை என்பவர்க்
குள்ளத்தும் இல்லை புறத்தில்லை தானே

– திருமந்திரம் (1506)

Koviloor Digital Library

தெய்வ முளதென்பார் தீய செயப்புகிற்
றெய்வமே கண்ணின்று நின்றொறுக்கும் - தெய்வம்
இலதென்பார்க் கில்லைத்த மின்புதல்வர்க் கன்றே
பலகாலுஞ் சொல்வார் பயன்.

- நீதிநெறிவிளக்கம் (74)

தரப்பெற்றிருக்கும் திருமந்திரப்பாடல், ஐந்தாம் தந்திரத்தின் கண், பதினெட்டாவது அதிகாரமான 'புறச்சமய தூடனம்' என்பதன் கீழ் நான்காவது பாடலாக அமைந்துள்ளது.

இப்பாடலில் திருமூலர், எங்கும் நிறைந்துள்ள சிவபெருமானை ஆருயிர்களின் உள்ளத்து முள்ளான் புறத்துமுள்ளான் என்று அன்புடன் சிவயநம என்னும் செந்தமிழ் மறை ஓதி வழிபடுவார்க்கு சிவபெருமான் வெளிப்பட்டு அருள்வான் என்றும், உள்ளத்திலும் இல்லை வெளியிலும் இல்லை என்று சொல்பவர்களுக்கு உள்ளத்திலும் வெளியிலும் தோன்றாது மறைந்து நின்று நன்மை செய்ய மாட்டான் என்றும் கூறுகின்றார்.

மேலே தரப்பெற்றிருக்கும் மற்றொரு பாடல் 'நீதிநெறிவிளக்கத்'தில் 'தெய்வ தண்டனை' என்னும் தலைப்பிலான எழுபத்து நாலாவது பாடலாகும். இந்நூல் திருக்குறளின் அறநெறி சாராம்ச நூல் எனலாம். திருமலை நாயக்கரின் வேண்டுகோளுக் கிணங்க இதனை அருளியவர் ஸ்ரீமத் குமரகுருபர சுவாமிகள் ஆவார். இவர் கந்தர் கலிவெண்பா, பண்டார மும்மணி போன்ற பல நூல்களை அருளி

Koviloor Digital Library

இருக்கின்றார். இவர் 17–18–ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்.

ஈண்டு தரப்பெற்றிருக்கும் பாடலில் குமர குருபரர், கடவுள் உண்டென்று சொல்லுவோர் தீச் செயல்களை செய்யத் தலைப்படுவராயின், அக்கடவுளே எந்நோக்கமுமின்றி அவரெதிரில் நின்று தண்டிக்கும் என்றும், கடவுள் என்ற ஒன்று இல்லையென்று சொல்லுவார்க்கு அக்கடவுள் எதிரில் தோன்றுவதோ ஒறுத்துவதோ இல்லை என்றும், பெற்றோர்கள் தம்முடைய அன்புமிக்க பிள்ளைகளுக் கன்றோ, அவர்கள் நெறிதவறும் போதெல்லாம் பல முறைகள் நீதிச் சொற்களை பயன் தரும் விதத்தில் எடுத்துக்கூறி அறிவுறுத்துவர் என்றும் கூறுகின்றார்.

இறைவன் உண்டு என்று உணர்ந்து செந்தமிழ் மறை ஓதி வழிபடுபவர்களுக்கு, சிவபெருமான் அருள்புரிவான் என்றும், ஆண்டவன் எங்குமில்லை என்று சொல்லுபவர்களுக்கு நன்மை செய்ய மாட்டான் என்றும் திருமூலர் கூறுகின்றார். இதனை,

'உள்ளத்தும் இல்லை புறத்தில்லை என்பவர்க்
குள்ளத்தும் இல்லை புறத்தில்லை தானே'

என்னும் வரிகள் மூலம் நாம் தெளியலாம்.

கடவுள் என்ற ஒன்று இல்லை யென்று சொல்லு வோருக்கு அக்கடவுள் எதிரில் தோன்றுவதோ, ஒறுத்துவதோ இல்லை என்றும், கடவுள் உண்டு என்று சொல்லுகின்றவர்கள் தீய செயல்களைச் செய்ய முனைவார்களேயானால், அக்கடவுளே அவரெதிரில்

Koviloor Digital Library

தோன்றி தண்டிக்கும் என்றும் குமரகுர சுவாமிகள் கூறுகின்றார். இதனை,

'தெய்வ முளதென்பார் தீய செயப்புகிற்
றெய்வமே கண்ணின்று நின்றொறுக்கும் – தெய்வம்
இலதென்பார்க் கில்லை....'

என்னும் வரிகள் மூலம் அறிந்து கொள்ளலாம். இவ்வாறு இருபெரும் தத்துவ மேதைகளின் கருத்துகளும் இயைந்து நிற்றலை அறியலாம். ஆனால் ஒருகேள்வி! மனிதர்களுக்குத்தான் வேண்டியவன், வேண்டாதவன் என்னும் பாகுபாடு இருக்கும். ஆண்டவனுக்கும் இந்த காழ்ப்புணர்வு இருக்கின்றதா? கடவுள் உண்டு என்று வணங்குபவர் களுக்கு மட்டும் அருள்புரியும் கடவுள், இறைவன் இல்லை என்று மறுப்பவர்களுக்கு நன்மை செய்யாமல் விட்டுவிடுவது ஏன்? 'விரோதிக்கும் நன்மையே செய்' என்று சாதாரண மனிதர்களுக்கு போதிக்கின்ற போது, இறைவனுக்கு இது பொருந்தாதா?

48

திருமந்திரமும் பத்தராய்ப் பணிவார் புராணமும்

நிற்ற லிருத்தல் கிடத்தல் நடையோடல்
பெற்றவக் காலுந் திருவருள் பேராமற்

Koviloor Digital Library

சற்றியன் ஞானந்தந் தானந்தந் தங்கவே
உற்ற பிறப்பற் றொளிர்ஞான நிட்டையே

– திருமந்திரம் (2567)

நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும்
இமைத்தாலும்
மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை
குன்றாத உணர்வுடையார் தொண்டராம் குணமிக்கார்

– பத்தராய்ப் பணிவார் புராணம் (7)

மேலே தரப்பட்டிருக்கும் திருமந்திரப்பாடல், எட்டாம் தந்திரத்தின் கீழ், இருபத்தொன்பதாவது அதிகாரமான 'ஞானிசெயல்' என்னும் தலைப்பின் நான்காவது பாடலாகும். மேலும், திருமந்திரப்பா வரிசையில் **2567**–ஆவது பாவாகவும் அமைந்துள்ளது.

இப்பாடலில் திருமூலர், அனைத்து செயல்களின் போதும் தமக்கு திருவருள் நினைவு இருந்து கொண்டேயிருக்க வேண்டும் என்றும், அத்தகு இயற்கை மெய்யுணர்வை திருவருள் நினைவு நீங்காதார்க்குத் தந்தருளினன் என்றும், அங்ஙனம் தந்தருளிய பேரொடுக்கப் பெருமான் அந்தம் என்று அழைக்கப்படுவன் என்றும், அவ்வுயிர் அந்தமாகிய தன்பால் தங்கவே அங்ஙனம் அருளினன் என்றும், அதனால் அவ்வுயிர் பிறப்பற்று விளக்கமிக்க ஞான நிட்டையினை எய்தும் என்றும் கூறுகின்றார்.

அடுத்துத் தரப்பட்டிருக்கும் பாடல், 'பத்தராய்ப் பணிவார் சருக்க'த்தின் கீழ் 'பத்தராய்ப் பணிவார்

Koviloor Digital Library

புராண'ப் பாடலாகும். இதில் ஏழாவது பாடலாகவும், சேக்கிழாரின் பெரிய புராணப்பா வரிசையில் 4153-ஆவது பாவாகவும் வரையப்பட்டுள்ளது.

இப்பாடலில் சேக்கிழார், எத்தகு சூழலிலும், திருத்தொண்டர்கள் எனப்படுபவர்கள் திரு அம்பலத்தில் ஆடும் மலர் போன்ற அடிகளை வணங்கி ஒரு போதும் மறக்காததால் குறைவில்லாத உணர்வை உடையவர்கள் என்றும், குணத்தால் சிறந்தவர்கள் என்றும் கூறுகின்றார்.

திருமூலர், நிற்றலும், இருத்தலும், கிடத்தலும், நடத்தலும், ஓடலும் செய்யும்போது திருவருள் நினைவு நீங்காதிருத்தல் வேண்டும் என்கிறார். இதனை,

'நிற்ற லிருத்தல் கிடத்தல் நடையோடல்
பெற்றவக் காலுந் திருவருள் பேராமல்'

என்னும் வரிகளால் அறியலாம். அதுமட்டுமல்லாமல், அதனால் அவ்வுயிர் பிறப்பற்று விளக்க மிக்க ஞானத்துயில் எய்தும் எனவும் கூறுகின்றார். அதாவது இறையடி இன்பம் கிடைக்கும் என்கிறார்.

இதனையே சேக்கிழார், திருத்தொண்டர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது,

'நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை'

Koviloor Digital Library

என்பது அவர்களின் பண்பாக இருந்திருக்கின் றது என்பதை நம்மால் புரிந்து கொள்ள இயலுகிறது.

பயன்படுத்தப்பட்டிருக்கும் சொற்றொடர்கள் எவ்வளவு நெருக்கமாக இணைந்து போகின்றன என்பது நமக்கு ஆச்சரியத்தை அல்லவா உண்டு பண்ணுகின்றன. இதைத்தான் சொற்றொடர்களை 'எடுத்தாளுதல்' என்பதோ?

49

திருமந்திரமும் பண்டாய நான்மறையும்

குட்ட மொருமுழ முள்ள தரைமுழம்
வட்டம் அமைந்ததோர் வாவியுள் வாழ்வன
பட்டன மீன்பல பரவன் வலைகொணர்ந்து
இட்டனன் யாமினி யேதமி லோமே

– திருமந்திரம் (1993)

காட்டகத்து வேடன் கடலில் வலைவாணன்
நாட்டில் பரிப்பாகன் நம் வினையை – வீட்டி
அருளும் பெருந்துறையான் அம்கமல பாதம்
மருளும் கெடநெஞ்சே வாழ்த்து

– பண்டாய நான்மறை (3)

மேலே தரப்பெற்றிருக்கும் திருமந்திரப்பாடல், ஏழாம் தந்திரத்தின்கண், இருபத்தைந்தாவது அதிகார

Koviloor Digital Library

மான 'ஐந்திந்திரியம் அடக்கு முறைமை' என்பதன் கீழ் முதல் பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 1993–ஆவது பாடலாகவும் வரையப்பட்டுள்ளது.

இப்பாடலில் திருமூலர், ஒரு முழ ஆழமும் அரைமுழப்பரப்பும் உள்ளதாகிய வட்டமாக அமைந்த சந்திரமண்டலமாகிய குளத்தில், புலன்களாகிய மீன்கள் பல வாழ்கின்றன என்றும், தாம் சிவபெருமானை வணங்கியதனால் அப்புலன்களாகிய மீன்களை செம்மைப்படுத்த சிவபெருமானாகிய வலைஞன் வலையை வீசியதாகவும், அவ்வலையில் மீன்கள் அகப்பட்டு செம்மையாயின என்றும், அதனால் தம்முடைய ஐம்புலப்புன்மைத் துன்பத்தினின்றும் நீங்கி பிறவித் துன்பத்தினின்றும் விடுவிக்கப்பட்டதாகவும், அதனால் சிவ இன்ப நினைவில் தூங்கியதாகவும் கூறுகின்றார்.

அடுத்து தரப்பெற்றிருக்கும் பாடல், திருவாசகத்தின் ஒரு பகுதியாகிய 'பண்டாய நான்மறை' என்பதனைச் சார்ந்ததாகும். இதனை அருளியவர் மாணிக்கவாசகர் ஆவார். இது திருப்பெருந்துறையில் (திருவாவடுதுறை) அருளிச் செய்யப்பட்டதாகும். இதில் மொத்தம் ஏழு பாடல்கள் உள்ளன. அனைத்தும் நேரிசை வெண்பாவால் ஆனது. திருவாசகப்பா வரிசையில் இது 630–ஆவது பாவாகவும், பண்டாய நான்மறையில் மூன்றாவது பாடலாகவும் அமைந்துள்ளது.

இப்பாடலில், மாணிக்கவாசகர், சிவபெருமான் அடியார்க்கு எளியவன் என்றும், அருச்சுனனுக்காக

Koviloor Digital Library

அவன் காட்டில் வேடனாகவும், கடலில் வலைஞனாகவும், நாட்டில் குதிரைப் பாகனாகவும் வந்தான் என்றும், அவனை வணங்கினால் வினையும் அஞ்ஞான இருளும் ஒழியும் என்றும், திருப்பெருந் துறையில் உள்ள அவன் பாதங்களை நெஞ்சமே வாழ்த்துவாயாக என்றும் கூறுகின்றார்.

சிவபெருமானை வணங்கியதனால், தம்முடைய புலன்கள் யாவும் செம்மையுற்றன எனவும், பிறவித் துன்பத்தினின்றும் விடுவிக்கப்பட்டதாகவும் திருமூலர் கூறுகின்றார். இதனை,

'பட்டன மீன் பல பரவன் வலைகொணர்ந்து
இட்டனன் யாமினி யேதமி லோமே'

என்னும் வரிகள் மூலம் அறியலாம். புலன்கள் யாவும் மீன்களாகவும், சிவன் வலை வீசும் பரவனாகவும் இப்பாடலில் உருவகப் படுத்தப்பட்டுள்ளன.

அதேபோல் மாணிக்கவாசகர் தமது பாடலில், சிவபெருமான் எளியவன் என்றும், அவன் அடியவர்களுக்காக பல்வேறு வேடங்களைத் தரித்தவன் என்றும் கூறுகின்றார். இதனை,

'காட்டகத்து வேடன் கடலில் வலைவாணன்
நாட்டில் பரிப்பாகன்..........................'

என்னும் வரிகள் மூலம் அறியலாம். அடியவ னாகிய அருச்சுனனுக்காக காட்டில் வேடனாகவும், கடலில் வலைஞனாகவும், நாட்டில் குதிரைப் பாகனாகவும் வேடம் தரித்து வந்தான். அத்தகையவனை

Koviloor Digital Library

வணங்கினால் அஞ்ஞான இருள் நீங்கி மெய்ஞானம் கிடைக்கும் என மாணிக்கவாசகர் தமது நெஞ்சத்துக்கு அறிவுறுத்துகிறார்.

இவ்வாறு திருமூலரும், மாணிக்கவாசகரும் சிவபெருமான் பல்வேறு வேடம் தரித்து அடியவர்க்கு உதவியமையை ஒரேமாதிரியாக விவரித்துச் செல்லுகின்றனர். திருமூலர் சிவபெருமானை 'பரவன்' என்று கூற, மாணிக்கவாசகர், 'வலைவாணன்' என வர்ணிக்கின்றார். சிவபெருமானின் திருவிளை யாடல்கள் என்ன ஒன்றா இரண்டா?

50

திருமந்திரமும் பராபரக்கண்ணியும்

பிறையுள் கிடந்த முயலை எறிவான்
அறைமணி வாட்கொண் டவர்தமைப் போலக்
கறைமணி கண்டனைக் காண்குற மாட்டார்
நிறையறி வோமென்பர் நெஞ்சிலர் தாமே

– திருமந்திரம் (2472)

சினம் இறக்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும்
மனம் இறக்கக் கல்லார்க்கு வாய்ஏன் பராபரமே

– பராபரக்கண்ணி (169)

Koviloor Digital Library

மேலே தரப்பட்டிருக்கும் திருமந்திரப்பாடல், எட்டாம் தந்திரத்தில் இருபதாவது அதிகாரமான 'புறங்கூறாமை' என்பதில் முதலாவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 2472-ஆவது பாவாகவும் அமைந்துள்ளது.

இப்பாடலில் திருமூலர், பிறையாயிருந்து வளர்ந்து மதியாய் விளங்கும் நிறைபிறையின்கண் காணப்படும் களங்கத்தினை முயல் என்பர் என்றும், அம்முயலினை கொல்லுதற் பொருட்டு ஒலிக்கின்ற மணிகட்டிய கூர்வாளினை நேர்படக் கொண்டவர் எல்லாரானும் நகைக்கப்படுவர் என்றும், அதுபோன்று திருநீலகண்டப் பெருமானை அவன் திருவருளால் காணும் பேறு பெறாதார் ஒழிவிலொடுக்கம் உணர்ந்தோம் என்பர் என்றும், இவர்கள் மனமடங்கக் கல்லாப் புனவர் (வேடர்) எனப்படுவர் என்றும் கூறுகின்றார்.

மேலே தரப்பெற்றிருக்கும் மற்றொருபாடல் 'தாயுமானவரின் திருப்பாடல்கள்' என்பதில் 804-ஆவது பாடலாகவும், 'பராபரக் கண்ணி'யில் 169-ஆவது பாடலாகவும் அமைந்துள்ளது.

பராபரக்கண்ணி என்றால் பராபரத்தைப் பற்றிய கண்ணி எனப் பொருள்படும். எங்கும் நிறைந்துள்ள இறைவன் என்பது பொருள். ஈரடியாய் ஓர் எதுகையில் அமைவது கண்ணி எனப்படும். இது வெண்டளை பிறழாமல் வரும். இதனைக் குறள் வெண்செந்துறை என்பர். இதில் உள்ள கண்ணிகள் 389-ஆகும்.

Koviloor Digital Library

ஈண்டு கொடுக்கப்பட்டிருக்கும் கண்ணியில் தாயுமானவர், சினமானது உண்டாகாமல் இருக்கக் கற்றாலும், எட்டு வகைப்பட்ட சித்திகளை அடைந் தாலும், உள்ளம் ஒடுங்கப் பயிற்சி பெறாதவர்க்கு பேச்சு எதற்கு என்கிறார்.

சந்திரனில் காணப்பெறும் கறையினை, முயலென எண்ணி வாள் கொண்டு கொல்ல நினைப்பவர்கள் நகைப்பிற்குரியவர்கள் என்றும், அதேபோல் மனதை அடக்கக் கல்லாதவர்கள் நீலகண்ட பெருமானின் அருள் இல்லாமல் அவனை உணர்ந்தோம் என்று சொல்லுகிறவர்கள் நகைப்பிற்குரியவர்கள்–வேடதாரிகள் என்றும் திருமூலர் கூறுகின்றார். இதனை,

'கறைமணி கண்டனைக் காண்குற மாட்டார்
நிறையறி வோமென்பர் நெஞ்சிலர் தாமே'

என்னும் வரிகள் மூலம் உணரலாம்.

அதேபோல தாயுமானவர் மனதை அடக்கக் கற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியத்தைப் பற்றிக் கூறுகின்றார். கோபத்தை அடக்கக் கற்றுக் கொண் டால் மட்டும் போதாது; எண்வகைச் சித்திகளைக் கைவரப்பெற்றால் மட்டும் போதாது. மாறாக மனதை அடக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். அப்போது தான் பரமனைக் காண முடியும் என்கிறார் தாயுமானவர். இதனை,

'மனம் இறக்கக் கல்லார் வாய்ஏன்'

என்னும் சொற்றொடர்கள் மூலம் அறியலாம்.

Koviloor Digital Library

திருமூலரின் 'நெஞ்சிலர்' என்னும் சொற்றொடருக்கு இணையாக 'மனம் இறக்கக் கல்லார்' என்னும் சொற்றொடர்களை தாயுமானவர் பயன்படுத்தி யிருப்பதை அறிக. மனதின் ஆசைகளை அடக்கு தலுக்கு, 'மனம் இறக்க' என்னும் சொற்களை கையாண்டிருப்பது மிகச் சிறப்பு.

51

திருமந்திரமும் பெருமிழலைக் குறும்ப நாயனார் புராணமும்

கட்டவல் லார்கள் கரந்தெங்குந் தானாவர்
மட்டவிழ் தாமரை யுள்ளே மணஞ்செய்து
பொட்டெழக் குத்திப் பொறியெழத் தண்டிட்டு
நட்டிடு வார்க்கு நமனில்லை தானே

– திருமந்திரம் (691)

நாலு கரணங் களும்ஒன்றாய் நல்ல அறிவு மேற்கொண்டு
காலும் பிரம நாடிவழிக் கருத்துச் செலுத்தக் கபாலநடு
ஏல வேமுன் பயின்றநெறி எடுத்த மறைமூ லந்திறப்ப
மூல முதல்வர் திருப்பாதம் அணைவார் கயிலை
முன்னடைந்தார்

– பெருமிழலைக் குறும்ப நாயனார் புராணம் (10)

Koviloor Digital Library

மேலே தரப்பட்டிருக்கும் திருமந்திரப்பாடல், மூன்றாம் தந்திரத்தின் பதினோராவது அதிகாரமான 'அட்டமாசித்தி' என்பதன்கீழ் எழுபத்திரண்டாவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 691–ஆவது பாவாகவும் வரையப்பட்டுள்ளது.

இப்பாடலில் திருமூலர், பிராண வாயுவை கட்ட வல்லவர்கள் எங்கும் மறைந்து நின்று எவ்விடத்திலும் விளங்கவல்லவர்கள் என்றும், மணம் கமழ்கின்ற தாமரையாகிய சுவாதிட்டானம் மூலாதாரத்தில் அன்னை அத்தனாகிய சத்தி சிவங்களைக் கலந்துறச் செய்து, உச்சித்தொளை வழி திறக்கும்படியாக உயிர்ப்பினால் மோதி ஐம்பொறிகள் புறஞ்செல்லாமல் அகத்தே புலன் கொள்ளுமாறு தண்டாகிய நடுநாடியில் செலுத்தி, அங்கு நடம்புரியும் சிவனை அறிந்திருப்பார்க்கு கூற்றுத் துன்பம் இல்லை என்றும் கூறுகின்றார்.

தரப்பட்டிருக்கும் மற்றொரு பாடல் சேக்கிழார் ஆக்கிய பெருமிழலைக் குறும்ப நாயனார் வரலாற்றைக் கூறும் பாடல்களில் பத்தாவது பாடலாகவும், பெரிய புராணப்பா வரிசையில் 1715–ஆவது பாடலாகவும் அமைந்துள்ளது.

இவர் 'மிழலை' என்னும் நாட்டில் 'பெருமிழலை' என்ற ஊரில் குறும்பர் மரபில் தோன்றியவர். எனவே பெருமிழலை குறும்ப நாயனார் எனப்பெற்றார். சிவனடியார்களை உபசரிக்கும் பண்பினர். சுந்தரரை உடலாலும் உள்ளத்தாலும் வழிபட்டார். அதனால் அட்டமாசித்திகள் அவர்க்குக் கைகூடின.

Koviloor Digital Library

தமது பாடலில், மணம் முதலிய கரணங்களுள் நான்கும் ஒன்றாக நல்ல அறிவை மேற்கொண்டு உணர்ச்சியானது சுழுமுனை வழியே பிராண வாயுவைச் செலுத்தக் கபால நடுவில் பொருந்தும்படி இதற்கு முன்னர் தாம் பயின்ற பயிற்சியால் எடுத்த பிரணவ மந்திரமானது பிரமரந்திர வாயிலைத் திறக்க, அந்த வழியின் மூலம் சிவபெருமானின் திருவடிகளை அடைபவராய்த் திருக்கயிலை மலையை, நம்பி ஆரூரர் வந்து சேருவதற்கு முன்பே சென்று சேர்ந்தார் பெரு மிழலை குறும்ப நாயனார் என்கிறார் சேக்கிழார்.

(நம்பி ஆரூரர் கயிலாயத்துக்குச் செல்லும் நாளை பெருமிழலையார் அறிந்து, 'அவரைப் பிரிந்து தாம் வாழோம் என்றும், அவர் கயிலாயம் செல்வ தற்கு முன்னம் தாம் இறப்போம் என்றும் கூறி, தம் யோக வன்மையால் உயிர்வளியைச் சந்திரமண்டலத் தில் செலுத்திப் பிரணவத்தால் கபாலத்தைத் திறந்து சுந்தரர் கயிலாயம் அடைவதற்கு முன் கயிலாயத்தை அடைந்தார் என்பது புராணம்)

திருமூலர், மூச்சு பயிற்சி பெற்றவர்களுக்கு –அதாவது பிராணவாயுவை கட்ட வல்லவர்களுக்கு எங்கும் எவ்விடத்திலும் தோன்றக்கூடிய திறன் உண்டு என்றும், அவர்கட்குக் கூற்றுத் துன்பம் இல்லை என்றும் கூறுகின்றார். இதனை,

'பொட்டெழக் குத்திப் பொறியெழத் தண்டிட்டு
நட்டிடு வார்க்கு நமனில்லை தானே'

என்னும் வரிகள் மூலம் நாம் உய்த்துணரலாம்.

Koviloor Digital Library

திருமூலர் கூறும் அத்தனை பண்புகளும், பயிற்சிகளும் பெருமிழலையாருக்கு இருந்திருக்கின்றன என்பதை சேக்கிழாரின் பாடல் மூலம் நம்மால் அறிய முடிகிறது.

அதாவது, பொறிகளை அடக்கி, பயின்ற பயிற்சியால் பிரணவ மந்திரமானது கைவரப் பெற்றவராய் நம்பி ஆரூரர் கைலாய மலைக்குச் சென்று சேருவதற்கு முன்னரே பெருமிழலையார் சென்று சேருகின்றார். இது சித்தர்கள் போன்று சாதிக்கக்கூடிய செயலாகும். இதனை,

> '................ முன் பயின்றநெறி எடுத்த மறைமூலந்திறப்ப
> மூல முதல்வர் திருப்பாதம் அணைவார் கயிலை
> முன்னடைந்தார்'

என்னும் வரிகள் மூலம் அறியலாம். மேலும், மூலமுதல்வரின் திருப்பாதங்களை அடைந்த பிறகு இறப்பில்லை அல்லவா?

52

திருமந்திரமும் போற்றிப் பஃறொடையும்

நாக முடலுரி போலுநல் லண்டச
மாக நனாவிற் கனாமறந் தல்லது

Koviloor Digital Library

போகலு மாகும் அரனரு ளாலேசென்
றேகு மிடஞ்சென் றிருபயன் உண்ணுமே

– திருமந்திரம் (2093)

'......................................முன் உடைய
நாணாள் வரையி லுடல்பிரித்து நல்வினைக்கண்
வாணாளின் மாலா யயனாகி – நீணாகர்
வானாடர் கோமுதலாய் வந்த பெரும்பதத்து
நானாவிதத்தா னலம் பெறுநாள் – தான்மாள
வெற்றிக் கடுந்தூதர் வேகத்துடன் வந்து
பற்றித்தம் வெங்குருவின் பாற்காட்ட...'

– போற்றிப் பஃறொடை

இத்திருமந்திரப்பாடல் எட்டாம் தந்திரத்தின் கீழ், முதல் அதிகாரமான 'உடலிற் பஞ்சபேதம்' என்னும் தலைப்பில் பதினோராவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 2093–ஆவது பாடலாகவும் வரையப்பட்டுள்ளது.

இப்பாடலில் திருமூலர், நாகப்பாம்பு தோலை உரித்துவிட்டுச் செல்லுதல் போலவும், முட்டையிலுள்ள குஞ்சு முட்டையை விட்டு வெளிவருவது போலவும், கனவில் கண்டவற்றை நனவில் புரிந்து கொள்ள இயலாதவாறு மறந்து விடுதல் போலவும் உடலைவிட்டு உயிர் போகும் என்றும், அதுபோல சிவனது ஆணையால் உடலை விட்டுப் பிரிந்து போய் அதன் நல்வினை தீவினைகளுக்கேற்பச் சொர்க்க நரகங்களை அடைந்து அனுபவிக்கும் என்றும் கூறுகிறார்.

Koviloor Digital Library

மேலே தரப்பெற்றிருக்கும் மற்றொரு பாடல் வரிகள் உமாபதி தேவ நாயனார் அருளிச் செய்த 'போற்றிப் பஃறொடை' என்னும் நூலைச் சார்ந்ததாகும். இந்நூல் கி.பி.1309–ஆம் ஆண்டு அருளப்பட்டது. இந்நூல் மொத்தம் 95 கண்ணிகளை உடையது. பஃறொடை வெண்பா யாப்பில் அமைந்தது. தம் குருமூர்த்தியாகிய மறைஞான சம்பந்தர் தம்மை ஆட்கொண்ட அருட்செயலைப் பலவாறாகப் போற்றி மகிழும் விதமாக அமைந்துள்ளது. ஈண்டு தரப் பட்டிருப்பது 39 முதல் 44 வரையிலான ஆறுவரிகள் ஆகும்.

39 முதல் 53 வரையுள்ள, கண்ணிகளில் உயிர் தான் செய்த நல்வினையின் பயனாக இந்திரன் முதலிய இறையவர் பாதங்களை நுகர்வதும், தீவினை யின் பயனாக எரிவாய் நரகில் வீழ்வதும், உயிர்களை உய்யக் கொள்ளும் அறக்கருணை மறக்கருணை ஆகியவற்றையும் குறிப்பிடுகின்றார். இங்கு தரப் பெற்றிருக்கும் கண்ணியில், முன்பு அமைந்த ஆயுள் முடிந்ததும், ஒவ்வொரு உயிரின் தூல உடல்களைப் பிரித்து, நல்வினைகளைச் செய்த உயிர்களை யெல்லாம் பூதாசார சரீரம் ஆகிய திவ்விய சரீரத்துடன் நீண்ட நாட்கள் வாழ்ந்து இருக்கும்படி, விட்டுணு உலகத்தில் விஷ்ணுக்களாகவும், பிரம லோகத்தில் பிரமர்களாகவும், தேவலோகத்தில் தேவேந்திரர்களாகவும் பிற தேவர்களாகவும், முறையே அவரவர்களுக்கு என்று பல்வேறு வகையான இன்பங்களை அனுபவித்துக் கொண்டு இருக்கும்படி இறைவன் செய்கின்றான் என்று

Koviloor Digital Library

உமாபதி தேவநாயனார் கூறுகின்றார். இருபெரும் தத்துவ மேதைகளும் வினைப் பயனை ஊட்டும் முறைமை பற்றி தத்தம் பாடல்களில் விளக்குகிறார்கள்.

சிவனது ஆணையால் உயிர் உடலை விட்டுப் பிரிந்து போய் அதன் நல்வினை தீவினைகளுக் கேற்பச் சொர்க்க - நரகங்களை அடைந்து அனுபவிக்கும் என்கிறார் திருமூலர். இதனை,

'...................... அரனரு ளாலேசென்
றேகு மிடஞ்சென் றிருபயன் உண்ணுமே'

என்னும் அற்புதமான வரிகள் மூலம் தெளியலாம்.

அதேபோல உமாபதி தேவ நாயனார், வரையறுக்கப்பட்ட ஆயுள் முடிந்ததும், ஒவ்வொரு உயிரின் தூல உடல்களைப் பிரித்து, நல்வினைகளைச் செய்த உயிர்களையெல்லாம், அவரவர்களுக்கு என்று பல்வேறு வகையான இன்பங்களை நீண்ட நாட்கள் அனுபவித்துக் கொண்டு இருக்கும்படி இறைவன் செய்கின்றான் என்று கூறுகின்றார். இதனை,

'... உன் உடைய
நாணாள் வரையி லுடல்பிரித்து நல்வினைக்கண்
வாணாளின் மாலா யயனாகி......................'

என்னும் வரிகள் மூலம் அறியலாம். இதிலிருந்து ஆருயிர்கள் நல்வினை, தீவினையின் பாற்பட்டது

Koviloor Digital Library

என்பதும், அதற்கேற்ப விளைவுகளை அனுபவித்தே ஆகவேண்டும் என்பதும் பெறப்படும் உண்மைகளாகும்.

ஆனால் ஒரு கேள்வி! ஆருயிர்கள் நல்வினை, தீவினைப் பாற்பட்டது என்பதும், வினைகளுக்கு விளைவுகள் உண்டு என்பதும் படிக்கின்ற நமக்குத் தெரிகின்றது; தெரிகின்ற காரணத்தினால் அஞ்சவும் செய்கிறோம். ஆனால், படிக்காத அரசியல் வாதிகளும், அதிகாரிகளும் அஞ்சுவதாகத் தெரியவில்லையே; பழிபாவங்களுக்கு பயப்படுவதாகத் தெரியவில்லையே. படித்தவர்களே பயப்படாதபோது, படிக்காதவர்கள் எங்கே பயப்படப் போகிறார்கள்? ஒருவேளை இவைகளெல்லாம் வீண் மிரட்டல்களோ?

53

திருமந்திரமும் போற்றித்திருவகலும்

மாத்திரை யொன்றினின் மன்னி யமர்ந்துறை
யாத்தனுக் கீந்த அரும்பொரு ளானது
மூர்த்திகள் மூவர்க்கு மூவேழ் குரவர்க்குந்
தீர்த்தம தாமது தேர்ந்துகொள் வீரே

– திருமந்திரம் (1823)

மூவேழ் சுற்றம் முரணுற நரகிடை
ஆழா மேஅருள் அரசே போற்றி

– போற்றித்திருவகல் (118–119 வரிகள்)

Koviloor Digital Library

ஈண்டு தரப்பெற்றிருக்கும் திருமந்திரப்பாடல் ஏழாம் தந்திரத்தின் கண், பதின்மூன்றாவது அதிகாரமான 'மகேசுவர பூசை' என்பதன் கீழ் மூன்றாவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 1823–ஆவது பாவாகவும் அமைந்துள்ளது.

இப்பாடலில் திருமூலர், நுழைவு, நோன்பு, நுண்மை என்று சொல்லப்படும் மூன்றும், குரு முழுக்கு என்று சொல்லப்படும் ஆசாரியபிடேகமும் பெற்ற நல்லாருக்கு (ஆத்தன்) அல்லது யோகிக்குக் கொடுத்த அருமையான பொருள், அயன், அரி, அரன் ஆகிய மும்மூர்த்திகளுக்கும், மூவேமு தலைமுறையினர்க்கும் அர்ப்பணித்ததாகும் என்றும், இவ்வுண்மையினைத் தேர்ந்துகொள்வீராக என்றும் கூறுகின்றார். அதாவது, நல்லாருக்கு அன்புடன் ஈந்தது சிவபெருமானுக்கு நேராக ஈந்தனவேயாகும் என்பதாம்.

மேலே தரப்பெற்றிருக்கும் மற்றொரு பாடல்வரிகள், மாணிக்கவாசகர் தில்லையில் அருளிய 'போற்றித்திருவகல்' நூலைச் சார்ந்ததாகும். இது 225 அடிகளால் ஆன நிலை மண்டில ஆசிரியப்பாவால் இயன்றது. இந்நூல் உயிர்கள் இவ்வுலகில் பிறந்து வீடுபேறு அடைதற்குரிய நெறிமுறைகளை அறிவுறுத்துகிறது.

இப்பாடல் வரிகளில் மாணிக்கவாசகர், சீவன் ஒருவன் சிவ சாயுச்சியம் என்னும் முக்தியடை வானாகில் அவனுடைய சுற்றத்தார் இருபத்தோரு தலைமுறையாக வருபவர்கள் நரகத்தில் மூழ்கித்

Koviloor Digital Library

துன்பப்படாமல் அவர்களைக் காத்தருளும் என்று இறைவனை முன்னிலைப் படுத்தி புகழ்ந்து பாடிப்பரவுகின்றார்.

நல்லவர்களுக்கு அல்லது யோகிகளுக்கு ஈவது, சிவபெருமானுக்கு ஈவது போலாகும் எனவும், மூவேழு தலைமுறையினருக்கு அர்ப்பணிப்பது போலவும் ஆகும் என திருமூலர் கூறுகின்றார். இதனை,

'யாத்தனுக் கீந்த அரும்பொரு ளானது
மூர்த்திகள் மூவர்க்கு மூவேழ் குரவர்க்குந்'

என்னும் வரிகள் மூலம் அறியலாம்.

மாணிக்கவாசகர், சீவன் ஒருவன் சிவ சாயுச்சியம் என்னும் முக்தியடைவானாகில் அவனுடைய சுற்றத்தார் இருபத்தோரு தலைமுறை யாக வருபவர்கள் நரகத்தில் மூழ்கித் துன்பப்படாமல் அவர்களைக் காத்தருளும் என தமது பாடலில் தெரிவிக்கின்றார். இதனை,

'மூவேழ் சுற்றம் முரணுற நரகிடை,
ஆழா மே...............................'

என்னும் வரிகள் மூலம் தெளியலாம்.

திருமூலரின் 'மூவேழ் குரவர்' என்பது, தந்தை, தாய், மனைவி குடிவழியில் ஏழு தலைமுறையில் உள்ள மூதாதையர்களைக் குறிக்கும். அதாவது நம்மை விட்டுப் பிரிந்து போனவர்கள் அல்லது பிதிர்கள் எனப்படுவர்.

Koviloor Digital Library

அதேசமயத்தில் மாணிக்கவாசகரின் ‘மூவேழ் சுற்றம்’ என்னும் சொற்றொடர் பின் சந்ததியினரைக் குறிக்கும். அதாவது ஒருவன் செய்கின்ற நற்காரியத்தினால் முக்தியடைவானேயானால் அவனுடைய பின் சந்ததியினர் இருபத்தோரு தலைமுறைகளுக்கு நரகத்தில் மூழ்கித் துன்பப்படாமல் காத்தருளும் என்பதாகும்.

54

திருமந்திரமும் மங்கையர்க்கரசியார் புராணமும்

உணர்வொன் றிலாமூடன் உண்மையோ ராதோன்
கணுவின்றி வேதா கமநெறி காணான்
பணிவொன் றிலாதோன் பரநிந்தை செய்வோன்
அணுவின் குணத்தோன் அசற்குரு வாமே

– திருமந்திரம் (2006)

மங்கையர்க்குத் தனியரசிஎங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னிநாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள் பிரான் சண்பையர்கோன் அருளினாலே
இருந்தமிழ்நா டுற்றஇடர் நீக்கித் தங்கள்

Koviloor Digital Library

பொங்கொளிவெண் டிருநீறு பரப்பினாரைப்
போற்றுவார் கழல் எம்மால்போற்ற லாமே
- மங்கையர்கரசியார் புராணம் (1)

மேலே தரப்பட்டிருக்கும் திருமந்திரப்பாடல் ஏழாம் தந்திரத்தில் இருபத்தாறாவது அதிகாரமான 'அசற்குருநெறி' என்பதன் கீழ் முதல் பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 2006–ஆவது பாவாகவும் வரையப்பட்டுள்ளது.

இப்பாடலில் திருமூலர், சிவகுரு எழுந்தருளி வந்து ஆருயிர்களை ஆட்கொள்ளும் நல்வழியாம் திருநெறிக்கு வழித்துணையாக நிற்பவன் குலகுரு; அவனே குலதெய்வம் என்றும், குலகுரு என்பார் திருக்கோயில் வழிபாடு செய்வாரும் சிவதீக்கை செய்விப்பாருமேயாவார் என்றும், அவர்கள் செம்மையாளராக இருத்தல் வேண்டும் என்றும், அத்தகைய பெருநிலைக்குப் பொருந்தாத் திருந்தா மாக்களாகவோ, சிவ உணர்வென்பது ஒரு சிறிதும் இல்லாத மூடராகவோ, முப்பொருள் உண்மையாம் மெய்மை உணராதவர்களாகவோ, அருமறையாம் திருவைந்தெழுத்து உபதேசக் கணுவின்றியுள்ளோ ராகவோ, செந்தமிழ் வேதாகமநெறி அறியாதவர்களாகவோ, அன்பும் பணியும் ஒரு சிறிதும் இல்லாதவராகவோ, சிவபெருமானையும் சித்தாந்த சைவத்தையும் இகழ்வோராகவோ, பிறப்பு இறப்புக்கு உட்படுத்தும் ஆணவச் செருக்குடை யோராகவோ இருத்தல் கூடாது என்றும் கூறுகின் றார்.

Koviloor Digital Library

அடுத்து தரப்பட்டிருக்கும் பாடல் 'மங்கையர்க்கரசியம்மையார் புராண'த்தில் முதல் பாடலாகவும், பெரிய புராணப்பா வரிசையில் 4189-ஆவது பாவாகவும் வரையப்பட்டுள்ளது.

இப்பாடலில் சேக்கிழார், மங்கையர்க்கு எல்லாம் ஒப்பில்லா அரசியும், தம் தெய்வமும், சோழரின் குலக்கொழுந்தைப் போன்றவரும், வளையலை அணிந்த பெருமையுடையவரும், செந்தாமரை மலரில் வீற்றிருக்கின்ற இலக்குமியைப் போன்றவரும், பாண்டிய நாட்டை ஆளும் பாண்டியரின் குலத்துக்கு உண்டான பழியைப் போக்கிய தெய்வத் தன்மையுடைய பாவை போல்பவரும் ஆகிய, பெரிய தமிழ்நாட்டுக்கு வந்த இடரை தங்களுடைய பெருமானான சீகாழித் தலைவரின் அருளால் போக்கித் தமது பொங்கும் ஒளியைத் தரும் திருநீற்றைப் பரவச் செய்தவரைப் போற்று பவரின் திருவடி போற்றப் பெறுவதாகும் எனக் கூறுகின்றார்.

குலகுரு என்பவர் திருக்கோயில் வழிபாடு செய்வாரும் சிவதீக்கை செய்விப்பாருமேயாவர் என்றும், அவர்கள் செம்மையாளராக இருத்தல் வேண்டும் என்றும், மற்றவர்கள் நெறிதவறியவர்கள் என்றும் கூறுகின்றார். மேலும், பெருநிலைக்குப் பொருந்தாத் தன்மைகளை பட்டியலிட்டுக் காட்டி,

'அணுவின் குணத்தோன் அசற்குரு வாமே'

என்று முடிக்கின்றார்.

Koviloor Digital Library

ஆனால் சேக்கிழாரோ, பல்லாற்றானும் பெருமைக்குரியவர் மங்கையர்க்கரசியம்மையார் எனக் கூறி, தமிழ்நாட்டிற்கு வந்த பெரும் இடரைப் போக்கிய சீகாழித் தலைவரும், பொங்கும் ஒளியைத் தரும் திருநீற்றைப் பரவச் செய்தவரைப் போற்றுபவருமான மங்கையர்கரசியாரை நாம் போற்றுவோமாக எனக் கூறுகின்றார். இதனை,

'எங்கள் பிரான் சண்பையர்கோன் அருளினாலே
இருந்தமிழ்நா டுற்றஇடர் நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் டிருநீறு பரப்பினாரைப்
போற்றுவார் கழல் எம்மால்போற்ற லாமே'

என்னும் வரிகள் மூலம் உணரலாம். இதன்மூலம் திருமூலர் கூறும் நல்வழியாம் திருநெறிக்கு வழித் துணையாக நிற்கக்கூடிய குலகுருவின் பண்புகள் அனைத்தும் மங்கையர்க்கரசியாரிடம் இருந்தன என்பது தெற்றென விளங்குகிறது அன்றோ?

அதாவது திருமூலர், 'அசற்குரு'வின் வேண் டப்படாத பண்புகளை பட்டியலிட்டுக் காட்டுகின்றார். அதற்கு நேர்மாறான பண்புகள் – வேண்டப்படும் பண்புகள் மங்கையர்கரசியாரிடம் இருந்தன என்பதை சேக்கிழார் வழிநின்று அறிய இயல்கின்றது.

Koviloor Digital Library

55

திருமந்திரமும் மூர்த்தி நாயனார் புராணமும்

தமிழ்மண் டலம்ஐந்துந் தாவிய ஞானம்
உமிழ்வது போல உலகந் திரிவார்
அவிழு மனமும்எம் ஆதி யறிவுந்
தமிழ்மண் டலம்ஐந்துந் தத்துவ மாமே

– திருமந்திரம் (1619)

மொய்வைத்த வண்டின் செறிகுழல் முரன்ற சந்தின்
மைவைத்த சோலை மலயந்தர வந்த மந்த
மெய்வைத்த காலுந் தரும் ஞாலம் அளந்தமேன்மைத்
தெய்வத்தமி ழும்தருஞ் செவ்வி மணஞ்செ யீரம்

– மூர்த்தி நாயனார் புராணம் (3)

மேலே தரப்பட்டிருக்கும் திருமந்திரப்பாடல், ஆறாம் தந்திரத்தின்கீழ், ஏழாம் அதிகாரமான 'அருளுடைமையின் ஞானம் வருதல்' என்பதில் இரண்டாவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 1619–ஆவது பாவாகவும் அமைந்துள்ளது.

இப்பாடலில் திருமூலர், 'சிவயசிவ' என்னும் தமிழ் மண்டலம் ஐந்திலும் பரவி நிற்கும் அறிவு,

Koviloor Digital Library

அருள், அடிமை, இன்பு, அன்பு என்னும் ஐந்தினையும் சித்தாந்த சைவராகிய சித்தர்கள் உலகத்தின் எல்லா இடங்களுக்கும் வலியச் சென்று செவ்வி வாய்ந்தார்க்கு அறிவுறுத்துவர் என்றும், அத்தகைய நல்லோர் மலர்ந்த மனமும், திருவடி உணர்வும் மேலே சொல்லப்பட்ட தமிழ் மண்டலம் ஐந்தும் தமிழகத்தொன்மை செம்பொருள் துணிவின் மாறா மெய்ம்மையாம் என்றும் கூறுகின்றார்.

அடுத்து தரப்பட்டிருக்கும் பாடல், பெரிய புராணத்தில் 'மும்மையால் உலகாண்ட சருக்கம்' என்பதன்கீழ் 'மூர்த்தி நாயனார் புராண'த்தின் மூன்றாவது பாடலாகும். மேலும், பெரிய புராணப் பா வரிசையில் 970–ஆவது பாவாகவும் அமைந்துள் ளது. மூர்த்தி நாயனார் பாண்டிய நாட்டின் மன்னனா யிருந்து சைவ மதத்தைத் தழைக்கச் செய்தவர்.

சேக்கிழார் தமது பாடலில், மூர்த்தி நாயனார் வரலாற்றைக் கூறப் புகும் முன், மதுரையின் சிறப்பைப் பற்றி பேசுகிறார்.

அப்படிக் கூறுகையில், நெருங்கிய வண்டுகளின் கூட்டம் ஒலிக்கும் இருண்ட சந்தனச் சோலை சூழ்ந்த பொதிய மலை தர வந்த மென்மையாக உலவும் சிறிய தென்றல் காற்றும் நறுமணம் கமழும் ஈரத்தைத் தரும் என்றும், உலகத்தை அளந்த மேன்மையும், தெய்வத்தன்மையும் உடைய தமிழும் நல்ல மணம் செய்வதற்குரிய அன்பைத்தரும் என்றும் இயம்பு கிறார்.

Koviloor Digital Library

திருமூலர், வைராக்கிய சித்தர்கள் அறிவு, அருள், அடிமை, இன்பு, அன்பு போன்றவைகளை பக்குவர்களுக்கு உலகம் முழுவதும் சென்று பரப்புவர் என்றும், தமிழ்மண்டலம் ஐந்திலும் தமிழகத் தொன்மை இலங்குகிறது என்பது உண்மையேயாகும் என்றும் கூறுகின்றார். இதனை,

'தமிழ்மண் டலம்ஐந்துந் தத்துவ மாமே'

என்னும் வரியின் மூலம் உணரலாம்.

அதேபோல சேக்கிழார், மதுரையின் சிறப்பைப் பற்றிக் கூறுகையில், உலகத்தை அளந்த மேன்மை–அதாவது உலகம் முழுவதும் பரவி இருக்கின்ற ஒரு தொன்மை மொழியாக–தெய்வ மொழியாக–உயர்ந்த மொழியாக தமிழ் மொழி இருந்தது என்றும், நல்ல மணம் செய்வதற்குரிய அன்பைத் தரும் மொழியாக தமிழ் இருந்தது என்றும் குறிப்பிடுகின்றார். இதனை,

'.. ஞாலம் அளந்தமேன்மைத்
தெய்வத்தமி ழும்தருஞ் செவ்வி மணஞ்செ யீரம்'

என்னும் வரிகள் மூலம் அறியலாம்.

இப்பாடல் வரிகள் மூலம் தமிழகத் தொன்மையும், தமிழ்மொழியின் தொன்மையும், சிறப்பும் விளங்குகின்றதன்றோ? அத்தகைய தொன்மையான மொழியில் 'சிவசிவ' என்னும் மந்திரத்தை தகுதி படைத்தவர்களுக்கு அறிவுறுத்தினர் சித்தர்கள் என்பதும் சிறப்பிற்குரிய செய்தியேயன்றோ?

Koviloor Digital Library

திருமூலர், ஐந்து மண்டலத்திலும் தமிழ் பரவி யிருந்தது என்றும், சேக்கிழார், ஞாலம் அளந்த- அதாவது உலக முழுவதும் பரவியிருந்த மொழி என்றும் குறிப்பிடுகின்றனர். அத்தகைய மேன்மையும் தகுதியும் தமிழுக்கு இருந்தது என்று இருவர் கூற்றாலும் அறியலாம்.

56

திருமந்திரமும் மெய்யுணர்தலும்

கரும்புந் தேனுங் கலந்ததோர் காயத்தில்
அரும்புங் கந்தமு மாகிய ஆனந்தம்
விரும்பியே உள்ளம் வெளியுறக் கண்டபின்
கரும்புங் கைத்தது தேனும் புளித்ததே

– திருமந்திரம் (2935)

கொள்ளேன் புரந்தரன் மாலயன்
வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல்
லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே
இருக்கப் பெறின் இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்
லாதெங்கள் உத்தமனே

– மெய்யுணர்தல் (2)

Koviloor Digital Library

மேலே தரப்பட்டிருக்கும் திருமந்திரப்பாடல், ஒன்பதாம் தந்திரத்தின் கீழ், இருபதாம் அதிகாரமான 'அணைந்தோர் தன்மை' என்பதில் பத்தொன்பதாவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 2935–ஆவது பாவாகவும் வரையப்பட்டுள்ளது.

இப்பாடலில் திருமூலர், கரும்பாகிய உண்ணுதலும், தேனாகிய உறங்கலும் மாறிமாறி நிகழ்ந்து கொண்டிருக்கும் எனவும், சரக்கு நிறை காயப்பையாகிய இவ்வுடம்பகத்து முளையும் கிழங்கும் போன்று தோன்றுதலும் நிலைத்தலும் போன்றுள்ள நிலையில்லாச் சிற்றின்பத்தினை உள்ளம் விரும்பி அனுபவித்தது எனவும், அவ்வுள்ளம் அவ்வின்பங்கள் நிலையா என அருளால் அனுபவித்தபின் கண்டது எனவும், அதனால் கரும்பாகிய உண்டலினும் தேனாகிய உறங்கலினும் உள்ளம் செல்லவில்லை எனவும், மாறாக உள்ளம் வலிய ஆண்டு கொண்ட வள்ளலிடமே ஓவாது செல்லுகின்றது எனவும் கூறுகின்றார்.

அடுத்து தரப்பட்டிருக்கும் திருவாசகப்பாடல் மாணிக்கவாசகரின் திருப்பெருந்துறையில் பாடப்பட்ட 'திருச்சதகம்' என்பதன் ஒரு பிரிவு ஆகிய 'மெய்யுணர்'தலில் இரண்டாவது பாடலாகவும் திருவாசகப்பா வரிசையில் ஆறாவது பாவாகவும் அமைந்துள்ளது. இப்பாடல் கட்டளைக் கலித்துறை பாவால் இயன்றது. திருச்சதகப் பாடல்கள் பக்தி வைராக்கிய விசித்திரம் எனக் கருதுகின்றனர்.

மாணிக்கவாசகர் தமது பாடலில், தாம் இறைவனின் திருவருளுக்குப் பாத்திரமானால்,

Koviloor Digital Library

விஷ்ணு, பிரம்மா முதலியவர்களின் பதவிகளைப் பெற விரும்பமாட்டார் என்றும், தம் குடியே கெட்டாலும் இறையடியார்கள் அல்லாது மற்றவர்கள் நட்பை விரும்பமாட்டார் என்றும், நரகம் புகுவதாயினும் அதை இகழ மாட்டார் என்றும், சிவனையல்லாது மற்ற தெய்வங்களை தாம் வணங்க விரும்பவில்லை என்றும் கூறுகின்றார்.

உண்ணுதல் சிலருக்குப் பிடித்தமான செய்தி; உறங்குதல் மற்றும் சிலருக்குப் பிடித்தமான செய்தி; சிற்றின்பம் இன்னும் சிலருக்குப் பிடித்தமான செய்தி. இவைகளைத் தவிர வாழ்க்கையில் வேறு என்ன இருக்க முடியும் என்ற கேள்வியை பலர் எழுப்பக்கூடும். ஆனால், ஆண்டவனின் பேரின்ப அருள் கிடைக்கின்ற போது, கரும்பும் கசக்கிறது, தேனும் புளிக்கிறது என்கிறார் திருமூலர். கரும்பு கசக்கிறது, தேனும் புளிக்கிறது என்று சொன்னால் நம்மை பயித்தியக்காரர்கள் என்றுதான் உலகம் சொல்லும். அல்லது நம்மிடம் ஏதோ குறை இருக்கிறது என்றுதான் பொருள். ஆனால், உலக வாழ்க்கையின் நிலையாமையை உணர்கின்றபோது அந்த வார்த்தைகளில் உள்ள உண்மை புரியும். இதனை,

'அரும்புங் கந்தமு மாகிய ஆனந்தம்
விரும்பியே உள்ளம் வெளியுறக் கண்டபின்
கரும்புங் கைத்தது தேனும் புளித்ததே'

என்னும் வரிகள் மிகத் தெளிவாக விளக்குகிறது.

Koviloor Digital Library

அதேபோல் மாணிக்க வாசகரின் பாடல் இன்றைய நடைமுறை வாழ்க்கைக்கு அப்பாற் பட்டதாய் இலங்குகிறது. 'அண்ணன் எப்போது சாவான் திண்ணை எப்போது காலியாகும்' என்று நினைக்கிற மனோபாவம் இன்று நிறைய பேருக்கு உண்டு; பதவி உயர்வை எப்பாடுபட்டாகிலும் பெற்று விட வேண்டும் என்று எண்ணுகிற மனோபாவம் இன்று நிறைய பேர்களிடத்தில் நாம் பார்க்கலாம்; 'அடுத்தவன் குடிகெட்டாலும் பரவாயில்லை, தம் குடி கெடக் கூடாது' என்று எண்ணுவதிலும் நம்மவர்கள் மும்முரமானவர்கள்.

ஆனால் மாணிக்கவாசகர் எத்தகையவராயிருக் கின்றார்? இறைவன் திருவருள் கிடைத்து பெரும் பதவிகள் தம்மை நாடி வந்தாலும் அதனை விரும்பமாட்டார் என்று கூறுகின்றார். அதேபோல், தம் குடியே கெட்டாலும் பரவாயில்லை, இறையடியார்களை மட்டுமே விரும்புவார் என்றும் கூறுகின்றார். இதனை,

'.............................. திருவரு ளாலே இருக்கப் பெறின் இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல் லாதெங்கள்
உத்தமனே'

என்னும் வரிகள் மிகத் தெளிவு படுத்துகின்றன. அதாவது, திருமூலரும் மாணிக்கவாசகரும் தங்கள் உள்ளத்துள் உறைவது சிவனே என்றும், அதனை உணர்ந்தபின் வேறு எதுவும் அவர்களுக்கு வேண்டுவதில்லை என்றும், சிவனை மட்டுமே வணங்க விரும்புவதாகவும் கூறுகின்றனர்.

Koviloor Digital Library

ஒரே ஒரு மனநெருடல்தான் உண்டாகிறது இப்பாடலைப் படிக்கின்றபோது. அதாவது,

'.. இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல் லாது'

என்ற வரிகள்தான் அவைகள். சிவனையல் லாமல் பிறதெய்வங்களை வணங்க மாட்டேன் என்றுதானே சொல்லுகிறார்? மற்ற தெய்வங்கள், தெய்வங்கள் இல்லையா? இது இறை நிந்தை இல்லையா? அல்லது சிவனைத் தவிர மற்ற தெய்வங்கள் சக்தியற்றவர்களா? மக்களில் ஏழை, பணக்காரன் என்று வேறுபடுத்திப் பார்த்து மதிக்கிறார்களே! அப்படியோ மாணிக்கவாசகரின் சொற்றொடர்கள்?

57

திருமந்திரமும் மெய்ப்பொருள் நாயனார் புராணமும்

வேடநெறி நில்லார் வேடம்பூண் டென்பயன்
வேடநெறி நிற்போர் வேடம்மெய் வேடமே
வேடநெறி நில்லார் தம்மை விறல்வேந்தன்
வேடநெறி செய்தால் வீடது வாகுமே.

– திருமந்திரம் (97)

Koviloor Digital Library

மெய்யெலாம் நீறுபூசி வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினிற் படைக ரந்த புத்தகக் கவளி ஏந்தி
மைபொதி விளக்கே என்ன மனத்தினுட் கருப்பு
வைத்துப்
பொய்தவவேடங் கொண்டு புகுந்தனன் முத்த நாதன்
– மெய்ப்பொருள் நாயனார் புராணம் (7)

மேலே தரப்பட்டிருக்கும் திருமந்திரப்பாடல், 'பொதுப்பாயிர'த்தின் கீழ், ஏழாவது அதிகாரமான 'அரசாட்சிமுறை' என்பதில் மூன்றாவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 97–ஆவது பாவாகவும் அமைந்துள்ளது.

இப்பாடலில் திருமூலர், தவக் கோலத்திற்குரிய தனிப்பெரு நெறியில் நிற்கும் ஆற்றல் இல்லாதவர், அத்தவக்கோலத்தினை மேற்கொண்டு ஒழுகுவதால் பயனேதுமில்லை என்றும், தவக் கோலத்தில் செம்மையாகவும் உண்மையாகவும் ஒழுகுவாராயின் அது நாட்டிற்கும் மற்றவர்களுக்கும் நல்ல பயனை அளிக்கும் என்றும், உண்மைத் தவக்கோலத்தின் வழி ஒழுகாத தீப்பண்பாளரை, நாட்டை ஆளும் அரசன் நல்ல தவக்கோல நெறியில் அவர்களை செலுத்துதல் வேண்டும் என்றும், அவ்வாறு செய்தால் அது நாட்டிற்கும், நல்லதவம் செய்வோருக்கும் நல்லின்பம் தருவதாகும் என்றும் கூறுகின்றார்.

அடுத்து தரப்பட்டிருக்கும் பாடல் சேக்கிழாரின் 'மெய்பொருள் நாயனார் புராண'த்தின் ஏழாவது

Koviloor Digital Library

பாடலாகவும், பெரிய புராணப்பா வரிசையில் 473–ஆவது பாவாகவும் வரையப்பட்டுள்ளது.

திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு, 'சேதி' என்னும் நாட்டை ஆண்டவர் மெய்ப் பொருள் நாயனார்.

அவரைப் பற்றிக் கூறும் புராணமே 'மெய்ப்பொருள் நாயனார் புராணம்' என்பதாகும். மேலே தரப்பட்டுள்ள பாடலில், மெய்ப்பொருள் நாயனாரை வெல்ல முடியாத முத்தநாதன் என்னும் மன்னன் பொய்வேடம் பூண்டு அரண்மனையினுள் புகுவது பற்றிக் கூறப்பட்டுள்ளது.

இப்பாடலில் சேக்கிழார், முத்தநாதன் தம் உடல் முழுவதும் திருநீற்றைப் பூசிக்கொண்டும், சடைகளை முடித்துக் கட்டிக்கொண்டும், புத்தகம் போல் கட்டப்பட்ட புத்தகப்பையை ஏந்திக் கொண்டும், கடுமையை உள்ளே கொண்டும், வெளியே ஒளிவீசும் விளக்கே எனக் கூறுமாறும், உள்ளத்தில் வஞ்சத்தைப் பொதிந்து வைத்துப் பொய்யை மறைத்த தவவேடம் கொண்டும், அந்நகரத்தினுள் முத்தநாதன் என்ற மன்னன் புகுந்தனன் என்று கூறுகின்றார்.

திருமூலர், தவம் செய்யத் தகுதியற்றவர்கள் தவம் செய்வதால் பயனில்லை என்று கூறுகின்றார். இதனை,

'வேடநெறி நில்லார் வேடம் பூண் டென்பயன்'

என்னும் வரியின் மூலம் அறியலாம்.

Koviloor Digital Library

அத்தகு சூழலில் நாட்டை ஆளும் மன்னன் என்ன செய்ய வேண்டும்? உண்மைத் தவக் கோலத்தின் வழி ஒழுகாத தீயபண்பாளர்களை வேடதாரிகளை, நல்ல தவக் கோலநெறியில் மன்னன் செலுத்த வேண்டும் என்கிறார் திருமூலர். இதனை,

'வேடநெறி நில்லார் தம்மை விறல்வேந்தன்
வேடநெறி செய்தால் வீடது வாகுமே'

என்னும் வரிகள் மூலம் தெளியலாம்.

அத்தகு ஒரு பொய் வேடக்காரனைப் பற்றித்தான் சேக்கிழாரும் தம், 'மெய்ப்பொருள் நாயனார் புராண'த்தில் கூறுகின்றார். அவன்தான் முத்தநாதன். இதனை,

'மெய்யெலாம் நீறுபூசி வேணிகள் முடித்துக்கட்டி
.... மனத்தினுட் கறுப்பு வைத்து'

என பொய் தவவேடம் பூண்ட முத்தநாதனைப் பற்றி வருணிக்கின்றார் சேக்கிழார்.

திருமூலர், பொய் வேடக்காரர்களை மன்னன் திருத்த வேண்டும் என்கிறார். ஆனால், இங்கு மன்னனே பொய்வேடம் தரித்து வந்திருக்கின்றான்; மனசிலே வஞ்சம் வைத்திருக்கின்றான்.

இதனை, அறிந்த மெய்ப்பொருள் நாயனார், பொய் வேடக்காரனான முத்தநாதனை, தம் நாட்டு எல்லைக்கப்பால் கொண்டு போய்விட – அதுவும் மற்றவர் தாக்காத வண்ணம் விட்டுவிட்டு வருதல் வேண்டும் என ஆணையிடுகிறார். காரணம்,

Koviloor Digital Library

முத்தநாதன் சிவனடியார் வேடத்தில் வந்திருந்தான்.

கொலைஞனுக்கும் கருணை காட்டும் தகைமை யாருக்கு வரும்? சிவனடியார்களுக்கன்றோ? பெருநெறியாளர்களுக்கன்றோ?

58

திருமந்திரமும் யாத்திரைப் பத்தும்

உடையான் அடியார் அடியா ருடன்போய்ப்
படையா ரழன்மேனிப் பதிசென்று புக்கேன்
கடையார நின்றவர் கண்டறி விப்ப
உடையான் வருகென ஓலமென் றாரே

– திருமந்திரம் (529)

விடுமின் வெகுளி வேட்கைநோய்
மிகவோர் காலம் இனியில்லை
உடையான் அடிக்கீழ்ப் பெருஞ்சாத்தோடு
உடன்போ வதற்கே ஒருப்படுமின்
அடைவோம் நாம்போய்ச் சிவபுரத்துள்
அணியார் கதவது அடையாமே
புடைபட்டு உருகிப் போற்றுவோம்
புயங்கன் ஆள்வான் புகழ்களையே

– யாத்திரைப்பத்து (5)

Koviloor Digital Library

மேலே தரப்பெற்றிருக்கும் திருமந்திரப்பாடல், இரண்டாம் தந்திரத்தின்கீழ், இருபத்தைந்தாவது அதிகாரமான 'பெரியாரைத் துணைக்கோடல் என்பதில் ஐந்தாவது பாடலாக அமைந்துள்ளது. மேலும், திருமந்திரப்பா வரிசையில் 529–ஆவது பாவாக வரையப்பட்டுள்ளது.

திருமூலர் தமது பாடலில், எல்லாம் உடையானாகிய சிவபெருமானின் அடியார்கள் மற்ற பழவடியாருடன் கூடிப்புகுவர் என்றும், அதேபோல் தாமும் அவர்களுடன் சிவபெருமானின் திருவெள்ளிமலைக்குப் போனதாகவும், அங்கு கடைவாயிலில் நின்றவர் உடையானுக்கு அறிவித்த தாகவும், சிவபெருமான் தம்மை அழைத்து வருமாறு பணிக்க கடைவாயில் காப்பாளர் அபய முத்திரை காட்டி அழைத்தாகவும் கூறுகின்றார்.

அடுத்து தரப்பட்டிருக்கும் பாடல், மாணிக்கவாசகரின் திருவாசகத்தின் ஒரு பகுதியாகிய 'யாத்திரைப்பத்து' என்பதில் ஐந்தாவது பாடலாகவும், திருவாசகப்பா வரிசையில் 609–ஆவது பாவாகவும் வரையப்பட்டுள்ளது. 'யாத்திரைப்பத்து' தில்லையில் அருளிச் செய்யப்பட்டது. பாக்கள் அறுசீர் ஆசிரிய விருத்தத்தால் ஆனது. 'யாத்திரைப்பத்து' அனுபவ அதீதத்தை உரைக்கிறது.

மாணிக்கவாசகர் தமது பாடலில், நிலையற்ற இவ்வுலக வாழ்க்கை முடிவுக்கு வந்து கொண்டிருக் கின்றது என்றும், எனவே இந்நிலவுலக வாழ்க்கையை வளர்க்கும் சினம், ஆசை ஆகியவைகளை நீக்க

Koviloor Digital Library

வேண்டும் என்றும், சிவபக்தர்களோடு சிவலோகம் போய்ச்சேர முடிவு செய்ய வேண்டுமெனவும், அப்படிச் செல்பவர்களுக்கு பரமபத வாயில் அடைபடாமல் திறந்தே இருக்கும் எனவும், பரமனது அருகில் நெருங்கி நின்று அவனையே துதிசெய்வோம் எனவும் கூறுகின்றார்.

திருமூலர் 'பெரியாரைத் துணைகோடல்' என்று குறிப்பிடுவது, சிவனடியார்களுடன் சிவலோகம் செல்வது என்றாக, மாணிக்கவாசகர் சிவனடியார் களுடன் யாத்திரையாக சிவலோகம் புகுதல் என்பதைக் குறிக்க, 'யாத்திரைப்பத்து' என்பதன் கீழ் இப்பாடலை அமைத்திருக்கின்றார். ஆக, இரண்டு தவ ஞானிகளுமே சிவனடியை அடையும் வழியைத் தான் சொல்லியிருக்கின்றார்கள்.

முன்னவர் சிவனைக் குறிப்பிட 'உடையான்' என்னும் தொழிற்பெயரைக் குறிப்பிட, மாணிக்க வாசகரும் சிவனைக் குறிக்க, 'உடையான்' என்னும் ஆகுபெயரைக் குறிக்கின்றார். ஆக,

'உடையான் அடியார் அடியா ருடன்போய்ப்
படையா ரழன்மேனிப் பதிசென்று புக்கேன்'

என்னும் திருமூலரின் வரிகளோடு,

'உடையான் அடிக்கீழ்ப் பெருஞ்சாத்தோடு
உடன்போ வதற்கே ஒருப்படுமின்
அடைவோம் நாம் போய்ச் சிவபுரத்துள்'

என்னும் மாணிக்கவாசகரின் வரிகளும் ஒன்றிப் பயணிப்பதைக் காண்க.

Koviloor Digital Library

மேலும், திருமூலரின் 'பெரியாரைத் துணை கோடல்' என்னும் அதிகாரத் தலைப்பு 'சிவனடியார்களின் துணை' எனப் பொருள்பட, 'பெரியாரைத் துணைக் கோடல்' என்னும் திருவள்ளுவரின் அதிகாரத் தலைப்பு 'கற்றறிந்த சான்றோரை'க் குறிக்கின்றது என்பதை ஒப்பு நோக்குக.

59

திருமந்திரமும் வாயிலார் நாயனார் புராணமும்

நடக்கின்ற நந்தியை நாடோறு முன்னில்
படர்க்கின்ற சிந்தையைப் பைய வொடுக்கிக்
குறிக்கொண்ட சிந்தை குறிவழி நோக்கில்
வடக்கொடு தெற்கு மனக்கோயி லாமே

– திருமந்திரம் (2001)

மறவாமை யான்அமைத்த மனக்கோயில்
உள்ளிருத்தி
உறவாதி தனையுணரும் ஒளிவிளக்குச் சுடரேற்றி
இறவாத ஆனந்தம் எனுந்திருமஞ் சனம்ஆட்டி
அறவாணர்க் கன்பென்னும் அமுதமைத்தர்ச்
சனைசெய்வார்

– வாயிலார் நாயனார் புராணம் (8)

Koviloor Digital Library

மேலே தரப்பட்டிருக்கும் திருமந்திரப்பாடல், ஏழாம் தந்திரத்தைச் சார்ந்ததாகும். இருபத்தைந் தாவது அதிகாரமான 'ஐந்திந்திரியம் அடக்கு முறைமை' என்பதன் கீழ் ஒன்பதாவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 2001 ஆவது பாவாகவும் அமைந்துள்ளது.

இப்பாடலில் திருமூலர், எல்லாம் எளிதாகவும், இனிதாகவும், இயல்பாகவும் நடக்குமாறு திருவுள்ளத் தால் திருவருள் புரியும் நந்திக்கடவுளை ஒவ்வொரு நாளும் தவறாமல் நினைத்தல் வேண்டும் என்றும், அங்ஙனம் நினைத்தால் எங்கும் பரந்து செல்லும் உள்ளத்தை மெள்ள அடக்கும் தன்மை அருளால் வாய்க்கும் என்றும், அதனால் திருவைந் தெழுத்துத் திருமறையினைக் கணித்தல் கைகூடும் என்றும், வடபெருமலையும், தென் பெருங்கடலும் நடங்கொள் இடமாகக் கொண்டருளும் சிவபெரு மான் திருவைந் தெழுத்து எண்ணுபவர் மனதையே திருக்கோயிலாகக் கொண்டருள்வன் என்றும் கூறுகிறார்.

அடுத்து தரப்பட்டிருக்கும் பாடல், வாயிலார் நாயனார் வரலாற்றைப் பற்றிக் கூறும் பாடலாகும். இப்பாடல், 'வாயிலார் நாயனார் புராண'த்தில் எட்டா வது பாடலாகவும், பெரிய புராணப்பா வரிசையில் 4086–ஆவது பாவாகவும் வரையப்பட்டுள்ளது. வாயிலார் மயிலாப்பூரைச் சேர்ந்தவர் ஆவார்.

சேக்கிழார் தமது பாடலில், வாயிலாரைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, இறைவரை, மறவாமை யான கருவியால் அமைத்த மனமான கோயிலுள்

Koviloor Digital Library

எழுந்தருளச் செய்து, அப்பெருமானை உணரும் ஞானம் என்கின்ற ஒளி வீசும் சுடர் விளக்கை ஏற்றி, அழிவற்ற பேரானந்தமான நீரினால் திருமஞ்சன மாட்டி, அறவாணர்க்கு அன்பு என்னும் அமுதை அமைத்துப் பூசிப்பவரானார் எனக் கூறுகின்றார்.

திருமூலர், உள்ளத்தை அடக்கினால் –அதாவது ஐம்புலன்களையும் அடக்கினால், திருவைந்தெழுத்தைக் கணித்தல் கைகூடும் என்றும் அவ்வாறு திருவைந்தெழுத்து எண்ணுபவர் மனதையே சிவபெருமான் திருக்கோயிலாகக் கொண்டருள்வன் என்றும் கூறுகிறார். இதனை,

'குறிக்கொண்ட சிந்தை குறிவழி நோக்கில்
வடக்கொடு தெற்கு மனக்கோயி லாமே'

என்னும் வரிகள் மூலம் உணர இயலும்.

இவ்வாறே சேக்கிழார், வாயிலார் நாயனாரைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, அவர் சிவபெருமானை மனக்கோயிலில் எழுந்தருளச்செய்தார் என்று கூறுகின்றார். இதனை,

'மறவாமை யான்அமைத்த மனக்கோயில் உள்ளிருத்தி'

என்னும் வரியால் அறியலாம்.

இருபெரும் தத்துவ ஞானிகளும் 'மனதையே கோயிலாகக் கருதிய தன்மை, 'மனக்கோயில்' என்னும் வார்த்தையை பிரதி எடுத்தாற் போன்று அவர்கள் பயன்படுத்தியதிலிருந்து நமக்கு தெள்ளிதின் புலப்படுகிறது.

Koviloor Digital Library

60

திருமந்திரமும் வினா வெண்பாவும்

தானவ னாகுஞ் சமாதி தலைப்படில்
ஆன கலாந்தநா தாந்தயோ காந்தமும்
ஏனைய போதாந்தம் சித்தாந்த மானது
ஞான மெனஞேய ஞாதுரு வாகுமே

– திருமந்திரம் (2340)

காண்பானுங் காட்டுவதுங் காண்பதுவு நீத்துண்மை
காண்பார் கணன்முத்தி காணார்கள் – காண்பானுங்
காட்டுவதுங் காண்பதுவுந் தண்கடந்தைச் சம்பந்தன்
வாட்டுநெறி வாரா தவர்.

– வினாவெண்பா (11)

ஈண்டு தரப்பெற்றிருக்கும் திருமந்திரப்பாடல் எட்டாம் தந்திரத்தில், ஐந்தாவது அதிகாரமான 'ஆறந்தம்' என்பதன் கீழ் பன்னிரெண்டாவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் 2340–ஆவது பாவாகவும் வரையப்பட்டுள்ளது. இப்பாடலில் திருமூலர், ஆருயிர்கள் இறையடி யில் ஒடுங்குதலே தான் அவன் ஆகும் சமாதி நிலை என்பார்கள் என்றும், இந்நிலையினைத் தலைப் படுதலே கலாந்தம், நாதாந்தம், யோகாந்தம், போதாந்தம், சித்தாந்தம் என்பார்கள் என்றும், சிறந்த சித்தாந்தம்

Koviloor Digital Library

எனப்படுவது காட்சி, காணப்படும் பொருள், காண்போன் என்னும் முத்திற முடிபும் எத்திறமும் நீங்காது கொள்ளும் நிலைமைத்தாகும் என்றும் கூறுகின்றார்.

ஒடுங்குதல் (அ) சமாதிநிலை
1. கலாந்தம்
2. நாதாந்தம்
3. யோகாந்தம்
4. போதாந்தம்
5. சித்தாந்தம்

அடுத்துத் தரப்பெற்றிருக்கும் பாடல், 'வினாவெண்பா' என்னும் நூலைச் சார்ந்ததாகும். இதனை இயற்றியவர் உமாபதி தேவநாயனார் ஆவார். இந்நூல் மிகச் சிறியது; பதின்மூன்று பாடல்களை மட்டுமே கொண்டது; நேரிசை வெண்பாவால் ஆனது. தம் குருமூர்த்தியாகிய மறைஞான சம்பந்தரை வினவுகின்ற முறையில் அமைந்தது. ஆனால், ஈண்டு தரப்பட்டிருக்கும் பாடல் வினவுதல் இன்றி அமைந்தது ஆகும். இந்நூல் செய்யப்பட்ட காலம் கி.பி.1308–ஆம் ஆண்டு ஆகும்.

இப்பாடலில் உமாபதியார், காண்பான், காட்டுவான், காணப்படும் பொருள் என்ற மூவகை நினைவுகளினின்றும் நீங்கி இறையுணர்வோடு ஒன்றிக் காண்பவர்களே வீடுபேறு அடைந்தவர்களாவர்; அல்லாதார் அப்பேற்றினை அடையத் தக்காரல்லர் என்கிறார்.

Koviloor Digital Library

திருமூலர், 'தான் அவனாகும்' என்னும் சமாதி நிலை பற்றிப் பேசுகிறார். அந்நிலையில்தான் ஆருயிர்கள் பேருயிரில் ஒடுங்குகின்றன; இறையடியில் ஒடுங்குகின்றன; வீடுபேறு அடைகின்றன என்கிறார். இதனை,

'தானவ னாகுஞ் சமாதி தலைப்படில்'

என்னும் வரியின் மூலம் அறியலாம்.

இதனையே உமாபதியார், எவ்வகை நினைவுகளினின்றும் நீங்கி இறையுணர்வோடு ஒன்றி காண்பவர்களே வீடுபேறு அடைவார்கள் என்று கூறுகின்றார். இதனை,

'காண்பானுங் காட்டுவதுங் காண்பதுவு நீத்துண்மை
காண்பார் கணன் முத்தி.....'

என்ற வரிகள் மூலம் அறியலாம்.

இருதவ யோகிகளும் ஒரே கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். மேலும் திருமூலரின்,

'ஞான மெனஞேய ஞாதுரு வாகுமே'

எனும் சொற்றொடர்களுக்கு இணையாக, உமாபதி தேவநாயனார் பின்வரும் சொற்றொடர்களைப் பயன்படுத்தியுள்ளார்.

'காண்பானுங் காட்டுவதுங் காண்பதுவுந்'

ஞானம்: காட்சி (காட்டும் அருள்) எனவும்,

ஞேயம்: காணப்படும் பொருள் (சிவம்) எனவும்,

Koviloor Digital Library

ஞாதுரு: காண்போன் (ஆன்மா) எனவும் பொருள்படும்.

இவ்வாறு இரண்டு பெயர்களுமே ஒரே செய்தியை சொல்வது மட்டுமல்லாமல், ஒரே மாதிரி யாக சொற்றொடர்களையும் பயன்படுத்தியிருக்கின் றார்கள் என்பதையும் அறியலாம்.

61

திருமந்திரமும் விநாயக புராணமும்

இருந்தஇவ் வட்டம் இருமூன்றி ரேகை
இருந்த வதனுள் இரேகையைந் தாக
இருந்தஅறைகள் இருபத்தைந் தாக
இருந்த அறையொன்றில் எய்தும் அகாரமே

– திருமந்திரம் (900)

அகரமென வறிவாகி யுலக மெங்கு
மமர்ந்தகர வுகரமக ரங்க டம்மாற்
பகருமொரு முதலாகி வேறு மாகிப்
பலவேறு திருமேனி தரித்துக் கொண்டு
புகரில்பொரு ணான்கினையு மிடர்தீர்ந் தெய்தப்
போற்றுநருக் கறக்கருணை புரிந்தல் லார்க்கு
நிகரின் மறக் கருணைபுரிந் தாண்டு கொள்ளு
நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்

விநாயக புராணம் (1) (கடவுள் வாழ்த்து)

Koviloor Digital Library

மேலே தரப்பெற்றிருக்கும் திருமந்திரப்பாடல், நான்காம் தந்திரத்தின் கண், இரண்டாவது அதிகாரமான, 'திருவம்பலச் சக்கரம்' என்பதன் கீழ் ஏழாவது பாடலாக அமைந்துள்ளது. மேலும், திருமந்திரப்பா வரிசையில் 900–ஆவது பாவாகவும் உள்ளது.

இப்பாடலில் திருமூலர், சிறந்த திருவம்பலச் சக்கரத்தைத் திருவருள் திகழ்ந்து விளங்கும் பொருட்டு நீட்டத்தில் ஆறுவரையும் குறுக்கே ஆறுவரையுமாகக் கீறினால் இருபத்தைந்து அறைகள் உண்டாகும் என்றும், அதன் ஓர் அறையின் கண் அகரம் அமையும் என்றும், அவ் அகரம் சிவபெருமானின் அடையாள எழுத்தாகும் என்றும் கூறுகின்றார்.

அடுத்த பாடல் 'விநாயக புராணம்' என்னும் நூலின் கடவுள் வாழ்த்துப் பாடலாகும். இந்நூல் 'பார்க்கவ புராணம்' என்றும் அழைக்கப்படுகிறது. நிலமண்டில வாசிரியப்பாவால் ஆனது. இதனை அருளியவர் இயற்றமிழ் ஆசிரியராகிய திருத்தணிகை விசாகப்பெருமாளையர் ஆவார். முதலில் இந்நூல் அச்சிடப்பட்ட ஆண்டு 1905 ஆகும்.

இப்பாடலில் விசாகப் பெருமாளையர் அகரத்தைப் போல ஞானமயமாகி உலக முழுவதும் (சர்வ வியாபியாய்) அமர்ந்து அகர உகர மகரங்களால் (பிரணவ சொரூபியாய்) சொல்லப்பட்ட ஒப்பற்ற முதல்வராகியும், வேறாகியும், பலவகைப் பட்ட வெவ்வேறு திருமேனிகளைத் தாங்கிக் குற்றமற்ற அறம் பொருள் இன்பம் வீடென்றும்

Koviloor Digital Library

நான்கு புருஷார்த்தங்கள் சீவர்களுக்கு சம்பவிக்கும் இடுக்கண்களைக் களைந்தடையும்படி, தம்மை வணங்கியவருக்கு அறக்கருணை புரிந்து, தம்மைப் பணியாதவர்க்கு ஒப்பில்லாத மறக்கருணை புரிந்து எல்லாரையும் அடிமை கொண்ட மலரகிதராகிய (மும்மலம் நீக்கப்பெற்றவர்) கணேசமூர்த்தியைத் தியானித்து வாழ்வோமாக என்கிறார்.

சிறந்த திருவம்பலச் சக்கரத்தில் இருபத்தைந்து அறைகள் உண்டு என்றும், அதன் ஓர் அறையின்கண் அகரம் அமையும் என்றும், அவ் அகரம் சிவபெருமானின் அடையாள எழுத்தாகும் என்றும் கூறுகின்றார் திருமூலர். இதனை,

'இருந்த அறைகள் இருபத்தைந் தாக
இருந்த அறையொன்றில் எய்தும் அகாரமே'

என்னும் திருமந்திரவரிகள் மூலம் உணரலாம்.

அகரத்தைப் போல (சிவனைப்போல) விநாயகர் ஞானமயமாகி உலக முழுவதும் அமர்ந்து, வெவ்வேறு திருமேனிகளைத் தாங்கி, சீவர்களின் துன்பங்களைத் துடைத்து, அறம், பொருள், இன்பம், வீடு என்பவைகள் சீவர்களுக்குக் கிடைக்கும்படி கருணைபுரிய வேண்டும் எனவும், அதற்காக கணேச மூர்த்தியை வணங்குவோமாக என்றும் விசாக பெருமாளையர் கூறுகின்றார். இதனை,

'அகரமென வறிவாகி யுலக மெங்கு'

'பலவேறு திருமேனி தரித்துக் கொண்டு'

Koviloor Digital Library

'போற்றுநருக் கறக்கருணை புரிந்தல் லார்க்கு'

'நிகரின்மறக் கருணைபுரிந் தாண்டு கொள்ளு'

என்னும் விநாயக புராண வரிகள் மூலம் அறியலாம்.

திருமூலர், சிவபெருமானின் அடையாள எழுத்தாகிய அகரம் அமையும் விதத்தை மட்டும் தமது பாடலில் கூறுகின்றார். ஆனால் விசாக பெருமாளையர், அகரத்திற்குரிய சிவபெருமானைப் போல, விநாயகர் வெவ்வேறு திருமேனிகளைத் தாங்கிக் காட்டும் கருணையைப் பற்றி விவரிக்கின்றார்.

திருமூலரைப் பொறுத்தவரையில் வெவ்வேறு திருமேனிகளைத் தாங்குபவர் சிவன். ஆனால் விசாக பெருமாளையரைப் பொறுத்தவரையில் வெவ்வேறு திருமேனிகளைத் தாங்குபவர் கணேச மூர்த்தியே யாவார்.

திருமூலர், சிவபெருமானை முன்னிருத்திப் பேச, விசாக பெருமாளையர் விநாயகப் பெருமானை முன்னிருத்திப் பேசுகிறார்.

அகரம் சிவபெருமானைச் சுட்டுகிறது. 'அகரத்தைப் போல' என்று விசாக பெருமாளையர் சொல்லுகிறார். அதாவது சிவபெருமானைப் போல, விநாயகர் மக்களுக்குக் கருணை காட்டுகிறார். அதனால் விநாயகரை வணங்க வேண்டும் என்கிறார்.

Koviloor Digital Library

62

திருமந்திரமும் வில்லிபுத்தூரார் பாரதமும்

வைச்சன வச்சு வகையிரு பத்தஞ்சு
முச்சு முடனணை வானொரு வன்னுளன்
பிச்சன் பெரியன் பிறப்பிலி என்றென்று
நச்சி யவனருள் நானுய்ந்த வாறன்றே

– திருமந்திரம் (2132)

வேதமடி யுண்டன விரிந்தபலவாக மவிதங்களடி யுண்டன
வொரைம்
பூதமடி யுண்டன விநாழிகை முதற்புகல் செய்பொழுதொடு
சலிப்பில் பொருளின்
பேதமடி யூண்டன பிறப்பிலியிறப்பிலி பிறங்கலர சன்றன்
மகளார்
நாதன மலன்சமர வேடவடிவங்கொடு நரன்கை
யடியுண்ட பொழுதே

– வில்லிபுத்தூரார் பாரதம் (108) (ஆரண்ய பருவம்
– அருச்சுனன் தவநிலை சருக்கம்)

தரப்பெற்றிருக்கும் திருமந்திரப்பாடல் எட்டாம் தந்திரத்தின்கண், 'அவத்தை பேதம்' என்னும் மூன்றாவது அதிகாரத்தின் கீழ், 'மத்திய சாக்கிரா வத்தை' என்னும் பிரிவில் ஐந்தாவது பாடலாக

Koviloor Digital Library

வரையப்பட்டுள்ளது. மேலும், திருமந்திரப்பா வரிசையில் 2132–ஆவது பாவாக அமைந்துள்ளது.

இப்பாடலில் திருமூலர், சிவபெருமான் ஆருயிர்கள் உய்தற்பொருட்டு வேண்டுவார்க்கு வேண்டும் திருக்கோலம் கொண்ட திருவுருவங்கள் இருபத்தைந்தாகும் என்றும், சிவபெருமான் அனைத்துயிர்களிடத்தும் அனைத்துப் பொருள்களிடத்தும் பேரன்பு பூண்ட பித்தன் என்றும், மண்ணவர் விண்ணவர் அனைவர்கட்கும் அவரவர் தகுதிக்கேற்ப பெருமையளிக்கும் பெரியன் என்றும், எப்போதும் பிறப்பில்லாதவன் என்றும், இவ்வாறு நாளும் அகம் குழைந்து பாடிப்பரவிப் பணிகின்றவர்கள் நச்சுவாராவர் என்றும், அந்நச்சுவர்களுக்கு சிவபெருமான் இனியனாவன் என்றும், அவ்வகையில் தாமும் நச்சுவரே என்றும் கூறுகின்றார்.

வில்லிபுத்தூரார் பாரதத்தை இயற்றியவர் வில்லிபுத்தூராழ்வார் ஆவார். இவர் நடுநாடு என்றழைக்கப்பட்ட திருமுனைப்பாடி நாட்டில், சனியூரில் பிறந்தவர். தந்தையார் பெயர் வீரராகவாச்சார்யா என்பதாகும். இவர் 14–ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். இவர் இயற்றிய பாரதம் 18–பருவங்களை உடையது. தரப்பெற்றிருக்கும் பாடல், வில்லிபுத்தூரார் பாரதத்தின் மூன்றாவது பருவமான 'கர்ண பரவ'த்தின் கீழ் முதலாவது சருக்கமான அருச்சுனன் தவநிலை சருக்கத்தில் 108–ஆவது பாடலாகும். இப்பாடல் சிவபிரான் அடியுண்டதால் யாவும் அடியுண்டமையைத் தெரிவிக்கின்றது.

Koviloor Digital Library

இப்பாடலில் வில்லிபுத்தூரார், பிறத்தல் இறத்தல் இல்லாதவனும், பர்வத மன்னனாகிய இமவானது குமாரியான உமாதேவியின் கணவனும் குற்ற மில்லாதவனும் ஆகிய சிவபிரான், போருக்கு உரிய வேடனது உருவத்தை அடைந்து, அருச்சுனனது கையினால் அடிபட்டபொழுது, வேதங்கள் அடி பட்டன; விரிவாயுள்ள அனேக ஆகமங்களின் வகைகள் அடிபட்டன; ஒப்பற்ற பஞ்ச பூதங்கள் அடியுண்டன; விநாழிகை முதலாகச் சொல்லப் படுகின்ற கால தத்துவமும், நிலைபெயர்தலில்லாத தாவரப் பொருள்களின் வகைகளும் அடியுண்டன என்று கூறுகின்றார்.

சிவபெருமான், ஆருயிர்கள் நலன் கருதி இருபத்தைஞ்சு விதமாக திருவுருவங்கள் கொள்வது வழக்கம் என்றும், அவன் பிறப்பு இறப்பு இல்லாத வன் என்றும் திருமூலர் கூறுகின்றார். இதனை,

'வைச்சன வச்சு வகையிரு பத்தஞ்சு'

என்னும் வரியின் மூலமும்,

'பிறப்பிலி'

என்னும் சொற்றொடர் மூலமும் அறியலாம்.

அதேபோல சிவபெருமான், பிறத்தல் இறத்தல் இல்லாதவன் என்றும், உமாதேவியாரின் கணவனும், குற்றமில்லாதவனும் ஆகிய சிவபெருமான், அருச்சுனனுடன் போர் செய்யும் எண்ணத்துடன் போருக்கு உரிய வேடனது உருவத்தை அடைந்தனன் என்றும் வில்லிபுத்தூரார் சொல்லுகின்றார். இதனை,

Koviloor Digital Library

'.............................. பிறப்பிலியிறப்பிலி பிறங்கலர சன்றன் மகளார்
நாதன மலன்சமர வேடவடிவங்கொடு நரன்கை யடியுண்ட பொழுதே'

என்னும் வரிகள் மூலம் உணர்ந்து தெளியலாம்.

இவற்றிலிருந்து சிவபெருமான், திருவிளையாடல்கள் புரிவதற்கும், ஆருயிர்களுக்கு – அடியவர்களுக்கு நன்மைசெய்யும் பொருட்டும் பல்வேறு திருவுருவங்களை திருக்கோலங்களாகக் கொள்வது வழக்கம் என்பது தெளிவாகிறது.

63

திருமந்திரமும் வெற்றிவேற்கையும்

படர்கொண்ட ஆலதின் வித்தது போலச்
சுடர்கொண் டணுவினைத் தூவழி செய்ய
இடர்கொண்ட பாச இருளை வோட்டி
நடர்கொண்ட நல்வழி நாடலு மாமே

– திருமந்திரம் (1972)

தெள்ளிய ஆலின்சிறு பழத்து ஒருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்

Koviloor Digital Library

நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆள்பெரும் படையொடு
மன்னர்க்கு இருக்க நிழலா கும்மே

– வெற்றிவேற்கை (17)

மேலே தரப்பெற்றிருக்கும் திருமந்திரப்பாடல், ஏழாம் தந்திரத்தின் கண், இருபத்தி மூன்றாவது அதிகாரமான 'பசு இலக்கணம்' என்பதன் கீழ் ஐந்தாவது பாடலாகவும், திருமந்திரப்பா வரிசையில் **1972**–ஆவது பாவாகவும் வரையப்பட்டுள்ளது.

இப்பாடலில் திருமூலர், விழுது ஊன்றி விரிவாய்ப் படர்ந்திருக்கும் ஆலமரத்தின் தன்மை முற்றும் அதன் வித்தின்கண் அடங்கியிருப்பது போல, திருவருள் ஒளியினைக் கொண்டு அணுவாகிய ஆருயிர் உய்யச் செந்நெறியினைத் தம் திருவுள்ளத் தமைந்தனன் சிவன் என்றும், அத்திருவருளின் துணையால் அந்நன்னெறியிற் சென்று எந்நாளும் துன்பத்தை மிகுவிக்கும் பாச இருளை முற்றாக ஒட்டுதல் வேண்டும் என்றும், ஒட்டி அகத்தும் புறத்தும் ஐந்தொழிற்கூத்து இயற்றியருளும் திருவடி சேர் திருநெறியை நாடுவது நாடற்கரிய பெரு நன்மையாகும் என்றும் கூறுகின்றார்.

மேலே தரப்பெற்றிருக்கும் மற்றொரு பாடல் 'வெற்றிவேற்கை' என்னும் நூலைச் சார்ந்ததாகும். இது 'நறுந்தொகை' என்றும் அழைக்கப்படுகிறது. இதனை அருளியவர் அதிவீரராம பாண்டியன் என்னும் கொற்கையைத் துறைமுகமாகக் கொண்டு

Koviloor Digital Library

ஆண்ட பாண்டிய மன்னன் ஆவார். இந்நூலில் மொத்தம் 82 பாடல்கள் உள்ளன. ஈண்டு தரப்பெற்றிருக்கும் பாடல் பதினேழாவது பாடலாகும். இந்நூல் அறநெறி கூறும் நூலாகும். பாடல்கள் ஒரு அடிமுதல் ஆறு அடிகள் வரை மாறுபட்டிருக்கின்றன.

அதிவீரராம பாண்டியன் தமது பாடலில், ஆலமரத்தின் சிறிய விதையானது, நீர்நிலையில் உள்ள மீனின் கருமுட்டையை விடச் சிறியதாக இருப்பினும் அது வளர்ந்து மரமாக நால்வகைப் படையுடன் மன்னர் தன்னிடம் தங்கி இருப்பதற்கு நிழலைத் தரும் என்றும், அதுபோல் கொடைக்குணம் உடையவர் சிறிதே செல்வம் உடையவராயினும் அவரது செல்வம் எல்லார்க்கும் பயன்படும் என்றும் கூறுகின்றார். அதாவது, கொடையாளரின் செல்வம் சிறிதேயாயி னும் அனைவருக்கும் பயன்படும் என்பதாம்.

மிகப்பெரிய ஆலமரத்தின் தன்மை ஒரு சிறிய விதையில் அடங்கி இருக்கிறது. அதன் தன்மை வெளிப்பட வேண்டுமானால் முளைக்க வேண்டும். முளைப்பதற்கு மண், நீர், சூரியஒளி போன்ற ஏதுக்கள் வேண்டும். இவைகளின் உதவியின்றி முளைக்க இயலாது. அதுபோல ஒரு ஆருயிர் தன் பாச இருளை முழுவதுமாக அகற்றி உய்ய வேண்டு மானால், திருவடியைச் சேர வேண்டு மானால், திருவருள் ஒளியினைத் துணையாகக் கொண்டு செந்நெறியின்படி நடக்க வேண்டு மென்கிறார் திருமூலர். பெரிய ஆலமரத்தின் விதையை உவமையாகப் பயன்படுத்தியிருக்கின்றார். இதனை,

Koviloor Digital Library

'படர்கொண்ட ஆலதின் வித்தது போல'

என்னும் வரியின் மூலம் புரிந்து கொள்ளலாம்.

அதேபோல அதிவீரராம பாண்டியன் தமது பாடலில், தாம் கூறவந்த கருத்துக்கும் ஆலின் விதை யையே உவமையாகப் பயன்படுத்தி இருக்கின்றார். இதனை,

'தெள்ளிய ஆலின்சிறு பழத்து ஒருவிதை'

என்னும் வரியின் மூலம் தெளியலாம். இவ்வுவமை யின் மூலம் அவர் கூறவந்த கருத்து, கொடையாளரின் செல்வம் சிறிதேயாயினும் எல்லோருக்கும் பயன்படும் என்பதேயாகும். சிறிய ஆலமரத்தின் விதை – கொடுக்கும் தன்மை உடையவரின் சிறு செல்வத்துக்கும், ஆலமரம் கொடையாளருக்கும் உவமைகளாகும்.

திருமூலரும், அதிவீரராம பாண்டியரும் முறையே தாங்கள் கூற வந்த ஆன்மீகக் கருத்துக்கும், அறக்கருத்துக்கும் ஒரே உவமையைப் பயன்படுத்தி யிருக்கின்றார்கள் என்றும் சொல்லலாம்; அல்லது திருமூலர் பயன்படுத்திய உவமையை அதிவீரராம பாண்டியர் எடுத்தாண்டிருக்கின்றார் என்றும் சொல்லலாம்.

அதுசரி, அந்தக் காலம் முதல் இந்தக் காலம் வரை ஆலின் விதைதானே சிறிய விதையாக இருந்து கொண்டிருக்கின்றது. வேறு சிறுவிதையைக் காண வும் கிடைக்கவில்லை; கண்டுபிடிக்கவும் இல்லை தானே?

Koviloor Digital Library

ஒரு ஆன்மாவின் புலம்பல்

என்ன வாசகரே! என்னை நினைவிருக்கின்றதா? முந்தைய நூலின் இறுதியில் பல கேள்விகளைக் கேட்டு என்னுடைய அறியாமையை வெளிப்படுத்தினேனே? அதே... அதே... அவனேதான்! ஏதேனும் ஒரு முடிவுக்கு வந்திருக்கின்றீர்களா? நீங்கள் எந்த முடிவுக்கு வந்திருந்தாலும் சரி! இப்போதும் நான் உங்களை விடுவதாயில்லை! 63 தலைப்புகளிலும் இலக்கியங்களை ஒப்பாய்வு செய்வதுதான் என்னுடைய நோக்கம் என்றாலும், அத்துடன் நான் நின்று விடவில்லை; நின்று விட விரும்பவில்லை! சில கட்டுரைகளின் இறுதியில் நான் நல்லபிள்ளையைப் போல எக்கேள்வியினையும் எழுப்பாமல் ஒப்பிட்டுக் காட்டிவிட்டு நிறுத்தியிருக்கிறேன்; சிலவற்றின் இறுதியில் கிறுக்குத்தனமாகக் கேள்விகளை எழுப்பியிருக்கிறேன். அதோடு நிறுத்திவிடாமல் இப்போதும் மேலும் சில கேள்விகளை எழுப்பவே விழைகிறேன்!

பேய், பிசாசு இருக்கின்றது என்று சொல்வாரும் உண்டு; இல்லை என்று கூறி தைரியம் சொல்வாரும் உண்டு! அதேபோல் கடவுள் இருப்பதாகக் கூறுவாரும் உண்டு; இல்லை என்று மறுப்பவர்களும் உண்டு!

இந்த அறிவியலும் மலைக்க வைக்கின்றது; ஆன்மிகமும் மலைக்கத்தான் வைக்கிறது. நமக்கேன்

Koviloor Digital Library

இந்த அறிவியலும் மலைக்க வைக்கின்றது; ஆன்மிகமும் மலைக்கத்தான் வைக்கிறது. நமக்கேன் வம்பு என்று மற்றவர்பின் சென்று பயணத்தை முடித்துக் கொள்வாரும் உண்டு; விலகிச் சென்று திசைமாறிப் போவோரும் உண்டு! அண்டங்கள் பற்றி விஞ்ஞானம் சொல்லும் செய்திகள் தலைசுற்ற வைக்கின்றன; அண்டங்கள் பற்றி ஆன்மிகம் சொல்லும் செய்திகளும் ஆச்சரியப்பட வைக்கின்றன.

எல்லாவற்றிற்கும் ஆதாரம், மூலாதாரம் ஒன்று இருக்கத்தானே வேண்டும்? இல்லாமலும் இருக்கக் கூடுமோ?

ஆண்மை, பெண்மைப் பேதங்கள் இல்லையென்றால் இந்நிலவுலகம் நகருமா? வளருமா? வாழுமா? ஒரு காலத்தில், ஏன் இப்போதும் ஒரு சில சீவன்களில் ஆண்–பெண் பேதமின்றியும், உயிர்கலப்பு உணர்வு இன்றியும் இனவிருத்தி நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது. இது அறிவியல் உண்மை!

ஆண்–பெண் பேதமுடன் நடந்தாலும் சரி, பேதமின்றி நடந்தாலும் சரி, அந்த 'இனவிருத்தி' ஆச்சரியம்தானே! இரண்டுமே அற்புதம்தானே!

ஒரு சிலர் கடவுள் உண்டு என்று சொல்லுகிறார்கள்! அதே மனித இயக்க உணர்வு உள்ள வேறு சிலர் கடவுள் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஒரே மாதிரியான மனித சீவர்களில் எந்த உணர்வு, எந்தப் பகுதி இவர்களை இவ்வாறு வேறுபட்ட கருத்துகளை சொல்ல வைக்கின்றது?

Koviloor Digital Library

கண்ணுக்குத் தெரிந்ததெல்லாம் உண்மையுமல்ல; கண்ணுக்குத் தெரியாததெல்லாம் பொய்யுமல்ல!

கட்சிகள் மாறுபடுகின்றன. ஆனால், அனைத்துக் கட்சிகளும் இந்த மானிட வர்க்கத்தின் நலனுக்காகவே இருப்பதாகத் தம்பட்டம் அடித்துக் கொள்ளுகின்றன. 'மக்கள் நலன்' என்றால் அது ஒரே மாதிரியாகத்தானே இருக்க வேண்டும்? அதில் மாறுபட்ட கருத்து இருக்க முடியுமா? பின் எப்படி பலப்பல கட்சிகள்? அதேபோல மக்களினம் ஒன்று. ஆனால் மாறுபட்ட பல்வேறு கருத்துகள்; பல்வேறு கடவுள்கள்!

இறக்கும் தருவாயில் கடவுள் நம்பிக்கை உள்ள மனிதன் தன்னை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என எண்ணுகிறான். அதேபோல் கடவுள் நம்பிக்கை இல்லாதவனும் தன்னை மருத்துவர்தான் காப்பாற்ற வேண்டும் என நம்புகிறான், விரும்புகிறான்! ஆனால் மருத்துவருக்கு கடவுள் மீது நம்பிக்கை! எனவே, 'காப்பாற்றுதல்' என்பது ஏதோ ஒன்றின் செயலாகிறது. அது கடவுளாகவோ, மனிதனாகவோ இருக்கலாம்! இருவருமே கடவுள் நம்பிக்கையுள்ள, கடவுள் நம்பிக்கையற்ற மனித சீவர்களே! இறுதிக் காலத்தை எட்டுகிறபோது தன்னம்பிக்கை குறைகிறது; அச்சம் ஏற்படுகிறது; பிறவற்றை நம்பச் சொல்லுகிறது.

எல்லா நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் ஈடேறுவதுமில்லை; அனைத்து நம்பிக்கைகளும் எதிர்ப்பார்ப்புகளும் பொய்த்துப் போவதுமில்லை! ஒன்று நடக்கின்றது அல்லது நடக்காமல் போகின்றது! அவ்வளவே! ஆங்கில மொழி உலக மொழியாக இருந்து கொண்டிருக்கின்றது. ஆனால், அதன் ஆதிக்க

Koviloor Digital Library

வரலாறு வெறும் ஆறு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியதே. இலக்கிய வளமும் குறைவே! ஆனால் தமிழ் மொழிக்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகள் இலக்கிய வரலாறு இருந்து கொண்டிருக்கின்றது. ஆனால் உலக மொழியாய் இலங்கவில்லை; ஏன் இந்திய மொழியாய்க்கூட உலா வரவில்லை! தென்னகத்தின் தென்றலாய் மட்டுமே தவழ்ந்து கொண்டிருக்கின்றது. தமிழ்நாட்டு மொழியாகவே இருந்து கொண்டிருக்கின்றது. ஆனால், வளமான இலக்கிய வரலாறு அதற்குண்டு! இத்தகைய கவிதை வளம் ஆங்கிலத்திற்கு இருப்பதாகத் தெரியவில்லை! அதுமட்டுமல்ல! இந்தப் படைப்புகள் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன.

தண்டியடிகள் நாயனார் பிறக்கும்போதே பார்வையற்றவர்; ஆனால் சாதித்திருக்கின்றார்! நாம் என்ன சாதித்திருக்கின்றோம்? மகா கவி காளிதாசர் இளமையில் ஊமை; கிளையின் முனைப்பகுதியில் அமர்ந்து கொண்டு, அடிப்பகுதியை வெட்டிய புத்திசாலி இவர். ஆனால் அவரது படைப்புகள் உன்னதமானவை!

குமரகுரு சுவாமிகள் ஐந்து வயது வரையிலும் ஊமையாக இருந்தவர்; ஆனால், அவருடைய படைப் புகள் திருக்குறளுக்கு நிகரானவை! இராமலிங்க சுவாமிகள் ஒரு சாதாரணர்; பள்ளிக்குச் செல்லவே தயக்கம் காட்டியவர்; மற்றவர்களைப் போல சாதாரண வாழ்க்கை வாழ்ந்தவர்; வழக்கு, காவல் நிலையம், நீதிமன்றம் எனப் பார்த்தவர். ஆனால் அவரது படைப்புகள் வியப்பை ஏற்படுத்துகின்றன.

Koviloor Digital Library

இத்திறமை 'இயற்கையின் கொடை' என்று சொல்லலாமா? இயற்கையின் கொடை என்றால் என்ன? பிறக்கும் போதே திறமை யோடு பிறந்தவரா? இவர் எழுதியவைகள் எல்லாம் இவரே எழுதியதா? ஆண்டவன் படைத்ததா?

அருணகிரிநாதரின் இளமை வாழ்க்கை கேலிக்கூத்தானது; ஆனால் பிந்தைய வாழ்க்கையும் படைப்புகளும், தத்துவங்களும் வியக்கவைக்கின்றன!

திருஞானசம்பந்தர் 16 ஆண்டுகளே வாழ்ந்தார் என அறிகிறோம். அவருடைய தேவாரத் திருமுறைகள் மலைக்க வைக்கின்றன. 16 வயதில் நாம் என்ன செய்து கொண்டிருந்திருப்போம்? பள்ளி இறுதி வகுப்பில் தமிழில் தேர்ச்சி பெற முயற்சி செய்து கொண்டிருந்திருப்போமா? நூறு ஆண்டுகள் வாழ்ந்தால்கூட நம்மால் சாதிக்க முடியாது. ஆனால் அவர் சாதித்திருக்கின்றார்! நூறு ஆண்டுகள் வாழ்ந்துதான் பயன் என்ன?

சர் தாமஸ் பார்பிங்டன் மெக்காலே மூன்று வயதிலேயே மில்டனின் 'சொர்க்க நீக்க'த்தைப் படித்தாராம்! இது எப்படி சாத்தியம்? அந்த வயதில் நீங்களும் நானும் என்ன செய்து கொண்டிருந் திருப்போம்? ஒருவேளை காலை உணவுக்காக அழுது அடம் பிடித்துக் கொண்டிருந்திருப் போமோ?

இப்போது கூட இங்குமங்குமாகச் சில செய்திகள் வருகின்றன; 9.10 வயதிலேயே கல்லூரிப் பட்டப் படிப்பை முடித்ததாக செய்தித்தாள்களில் படிக்கின்றோம். இந்தத் திறமையை என்னவென்பது?

Koviloor Digital Library

'எல்லாம் கடவுள் செயல்' என்றால் சிலர் இதனை மறுப்பதேன்? மறுப்பதில் உண்மை இருக்கின்றதா? மறுக்காமல் ஏற்றுக் கொள்வதில் உண்மை இருக்கின்றதா?

சில குழந்தைகள் 1330 குறள்களையும் ஒப்புவிக்கின்றன. முதற் சொல்லைச் சொன்னாலோ, கடைசிச் சொல்லைச் சொன்னாலோ, குறளின் எண்ணைச் சொன்னாலோ முழுக் குறளையும் ஒப்பு விக்கின்றனவே? இது எப்படி சாத்தியம்? இதனை இயற்கை என்பதா? மன ஆற்றல் என்பதா? மிகு நினைவாற்றல் என்பதா? கடவுள் சித்தம் என்பதா? இயற்கை என்றால்? கடவுள் என்பதுதானே பொருள்? அந்தத் திறமைக்கு முன்னால் நாம் மண்டியிடத்தானே வேண்டும்? எல்லாவற்றிற்கும் ஒரு மூல ஆதாரம் – காரணம் இருக்கத்தானே வேண்டும்? அது என்ன?

மரியாதை நிமித்தம் ஒருவருக்கு 'சால்வை' அணிவிக்கும்போது, இக்கதராடையைப் பொன்னா டையாகக் கருதி அணிவிக்கின்றோம் என்று சொல்லு கின்றார்கள். அதுபோல 'இயற்கை' என்பதைக் 'கடவுள்' என்று சொன்னால் தவறில்லையே!

'கடவுள் உண்டு' என்று சொல்லுகின்றவர் ஏதோ ஒரு உணர்வால் இயற்கையாக உந்தப்பட்டவர். அதேபோல் 'கடவுள் இல்லை' என்று சொல்லுகின்ற வரும் ஏதோ ஒரு உணர்வால் இயற்கையாக உந்தப் படுகின்றார். இவ்விருவருள்ளும் இயற்கைதான் உந்துதல் சக்தி! அதாவது கடவுள்தான் உந்துதல் சக்தி! அதாவது, 'கடவுள் இல்லை' என்று சொல்ல வைப்பதே கடவுள்தான்!

Koviloor Digital Library

ஆனால் கடவுள் தவறான செய்கைகளுக்கும் ஊக்கமளிக்கின்றாரா? ஒரு ஆசிரியர் இயலாதவர் களுக்கு உதவி செய்வதாக எண்ணி, கருணை மனோபாவத்துடன் தேர்வு நேரத்தில் 'பார்த்து' எழுத அனுமதித்துவிட்டார். அப்போது மேலதிகாரி பார்வையிட வருகின்றார். இருள் கவிழும் மாலை நேரம்! அந்த நேரம் பார்த்து 'மின்தடை' ஏற்படுகின்றது. ஒவ்வொரு அறையாகச் சென்று பார்வையிடும் எண்ணத்தைக் கைவிட்டு, மேலதிகாரி வெளியேறுகிறார். பார்வையிட்டிருந்தால் தாம் அகப்பட்டிருப்போம் என அஞ்சிய ஆசிரியர், தமக்கு கடவுள் உதவி செய்ததாக எண்ணிக் கொள்கிறார். இவர் செய்த தவற்றைத் தவிர்க்க, கடவுள் வந்து மின்சக்தியை நிறுத்திவிட்டுப் போனாரா? இது தவறான நம்பிக்கை அல்லவா?

எத்தனையோ பேர்கள் தவறான வழியில்தான் பணம் சம்பாதிக்கிறார்கள்; கடவுளை வணங்கி விட்டுத்தான் இலஞ்சமே வாங்குகிறார்கள்; அரசு அதிகாரிகளாகட்டும் அல்லது அரசியல் வாதிகளாகட் டும், எல்லாருமே அப்படிப்பட்டவர்கள் தானே? திரைப்படங்கள் அரசியல்வாதிகளையும், அதிகாரி களையும், காவல்துறை சார்ந்தவர்களையும், மற்றவர் களையும் மிக மோசமாகத்தான் சித்தரிக்கின்றன. ஆனால் யாரும் எக்கேள்வியினையும் எழுப்புவ தில்லை; எதிர்ப்பதுமில்லை! எதிர்க்கின்ற தகுதி அவர்கள் யாருக்குமில்லை! ஏனெனில் அவைகள் சமுதாயமே ஏற்றுக் கொண்ட நிதர்சனமான உண்மைகள்! யாருக்குமே சூடு சொரணை இருக்க

Koviloor Digital Library

வில்லை! அவர்களெல்லாரும் தங்கள் வாழ்க்கையில் சோடை போய்விடவில்லையே? பிரகாசமாக வாழ்ந்து கொண்டுதானே இருக்கின்றார்கள்? அப்படி யானால்... அப்படியானால்... கடவுள்...?

ஏழைகளையும் பணக்காரர்களையும், இயலாதவர்களையும் இயன்றவர்களையும், கெட்டவர் களையும் நல்லவர்களையும் 'இயற்கை' வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றதா? கடவுள் தேர்வு வைத்துவிட்டு மேற்பார்வை செய்து கொண்டிருக் கின்றாரா? அல்லது கடவுள் இல்லவே....?

ஆனால், தத்துவஞானிகள் படைத்த தமிழ் இலக்கியங்கள், தமிழ்க் கவிதைகள், அவர்களின் அனுபவங்கள் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றனவே! என்னே திறமை! என்னே புலமை! அத்தனையும் உண்மைதானே? மறுக்க முடியவில்லையே! மறுக்கத் தோன்றவில்லையே! அப்படியிருக்கும்பொழுது, சிலர் 'உள்ளொளி'யை உள்ளே வைத்துக்கொண்டு அதை அறிய முயலாமல் இருட்டுலகக் கருத்துகளை வெளியே பேசுவானேன்?

ஒரு தொடர்வண்டியோ, ஒரு பேருந்தோ இயங்குகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள், போன பாதையிலேயே திரும்பி வருகின்றது. ஆனால் அவைகளுக்கு மூளையில்லை, அறிவு இல்லை, மனமில்லை, நினைவாற்றல் இல்லை, உணர்வு களில்லை! அவைகள் மனிதர்களால் இயக்கப் படுகின்றன; கட்டுப்படுத்தப்படுகின்றன! ஆனால் மனிதனைக் கட்டுப்படுத்துவது எது? மனிதனுக்கு மூளை–அறிவு–மனம்–நினைவாற்றல் அத்தனையும்

Koviloor Digital Library

இருக்கின்றன! மூளையாகட்டும், அறிவாகட்டும், அதன் பிரதிபலிப்பான மனமாகட்டும், பல ஆண்டு களின் நிகழ்வுகளை பதிய வைத்துக் கொள் கின்றன. இது என்ன ஆற்றல்? இது எப்படி சாத்தியம்? இதற்கே இப்படி வியந்தால், இதன் மூல காரணனின் ஆற்றல் எப்படி இருக்கும்? என்னவாக இருக்கும்? அதுதான் இயற்கையா? அதுதான் கடவுளா?

தோழரே! இதுவரையிலும் ஒரு சிறிய இலக்கியச் சுற்றுலாவில் தவழ்ந்து வந்தீர்கள்! என்ன கண்டீர்? ஆயாசமாக இருக்கின்றதா? ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்! பின்னரே பதில் சொல்லுங்கள்!

உங்களை வழி அனுப்பி வைக்கின்றபோது என்ன சொல்லி, எப்படி வழியனுப்புவது என்றே தெரியவில்லை! இந்த வாழ்க்கை நிலையானது அல்ல என்று சொல்லி உங்களை அச்சுறுத்தி அனுப்புவதா? அல்லது வருங்காலத்தில் வளமான வாழ்க்கை உங்களுக்காகக் காத்திருக்கின்றது என்று தைரிய மூட்டி–நம்பிக்கையூட்டி அனுப்பி வைப்பதா?

எது எப்படி இருந்தாலும், பின்வரும் திருமந்திரப்பாடல் மட்டுமே என் மனத்திரையில் நிழலாடி தவழ்ந்து செல்லுகிறது.

'ஊரெலாங் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே'

Koviloor Digital Library

என்னும் பாடல்தான் அது.

ஆமாம்! ஆவி நீங்கியதும் அவ்வுடம்பினைச் சூழ்ந்திருந்து உறவோடு ஊரெல்லாம் ஒன்று கூடி அழுது, முறைப்பெயர் சிறப்புப்பெயர் முதலிய பெயர்களை ஒழித்துப் பிணமென்று பெயரிட்டு, பலரழ முட்செடிகள் படர்ந்த சுடுகாட்டிற்கு எடுத்துச் சென்று, அவ்வுடம்பினை ஈமத்தேற்றி, வாய்க்கரிசி யிட்டுக் குடமுடைத்துக் கொள்ளிவைத்து சுட்டு, நீரில் மூழ்கி இறந்தவரைப் பற்றியோ, இனி இறக்கப் போகும் தம்மைப் பற்றியோ, இவைகளுக்கெல்லாம் காரணமான நிலையாமை, மாயை, வினை, மலங்களைப் பற்றியோ ஒரு சிறிதும் கவலைப்படாமல் நினைப்பொழிந்திருப்பாரன்றோ?

உண்மைதானே? பெயருக்குப் பின்னால் மருத்துவர், பொறியாளர், முனைவர், மேதகு, திருவாளர் போன்ற சிறப்புப் பட்டங்களோ, அல்லது பெயருக்குப் பின்னால் தொடர்ந்து வரும் வருக்கப் பெயரோ, படித்து வாங்கிய பட்டங்களோ எதுவும் இறந்த பின்னர் தொடர்வதில்லை. ஒரேயொரு பெயர்தான் அளிக்கப்படும், விளிக்கப்படும்! அதுதான் 'பிணம்'.

இத்திருமந்திரப்பாடலை இலஞ்சம் வாங்கும் ஒவ்வொரு அரசியல்வாதியின் நெற்றியிலும், அரசு அதிகாரியின் நெற்றியிலும் ஒட்டி வைத்தால் எப்படி இருக்கும்? அல்லது குறைந்தபட்சம் 'லேமினேட்' செய்து ஒவ்வொருவரும் தங்கள் சட்டைப் பைகளில் வைத்துக் கொண்டு அவ்வப்போது எடுத்துப் பார்க்கச் செய்தால் எப்படி இருக்கும்?

Koviloor Digital Library

Koviloor Digital Library

இந்நூலாசிரியர் பற்றி

பெயர்:

பு.சி.இரத்தினம்

பிறந்தது:

வேலூர் அடுத்த புலிமேடு கிராமம்

படிப்பு:

முதுகலை (வரலாறு), முதுகலை (அரசியல்) மற்றும் ஆய்வியல் நிறைஞர் (வரலாறு)

பணி:

1971 முதல் 2004 வரை வரலாற்றுத்துறைப் பேராசிரியராக வேலூர், திருவண்ணாமலை, திருத்தணி முதலிய இடங்களில் உள்ள அரசு கலைக் கல்லூரிகளில் 32 ஆண்டுகளாகப் பணி செய்து ஓய்வு பெற்றவர்.

எழுத்துலகில்:

1967-68-ஆம் ஆண்டு 'மலரும் தமிழ்' என்னும் விடுதி ஆண்டு மலருக்கு (கையெழுத்துப் பிரதி) ஆசிரியராயிருந்திருக்கிறார். தமிழ்மீது உள்ள மிகுந்த ஆர்வத்தின் காரணமாக 1965 முதலே கட்டுரைகள், உரை நடைக் கவிதைகள் எனத் தமது நண்பர்கள் மற்றும் தம் பெயரில் எழுதி அவை கல்லூரியின் சிறப்பிதழ்களில் வெளியாயின. அந்த எழுத்துக்களே 32,33,34 மற்றும் 35-ஆவது சென்னைப் புத்தகக் கண்காட்சியின்போது பத்து நூல்களாக வெளியிடப்பெற்றன.